249

26C211
E

# தமிழ் இன்ப வாசகம்

## முதற் புத்தகம்

S. V. வரதராஜ ஐயங்கார், M.A., M.O.L.,
விவேகானந்தர் கல்லூரி, சென்னை.

இண்டர் நாஷனல் பப்ளிஷிங் கம்பெனி
நுங்கம்பாக்கம், சென்னை-6
[விலை அணு ஐந்து]

முதற் பதிப்பு—அக்டோபர் 1951
இரண்டாம் பதிப்பு—1953

APPROVED FOR CLASS USE

BY THE TEXT-BOOK COMMITTEE, MADRAS

[*Vide page* 31, *Part I-B, Fort St. George Gazette, dated 7th May,* 1952]

Kabeer Printing Works, Madras (2187)

# முகவுரை

தமிழ் மொழிப் பயிற்சி முதன்மை பெற்றுள்ள இந்நாளில், சிறுவர் அடிப்படையில் எழுத்துக்களின் உருவங்களை நன்கு கவனித்து எழுதப் பழகுதலும் சரிவர உச்சரிக்க அறிவதும் இன்றியமையாதவை. முதல் வகுப்பில் (1) அவர்கள் பார்த்து அறிந்த பொருள்களின் பெயர்களைப் படங்களைப் பார்த்து சொல்லும்படி செய்து, அதன் மூலமாக அப்பெயர்களுக்கு உறுப்பாகும் எழுத்துக்களை அறிவது, (2) அகரமுதலாகத் தொடங்கியும், ' ட, ப, ம, முறைப்படி தொடங்கியும் எழுத்துருவங்களை எழுதவும், உச்சரிக்கவும் பழகுவது ஆகிய முறைகள் இப்பொழுது கையாளப்பட்டு வருகின்றன. இம் முறைகள் யாவும் பொருந்தி இணைந்து வரும்படி இந்த முதற் புத்தகம் அமைக்கப் பெற்றுள்ளது.

ஆசிரியரது துணைகொண்டே குழந்தைகள் எழுத்து, சொல் இவைகளைச் சரிவர எழுதவும் சொல்லவும் பழக வேண்டியவர்கள். படங்கள் இப்பயிற்சிக்குப் பெருந் துணையாவன. இப்புத்தகத்தில் படங்கள் நிரம்பச் சேர்க்கப் பெற்றுள்ளன. எழுத்து உருவங்கள் அமையும் விதம் அந்தந்தப் பக்கத்தின் அடியில் வரைந்து காட்டப்பட்டுள்ளது. ஆங்காங்கே சிறு பயிற்சிகளும் தரப்பெற்றுள்ளன. குழந்தைகளுக்கு ஏற்ற பாடங்களும் பிற்பகுதியில் உள்ளன.

குழந்தைகளை உற்சாகப்படுத்தி எழுத்துக்களையும் சொற்களையும் எழுதவும் சொல்லவும் செய்வதில் ஆசிரியர்கள் உதவி புரிவது இன்றியமையாதது. தமிழன்பர்கள் இப்புத்தகத்தை ஆதரித்து உதவுவார்கள் என்று நம்புகின்றேன்.

ஆசிரியன்

# எங்கள் ஊர்


படத்தில் உள்ளவைகளின் பெயர்களைச் சொல்லும்படி செய்யவும்.






அணில்

அ



ஆடு

ஆ



படம்

ட ப ம



மரம்.

ட் ப் ம்

அ | ட ப ம




இலை

இ




ஈ

ஈ



பழம்


ம ழ ர




பம்பரம்

ம் ழ் ர்

இ | Γ Π ஈ ர




உரல்




ஊதல்

உ ஊ



சட்டம்



கப்பல்

ர ச க ர் க் ச்

உ உ ஊ | ர ச க

1

எண்




ஏற்றம்

எ

ஏ





தட்டம்

நகம்

க த ந ற


க் த் ந் ற்

ெ எ ஏ ா ற | க தா ந



ஒட்டகம்

ஒ




ஓடம்

ஓ



வயல்

வ ய




முயல்

வ் ய்


ஒ ஓ | வ ய






ஐவர் ஔடதம்

ஐ ஔ





பல் தேள்


ல ள ல் ள்

ை ஐ ஐ ஐ ஔ | ல ல ள ள ள்




சன்னல்

ன் ன




கண்

ண் ண



சங்கம்

ங் ங



ஊஞ்சல்

ஞ் ஞ

ெ ன ன ண ண | ா ங ங ங ங ஞ

உயிர்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ | ஆ | இ | ஈ | உ | ஊ |
| எ | ஏ | ஐ | ஒ | ஓ | ஔ |

மெய்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| க் | ங் | ச் | ஞ் | ட் | ண் |
| த் | ந் | ப் | ம் | ய் | ர் |
| ல் | வ் | ழ் | ள் | ற் | ன் |

உயிர்மெய்


| | | | | | |
|---|---|---|---|---|---|
| க | ங | ச | ஞ | ட | ண |
| த | ந | ப | ம | ய | ர |
| ல | வ | ழ | ள | ற | ன |

ஆய்தம்


ஃ

## பயிற்சி 1


படத்தைப் பார்த்துக் காலியாயுள்ள கட்டங்களில் உரிய எழுத்துக்களை எழுதி நிரப்பும்படி செய்யவும்.




| | |
|---|---|
| | ணி |




| | | |
|---|---|---|
| | ம் | மி |




| | | | | |
|---|---|---|---|---|
| ம | | | | ம் |



| | | | |
|---|---|---|---|
| | ம் | ப | |




| | | | |
|---|---|---|---|
| | ட் | ட | |




| | | |
|---|---|---|
| | ட | ம் |

## பயிற்சி 2


படம் பார்த்துப் பெயர் எழுதச் செய்யவும்.



| அ | ஆ |
|---|---|
| க | கா |
| ங | ஙா |
| ச | சா |
| ஞ | ஞா |
| ட | டா |
| ண | ணா |
| த | தா |
| ந | நா |
| ப | பா |
| ம | மா |
| ய | யா |
| ர | ரா |
| ல | லா |
| வ | வா |
| ழ | ழா |
| ள | ளா |
| ற | றா |
| ன | னா |



நகம்



நாகம்

ந நா

கண் கால்

பணம் ஓணான்

படம் பாடம்


மடம் மாடம்

வடம் வாய்


அணா தா

படம் பார்

| இ | ஈ |
|---|---|
| கி | கீ |
| ஙி | ஙீ |
| சி | சீ |
| ஞி | ஞீ |
| டி | டீ |
| ணி | ணீ |
| தி | தீ |
| நி | நீ |
| பி | பீ |
| மி | மீ |
| யி | யீ |
| ரி | ரீ |
| லி | லீ |
| வி | வீ |
| ழி | ழீ |
| ளி | ளீ |
| றி | றீ |
| னி | னீ |



விசிறி



கீரி

கிளி　　கீழ்

சிரம்　　சீரகம்

நிலம்　　நீலம்

திடம்　　தீரம்

விரல்　　வீக்கம்


நீல நிறம்

விரல் வீக்கம்

விசிறி வீசு

உ

கு
ஙு
சு
ஞு
டு
ணு
து
நு
பு
மு
யு
ரு
லு
வு
ழு
ளு
று
னு





# குளம் காது

| | | |
|---|---|---|
| குடம் | முறம் | எறும்பு |
| சுக்கு | வயிறு | கழுத்து |
| பந்து | முதுகு | குரங்கு |
| கதவு | நண்டு | உருவம் |
| நுங்கு | மார்பு | முடவன் |

இவன் முடவன்
மண் குடம்
பசு மாடு



ஊ

கூ

ஙூ

சூ

ஞூ

டூ

ணூ

தூ

நூ

பூ

மூ

யூ

ரூ

லூ


வூ

ழூ


ளூ

றூ

னூ



தூண்




பூட்டு

நூல் நூறு ரூபாய்

கூடம் மூக்கு சூரியன்

சூடம் ஊசி கூட்டம்


பூரான் பூணூல் தூக்கம்


நூறு ரூபாய்

பட்டு நூல்

சூடம் தா

| எ | ஏ |
|---|---|
| கெ | கே |
| ஙெ | ஙே |
| செ | சே |
| ஞெ | ஞே |
| டெ | டே |
| ணெ | ணே |
| தெ | தே |
| நெ | நே |
| பெ | பே |
| மெ | மே |
| யெ | யே |
| ரெ | ரே |
| லெ | லே |
| வெ | வே |
| ழெ | ழே |
| ளெ | ளே |
| றெ | றே |
| னெ | னே |





# கெண்டி தேர்

தெரு கேணி

பெண் மேடு

தெற்கு தேக்கு

மெய் வேம்பு

எண்ணெய் மேற்கு

வெயில் சேவல்


நல்ல பெண்


மெய் பேசு

தேக்கு மரம்

ஐ

கை
ஙை
சை
ஞை
டை
ணை
தை
நை
பை
மை
யை
ரை
லை
வை
ழை
ளை
றை
னை






## குதிரை தவளை

பையன் வாழை கோடை
பலகை பூனை தென்னை
சட்டை இலை தங்கை
எருமை மழை கழுதை
முதலை மணை புடவை

நல்ல பையன்
வாழை மரம்
எருமை மாடு
மரப் பலகை

| ஒ | ஓ |
|---|---|
| கொ | கோ |
| ஙொ | ஙோ |
| சொ | சோ |
| ஞொ | ஞோ |
| டொ | டோ |
| ணொ | ணோ |
| தொ | தோ |
| நொ | நோ |
| பொ | போ |
| மொ | மோ |
| யொ | யோ |
| ரொ | ரோ |
| லொ | லோ |
| வொ | வோ |
| ழொ | ழோ |
| ளொ | ளோ |
| றொ | றோ |
| னொ | னோ |




# கொக்கு கோழி


| | |
|---|---|
| கொம்பு | கோலம் |
| தொட்டி | சோளம் |
| பொட்டு | தோட்டம் |
| நொண்டி | கோடு |
| மொட்டு | மோர் |
| ரொட்டி | தோரணம் |

கோலம் போடு
தோட்ட வேலை
நொண்டி மாடு
மல்லிகை மொட்டு

ஔ

கௌ
ஙௌ
சௌ
ஞௌ
டௌ
ணௌ
தௌ
நௌ
பௌ
மௌ
யௌ
ரௌ
லௌ
வௌ
ழௌ
ளௌ
றௌ
னௌ





ஔவை வௌவால்

கௌதமர் கௌதாரி
பௌர்ணமி யௌவனம்
கௌளி சௌக்கியம்
ஔடதம் மௌனம்

கௌதம புத்தர்
பௌர்ணமி நாள்
நல்ல ஔடதம்


# வடமொழி எழுத்துக்கள்

ஷ்  புஷ்பம்

ஸ்  புஸ்தகம்

ஜ  ஜாடி

க்ஷ  பக்ஷி

ஹ  ஹாரம்

ஸ்ரீ  ஸ்ரீராமன்

2187—4

ஹிந்தி பாஷை

புஷ்ப ஹாரம்

விவாஹ நாள்

மஹாத்மா காந்தி

ஹிமய மலை

ஸ்ரீ ஜயந்தி

தமிழ்ப் புஸ்தகம்

கொடி திராக்ஷை

மண் ஜாடி


இனிப்பு பக்ஷணம்

ஜனன தினம்

ஹனுமான் தூது

## பயிற்சி 3


படங்களையும் பெயர்களையும் பொருத்து :



| | | | |
|---|---|---|---|
| பாய் | வீடு | குழவி | பூ |
| ஓடம் | கப்பல் | பை | அம்மி |
| மரம் | மூக்கு | இலை | வில் |
| பேனா | புத்தகம் | மாலை | கூடை |
| நகம் | காது | கடை | ஆணி |


## பயிற்சி 4

படங்களின் பெயர்களை எழுது :




## பயிற்சி 5

விட்ட எழுத்துக்களைக் கண்டுபிடி :




| | | |
|---|---|---|
| வ | | டி |




| | | | |
|---|---|---|---|
| க | ப் | | ல் |



| | | |
|---|---|---|
| ப | | ம் |




| | | | |
|---|---|---|---|
| ஊ | | ச | ல் |



| | | |
|---|---|---|
| பெ | ட் | |




| | | |
|---|---|---|
| இ | | கு |




| | | | | |
|---|---|---|---|---|
| பு | த் | த | | ம் |



| | |
|---|---|
| கி | |




| | |
|---|---|
| | ணி |



| | |
|---|---|
| | சி |




| | | |
|---|---|---|
| | ட | ம் |



| | | | | |
|---|---|---|---|---|
| ப | ம் | ப | | ம் |




| | | |
|---|---|---|
| அ | | ல் |



| | | |
|---|---|---|
| | ர | ம் |





| | | |
|---|---|---|
| ப | | து |







| | | | |
|---|---|---|---|
| க | த் | தி | |

# வீட்டுப் பொருள்கள்








| | | |
|---|---|---|
| அடுப்பு | அகப்பை | விசிறி |
| நெருப்பு | விளக்கு | சீசா |
| பீப்பாய் | மணை | அம்மி |

# உறுப்புக்கள்



தலை

கண்

காது

நெற்றி

புருவம்

வாய்

உதடு

மூக்கு

பல்

நாக்கு

தாடை

கழுத்து

தோள்

கை

விரல்

மார்பு

முதுகு

வயிறு

இடுப்பு

கால்

பாதம்

நகம்


முழங்கை

முழங்கால்

# செயல்கள்

| | |
|---|---|
| விரல் மடக்கு | வாய் திற |
| மார்பு விரி | நாக்கு நீட்டு |
| நெற்றி தொடு | இடுப்பு பிடி |
| முதுகு நிமிர் | கண் மூடு |
| கழுத்து வளை | கை கொடு |

# பிராணிகள்



## பயிற்சி 6


சேர்த்து வாசிக்கவும் :



பூ பறி




ஊதல் ஊது



மணி அடி



விளக்கு ஏற்று




ஊஞ்சல் ஆடு



பட்டம் விடு



வீடு கட்டு



ஏணி ஏறு

## பயிற்சி 7


படத்தைப் பார்த்துக் கோடிட்ட இடங்களில் சொற்களை எழுதவும் :




பூ ——



விளக்கு ——



வீடு ——




மார்பு ——




பட்டம் ——




கழுத்து ——



ஏணி ——



நாக்கு ——



# வீடு

கதவு சன்னல்


திண்ணை நடை

அறை வாசல்

கூடம் தாழ்வாரம்

மேசை நாற்காலி


# வாகனங்கள்




கை வண்டி




மாட்டு வண்டி




குதிரை வண்டி



ரயில் வண்டி




டிராம் வண்டி



மோட்டார் வண்டி



# குடும்பம்

| | |
|---|---|
| தாத்தா | பாட்டி |
| மாமா | மாமி |
| அப்பா | அம்மா |
| அண்ணன் | அக்காள் |
| தம்பி | தங்கை |

பாப்பா




# பாட்டு

காக்காய்! காக்காய்! பறந்து வா!

கண்ணுக்கு மை கொண்டு வா!







கோழீ! கோழீ! கூவி வா!

குழந்தைக்குப் பூ கொண்டு வா!

வெள்ளைப் பசுவே! விரைந்து வா!

பிள்ளைக்குப் பால் கொண்டு வா!

—தேவி

| ஒருமை | | பன்மை | |
|---|---|---|---|
|  | பூ |  | பூக்கள் |
|  | வீடு |  | வீடுகள் |
|  | இலை |  | இலைகள் |
|  | குடை |  | குடைகள் |
|  | மரம் |  | மரங்கள் |
|   | பழம் |  | பழங்கள் |

# மரங்கள்



வாழை மரம்



பலா மரம்



மா மரம்



தென்னை மரம்



பனை மரம்



ஆல மரம்



முருங்கை மரம்




அரச மரம்





ஈச்ச மரம்

# காய்கள்




வாழைக்காய் பூசனிக்காய் கத்தரிக்காய்




புடலங்காய் வெண்டைக்காய் தேங்காய்

# பழங்கள்



வாழைப்பழம் மாம்பழம் பலாப்பழம்



திராக்ஷைப் பழம் தக்காளிப் பழம் மாதுளம் பழம்

# பூக்கள்




வாழைப் பூ




தாழ்ம் பூ



ரோஜாப்பூ




சாமந்திப்பூ



மல்லிகைப்பூ



அரளிப் பூ





தாமரைப் பூ



மாம்பூ

# செயல்கள்

பூ பறிக்கிருள்

மணி அடிக்கிருன்

புத்தகம் படிக்கிருன்

துணி துவைக்கிருன்

பாடம் எழுதுகிருன்

பல் தேய்க்கிருன்

வீடு கட்டுகிருன்

பெட்டி திறக்கிருன்

கதவு மூடுகிருன்

தலை பின்னுகிருள்

கூடை முடைகிருள்

குடம் கழுவுகிருள்

பென்சில் சீவுகிருன்

மரம் ஏறுகிருன்

# சுவைகள் ஆறு



கரும்பு இனிப்பு




பாகல்காய் கசப்பு





உப்பு உவர்ப்பு



மிளகாய் காரம்




கடுக்காய் துவர்ப்பு




மாங்காய் புளிப்பு

# நிறங்கள்




இலை பச்சை நிறம்



மிளகாய்ப் பழம்
சிவப்பு நிறம்




எலுமிச்சம் பழம்
மஞ்சள் நிறம்



காகம் கறுப்பு நிறம்




பால் வெண்மை
நிறம்




# முத்தம் தா

கண்ணே! மணியே! முத்தந்தா!
கட்டிக் கரும்பே! முத்தந்தா!
வண்ணக் கிளியே! முத்தந்தா!
வாசக் கொழுந்தே! முத்தந்தா!
தேனே! பாலே! முத்தந்தா!
தெவிட்டாக் கனியே! முத்தந்தா!
மானே! மயிலே! முத்தந்தா!
மடிமேல் வந்து முத்தந்தா!

—தே



| | |
|---|---|
| சூரியன் | சந்திரன் |
| வானம் | மேகம் |
| மழை | மின்னல் |
| வெயில் | நிலா |
| பகல் | இரவு |
| வெளிச்சம் | இருட்டு |

# கிழமைகள்

ஞாயிற்றுக் கிழமை

திங்கள் கிழமை

செவ்வாய்க் கிழமை

புதன் கிழமை

வியாழக் கிழமை

வெள்ளிக் கிழமை


சனிக் கிழமை

ஏழு நாட்கள் கொண்டது
ஒரு வாரம்.

முப்பது நாட்கள் கொண்டது
ஒரு மாதம்.

பன்னிரண்டு மாதங்கள் கொண்டது
ஒரு வருஷம்.

# தொழிலாளிகள்



நகை செய்பவர்
தட்டார்


துணி வெளுப்பவர்
வண்ணார்

மரவேலை செய்பவர்
தச்சர்

மண்பாண்டம்
செய்பவர் குயவர்

இரும்பு வேலை செய்
பவர் கருமார்


வீடு கட்டுகிறவர்
கொத்தர்




# நல்ல வழக்கம்

காலை எழுந்தவுடன் படிப்பு—பின்பு
கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு;
மாலை முழுதும் விளையாட்டு—என்று
வழக்கப் படுத்திக் கொள்ளு பாப்பா:

—பாரதியார்




# ஈக்குக் கலியாணம்

ஈக்குக் கலியாணம்—சின்ன
ஈக்குக் கலியாணம்;
பாக்கு வெற்றிலை வைத்த பேர்கள்
பார்க்க வாருங்கள்!

கல்கண்டுக்கோ பஞ்சம் இல்லை!
பட்சணமும் கொஞ்சம் அல்ல!
தேன் குடமோ ஐந்து நூறு!
இன்பண்டம் எங்கும் உண்டு!
வாருங்கள்! வாருங்கள்!

## பயிற்சி 8

படத்தைப் பார்த்துச் செயலை எழுது :



## பயிற்சி 9

சரியாகப் பொருத்தி எழுது :

| | |
|---|---|
| தட்டார் | இரும்பு வேலை செய்வார் |
| வண்ணார் | மண்பாண்டம் செய்வார் |
| தச்சர் | துணி வெளுப்பார் |
| குயவர் | வீடு கட்டுவார் |
| கொல்லர் | நகை செய்வார் |
| கொத்தர் | மரவேலை செய்வார் |

## பயிற்சி 10

சுவைகளின் பெயர்களை பொருளுக்கு ஏற்றபடி பொருத்தி எழுது.

| | |
|---|---|
| வெல்லம் | கசப்பு |
| சுண்டைக்காய் | இனிப்பு |
| மிளகு | புளிப்பு |
| புளியங்காய் | காரம் |
| கடல் நீர் | துவர்ப்பு |
| பாக்கு | உவர்ப்பு |

# தமிழ்
# இன்ப வாசகம்

## மூன்றும் புத்தகம்

பதிப்பாசிரியர் :
S. V. வரதராஜ ஐயங்கார், M.A., M.O.L.,
விவேகாநந்தர் கல்லூரி, சென்னை.

இன்டர் நாஷனல் பப்ளிஷிங் கம்பெனி
நுங்கம்பாக்கம் சென்னை-6

[விலை அணா ஆறு]

முதற் பதிப்பு—நவம்பர் 1951.

Kabeer Printing Works, Madras (1777)

## முகவுரை

தமிழ் இன்ப வாசகம் என்னும் வரிசையில் இது மூன்றாம் புத்தகம். இரண்டாம் புத்தகத்தில் சிறு தொடர்களையும், வாக்கியங்களையும் பாடங்களின் வாயிலாகக் கற்றுத் தேர்ந்த குழந்தைகள் மூன்றாம் புத்தகத்தில் ஒரு பாடத்தில் பல வாக்கியங்களால் சொல்லப்படும் பொருள்களையும் அவற்றின் கருத்துக் களையும் கற்றுத் தேர்ச்சியடையும் வகையில் இரண் டாம் வகுப்பை விடச் சற்று உயர்ந்த நடையில் பாடங்கள் அமைக்கப்பெற்றுள்ளன.

கற்ற பாடங்களின் பொருள் குழந்தைகள் உள் ளத்தில் பதிவதற்கு ஏற்றவாறு ஆங்காங்கே பயிற் சிகள் புதுமுறையில் சேர்க்கப்பெற்றிருக்கின்றன. குழந்தைகளுக்கு எழுதி வாசிப்பதைவிடப் படம் பார்ப்பதில் ஆசை அதிகம். அதனால் படங்கள் நிரம்ப சேர்க்கப்பெற்றுள்ளன. வகுப்பின் தரத்திற்கு ஏற்ப இடையிடையே பாட்டுக்களைச் சேர்த்துள்ளேன். இப் புத்தகம் நன்கு அமைவதற்கு இன்றியமையாதவை யாவும் என்னால் இயன்றவரை செய்துள்ளேன்.


தொடக்கப் பள்ளியிலுள்ள அநுபவம் நிறைந்த ஆசிரியர்கள் இப்புத்தகத்தில் செய்வதற்கு ஏற்ற திருத் தங்கள் உளவேல், அவற்றை எனக்குத் தெரிவிப்பின் மிகவும் நன்றி பாராட்டுவேன். தமிழ் அன்பர்கள் இப் புத்தகத்தை ஆதரித்து உதவுவார்கள் என்று நம்பு கின்றேன்.

ஆசிரியன்

# பொருளடக்கம்


| | பொருள் | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | தமிழ்த் திரு நாடு | ... | 1 |
| 2. | திருவள்ளுவர் | ... | 3 |
| 3. | தென்னை மரம் | ... | 6 |
| 4. | கிராமம் | ... | 9 |
| 5. | ஊருக்கு நல்லது | ... | 13 |
| 6. | தைரியமுள்ள வேலன் | ... | 15 |
| 7. | உப்பு | ... | 19 |
| 8. | பாரதியார் | ... | 22 |
| 9. | மழை | ... | 27 |
| 10. | தீபாவளி | ... | 29 |
| 11. | ஔவையார் | ... | 32 |
| 12. | பழமொழிகள் | ... | 36 |
| 13. | நான் யார்? | ... | 37 |
| 14. | கடிதம் | ... | 39 |
| 15. | வித்தியாசாகரர் | ... | 43 |
| 16. | காந்தி தாத்தா | ... | 47 |
| 17. | ஜப்பானியச் சிறுவன் | ... | 49 |
| 18. | உல்லாசப் பிரயாணம் | ... | 53 |
| 19. | கூடை முடைதல் | ... | 57 |
| 20. | கைத் தொழில் | ... | 60 |
| 21. | நான்கு பாடகர்கள் | ... | 62 |
| 22. | போலிச் சீடன் | ... | 66 |
| 23. | அரண்மனை விருந்து | ... | 70 |
| 24. | என் கதை | ... | 75 |
| 25. | தேசிங்கு குதிரையை அடக்குதல் | ... | 79 |
| 26. | செய்யுள் பாடம் | ... | 82 |

# 1. தமிழ்த் திருநாடு




தமிழ்த் திரு நாடு தன்னைப் பெற்ற—எங்கள்
தாயென்று கும்பிடடி பாப்பா !
அமிழ்தில் இனியதடி பாப்பா—நம்
ஆன்றோர்கள் தேசமடி பாப்பா ! (1)

சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே—அதைத்
தொழுது படித்திடடி பாப்பா !
செல்வம் நிறைந்த இந்துஸ்தானம்—அதைத்
தினமும் புகழ்ந்திடடி பாப்பா ! (2)

வடக்கில் இமயமலை பாப்பா !—தெற்கில்
வாழுங் குமரிமுனை பாப்பா !
கிடக்கும் பெரிய கடல் கண்டாய்—இதன்
கிழக்கிலும் மேற்கிலும் பாப்பா ! (3)

—பாரதியார்.

| | | | |
|---|---|---|---|
| திரு | உயர்வு | நிறைந்த | இமயமலை |
| கும்பிடு | தொழுது | புகழ்ந்து | குமரிமுனை |
| அமிழ்தில் | செல்வம் | கண்டாய் | ஆன்றோர் |

## பொருள் விளக்கம்

திரு - அழகிய. அமிழ்தம் - பால். ஆன்றோர் - பெரியோர்.

## கேள்விகள்

1. தமிழ்நாட்டை ஏன் தாயென்று வணங்க வேண்டும் ?
2. தமிழ் எப்படிப்பட்ட மொழி ?
3. இந்தியாவின் எல்லைகள் யாவை ?

## பயிற்சி

1. எதிர்ச் சொற்கள் எழுது : அமிழ்தம், நிறைந்த, புகழ்ந்து, உயர்வு. [உ-ம். அமிழ்தம் × விஷம்]

2. கும்பிடு, செல்வம், புகழ், நிறைந்த—இச் சொற்களை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுது.

## 2. திருவள்ளுவர்



1. தமிழகம் முற்காலத்தில் சேர சோழ பாண்டியம் என்னும் மூன்று நாடுகளாகப் பிரிந்திருந்தது. சேர வேந்தர் சேர நாட்டை ஆண்டனர். சோழ நாடு சோழ மன்னர் ஆட்சியில் இருந்தது. பாண்டிய அரசர் பாண்டிய நாட்டில் ஆட்சி புரிந்தனர். இந்த அரசர்கள் மூவரும் தமிழ் நாட்டு மூவேந்தர்களாக விளங்கினர்.

2. மதுரை மாநகரம் பாண்டிய நாட்டின் தலைநகரமாக இருந்தது. அங்கே தமிழ்ப் புல

வர்கள் கூடித் தமிழ் நூல்கள் இயற்றினார்கள். அவர்களைப் பாண்டிய மன்னர் ஆதரித்து வந்தனர். அப்புலவர்களில் மிகவும் சிறந்தவர் திருவள்ளுவர் என்பவர்.

3. திருவள்ளுவர் கல்வியில் சிறந்தவர்; நல்ல குணமும் நடத்தையும் உடையவர்; ஆடை நெய்து விற்று வாழ்ந்தவர்; தமக்கு என்ன துன்பம் வந்தாலும் பிறரிடம் சென்று கடனோ யாசகமோ கேட்கமாட்டார். அவர் மனைவியின் பெயர் வாசுகி என்பது. அந்த அம்மையாரும் தமது கணவன் சொற்படி நடந்துவந்தார்.

4. திருவள்ளுவர் ஒரே நூல்தான் இயற்றினார். அதற்குத் திருக்குறள் என்று பெயர். அதில் 1330 சிறிய பாட்டுக்கள் உள்ளன. அந்தப் பாட்டுக்கள் யாவும் நாம் இன்பமாக வாழ்வதற்கு வேண்டிய நல்ல வழிகளைத் தெரிவிக்கின்றன. திருக்குறளுக்கு ஒப்பான வேறு நூல் இல்லை. அதை ஒவ்வொரு தமிழனும் கற்பது அவசியம். அது எல்லா இனத்தாருக்கும் பொதுவான நீதிகளையே கூறுகிறது. எல்லா மதத்தினரும் அதனை வாசித்து வருகிறார்கள். திருக்குறள் தமிழ் வேதம் ஆகும்.

| | | | |
|---|---|---|---|
| தமிழகம் | தலைநகரம் | ஆட்சி | நடத்தை |
| யாசகம் | கடன் | கற்பது | வாசித்து |

## பொருள் விளக்கம்

ஆடை - துணி. யாசகம் - இரும். ஒப்பான - சமமான.

## கேள்விகள்

1. தமிழகத்தில் இருந்த மூன்று நாடுகள் எவை?
2. பாண்டிய நாட்டின் தலைநகரம் எது?
3. திருவள்ளுவர் எப்படி வாழ்க்கை நடத்தினர்?
4. அவர் மனைவி பெயர் என்ன?
5. திருக்குறளைப்பற்றி உனக்கு என்ன தெரியும்?

## பயிற்சி

1. அரசர் என்னும் பொருள் தரும் வேறு இரண்டு பெயர்கள் கூறு.

2. மனைவி, துன்பம், கடன்—எதிர்ப்பதம் சொல்லு.

## இலக்கணம்

"தமிழகம் முற்காலத்தில்"—இது ஒரு சொற்றொடர். இதில் கருத்து முற்றுப்பெறவில்லை.

"திருவள்ளுவர் கல்வியில் சிறந்தவர்."—இந்தச் சொற்றொடர் ஒரு முழுக் கருத்தைத் தெரிவிக்கிறது. இதற்கு வாக்கியம் என்று பெயர். வாக்கியத்தின் முடிவில் ஒரு புள்ளி வைக்கிறோம்(.). இதற்கு முற்றுப்புள்ளி என்று பெயர். ஒவ்வொரு வாக்கியத்தின் முடிவிலும் ஒரு முற்றுப்புள்ளி இடவேண்டும்.

## 3. தென்னை மரம்

1. மரங்களில் அநேக வகைகள் இருக்கின்றன. அவற்றுள் தென்னை மரமும் ஒன்று. தென்னை மரம் பார்வைக்கு அழகாக இருக்கும்.



அது ஓங்கி உயர்ந்து ஏறக்குறைய ஐம்பது அல்லது அறுபது அடி உயரம் வளரும்.


2. தென்னை மரம் மணற்பாங்கான இடங்களில் மிகவும் செழிப்பாக வளரும். ஆதலால் ஆற்றங் கரைகளிலும் கடற்கரைகளிலும் தென்னை மரங்களைக் அதிகமாகக் காணலாம்.


3. தென்னை மரத்துக்குக் கிளைகள் இல்லை. ஆனால் கிளைகள் போல் அதன் மட்டைகள் அமைந்துள்ளன. மட்டையின் இரு புறத்திலும் நேர்நேராக நீண்ட ஓலைகள் இருக்கின்றன.

4. தென்னை மரத்தை வளர்ப்பது எப்படி? நெற்றான தேங்காயை மணலில் நிமிர்த்திப் புதைத்து வைத்துத் தண்ணீர் ஊற்றிவரவேண்டும். சில நாட்களில் அது முளைத்துச் சிறிய

கன்று ஆகும். அதுவே தென்னம் பிள்ளை எனப்படும். தென்னம் பிள்ளையை எடுத்து, வேருேர் இடத்தில் குழி தோண்டி நடவேண்டும். இது மரமாக வளர்ந்து ஐந்து ஆண்டுகளில் பயன் தரும்.

5. தென்னை மரத்தில் தேங்காய்கள் குலை குலையாகக் காய்க்கும். முற்ருத தேங்காய்க்கு இளநீர் என்று பெயர். இளநீர் மிகவும் இனிப்





பாக இருக்கும். வெயில் நேரத்தில் மக்கள் அதைப் பிரியத்துடன் குடிப்பார்கள். இளநீர் அருந்துவது உடம்புக்கு நல்லது. தேங்காய் நமது முக்கியமான உணவுப் பொருள்களில் ஒன்று.

6. தென்னை மரத்தின் ஒவ்வொரு பாகமும் உபயோகமானது. அடிமரம் வீடுகட்ட விட்டமாக உதவும். தென்னை ஓலைகளைக் கீற்ருக முடைந்து வீடுகளுக்குக் கூரை வேய உபயோகிக்கலாம். தேங்காய் மட்டையிலிருந்து நார் எடுத்துக் கயிறு திரிக்கிருர்கள். தென்னை

நாரிலுல் விரிப்பு, கால்மிதி முதலிய பொருள் கள் செய்கிருர்கள். முற்றின தேங்காயைக் கொப்பரை என்பர். கொப்பரையைச் செக் கில் இட்டு ஆட்டித் தேங்காய் எண்ணெய் எடுக்கிருர்கள். தேங்காய் எண்ணெயில் பல-காரங்கள் செய்வதுண்டு. சோப்பு, மெழுகு வர்த்தி முதலியவை செய்யவும் தேங்காய் எண் ணெய் பயன்படுகிறது. இவ்வாறு தென்னை மரம் நமக்குப் பல வகைகளில் உதவுகின்றது.

| | | | |
|---|---|---|---|
| வகை | மணற்பாங்கு | கீற்று | கொப்பரை |
| பார்வை | முற்றின | வேய | பலகாரம் |
| அழகு | புதைத்து | விரிப்பு | சோப்பு |
| ஓங்கி | குலைகுலையாக | கால்மிதி | மெழுகுவர்த்தி |

### பொருள் விளக்கம்

ஏறக்குறைய - சுமார். கீற்று - முடைந்த ஓலை.

### கேள்விகள்

1. தென்னை மரம் எவ்வளவு உயரம் வளரும்?
2. தென்னை மரம் எங்கே வளரும்?
3. தென்னை மரத்தை வளர்ப்பது எப்படி?
4. இளநீர் என்பது என்ன?
5. தென்னையின் உபயோகங்கள் யாவை?

### பயிற்சி

1. உன் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுது: ஏறக்குறைய, மணற்பாங்கான, குலைகுலையாக, சமையல்.

2. குலைகுலையாக—இது ஒரு அடுக்குத் தொடர். கொஞ்சங்கொஞ்சமாக, கொத்துக்கொத்தாக, சீப்புச்சீப்

பாக, சிறிது சிறிதாக என்பவைகளும் அடுக்குத் தொடர்களே. இத் தொடர்களை உன் சொந்த வாக்கியங் களில் அமைத்து எழுது.

இலக்கணம்

பெயர்களைக் குறிக்கும் சொற்கள் பெயர்ச்சொற்கள் எனப்படும்.

(உ - ம்.) தென்னை, பனை, ஓலை, சோப்பு, முருகன், கொப்பரை.

## 4. கிராமம்

1. கிராமம் என்பது ஒரு சிறிய ஊர். பெரிய ஊருக்கு நகரம் என்பது பெயர்; பட்ட ணம் என்றும் பெயர் உண்டு. ஒரு கிராமத்தில் ஏறக்குறைய ஐந்நூறு வீடுகள் இருக்கும். கிராமத்திலுள்ள தெருக்கள் சிறியவைகளாக இருக்கும்.

2. சில கிராமங்களில் குளங்கள் இருக் கும். சில கிராமங்களுக்கு அருகில் ஆறுகள் ஓடும். குளங்களிலும் ஆறுகளிலும் உள்ள தண்ணீரே மக்களுக்குப் பயன்படும். அத்தண் ணீரையே குளிக்கவும் துணி துவைக்கவும், கால்நடைகளைக் குளிப்பாட்டவும் கிராமவாசி கள் உபயோகிப்பர். குடி தண்ணீருக்காகத் தனியே கிணறோ குளமோ இருக்கும்.

3. ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு கோயில் இருக்கும். கோயிலைச் சுற்றி நான்கு

பெரிய தெருக்கள் இருக்கும். இவை தவிர, வேறு தெருக்களும் சந்துகளும் இருக்கும். அவற்றில் மாடி வீடுகளும், ஓட்டு வீடுகளும், கூரை வீடுகளும், குடிசைகளும் இருக்கும்.

4. கிராமத்தில் கோயிலைத் தவிர வேறு சில பொது இடங்களும் உண்டு. அவை பஜனை மடம், கிராமச் சாவடி, பள்ளிக்கூடம்,



'தபால் ஆபீசு' போன்றவை. கோயிலில் திருவிழாக்கள் நடக்கும்போது கிராமவாசிகள் யாவரும் ஒற்றுமையாக இருந்து சிறப்பாக நடத்துவார்கள்.

5. கிராமவாசிகளில் பெரும்பாலோர் பயிர்த்தொழில் செய்கிறார்கள். ஊரைச் சுற்றிலும் நன்செய் நிலங்களும் புன்செய்

நிலங்களும் இருக்கின்றன. தோட்டங்களில் காய் கறிகள் பயிர் செய்யப்படுகின்றன. கிராமத்தில் தச்சர், கருமார், சேணியர், வண்ணுர் முதலிய தொழிலாளிகளும் இருக்கிருர்கள். கிராமத்திற்கு ஏற்ற ஒரு சிறு கடை தெருவும் இருக்கும். கிராமவாசிகளுக்கு வேண்டிய பொருள்கள் அங்கே கிடைக்கும்.

6. உடல் நலம் பேணுவதற்கு மிகவும் ஏற்றது கிராம வாழ்க்கை. கிராமத்தில் சுத்தமான காற்றும், தண்ணீரும் உண்டு. பால், தயிர், காய்கறிகள் முதலியவை கிராமத்தில் மலிவாகக் கிடைக்கும். கிராம வாழ்க்கையில் நெருக்கடியும் பெருஞ் சந்தடியும் இரா; அமைதி குடிகொண்டிருக்கும்.

| | | | |
|---|---|---|---|
| நகரம் | அருகில் | பொது | நன்செய் |
| வாழ்க்கை | கால்நடை | சந்து | சாவடி |
| புன்செய் | அளிக்கும் | உபயோகிக்க | குடிசை |
| திருவிழா | தொழிலாளி | மலிவு | ஒற்றுமை |

பொருள் விளக்கம்

சந்து - சிறிய தெரு. திருவிழா - கோயில்களில் தெய்வங்களுக்குச் சிறப்பாகப் பூசை நடைபெறுவது. கால்நடை - ஆடுமாடுகள்.

கேள்விகள்

1. பெரிய ஊருக்கு என்ன பெயர்?
2. கிராமங்களிலுள்ள தண்ணீர் வசதிகள் யாவை?
3. கிராமத்திலுள்ள பொது இடங்கள் எவை?

4. கிராமத்திலுள்ள தொழிலாளிகள் யாவர்?
5. கிராமவாழ்க்கையின் சிறப்பு என்ன?

## பயிற்சி

1. உன் கிராமத்தைப்பற்றி ஐந்து வாக்கியங்கள் எழுது.

2. எதிர்ச்சொற்கள் தருக—அருகில், நல்லது, மலிவு, நன்செய், ஒற்றுமை.

3. இப்பாடத்தில் வந்துள்ள பொருள்களின் பெயர்களை எழுது :

(உ - ம்.) வீடு, குளம், குடிசை.

## இலக்கணம்

கிராமம், வீடு, ஜனங்கள், காய்கறி, பழம், பால், குடிசை, தோட்டம்—இவை பல பொருள்களின் பெயர்கள். ஒரு பொருளின் பெயராய் வருவது பெயர்ச்சொல் எனப்படும்.

கீழ்வரும் வாக்கியங்களிலுள்ள பெயர்ச் சொற்களை எடுத்து எழுது.


1. பிள்ளைகள் கிராமத்திற்குச் சென்றார்கள்.

2. கந்தன் தோட்டத்திற்குச் சென்று பூப்பறித்து வந்தான்.

3. என்னுடைய சொந்த ஊர் வரகூர்.

4. கோயிலில் திருவிழா நடக்கிறது.

## 5. ஊருக்கு நல்லது



ஊருக்கு நல்லது சொல்வேன்—எனக்கு
உண்மை தெரிந்தது சொல்வேன்;
சீருக்கெல்லாம் முதலாகும்—ஒரு
தெய்வம் துணை செய்ய வேண்டும். (1)

தெய்வம் பல பல சொல்லிப்—பகைத்
தீயை வளர்ப்பவர் மூடர்;
உய்வதனைத்திலும் ஒன்றாய்—எங்கும்
ஓர் பொருள் ஆனது தெய்வம். (2)

தீயினை கும்பிடும் பார்ப்பார்—நித்தம்
திக்கை வணங்கும் துருக்கர்,
கோயில் சிலுவையின் முன்னே—நின்று
கும்பிடும் ஏசு மதத்தார். (3)

1777—2

யாரும் பணிந்திடும் தெய்வம்—பொருள்
யாவினும் நின்றிடும் தெய்வம்,
பாருக்குள்ளே தெய்வம் ஒன்று—இதில்
பற்பல சண்டைகள் வேண்டாம். (4)

—பாரதியார்.

| | | |
|---|---|---|
| உண்மை | பகை | நித்தம் |
| சீர் | தீ | சிலுவை |
| தெய்வம் | மூடர் | பணிந்திடும் |
| துணை | உய்வது | பாருக்குள்ளே |

### பொருள் விளக்கம்

பகை - விரோதம், உய்வது - வாழ்வது, பார் - பூமி, சீர் - பெருமை.

### கேள்விகள்

1. ஊருக்கு நல்லது என்ன ?
2. மூடர் என்ன செய்வார்கள் ?
3. தெய்வத்தை எவ்வாறு வணங்குகிறார்கள் ?

### பயிற்சி

1. இந்தப் பாடலை மனப்பாடம் செய்.
2. தகுந்த எதிர்ச் சொற்களை எடுத்து எழுது :


| | |
|---|---|
| பகை | பின்னே |
| உண்மை | நீர் |
| தீ | பல |
| மூடன் | பொய் |
| முன்னே | நட்பு |
| ஒன்று | அறிவாளி |

3. முற்றுப்புள்ளிகளை இடு :—

கடவுள் எங்கும் இருக்கிறார் கடவுள் ஒருவரே அவரை நாம் பல உருவங்களில் வணங்குகிறோம் ஆதலால் நாம் சண்டையிடக் கூடாது

4. இப்பாடத்தில் வந்துள்ள பெயர்ச் சொற்களை எடுத்து எழுது.

# 6. தைரியமுள்ள வேலன்



1. புங்கனூர் என்பது ஒரு சிறிய ஊர். அது ஒரு பெரிய ஏரியின் கரையில் இருக்கிறது. அந்த ஏரியில் எப்பொழுதும் தண்ணீர் இருக்கும்; மழை நாட்களில் வெள்ளம் வந்து, கிராமத்தை அழித்துவிடும். ஆதலால் கரையில்லாத ஒரு பக்கத்தில் மிகவும் பலமான அணை எழுப்பப்பட்டிருந்தது. வருடந்தோறும் அந்த அணையைக் கிராமத்தார் பழுது பார்த்து வந்தனர்.

2. ஒரு சமயம் ஏரியில் தண்ணீர் நிரம்பி இருந்தது. ஒரு நாள் மாலை நேரம்; வேலன் என்ற சிறுவன் பள்ளிக்கூடத்திலிருந்து வீட்

டிற்கு வந்துகொண்டிருந்தான். அவன் அணை யின் பக்கமாகச் சென்றான். அப்பொழுது சூரியன் மறைந்து இருட்டும் சமயம். வயல் களில் வேலை செய்துகொண்டிருந்த குடியான வர்கள் எல்லோரும் வீடுகளுக்குத் திரும்பிச் சென்று விட்டார்கள். வேலன் வந்துகொண் டிருந்த வழியில் மனிதர்களே காணப்படவில்லை. அணையின் ஓரிடத்தில் சிறு உடைப்பு ஏற்பட்டு, அதன் வழியாகத் தண்ணீர் வெளிவந்து கொண்டிருந்ததை வேலன் கண்டான்.

3. இவ்வாறு தண்ணீர் வெளிவந்து கொண்டே இருக்கும்படி விட்டு விட்டால் அணையின் உடைப்பு பெரிதாகி விடும்; அணை உடைந்து, தண்ணீர் பெருக்கெடுத்துக் கிரா மத்தை அழித்துவிடும்; பெருஞ் சேதம் உண் டாகும். கிராமத்திற்குச் சென்று பெரியவர் களிடம் சொல்லி, மக்களை அழைத்து வரவோ நேரம் இல்லை; அதற்குள் அணை இடிந்து விடவும் கூடும்.

வேலன் இவ்வாறு யோசனை செய்தான்; எப்படியாவது தானே அந்த உடைப்பை அடைக்கவேண்டும் என்று உறுதி பூண்டான்.

4. வேலன் மண்ணையும் கற்களையும் எடுத்து வந்து உடைப்பை அடைத்தான். ஆனால் மண்ணும் கற்களும் தண்ணீர் வெளி

வரும் வேகத்தால் ,சிதறுண்டன. வேலன் வெகு நேரம் முயன்று களைத்துப் போனான்; கடைசியில் உடைப்பின்மேல் தன் கையை அழுத்தமாக வைத்து அதை மூடிக்கொண்டான்; அந்நிலையிலேயே விடியுமட்டும் இருந்தான்; வேலனுக்கோ பசி அதிகம் ஆயிற்று; கண்கள் அவனைத் தூங்க அழைத்தன. ஆனால் வேலன் அவற்றைப் பொருட்படுத்தவில்லை; உடைப்பை விட்டுக் கையையும் எடுக்கவில்லை.

5. அந்நிலையில் தன்னை மறந்திருந்த வேலனைக் காலையில் அவ்வழியே சென்ற சிலர் கண்டனர். உடனே நிலைமையை அவர்கள் உணர்ந்தனர்; வேலனை அவன் வீட்டிற்கு எடுத்துச் சென்றனர். இரவு முழுவதும் வேலனைக் காணுமல் கவலையுடன் இருந்த பெற்றோர், மகிழ்ச்சி அடைந்தார்கள். கிராமத்தார் தகுந்த ஆட்களைக்கொண்டு, அணையில் ஏற்பட்ட உடைப்பை அடைத்தனர். வேலனுடைய நற்செய்கையைக் கிராமத்தார் புகழ்ந்தார்கள்; இரவு முழுவதும் தனியாக இருந்து கிராமத்திற்கு நன்மை செய்த வேலன் தைரியம் உள்ளவன் அல்லவா?

| | | | |
|---|---|---|---|
| வெள்ளம் | பெருக்கெடுத்து | நேரம் | பொருட்படுத்த |
| உணர்ந்தனர் | அழித்து | உடைப்பு | முயன்று |
| உடைந்து | களைத்து | மறந்து | தைரியம் |

### பொருள் விளக்கம்

சேதம் - அழிவு. உறுதிபூண்டான் - முடிவுசெய்தான்.

### கேள்விகள்

1. புங்கனூர் எங்கே இருக்கிறது?
2. ஏரிக்கு ஏன் அணை எழுப்பியிருந்தனர்?
3. வேலன் அணையில் கண்டது என்ன?
4. வேலன் என்ன செய்தான்?
5. வேலன் அருஞ்செயல் யாது?

### பயிற்சி

1. எதிர்ச் சொற்களை எழுது—மகிழ்ச்சி, தைரியம், காணுமல், சிலர்.

2. நெடுநேரம், களைத்து, யோசனை, பெருக்கெடுத்து—இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுது.

3. பின்னுள்ளவற்றில் வாக்கியங்களையும் தொடர்களையும் தனித்தனியே எழுது :—


(1) புங்கனூர் ஏரிக்கருகில்

(2) வேலன் தண்ணீர் கசிவதைக் கண்டான்.

(3) வேலன் கையைத் துவாரத்தின்மேல்

(4) நற்செய்கையைக் கிராமத்தார்

# 7. உப்பு



1. சுவைகள் ஆறு வகைப்படும். அவற்றில் உவர்ப்பு என்பதும் ஒன்று. உவர்ப்பு என்னும் சுவை உப்பு என்னும் பொருளால் உண்டாகிறது. உப்பு இல்லாத உணவுப் பொருள்களை நாம் விரும்புவதில்லை. "உப்பில்லாப் பண்டம் குப்பையிலே" என்ற பழமொழி இதனாலேயே வழங்குகிறது. உப்பை நாம் தனியாக உட்கொள்ள முடியாது; அதை உணவுப் பொருள்களுடன் கலந்துதான் உட்கொள்கிறோம்.

2. சுத்தமான உப்பு வெண்மை நிறமாக இருக்கும். கடைகளில் பழுப்பு நிறமுள்ள உப்பும் கிடைக்கும். உப்பில் கலந்துள்ள அழுக்கினால் பழுப்பு நிறம் உண்டாகிறது.

தண்ணீரில் உப்பைக் கரைத்தால் இந்த அழுக்கைப் பிரித்து விடலாம்.

3. உப்பு பெரும்பாலும் கடல் நீரிலிருந்து எடுக்கப்படுகிறது. கடல் நீரைச் சிறு வாய்க் கால்கள் வழியாகப் பாய்ச்சிப் பெரிய தொட்டி களில் நிரப்புவார்கள். அத்தண்ணீரைக் கொஞ் சங் கொஞ்சமாகச் சிறு பாத்திகளில் விடுவார் கள். பாத்திகளின் அடிப்பாகம் கடினமாக இருக்கும். பாத்திகளில் விடப்படும் நீர் சூரிய வெப்பத்தினுல் சிறிது சிறிதாகக் குறையும்; நீர் முழுதும் வற்றின பின்பு, உப்பு சிறு சிறு கற்களாகப் பாத்திகளில் படிந்திருக்கும். இவற்றை உலர்த்திக் குவித்து வைப்பார்கள். இவ்விதம் உப்பு செய்யப்படும் இடத்திற்கு **உப் பளம்** என்பது பெயர்.

4. சில இடங்களில் நிலத்தை வெட்டியும் உப்பு எடுக்கப்படுகிறது. இந்த உப்பு மண் ணோடும் வேறு பல பொருள்களோடும் கலந் திருக்கும்; அப்பொருள்களைப் பிரித்து உப்பு எடுப்பார்கள். மேல் நாடுகளில் இவ்வகை உப்பு அதிகம்.

5. நமது உடல் வளர்ச்சிக்கு உப்பு மிக வும் அவசியமானது. உப்பு ஜீரண சக்தியை அதிகப்படுத்தும்; எலும்புகளுக்குப் பலம் அளிக்கும். ஊறுகாய்களுக்கு உப்பு சேர்க்

கிறோம். உப்பு சேர்க்காவிட்டால் பல ஆகாரப் பொருள்கள் கெட்டுவிடும்.

| | | | |
|---|---|---|---|
| உவர்ப்பு | வெண்மை | வற்றின | ஊறுகாய் |
| பண்டம் | பழுப்பு | உலர்த்தி | வளர்ச்சி |
| ஆகாரம் | அழுக்கு | விற்பனை | பெரும்பாலும் |

### பொருள் விளக்கம்

பெரும்பாலும் - அநேகமாக.

### கேள்விகள்

1. உப்பு ஏன் பழுப்பு நிறமாக இருக்கிறது?
2. கடல் நீரிலிருந்து உப்பு எவ்வாறு எடுக்கப்படுகிறது?
3. உப்பளம் என்பது என்ன?
4. மேல் நாடுகளில் உப்பு எவ்வாறு எடுக்கப்படுகிறது?
5. உப்பின் உபயோகம் என்ன?

### பயிற்சி

1. உப்பு தன் கதையைச் சொல்வது போல் சுருக்கமாக எழுது.
2. எதிர்ச் சொற்களை எழுது—கடினம், வெண்மை, அழுக்கு, விற்பனை, கலந்து.
3. கீழுள்ளவற்றில் கோடிட்ட இடங்களில் தகுந்த எழுத்துக்களை எழுது.

அ—க்கு, விற்ப—, —ரணசக்தி, ஊ—காய், வெ—மை.

### இலக்கணம்

வேலன், முருகன், கண்ணன்—இவை ஆண்களின் பெயர்கள்.

மங்களம், வள்ளி, வசந்தா—இவை பெண்களின் பெயர்கள்.

ஏரி, குளம், ஆறு, தோட்டம்—இவை இடத்தின் பெயர்கள்.

இவையாவும் பெயர்ச் சொற்களே.

# 8. பாரதியார்



1. பாரதியாரின் முழுப்பெயர் **சுப்பிரமணிய பாரதியார்** என்பது. அவர் சிறந்த தமிழ்க் கவிஞர். தமிழ் நாட்டில் அவரை அறியாதவர் இரார். அவருடைய பாடல்கள் நாடு முழுதும் பரவியுள்ளன.

2. சுமார் எழுபது வருடங்கட்கு முன் பாரதியார் எட்டையபுரம் என்ற கிராமத்தில் பிறந்தார். சின்னசாமி ஐயர் என்பார் அவர் தந்தை; இலக்குமி அம்மையார் அவருடைய தாயார். பாரதியாருடைய ஐந்தாவது வயதில் அவருடைய அன்னை இறந்துவிட்டார்.

3. தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளையும் .பாரதியார் இளமையில் நன்கு கற்றார்; தமிழில் கவிபாடும் திறமை பெற்றார்; எப்பொழுதும் படித்துக்கொண்டும் எழுதிக்கொண்டும் இருந்தார்.

4. பதினைந்தாவது வயதில் அவருக்குத் திருமணம் நடந்தது. செல்லம்மாள் என்ற பெண்மணியை அவர் மணந்தார். திருமணம் நடந்த பின்பு, சின்னசாமி ஐயர் காலமானார். காசியில் பாரதியாரின் அத்தை ஒருவர் இருந்தார். பாரதியார் அங்கே சென்று அவருடன் சில காலம் இருந்தார்; இந்தி, ஸம்ஸ்கிருதம் ஆகிய மொழிகளைக் கற்றார்.

5. பாரதியார் தமது இருபதாவது வயதில்

எட்டையபுரத்திற்குத் திரும்பினார். எட்டையபுரம் ஜமீன்தார் அவரை அன்புடன் ஆதரித்தார். பின்பு பாரதியார் மதுரையில் சில காலம் தமிழ் ஆசிரியராக வேலை செய்தார்; அதில் விருப்பம் இன்றி சென்னைக்குச் சென்றார்; அங்கே நமது நாட்டின் விடுதலைக்கு உழைக்கலானார். அரசாங்கத்தார் அவரைச் சிறைவைக்க நினைத்தனர்; அது கண்ட பாரதியார், புதுச்சேரியில் அடைக்கலம் புகுந்தார்.

6. புதுச்சேரியில் பாரதியார் மிகவும் கஷ்டப்பட்டார். உண்ண உணவும் உடுக்க உடையும் இன்றி, அவர் தமது மனைவி மக்களுடன் வறுமையில் வாழ்ந்து வந்தார். சில நண்பர்கள் அவருக்கு உதவி செய்தார்கள். துன்ப காலத்திலும் பாரதியார் முகமலர்ச்சியுடனேயே இருப்பார்.

7. மீண்டும் சென்னைக்குத் திரும்பிய பாரதியார், 'சுதேசமித்திரன்' என்னும் பத்திரிகையில் உதவி ஆசிரியராக அமர்ந்தார். அக்காலத்தில் பல பாடல்களையும் கதைகளையும் எழுதி வெளியிட்டார். பாரதியார் தமது முப்பத்தொன்பதாவது வயதில் காலமானார்.

8. பாரதியார் சிறந்த தேசபக்தர். அவருடைய பாடல்களும் கதைகளும் அவருக்குப் பெரும் புகழை அளிக்கின்றன. எட்டைய

புரத்தில் அவருடைய நினைவுச் சின்னமாக ஒரு மண்டபமும் நூல் நிலையமும் அமைக்கப் பட்டுள்ளன. பாரதியார் தன்னலம் கருதாத தன்மை வாய்ந்தவர். தமிழ் மக்கள் அவரை என்றென்றும் போற்றி வரவேண்டும்; அவருடைய கவிகளைப் படித்துப் பயன் பெறவேண்டும்.

| | | |
|---|---|---|
| சிறந்த | திறமை | தேசபக்தர் |
| கவிஞர் | திருமணம் | போற்றி |
| நிலையம் | காலமானார் | விடுதலை |
| வெளியிட்டார் | தன்மை | உழைப்பு |
| தன்னலம் | பெண்மணி | சிறை |
| இளமை | ஆதரித்தார் | நினைவுச்சின்னம் |
| அடைக்கலம் | நண்பர் | ஆசிரியர் |

### பொருள் விளக்கம்

தன்னலம் - தனது லாபம். திருமணம் - கலியாணம். நினைவுச் சின்னம் - நினைவுக்குறி. அடைக்கலம் - சரண் புகுதல்.

### கேள்விகள்

1. பாரதியாரின் முழுப்பெயர் என்ன ?
2. பாரதியார் எங்கே பிறந்தார் ?
3. காசியில் பாரதியார் என்ன பயின்றார் ?
4. பாரதியார் ஏன் புதுச்சேரிக்குச் சென்றார் ?
5. பாரதியார் சென்னையில் என்ன வேலை செய்தார் ?
6. பாரதியாருடைய குணங்கள் யாவை ?

### பயிற்சி

1. இளமை, விடுதலை, நண்பன், புகழ்—இவைகளுக்கு எதிர்ப்பதங்கள் எழுது.

2. நினைவுச்சின்னம், அடைக்கலம், உழைப்பு, தன்னலம்—இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுது.

## இலக்கணம்

| ஒன்று | பல |
|---|---|
| மரம் | மரங்கள் |
| பூ | பூக்கள் |
| பாடல் | பாடல்கள் |
| மொழி | மொழிகள் |
| குணம் | குணங்கள் |

இவை பெயர்ச்சொற்கள். முதல் வரிசையில் உள்ளவை ஒன்றைக் குறிக்கின்றன; அவை ஒருமைச் சொற்கள். இரண்டாம் வரிசையில் உள்ளவை ஒன்றுக்கு மேற்பட்டவைகளைக் குறிக்கின்றன. அவை பன்மைச் சொற்கள்.

# 9. மழை



1. மழையே மழையே வா வா வா !
மனது குளிர ஓடிவா !
வானத்தில் இருந்து வா வா வா!
வாடிய செடிமேல் ஓடிவா !
மலையின் மேலே ஏறிவா !
மடுவில் சேர ஓடிவா !
கத்தரி காய்க்க வா வா வா !
இத்தரைமீது ஓடிவா !

2. காயும் பழமும் உன்னாலே!
கருப்பு நீங்குவ தூன்னாலே.
கோயிற் பூசை உன்னாலே
குடிகள் சிறப்பது உன்னாலே.

உழவும் விதைப்பும் உன்னாலே
உண்டு உடுப்பதும் உன்னாலே.
விளைவும் அறுப்பும் உன்னாலே
விலங்கினம் வாழ்வதும் உன்னாலே!

—கவிமணி

| | | |
|---|---|---|
| குளிர | பூசை | கருப்பு |
| மடு | குடிகள் | விலங்கினம் |

### பொருள் விளக்கம்

மடு - ஆழமான நீர் நிலை. கருப்பு - பஞ்சம். விலங்கினம் - பிராணி வகைகள்.

### கேள்விகள்

1. மழை எப்படிப் பெய்கிறது?
2. மழையினால் உண்டாகும் நன்மைகள் யாவை?

### பயிற்சி

1. எதிர்ச் சொற்களை எழுது:—வா, வெயில், வானம், மடு, வாழ்வு.

2. மழை பெய்யாவிடில் உண்டாகும் கஷ்டத்தைப் பற்றி ஐந்து வாக்கியங்களில் எழுது.

### இலக்கணம்

ஒருமை, பன்மைகளைப் பிரித்து எழுது.

காய்கள், பழம், கோவில், மலைகள், செடிகள், மடுக்கள், விலங்கு, கொடி.

# 10. தீபாவளி



1. தீபாவளி என்பது ஒரு பண்டிகை. அதை இந்துக்கள் விமரிசையாகக் கொண்டாடுகிறார்கள். தீபாவளி வருடந்தோறும் ஐப்பசி மாதத்தில் வரும். அன்று இந்துக்கள் யாவரும் அதிகாலையில் எண்ணெய் தேய்த்து நீராடுவார்கள்; புது ஆடைகளை அணிவார்கள்; நல்ல விருந்து உணவு செய்து உண்பார்கள்; சிறுவரும் சிறுமியரும் மத்தாப்பு, பட்டாசு முதலியவைகளைக் கொளுத்திக் மகிழ்வார்கள்.

2. தீபம் என்பதற்கு விளக்கு என்பது பொருள்; ஆவளி என்பது வரிசை எனப் பொருள்படும். தீபம் ஆவளி என்ற இரு சொற்களும் சேர்ந்து தீபாவளி என்று ஆகும். ஆதலால், 'தீபாவளி' என்பதற்கு 'விளக்கு

வரிசை' என்பது பொருள். தீபாவளி யன்று வீடுகளில் வரிசையாகத் தீபங்களை ஏற்றி வைப்பார்கள்.

3. இப்பண்டிகையை ஏன் கொண்டாடுகிறோம்? முன்னாளில் கண்ணபிரான் துவாரகையை ஆண்டு வந்தார். அப்பொழுது நரகாசுரன் என்னும் அரக்கன் பிராக்சோதிடம் என்ற ஒரு நகரை ஆண்டு வந்தான். அவன் மிகக் கொடியவன். அவன் குடிமக்களை மிகவும் துன்புறுத்தி வந்தான்; முனிவர்களை வருத்தி வந்தான்.

4. அவனுடைய கொடுமைகளைத் தாங்காமல் குடிமக்கள் கண்ணபிரானிடம் முறையிட்டுக் கொண்டார்கள். கண்ணன் அவர்களைக் காப்பாற்றுவதாக வாக்களித்தார்.

5. கண்ணபிரான் நரகாசுரனை எதிர்த்து அவனுடன் போர் புரிந்து தமது சக்கராயுதத்தால் அவனைக் கொன்றார். உயிர் நீங்குமுன், நரகாசுரன் கண்ணனிடம் ஒரு வரம் கோரினான். தான் இறந்த தினத்தை மக்கள் ஒரு திருவிழாவாகக் கொண்டாடவேண்டும் என்பதே அவனுடைய கோரிக்கை. கண்ணன் அவ்வாறே வரம் அளித்தார். அன்றுமுதல் நாம் தீபாவளியைக் கொண்டாடுகிறோம்.

| | | | |
|---|---|---|---|
| விமரிசையாக | வரிசை | துன்புறுத்தி | காப்பாற்று |
| அதிகாலை | முன்னுன் | சக்கராயுதம் | வாக்களித்தார் |
| தீபம் | அரக்கன் | கொடுமை | வரம் |
| ஆவளி | கொடியவன் | முறையிட்டு | கோரிக்கை |

## பொருள் விளக்கம்

விமரிசையாக - சிறப்பாக. தீபம் - விளக்கு. கோரிக்கை - வேண்டுகோள்.

## கேள்விகள்

1. தீபாவளியன்று இந்துக்கள் என்ன செய்வார்கள்?
2. 'தீபாவளி' என்பதன் பொருள் என்ன?
3. நரகாசுரனைக் கண்ணபிரான் ஏன் கொன்றார்?
4. நரகாசுரன் கோரிய வரம் யாது?
5. நாம் ஏன் தீபாவளியைக் கொண்டாடுகிறோம்?

## பயிற்சி

1. பொங்கல் பண்டிகையைப்பற்றி 10 வாக்கியங்கள் எழுது.

2. எதிர்ச்சொற்களை எழுது—முன்னுன், காப்பாற்றுதல், இறந்த, வேண்டும்.


3. விமரிசையாக, கொடுமை, வாக்களித்தான், அதிகாலை—இச்சொற்களை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுது.

## இலக்கணம்

ஒரு பொருளின் பெயரைக் குறிப்பது பெயர்ச்சொல் அல்லவா? அதேபோல், ஒரு பொருள் செய்யும் வேலையைக் குறிப்பது வினைச்சொல். முருகன் வீடு சென்றான்—இதில் முருகன் செய்யும் வேலை சென்றான் என்பது. இவ்வாறு செய்யும் தொழிலைக் காட்டும் சொற்கள் வினைச் சொற்கள்.

வா, போ, நில், நட, உட்கார், எழுது, படி—இவை வினைச் சொற்கள்.

# 11. ஔவையார்



1. நமது தமிழ் நாட்டில் பல தமிழ்ப் புலவர்கள் வாழ்ந்து வந்தனர். அவர்களில் பெண்பாலரும் சிலர் உண்டு. பெண்புலவரில் சிறந்தவர் ஔவையார். தமிழ் நாட்டில் ஔவையாரை அறியாதார் ஒருவரும் இரார்.

2. ஔவையார் கவிபாடுவதில் வல்லவர். அவருடைய கவிகள் சுவை மிகுந்தவை. தமது கவிகளைப் பாடிக்கொண்டே அவர் ஊர் ஊராகச் செல்வார்; கூழ் கிடைத்தாலும் அதை உண்டு, மகிழ்ந்து கவிபாடுவார். ஆதலால் ‘அவரைக் கூழுக்குப் பாடி’ என்று சொல்லுவதுண்டு.

3. ஔவையார் எல்லா உயிர்களிடத்திலும் அன்பு உள்ளவர். ஏழை பணக்காரன் என்ற வேற்றுமை அவருக்குக் கிடையாது. தமது கவித்திறமையால் அவர் ஏழைகளையும் செல்வர் ஆக்குவார்.

4. அக்காலத்தில் **அதியமான்** என்பான் தகடூரை ஆண்டு வந்தான். ஔவையார் அவனுக்கு உயிர்த் தோழர். ஒருநாள் அதியமானைக் காண ஒரு பெரியார் வந்தார். அப்பெரியார் ஒரு நெல்லிக்கனியை அதியமானுக்கு அளித்தார். அந்நெல்லிக்கனியைப் புசித்தால், புசித்தவன் நெடுங்காலம் உலகில் வாழலாம். அதியமான் அதைத் தான் உண்ணவில்லை. ‘ஔவையார் தாம் இக்கனியை

உண்பதற்குரியவர். அவர் நீண்டநாள் வாழ்ந்தால் தமிழருக்கும் தமிழுக்கும் நன்மை உண்டாகும்' என்று அதியமான் கருதினான்.

5. ஆதலால் அக்கனியை அவன் ஔவையாருக்கு அளித்தான்; ஆனால் அதன் சிறப்பை அவரிடம் சொல்லவில்லை. ஔவையார் அதை உண்டபின், அதன் பெருமையை அவரிடம் கூறினான். ஔவையார் அவனுடைய கொடைத்திறனைப் பாராட்டி வாழ்த்தினார்.

6. ஔவையார் நமக்குப் பல நூல்கள் அருளியுள்ளார். அவற்றில் ஆத்திசூடி, கொன்றைவேந்தன் என்பவை சிறுவர் சிறுமியர் யாவரும் படிக்கவேண்டிய நூல்களாம்.

| | | |
|---|---|---|
| புலவர் | பாராட்டினார் | கருதினான் |
| இரார் | உயிர்த்தோழர் | பெருமை |
| வல்லவர் | புசித்தால் | கொடைத்திறன் |

### பொருள் விளக்கம்

இரார் - இருக்கமாட்டார். வல்லவர் - திறமையுள்ளவர். வேற்றுமை - வித்தியாசம். கொடை - எதிர்பாராமல் பிறர்க்குக் கொடுப்பது; தருமம். பாராட்டினார் - புகழ்ந்தார்.

### கேள்விகள்

1. ஔவையார் என்பவர் யார்?

2. 'கூழுக்குப்பாடி' என்று அவருக்கு ஏன் பெயர் வந்தது?

3. ஔவையார் எப்படிப்பட்ட குணம் உள்ளவர்?

4. நெல்லிக்கனியை அதியமான் ஏன் ஔவையாருக்கு அளித்தான்?

5. ஔவையார் அருளிய நூல்கள் எவை

## பயிற்சி

1. எதிர்ச்சொற்கள் எழுது—வேற்றுமை, பெருமை, ஏழை, அறியாதார்.

2. ஔவையாரைப் பற்றி உனக்குத் தெரிந்த ஒரு கதை எழுது.

3. புலவர், உயிர்த்தோழன், பெருமை, பாராட்டினர்—இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுது.

## இலக்கணம்

பின்வரும் சொற்களைப் பெயர்ச்சொல், வினைச்சொல் எனப் பிரித்து எழுது:

ஔவை, பாடினாள், செல்வார், புசித்தான், ஏழை, அதியமான், கனி, தின்றான், கொடுத்தான், உலகம்.

## 12. பழமொழிகள்

1. அகத்தின் அழகு முகத்தில் தெரியும்.
2. பேராசை பெரு நஷ்டம்.
3. நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்.
4. யானை வரும் பின்னே, மணியோசை வரும் முன்னே.
5. ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா
6. ஆடையில்லா மனிதன் அரை மனிதன்.
7. உலைவாயை மூடலாம்; ஊர்வாயை மூடமுடியுமா?
8. பழகப் பழகப் பாலும் புளிக்கும்.
9. கந்தையானாலும் கசக்கிக் கட்டு.
10. உப்பில்லாப் பண்டம் குப்பையிலே.

| | | |
|---|---|---|
| அகம் | உலை | பழகப்பழக |
| பேராசை | பண்டம் | குப்பை |
| செல்வம் | கந்தை | மணியோசை |

### பொருள் விளக்கம்

அகம் - உட்புறம். உலை - கொதிக்கும் நீர். பேராசை - அதிக ஆசை.

### கேள்விகள்


1. குறைவற்ற செல்வம் எது?
2. ஊர்வாயை ஏன் மூடமுடியாது?
3. ஐந்தாம் பழமொழியின் கருத்து என்ன?

### பயிற்சி


1. மேலேயுள்ள பழமொழிகளைப் போன்ற கருத்துள்ள வேறு பழமொழிகள் பத்து எழுது.

2. எதிர்ச்சொற்களை எழுது—அகம், நஷ்டம், தெரியும்.

## 13. நான் யார்?




1. செம்பு நிறையக் கெம்பு
(மாதுளம்பழம்)



2. ஒரே புட்டியில்
இரண்டு தைலம்
(முட்டை)



3. அடி மத்தளம்
இலை பர்வதம்
பூ பெரிது
காய் துவர்ப்பு
பழம் இனிப்பு
(வாழை மரம்)



4. போவான் வருவான்
திம்மப்பன்
ஒரு காலில் நிற்பான்
திம்மப்பன்
(கதவு)



5. ஊருக்கெல்லாம் ஒரு
துப்பட்டி
(ஆகாயம்)

| | | |
|---|---|---|
| கெம்பு | மத்தளம் | துவர்ப்பு |
| தைலம் | பர்வதம் | துப்பட்டி |


பொருள் விளக்கம்

பர்வதம் - மலை. கெம்பு - சிவப்புக்கல் ; நவரத்தினங்களில் ஒன்று.

பயிற்சி

இவைபோன்ற விடுகவி சிலவற்றைத் தொகுத்து எழுது.

# 14. கடிதம்



1. நமது உறவினர்களும் நண்பர்களும் பல ஊர்களில் இருப்பார்கள். அவர்களுக்கு நாம் ஏதாவது செய்திகள் தெரிவிக்க வேண்டி யிருக்கும். அப்பொழுது நாம் கடிதம் எழுதித் தபாலில் போடுகிறோம்.

2. தெரிவிக்கவேண்டிய செய்திகள் கொஞ்சமாக இருந்தால் கார்டில் எழுது கிறோம். ஒரு கார்டின் விலை முக்காலணா; தபாலாபீசுகளில் கார்டு கிடைக்கும். கார்டின் மேல் அரசாங்க முத்திரை இருக்கும். செய்திகள் அதிகமாகவும் இரகசியமாகவும் இருந்தால் கவர் வாங்கவேண்டும்; கவர் என்பது காகித உறை; கவரின் மேலும் அரசாங்கத்தின் முத்

திரை இடப்பட்டிருக்கும். ஒரு கவரின் விலை இரண்டணு; அதுவும் தபாலாபீசில் கிடைக்கும். ஒரு தனித் தாளில் செய்திகளை எழுதி, கவருக்குள் அத்தாளை வைத்து, உறையை ஒட்ட வேண்டும்.

3. கார்டில் முத்திரை உள்ள பக்கத்தில் மேல் விலாசம் எழுதவேண்டும்; மறு பக்கத்தில் செய்திகளை எழுதவேண்டும். கவரிலும் முத்திரை உள்ள பக்கத்தில் மேல் விலாசம் எழுத வேண்டும். முத்திரைகளைத் தனியாகவும் விற்கிருர்கள். அவைகளும் தபாலாபீசில் விற்கப் படுகின்றன. அவைகளுக்கு **ஸ்டாம்புகள்** என்பது பெயர். காலணு முதல் விலையுள்ள ஸ்டாம்புகள் உள்ளன; அவற்றின் நிறங்களும் வெவ்வேறுனவை.

4. கடிதம் எழுதும்பொழுது, வலதுபுறத்தின் மேல் கோடியில் எழுதுபவருடைய விலாசமும், எழுதும் தேதியும் குறிக்க வேண்டும்; இடது புறத்தில் எழுதுபவருடைய பெயரை எழுதவேண்டும். செய்திகளை எழுதிய பின்பு, கடைசியில் வலது புறத்தில் எழுதுபவரின் கையெழுத்து இடவேண்டும். பெரியவர்களுக்கும் சிறியவர்களுக்கும் எழுதும்பொழுது, வெவ்வேறு வகையாகத் தொடங்க வேண்டும்.

5. மேல் விலாசம் சரியாக எழுதவேண்

டும்; யாருக்கு எழுதுகிருேமோ, அவருடைய பெயர், இருப்பிடம், ஊர், தபால் ஆபீசு ஆகிய விவரங்களை எழுதவேண்டும்; இடது கோடியில் கடிதம் எழுதுகிறவருடைய விலாசம் எழுத வேண்டும். கீழே உள்ளது ஒரு மாதிரிக் கடிதம்.

ப. நடராசன்

184, ராஜ வீதி,
கோயமுத்தூர்,
8—11—51.

அன்புமிக்க அண்ணு அவர்களுக்கு வணக்கம். இங்கு யாவரும் நலம். அங்கு மன்னி, குழந்தைகள் முதலியோருடைய நலனை அறிய் ஆவலாயிருக்கிறேன்.

எனக்குச் சமீபத்தில் தேர்வு நடைபெற்றது. நன்கு முயன்று படித்தேன். தேர்வில் நான் முதலில் தேறினேன். இன்று தலைமை ஆசிரியர் முடிவை வெளியிட்டார். பொதுத் தேர்வில் நான் முதல் இடம் பெறுவேன். கிறிஸ்மஸ் விடுமுறையில் ஊருக்கு வருவேன். குழந்தை வசந்தாவைக் காண ஆவலாயிருக்கிறேன்.

எல்லாருக்கும் என் வணக்கம்.

அன்புள்ள,
நடராசன்.

**மேல் விலாசம்**

திரு. ப. பால சுப்பிரமணியன்,
49, பிள்ளையார் கோவில் தெரு,
**மயிலாப்பூர், சென்னை 4.**

| | | | |
|---|---|---|---|
| உறவினர் | தேர்வு | முத்திரை | தாள் |
| வெவ்வேறு | கையெழுத்து | செய்திகள் | உறை |
| அரசாங்கம் | விலாசம் | குறிக்க | தொடங்க |
| விவரம் | மாதிரி | நலம் | ஆவல் |

## பொருள் விளக்கம்

உறவினர் - சுற்றத்தார். தேர்வு - பரீட்சை. உறை - மூடி. சமீபம் - பக்கம். தாள் - காகிதம். ஆவல் - ஆசை.

## கேள்விகள்

1. நாம் ஏன் கடிதங்கள் எழுதுகிறோம்?
2. கவரில் எப்படிக் கடிதம் எழுதலாம்?
3. கார்டில் எவ்வாறு எழுதவேண்டும்?
4. கடிதம் எழுதத் தொடங்குவது எவ்வாறு?
5. மேல் விலாசம் எப்படி எழுதவேண்டும்?

## பயிற்சி

1. தம்பிக்கு அண்ணன் எழுதுவதுபோல் ஒரு கடிதம் எழுது.

2. எதிர்ச்சொற்கள் எழுது:—சமீபம், வெவ்வேறு, தொடங்க, முதல்.

3. செய்தி, இரகசியம், சமீபம், நலம், ஆவல்— இச்சொற்களை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுது.

4. விடுமுறை கேட்டு உன் ஆசிரியருக்கு ஒரு கடிதம் எழுது.

## இலக்கணம்

கீழுள்ளவற்றில் பெயர்ச் சொற்களையும் வினைச் சொற்களையும் பிரித்து எழுது:—

1. ராமு கடிதம் எழுதினான்.
2. தபால்காரன் கடிதம் கொடுத்தான்.
3. நான் பரீட்சையில் தேறினேன்.
4. கோபாலன் கடிதத்தைத் தபாலில் போட்டான்.
5. என் வீடு சமீபத்தில் இருக்கிறது.

# 15. வித்தியாசாகரர்




1. வங்காளத்தில் **மிதுனபுரி** என்பது ஒரு நகரம். அதை அடுத்துள்ள ஒரு சிறு கிராமத்தில், ஓர் ஏழை அந்தணர் குடும்பத்தில் **ஈசுவர சந்திர வித்தியாசாகரர்** என்பார் தோன்றினர். உரிய வயதில் அவர் கல்கத்தாவிலுள்ள ஸம்ஸ்கிருதக் கல்லூரியில் படித்துத் தேர்ந்தார்.

2. கல்வி முடிந்ததும், வித்தியாசாகரர் அக் கல்லூரியிலேயே ஆசிரியராக அமர்ந்தார்; சில காலத்தில் தலைமை ஆசிரியராக ஆனர். பின்பு அத்தொழிலைவிட்டு நீங்கிப் பொது வாழ்க்கையில் ஈடுபட்டார்.

3. ஒருநாள் வித்தியாசாகரர் புகை வண்டியில் மிதுனபுரிக்குச் சென்ருர். அவருக்கு அருகில் கல்லூரி மாணவன் ஒருவன் அமர்ந்

திருந்தான். அவன் மேல்நாட்டு முறையில் உடை அணிந்திருந்தான்; வித்தியாசாகரர் எளிய உடை அணிந்திருந்தார்; அவரைக் கூலியாள் என்று மாணவன் கருதினான். அவன் அவரைத் தெரிந்துகொள்ளவில்லை; அவருடன் அவன் பேசவும் இல்லை.

4. மிதுனபுரி சென்றதும், இருவரும் வண்டியிலிருந்து இறங்கினர். மாணவனிடம் ஒரு சிறு தோல்பெட்டி இருந்தது. அப்பெட்டி



யைத் தூக்கக் கூலியாள் ஒருவரும் அகப்பட வில்லை; அதைக் தானே எடுத்துச் செல்லவும் அவன் விரும்பவில்லை. வித்தியாசாகரர் அவனிடம் சென்று அப்பெட்டியைத் தாம் எடுத்து

வருவதாகக் கூறினுர் ; மாணவனும் சம்மதித்தான். வீட்டை அடைந்ததும் மாணவன் அப் பெரியாருக்குக் கூலி கொடுக்க வந்தான். வித்தியாசாகரர் கூலி வாங்க மறுத்தார். ஆனுல் அந்த மாணவனுடைய பெயரையும் விலாசத்தையும் அறிந்து கொண்டார்.

5. மறுநாள் அம்மாணவனுக்கு ஒரு அழைப்புக் கடிதம் வந்தது. அது வித்தியா சாகரருக்கு அவ்வூரார் அளிக்கும் விருந்து அழைப்பு. மாணவன் ஆடம்பர உடையுடன் அவ்விருந்துக்குச் சென்றுன். அங்கு அவன் வித்தியாசாகரரைக் கண்டான் ; அவர் கழுத்தில் மாலையுடன் இருந்தார். மாணவன், அவரே தன் பெட்டியைத் தூக்கி வந்தவர் என்று அறிந்து வெட்கம் அடைந்தான்.

6. வித்தியாசாகரர் அவனை அன்புடன் அழைத்தார். "அப்பா! நமது வேலையை நாமே செய்ய வெட்கப்படக் கூடாது. இதை நீ உணரவேண்டும்" என்று சொன்னுர். அன்று முதல் அம்மாணவன் வீண் பெருமையை ஒழித்து, நல்ல முறையில் நடந்து கொண்டான்.

| | | | |
|---|---|---|---|
| அடுத்துள்ள | தலைமை | எளிய | அழைப்பு |
| உணரவேண்டும் | உரிய | கல்லூரி | சம்மதம் |
| ஆடம்பரம் | ஒழித்து | தேர்ந்தார் | மாணவன் |
| மறுத்தார் | வெட்கம் | அமர்ந்தார் | முறை |

### பொருள் விளக்கம்

அடுத்துள்ள - அருகிலுள்ள. உரிய - தகுந்த. தேர்ந்தார் - தேறினர். எளிய - சாதாரணமான. ஆடம்பரம் - பகட்டு.

### கேள்விகள்

1. வித்தியாசாகரர் எங்கே பிறந்தார்?
2. கல்லூரி மாணவன் ஏன் வித்தியாசாகரருடன் பேசவில்லை?
3. மாணவனுக்கு வித்தியாசாகரர் செய்த உதவி என்ன?
4. விருந்தில் மாணவன் ஏன் வெட்கம் அடைந்தான்?
5. வித்தியாசாகரர் மாணவனுக்கு உரைத்த நன்மொழி யாது?

### பயிற்சி

1. மாணவன் வித்தியாசாகரரிடம் மன்னிப்புக் கேட்பதுபோல் எழுது.
2. சம்மதம், அழைப்பு, ஆடம்பரம், வெட்கம், உரிய—இவற்றைச் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுது.
3. வித்தியாசாகரரைப் போல் எளிய வாழ்க்கை நடத்திய மற்றொருவரைப் பற்றிச் சில வாக்கியங்கள் எழுது.

### இலக்கணம்

முருகன், கோபாலன், வித்தியாசாகரர்—இவை ஆண்களைக் குறிக்கின்றன; ஆண்களைக் குறிக்கும் பெயர்ச் சொற்கள் ஆண்பால் பெயர்கள் எனப்படும்.

கமலா, விமலா, தேவகி—இவை பெண்பால் பெயர்கள்.

பின்வரும் சொற்களை ஆண்பாலாகவும் பெண்பாலாகவும் பிரித்து எழுது—

கண்ணன், சடையன், வள்ளி, கோபாலன், மோகினி, தின்ருன், பாடினுள், அவன், அவள், வந்தான்.

# 16. காந்தி தாத்தா



1. தேசத்திலே பெரிய தாத்தா—நாங்கள்
தெய்வம் எனக் கொண்டாடும் தாத்தா!
நேசத்திலே பெரிய தாத்தா—கொண்ட
நினைப்பைச் செய்து முடிக்கும் தாத்தா!

2. ஏழைக் கிரங்குகின்ற தாத்தா—எங்கள்
ஏக்கத்தை நீக்குகின்ற தாத்தா!

கோழைத் தனம் விடுத்து நாங்கள்—சிம்மக்
கூட்டம்போல் எழச் செய்த தாத்தா !

3. பஞ்சடித்து ராட்டினத்தில் நூற்றே தொழிற்
பாடம் புகட்டுகின்ற தாத்தா !
துஞ்சா முயற்சியுள்ள தாத்தா !—ஒரு
சொல்லால் உலகை வெல்லும் தாத்தா !

—யோகி சுத்தானந்த பாரதியார்

| | | |
|---|---|---|
| நேசம் | ஏக்கம் | சிம்மம் |
| நினைப்பு | கோழைத்தனம் | புகட்டுகின்ற |
| இரங்கு | விடுத்து | துஞ்சா |

### பொருள் விளக்கம்

நேசம் - அன்பு. நினைப்பு - எண்ணம். ஏக்கம் - ஒரு பொருள் கிட்டாததால் ஏற்படும் வருத்தம். கோழைத் தனம் - தைரியமில்லாத தன்மை. வெல்லும் - ஜெயிக்கும்.

### கேள்விகள்

1. காந்தியடிகளின் குணங்கள் யாவை?
2. அடிகள் நமக்கு என்ன தொழில் கற்பித்தார்?
3. காந்தியடிகளுடைய சொல் எப்படிப்பட்டது?

### பயிற்சி

1. எதிர்ச்சொற்களை எழுது—நேசம், கோழைத் தனம், வெற்றி, பெரிய.

2. கீழுள்ள சொற்களைத் திருத்தி எழுது :—
ராட்டிணம், முயர்ச்சி, கோலைத்தணம், பஞ்ஜு.

## 17. ஜப்பானியச் சிறுவன்



1. ஜப்பான் என்பது ஒரு தேசம். அது மிகவும் சிறியது. ஜப்பானியர் சுறுசுறுப்பு உள்ளவர்கள். கைத்தொழில்களில் அவர்கள் கைத்தேர்ந்தவர்கள். சென்ற யுத்தத்திற்கு முன் அவர்கள் நாடு சிறப்புற்று இருந்தது; யுத்தத்தில் அவர்கள் தோற்றுப் போனார்கள்; ஆயினும் இன்று விரைவாக மீண்டும் முன்னேறி வருகிறார்கள்.

2. ஜப்பானியச் சிறுவர் பெற்றோரிடத்தில் அன்புடனும் பணிவுடனும் நடந்து கொள்வார்கள். பெரியோர் சிறுவருடன் பொறுமையுடன் நடந்து கொள்வார்கள். சிறுவர் பெற்

றோருடைய கட்டளைகளை உடனே செய்து முடிப்பார்கள். அன்னையும் பிதாவும் அச் சிறு வருடைய தெய்வங்கள்.

3. பெற்றோரும் குழந்தைகளை அன்புடன் வளர்ப்பார்கள் ; குழந்தைகளுக்கு நல்ல பழக்கங் கள் உண்டாகும்படி செய்வார்கள். ஜப்பானில் குழந்தைகள் வாய்விட்டு அழக்கூடாது, சத்த மிட்டு அழக்கூடாது என்று தாய்மார்கள் குழந்தைகளுக்குப் புத்தி புகட்டுவார்கள். அதற் காகக் குழந்தைகளைத் தாய்மார் அடித்துத் திட்டமாட்டார்கள்.

4. ஜப்பானில் குழந்தைகள் யாவரும் ஐந்து வயது முதல் பத்து வயது வரை கட்டாய மாகப் படிக்கவேண்டும். படிக்கத் தெரியாதவர் கள் ஜப்பானில் வெகு குறைவு. ஆதலால் ஜப்பானியர் எல்லாத் துறைகளிலும் சிறந்து விளங்குகிறார்கள்.

5. ஜப்பானியர் தேச பக்தி மிகுந்தவர்கள். தாய் நாட்டுக்குத் தீமை செய்யமாட்டார்கள். அவர்கள் மகிழ்ச்சி அடைந்தால் அதற்காகக் கூத்தாடமாட்டார்கள் ; துன்பம் வந்தால் கஷ்டப்படமாட்டார்கள்; பொறுமையுடன் இருப் பார்கள். நாட்டுக்காக அவர்கள் தங்கள் உயிரை யும் கொடுப்பார்கள். அவமானம் நேர்ந்தால் தற்கொலை செய்து கொள்வார்கள்.

6. ஜப்பானியர் சிறந்த தொழிலாளிகள் ; குண்டூசி முதல் பெரிய இயந்திரங்கள் வரை செய்வதில் அவர்கள் கைதேர்ந்தவர்கள். அவர்கள் எளிய வாழ்க்கை நடத்துவார்கள் ; சிக்கனமாக இருப்பார்கள்.

7. நாமும் ஜப்பானியரைப் போல முன்னேற்றத்தில் ஊக்கம் உடையவர்களாக இருக்க வேண்டும். கைத்தொழில்களை விரும்பிக் கற்று தொழில்களில் வல்லவர் ஆகவேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| சுறுசுறுப்பு | முன்னேறி | புகட்டு | அவமானம் |
| கைதேர்ந்தவர் | பொறுமை | கட்டாயம் | தற்கொலை |
| யுத்தம் | கட்டளை | துறை | இயந்திரம் |
| தோற்றுப்போனார் | பழக்கம் | தீமை | சிக்கனம் |
| விரைவாக | வாய்விட்டு | கூத்தாடு | நற்குணம் |

## பொருள் விளக்கம்

கைதேர்ந்தவர் - கெட்டிக்காரர். கட்டளை - உத்திரவு. துறை - வழி.

## கேள்விகள்

1. ஜப்பானியர் எப்படிப்பட்டவர்கள் ?
2. ஜப்பானியச் சிறுவர் பெற்றோரிடம் எப்படி நடப்பார்கள் ?
3. பெற்றோர் குழந்தைகளை எப்படி வளர்ப்பார்கள் ?
4. ஜப்பானியர் ஏன் சிறந்து விளங்குகிறார்கள் ?
5. ஜப்பானியருடைய குணங்கள் யாவை ?

## பயிற்சி

1. எதிர்ச் சொற்களை எழுது—சுறுசுறுப்பு, யுத்தம், தோல்வி, விரைவாக, வாய்விட்டு, தீமை, அவமானம், சிக்கனம்.

2. பழக்கம், நற்குணம், பொறுமை, சுறுசுறுப்பு— இச் சொற்களை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுது.

## இலக்கணம்

வினைச்சொற்களுக்கும் ஒருமை, பன்மை உண்டு.

(உ - ம்.) அவன் வருகிறான்.

அவர்கள் வருகிறார்கள்.

கீழுள்ளவற்றின் முன் பாதியையும் பின் பாதியையும் சரியாகப் பொருத்தவும்.

| | |
|---|---|
| குழந்தை | படிக்கிறார்கள் |
| மாணவர்கள் | நடக்கிறேன் |
| பெண்கள் | தவழுகிறான் |
| நான் | போகிறார்கள் |
| அவர்கள் | விளையாடுகிறேன் |

# 18. உல்லாசப் பிரயாணம்



1. சனிக்கிழமையும் ஞாயிற்றுக்கிழமையும் பாடசாலைகளுக்கு விடுமுறை அல்லவா? மாதவன் சேலத்தில் படித்துக் கொண்டிருந்தான்; பாலு அவனுடைய பள்ளித் தோழன். மாதவனுடைய மாமா அழகாபுரத்தில் இருந்தார். மாதவனும் பாலுவும் சனிக்கிழமை மாலை அழகாபுரத்திற்கு நடந்து போனார்கள்.

2. அழகாபுரத்தைச் சுற்றிலும் தோப்புக்களும் வயல்களும் இருந்தன; எங்கும் பச்சைப் பசேலென்ற புல்தரைகள் காணப்பட்டன; மரங்களிலும் செடிகளிலும் மலர்கள் பூத்துக் குலுங்கின; மரங்களின்மேல் பறவைகள் 'கச கச'

வென்று சத்தம் இட்டுக் கொண்டிருந்தன. மாதவனும் பாலுவும் இவற்றை யெல்லாம் பார்த்துக் கொண்டே சென்றார்கள்.

3. ஊருக்கு அருகில் ஒரு பெரிய ஆல மரம் இருந்தது. அதன் அடியில் இருவரும் உட்கார்ந்து சற்று நேரம் இளைப்பாறினார்கள். வயலுக்குச் சென்றிருந்த மாதவனுடைய மாமா அவ்வழியே திரும்பி வந்து கொண்டிருந்தார். மாதவனைக் கண்டதும் அவர் மகிழ்ச்சி அடைந்தார்; மாதவனும் அவரைக் கண்டு மகிழ்ந்தான்; தனது நண்பன் பாலுவை அவருக்கு அறிமுகப் படுத்தினான்.

4. மாமா மாதவனைப் பார்த்து, "மாதவா! வா, வீட்டுக்குப் போகலாம்" என்று சொல்லி அவர்களை அழைத்துக் கொண்டு சென்றார். அவருக்கு லட்சுமி என்ற ஒரு பெண் இருந்தாள். சிற்றுண்டி ஆனதும், மாதவன், அவன் மாமா, லட்சுமி, பாலு ஆகிய நால்வரும் கிராமத்தைச் சுற்றிப்பார்க்கப் புறப்பட்டனர்.

5. கிராமத்தின் அருகில் ஓர் ஏரி இருந்தது. அதன் கரையோரமாகத் தோட்டங்கள் இருந்தன. தோட்டங்களில் பல பூச்செடிகள் இருந்தன. வண்டுகளின் ரீங்காரமும், கிளிகளின் கீச்சிடும் சப்தமும், காகங்கள் கரைவதும், குயில்கள் கூவுவதும், மதகிலிருந்து தண்ணீர்

'சோ' வென்று விழுவதும் பார்ப்பதற்கும் கேட்ப தற்கும் மகிழ்ச்சியை அளித்தன.

6. அங்கிருந்து வயல்களைக் காணச் சென்றார்கள்; வயல்களுக்குத் தண்ணீர் பாய்ச் சுவதையும், ஏற்றம் இறைப்பதையும், வாய்க் கால்களில் மீன்கள் துள்ளுவதையும், நாற்றுக் களின் பசுமையையும் கண்டு களித்தார்கள்; வயல்களில் சிறிது நேரம் களைபிடுங்கித் தண் ணீர் பாய்ச்சினார்கள்.

7. சூரியன் மறையும் நேரம் ஆயிற்று. யாவரும் வீடு திரும்பினார்கள். அன்றிரவு மாத வனுடைய மாமாவின் வீட்டில் சாப்பிட்டு விட் டுத் தூங்கினார்கள். காலையில் மாதவனும் பாலு வும் அவரிடம் விடை பெற்றுக் கொண்டு சேலத்தை அடைந்தார்கள்.

| | | |
|---|---|---|
| விடுமுறை | அறிமுகம் | துள்ளுதல் |
| பள்ளி | சிற்றுண்டி | விடைபெற்று |
| பச்சைப்பசேல் | ரீங்காரம் | பிரயாணம் |

**பொருள் விளக்கம்**

அறிமுகம் - ஒருவரை முதன்முதலாகத் தெரிந்து கொள்ளுதல். சிற்றுண்டி - சிறு உணவு. துள்ளுதல் - குதித்தல். ரீங்காரம் - வண்டுகளின் ஒலி.

### கேள்விகள்

1. மாதவன் அழகாபுரத்திற்கு எப்பொழுது சென்ருன் ?

2. மாதவனும் பாலுவும் செல்லும் வழியில் என்ன பார்த்தார்கள் ?

3. மாதவன் அவன் மாமாவை எங்கே கண்டான் ?

4. அவர்கள் கிராமத்தில் என்னென்ன பார்த்தார்கள்?

5. வயலில் அவர்கள் என்ன வேலை செய்தார்கள் ?

### பயிற்சி

1. நீ செய்துள்ள ஓர் உல்லாசப் பிரயாணத்தைப் பற்றிப் பத்து வரிகள் எழுது.

2. அறிமுகம், சிற்றுண்டி, விடைபெற்று, உல்லாசம்—இச் சொற்களை உன் சொந்த வாக்கியங்களில் வைத்து எழுது.

### இலக்கணம்

ஒருமை, பன்மைப் பெயர்களை எழுது :—

| ஒருமை | பன்மை |
|---|---|
| பெண் | ——— |
| ——— | வயல்கள் |
| நீ | ——— |
| ——— | நாங்கள் |
| புத்தகம் | ——— |
| ——— | கிராமங்கள் |

# 19. கூடை முடைதல்



1. நமது கிராமங்களில் பல தொழிலாளிகள் வசிக்கிறார்கள். அத்தொழில்களில் கூடை முடைதலும் ஒரு தொழில் ஆகும்.

2. ஓலைகளாலும், மூங்கில்களாலும், பிரம்புகளாலும் கூடைகள் முடையலாம். தென்னை, பனை, ஈந்து முதலிய மரங்களின் ஓலைகளால் பெட்டி, கூடை முதலியவற்றை முடையலாம். அவைகளுக்குச் சாயம் பூசினால், அவை பார்ப்பதற்கு நேர்த்தியாக இருக்கும். ஓலைக் கூடைகள் நீண்ட நாள் உழைக்க மாட்டா.

3. மூங்கில்களாலும் கூடைகள் முடையலாம். பசுமையான மூங்கில்களை வாங்கி

வந்து, அவற்றைக் கத்தியினல் பிளப்பார்கள். அப்பிளவுகள் தேவைக்குத் தகுந்தபடி கனமாக வும் மெல்லியதாகவும் இருக்கும். இவற்றல் வித விதமான கூடைகள் முடையலாம்.

4. கூடை முடைபவர் முதலில் அடிப் பாகத்தை முடைவார்கள். அப்பாகத்தை வட்ட மாகவும் சதுரமாகவும் தேவைக்குத் தகுந்தபடி முடைந்து கொள்வார்கள். முதலில் கனமான பிளவுகளை எடுத்துக் கீழே பரப்புவார்கள்; பின்பு மெல்லிய பிளவுகளைக் குறுக்கே கொடுத்து முடைவார்கள். பின்பு மூலைகளை மடித்துக் கூடை ஆக்குவார்கள்.

5. கூடைகளில் வட்டக் கூடை, சதுரக் கூடை, வாய் அகன்ற கூடை, வாய் குறுகிய கூடை எனப் பலவகைகள் உள்ளன. பிரம்பினு லும் இவ்வகைக் கூடைகளைச் செய்வார்கள். மூங்கிற் பாய்களும், தட்டிகளும், கோழிக் கூண்டுகளும் செய்வதுண்டு; தூக்குக் கூடை களும் செய்வதுண்டு.

6. நமது பள்ளிக்கூடங்களில்கூடக் கூடை முடையக் கற்றுக் கொள்ளலாம். வெறும் புத்தகப் படிப்பு மட்டும் போதாது; கைத்தொழி லும் கற்றுக்கொள்ள வேண்டும். தொழில் செய்து ஊதியம் பெறுவதே பெருமை அளிக் கும்; சோம்பேறி வாழ்க்கையால் பயன் இல்லை.

| | | | |
|---|---|---|---|
| தொழிலாளி | சாயம் | பிளப்பார்கள் | குறுக்கே |
| வசிக்கிறார்கள் | நேர்த்தி | கனம் | ஊதியம் |
| மூங்கில் | நீண்டநாள் | சதுரம் | சோம்பேறி |
| பிரம்பு | பசுமை | வட்டம் | குறுகிய |

## பொருள் விளக்கம்

நேர்த்தி - அழகு. ஊதியம் - லாபம்.

## கேள்விகள்

1. எவற்றால் கூடைகளை முடையலாம்?
2. மூங்கிலால் கூடை முடைவது எப்படி?
3. கூடைகளில் சில வகைகள் யாவை?
4. நமக்குப் பெருமை அளிப்பது எது?

## பயிற்சி

கோடிட்ட இடங்களில் தகுந்த சொற்களை அமைக்கவும்:

1. ஓலைக் கூடைகள் ——— உழைக்கமாட்டா.
2. மூங்கிலால் ——— கூடைகளை முடையலாம்.
3. கூடை முடைய முதலில் ——— முடைவார்கள்.
4. தொழில் செய்து ——— பெறுவதே பெருமை தரும்.
5. ——— வாழ்க்கையால் பயன் இல்லை.

## இலக்கணம்

பழம், கலம், மணம், மனம், மழை, மலை, குளம், குலம்—இச்சொற்களின் உச்சரிப்பைக் கவனி. ல, ழ, ள, ண, ன இவற்றின் உச்சரிப்பைத் தெளிவாகத் தெரிந்து கொள்.

## 20. கைத்தொழில்

கைத்தொழில் ஒன்றைக் கற்றுக் கொள் ;
கவலை உனக்கில்லை ஒத்துக் கொள் ;
எத்தொழில் எதுவும் தெரியாமல்
இருப்பது உனக்கே சரியாமோ ? (1)

உழவும் தொழிலும் இல்லாமல்
உலகில் ஒன்றும் செல்லாது ;
விழவும் கலையும் விருந்துகளும்
வேறுள இன்பமும் இருந்திடுமோ ? (2)

நெசவுக் காரர்கள் நெய்யாமல்
நிலத்தவர் உடைக்கென் செய்வார்கள் ?
குயவன் செய்திடும் பாண்டமன்றோ
குடித்தனம் நடத்திட வேண்டு
மென்றும் (3)

வேந்தர்கள் வரிப்பணம் வாங்குவதும்
வீரர்கள் வெற்றிகள் தாங்குவதும்
மாந்தர்கள் செய்யும் எத்தொழிலும்
மண்ணில் சிறப்பது கைத்தொழிலால் (4)

—நாமக்கல் கவிஞர்

| | | |
|---|---|---|
| கவலை | கலை | வீரர் |
| உழவு | குடித்தனம் | மாந்தர் |
| விழவு | வேந்தர் | வரிப்பணம் |

## பொருள் விளக்கம்

கவலை - விசனம். உழவு - பயிர்த்தொழில். விழவு - திருவிழா. கலை - பாடல், நடனம், படக்காட்சி, நாடகம் ஆகியவை. மண்ணில் - உலகத்தில்.

## கேள்விகள்


1. கவலை எப்பொழுது இருக்காது?
2. எவை இல்லாமல் உலகில் ஒன்றும் செல்லாது?
3. குடியானவனுக்கு உடை கொடுப்பது யார்?
4. பூமியில் பெருமை பெற்றுள்ளது எது? ஏன்?

## பயிற்சி

1. குயவன் மண்பாண்டம் செய்வதைப்பற்றி ஐந்து வாக்கியங்கள் எழுது.

2. விருந்து, கலை, குடித்தனம், உழவு—இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுது.

## 21. நான்கு பாடகர்கள்



1. ஒரு வண்ணானிடம் ஒரு கழுதை இருந்தது. அது பல நாள் நன்றாக உழைத்தது. பின்பு கிழமாகிப் போயிற்று. ஆதலால் வண்ணான் அதை வீட்டை விட்டு விரட்டி விட்டான்.

2. கழுதை **புஷ்பபுரி** என்ற நகரை நோக்கிப் போயிற்று. போகும் வழியில் ஒரு நாய் பெருமூச்சுடன் படுத்திருப்பதைக் கண்டது. கழுதை நாயைப் பார்த்து "நண்பா! ஏன் பெருமூச்சு விடுகிறாய்? என்று கேட்டது. நாய் "ஐயோ! நான் என்ன செய்வேன். நான் வயது முதிர்ந்தவன். என்னால் முன் போல் வேட்டையாட முடியவில்லை. என்னைக்

கொல்ல என் எசமானன் எண்ணினான். அதை அறிந்து நான் ஓடி வந்தேன். இனி நான் எப்படிப் பிழைப்பேன்?'' என்றது. கழுதை ''நாயே! என்னோடு வா. புஷ்பபுரியில் பாட்டுப் பாடி பிழைக்கலாம்'' என்றது. இரண்டும் புஷ்பபுரியை நோக்கி நடந்தன.

3. அவை வழியில் ஒரு பூனையைக் கண்டன. அதுவும் ஒரு கிழப் பூனை. எலி பிடிக்க முடியாததால் அது வீட்டிலிருந்து துரத்தப் பட்டது. அதுவும் புஷ்பபுரிக்குச் செல்லச் சம்மதித்தது. கழுதையும் நாயும் பூனையும் நடந்து சென்றன.

4. சிறிது நேரத்தில் அவை ஒரு சேவலைப் பார்த்தன. அது உரக்கக் கூவிக் கொண்டிருந்தது. ''ஏன் இவ்வாறு கூச்சல் போடுகிறாய்?'' என்று கழுதை சேவலைக் கேட்டது. ''என்னை இன்று கொன்று கறி சமைக்கப் போகிறார்கள். நான் என்ன செய்வேன்?'' என்று சேவல் உரைத்தது. ''எங்களுடன் வா. நால்வரும் சேர்ந்து பாடினால் நன்றாக இருக்கும்'' என்று கழுதை சொல்லிற்று. சேவலும் அதைத் தொடர்ந்து போயிற்று.

5. அவை நான்கும் சற்று நேரத்தில் ஒரு வீட்டை அடைந்தன. அவ்வீட்டினின்று வெளிச்சம் தெரிந்தது. அது ஒரு பெரிய

வீடு. அந்த வீட்டிற்குள் ஏதாகிலும் உணவு கிடைக்கும் என்று அவை அங்கே சென்றன.

6. கழுதை ஒரு பலகணியின் வழியே உள்ளே எட்டிப் பார்த்தது. தின்பண்டங்கள் பல உள்ளே இருந்தன. அவற்றைத் திருடர்கள் சாப்பிட்டுக் கொண்டிருந்தனர். கழுதைக்கு நாக்கில் ஜலம் சுறந்தது. நான்கும் சேர்ந்து ஒரு யோசனை செய்தன.

7. கழுதை தன் பின்னங்கால்களைத் தரையில் ஊன்றி, முன்னங்கால்களை உயர்த்திச் சன்னலின்மேல் வைத்துக் கொண்டது. கழுதையின் முதுகின் மேல் நாய் உட்கார்ந்தது. நாயின் முதுகின் மேல் பூனையும், பூனையின் தலையின் மேல் சேவலும் உட்கார்ந்து கொண்டன. இவ்வாறு நின்றபின் அவை பாடத் தொடங்கின! கழுதை கத்திற்று; நாய் குரைத்தது; பூனை 'மியா மியா' என்றது; சேவல் கூவிற்று. இக் கூச்சலைக் கேட்ட திருடர்கள் நடுக்கம் கொண்டனர். பலகணியின் வழியாக நான்கும் உள்ளே குதித்தன. ஏதோ பேய் பிசாசுகள் என்று திருடர்கள் பயந்து ஓட்டம் பிடித்தனர்.

8. அவை நான்கும் தின்பண்டங்களை விலாப் புடைக்கத் தின்றன. அங்கேயே பல நாள் உண்டு களித்திருந்தன.

| | | | |
|---|---|---|---|
| கிழம் | முதிர்ந்த | உரக்க | • சுரந்தது |
| விரட்டி | வேட்டை | கூச்சல் | நடுக்கம் |
| நகரம் | துரத்த | தொடர்ந்து | விலாப்புடைக்க |
| பெருமூச்சு | சம்மதம் | பலகணி | பேய்பிசாசு |

## பொருள் விளக்கம்

தொடர்ந்து - பின்சென்று. பலகணி - சன்னல்.

## கேள்விகள்

1. வண்ணான் கழுதையை ஏன் விரட்டினான் ?
2. நாய் ஏன் விரட்டப்பட்டது ?
3. பூனை ஏன் வீட்டைவிட்டு ஓடிப்போயிற்று ?
4. சேவலுக்கு என்ன நேர்ந்தது ?
5. இந்நான்கும் என்ன செய்து உணவு பெற்றன ?

## பயிற்சி

1. நகரம், உரக்க, உள்ளே, சேர்ந்து—எதிர்ச் சொற்களைக் கூறு.

2. இந்தக் கதையை வகுப்பு அறையில் நடித்துக் காட்டவும்.

## 22. போலிச்சீடன்



1. ஓர் ஊரில் ஒரு போலிச் சந்நியாசி இருந்தான். அவன் பிச்சை எடுத்துப் பொருள் சேர்த்து வந்தான். அவன் சேர்த்த பொருளை யாருக்கும் தெரியாமல் ஓர் கந்தைத் துணியில் சுருட்டி வைத்துக் கொண்டிருந்தான்; அதை அவன் எப்பொழுதும் தன் கையிலேயே வைத்துக் கொண்டிருப்பான்.

2. அவ்வூரில் **தண்டபாணி** என்ற ஒருவன் இருந்தான். சந்நியாசியிடத்தில் மிகுந்த பொருள் இருந்ததை அவன் அறிந்தான். சாமியாருடைய துணி மூட்டையை அபகரிக்க அவன் எண்ணினான்.

3. ஒரு நாள் **தண்டபாணி** சந்நியாசி

யிடம் வந்தான். அவன் காலில் விழுந்து வணங்கி, தன்னைச் சீடனுகை ஏற்றுக்கொள்ளும் படி வேண்டிக் கொன்டான். சந்நியாசி அவனுடைய பாசாங்கை அறியவில்லை; ஆதலால் தண்டபாணியைச் சீடனுகச் சந்நியாசி ஏற்றுக் கொண்டான்.

4. அந்நாள் முதல் தண்டபாணி சந்நியாசியிடம் மிகுந்த பயபக்தியுடன் நடப்பது போல் நடித்தான். சந்நியாசியும் போலிச் சந்நியாசி; சீடனும் போலிச் சீடன். போலிச் சீடனைப் போலிச் சந்நியாசி நம்பிவிட்டான்.

5. ஒரு நாள் குருவும் சீடனும் ஓர் வீட்டிற்கு விருந்து உண்ணச் சென்றனர்; நன்றுக விலாப்புடைக்கத் தின்றனர். திரும்பி இருவரும் வந்து கொண்டிருந்தனர். வழியில் தண்டபாணி குருவுக்குத் தெரியாமல் ஒரு துரும்பை எடுத்துத் தன் தலையில் வைத்துக் கொண்டான். பின்பு குருவினிடம், "சுவாமி! நமக்கு அன்னம் இட்ட பிராமணன் வீட்டுத் துரும்பு என் தலையில் இருக்கிறதே! இது குற்றம் அல்லவா? அன்னம் இட்ட வீட்டில் கன்னம் இடலாமா? இத்துரும்பை அவனுடைய வீட்டில் போட்டு விட்டு வருகிறேன்" என்று சொன்னுன்.

6. குரு "ஆகா! தண்டபாணி! வெகு யோக்கியன். துரும்பைக்கூட எடுத்து வர

அவனுக்குப் பிரியம் இல்லையே!' என்று எண்ணிச் சீடனுக்கு விடை கொடுத்தான். சீடனும் சற்று நேரத்தில் திரும்பி வந்து, "சுவாமி! உமது அருளால் இப்பாவத்தினின்றும் இன்று தப்பினேன்" என்று கூறினான். சந்நியாசி அதுகேட்டு, தண்டபாணி மிகவும் உத்தமன் என்று நினைத்தான்.

7. ஒரு நாள் குரு தான் பணம் வைத்திருந்த கந்தையைச் சீடனிடம் கொடுத்து, ஆற்றில் குளிக்கச் சென்றான். ஆற்றில் இரண்டு ஆடுகள் சண்டையிட்டுக் கொண்டிருந்தன. அவற்றின் தலைகளிலிருந்து உதிரம் சிந்திக் கொண்டிருந்தது; இரத்தத்தைக் குடிக்க ஒரு நரி அவற்றின் நடுவில் சென்றது. ஆடுகள் அந்த நரியின்மேல் பாய்ந்தன; நரி இறந்தது. சந்நியாசி அந்த வேடிக்கையைக் கண்டு சற்று நேரம் நின்றான்.

8. இதுதான் தகுந்த சமயம் என்று தண்டபாணி நினைத்துக் கந்தையுடன் ஓட்டம் பிடித்தான். குளித்து விட்டு வந்த குரு சீடனைக் காணவில்லை. சந்நியாசி சீடனை நம்பி ஏமாந்தான்.

| | | | |
|---|---|---|---|
| பிச்சை | பாசாங்கு | துரும்பு | யோக்கியன் |
| சந்நியாசி | பயபக்தி | அன்னம் | பாவம் |
| அபகரிக்க | போலி | கன்னம் | உத்தமன் |
| சீடன் | குரு | அபசாரம் | வேடிக்கை |

## பொருள் விளக்கம்

அபகரிக்க - கவர்ந்துகொள்ள. பாசாங்கு - நடிப்பு. போலி - உண்மையில்லாத. அன்னம் - உணவு.

## கேள்விகள்

1. சந்நியாசி எவ்வாறு பொருள் சேர்த்தான்?
2. தண்டபாணி என்னவென்று எண்ணினான்?
3. சந்நியாசியிடம் தண்டபாணி எப்படி நடந்து கொண்டான்?
4. தண்டபாணி யோக்கியன் என்று குரு நினைத்தது எதனால்?
5. தண்டபாணி கந்தையை எப்படி அபகரித்தான்?

## பயிற்சி

1. சீடன், அபசாரம், யோக்கியன், பாவம், உத்தமன்—எதிர்ச்சொற்கள் எழுது.
2. இந்தக் கதையை வகுப்பறையில் நடிக்கவும்.

## இலக்கணம்

கீழ்வரும் சொற்களைத் தகுந்த கட்டத்தில் எடுத்து எழுது:

குரு, சீடன், ஓடினான், வந்தார்கள், தின்றார்கள், பேசினான், கந்தை, துரும்பு, பூனைகள், கழுதை, ஆறுகள், படித்தான், பசு.

| பெயர்ச் சொல் | வினைச் சொல் | ஆண் பால் | பெண் பால் | ஒருமை | பன்மை |
|---|---|---|---|---|---|
| | | | | | |

# 23. அரண்மனை விருந்து



இடம்—மதுரை. காலம்—முன்னிரவு
பாத்திரங்கள்: பாண்டியமன்னன், ஒரு போர்வீரன்.

## காட்சி 1

[ஒரு நாள் பாண்டிய மன்னன் மாறுவேடம் பூண்டு, நகருக்கு வெளியே சென்றான். இரவுக் காலம், எங்கும் இருள். திடீரென்று மழை பெய்ய ஆரம்பித்தது.]

**பாண்டியன் :** இருட்டி விட்டதே! எப்படி அரண்மனை சேருவது? மழையோ 'சோ' வென்று பெய்கிறது. குடையை விரித்துக் கொள்ளலாம்.

(குடையை விரித்துக் கொள்கிறான்.)

**போர்வீரன் :** ஐயா ! ஐயா ! •

**பாண்டியன் :** யாரது ?

**போர்வீரன் :** ஐயா ! நான் ஒரு போர்வீரன். நானும் குடையில் வருகிறேன் !

**அரசன் :** நீ எங்கே போகிருய் ?

**போர்வீரன் :** மதுரைக்குத்தான் போகிறேன். தாங்கள் எங்கே செல்கிறீர்கள் ?

**அரசன் :** ஏன் ? மதுரைக்குத்தான் போகிறேன்.

**போர்வீரன் :** நல்ல காலம். உங்களுடன் நானும் வருகிறேன்.

**அரசன் :** சரி. வா போகலாம்.

(செல்கின்றனர்)

(சிறிது தூரம் செல்கின்றனர்)

## காட்சி 2

**அரசன் :** ஆமாம். நீ எங்கிருந்து வருகிருய் ?

**போர்வீரன் :**—நான் அரண்மனைத் தோட்டத்திற்குச் சென்றிருந்தேன்.

**அரசன் :**—எதற்காகச் சென்ருய் ?

**போர்வீரன் :** தோட்டக்காரன் என் நண்பன். அவன் எனக்கு ஒரு நல்ல விருந்து அளித்தான். அங்கிருந்து வருகிறேன்.

**அரசன் :**—பாயசம், வடை, அப்பளம், காய்கறி படைத்தார்களா ?

**போர்வீரன் :**— இவை யாருக்கு வேண்டும்? விருந்து மிகவும் உயர்ந்தது.

**அரசன் :**—பின் என்ன அருந்திஞய்?

**போர்வீரன் :**—இது உங்களுக்குத் தெரிய வில்லையா? நீங்கள் சொன்னவற்றையும் இன்னும் சிறந்த பழவகைகளையும் சாப் பிட்டேன். அடடா! பாண்டியன் உண் ணும் வேர்ப்பலா, கதலி, மா போன்ற இனிய பழங்களை என் நண்பன் எனக்கு அளித்தான். இது அரசனுக்குத் தெரி யாது; தெரிந்தால் எங்களுக்குக் கடுந் தண்டனை நிச்சயம்.

**அரசன் :**—அதனுலென்ன? பயப்படாதே. எப் படித் தெரியப் போகிறது?

**போர் வீரன் :**—தாங்கள் யார்?

**அரசன் :**—நான் ஒரு அதிகாரி.

**போர் வீரன்** —என்ன அதிகாரி? வரி வசூல் அதிகாரியா?

**அரசன் :**—இல்லை; அதற்கும் மேற்பட்டவன்.

**போர் வீரன் :**—அமைச்சரா?

**அரசன் :**—இல்லை; அதற்கும் மேலானவன்.

**போர்வீரன்:**—நீர் என்ன பாண்டிய மன்னரா? இன்னும் மேலானவன் என்றே சொல் கிறீரே!

**அரசன் :**—ஆம். அரசன்தான்.

[போர் வீரன் அரசனை உற்று நோக்கினன். பாண்டியனே அவன் என்று உணர்ந்தான். அவனுக்கு நடுக்கம் உண்டாயிற்று. அரசன் கால்களில் விழுந்தான்.]

**போர் வீரன்** :—பிரபு! அறியாமல் செய்த பிழையைப் பொறுத்துக்கொள்ளக் கோரு கிறேன். இனி அவ்வாறு செய்ய மாட் டேன். என் நண்பன் தோட்டக்காரனை யும் மன்னிக்க வேண்டுகிறேன்.

**அரசன்** :—அப்பா! பயப்படாதே. உங்களை மன்னித்தேன். இனிமேல் அவ்வாறு செய் யாதீர்கள்.

[போர் வீரன் வணங்குகிருன். அரசன் அரண்மனை செல்கிருன்].

| | | |
|---|---|---|
| முன்னிரவு | அரண்மனை | மன்னித்தேன் |
| போர்வீரன் | கதலி | பிழை |
| மாறுவேடம் | அதிகாரி | பாயசம் |
| திடீரென்று | அமைச்சன் | வரிவசூல் |

### பொருள் விளக்கம்

கதலி - வாழைப்பழம். அமைச்சன் - மந்திரி.

### கேள்விகள்

1. பாண்டியன் வழியில் யாரைக் கண்டான்?
2. பாண்டியனிடம் போர்வீரன் என்ன சொன்னன்?
3. போர்வீரன் பாண்டியனை எவ்வாறு அறிந்தான்?
4. அரசன் போர்வீரனை என்ன செய்தான்?

### பயிற்சி

1. இந்த நாடகத்தைக் கதையாகச் சுருக்கி எழுது.

2. திடீரென்று, அரண்மனை, தெரியாது, நண்பன்—எதிர்ச்சொற்கள் எழுது.

### இலக்கணம்

*அரசன் குடையை விரித்தான்.*

இது ஒரு வாக்கியம். இதன் கருத்து முற்றுப் பெற்றது. **விரித்தான்** என்ற சொல் செய்கையைக் குறிக்கிறது. அது ஒரு வினைச்சொல். செயலைக் குறிக்கும் வினைச்சொல் பயனிலை எனப்படும்.

பயனிலைக்கு முன்னால் யார் என்று சேர்த்து, 'யார் விரித்தான்?' என்று கேள்வி கேட்டால், **அரசன்** என்ற விடை வரும். அது எழுவாய் எனப்படும். யார் என்ற கேள்விக்குப் பதிலாக எது என்றும் கேட்கலாம்.

கீழே உள்ள வாக்கியங்களில் எழுவாய், பயனிலைகளை எடுத்து எழுது :

1. அரசன் வெளியே சென்றான்.
2. கழுதை கத்திற்று.
3. போர்வீரன் பேசினான்.
4. பாண்டியன் போர்வீரனை மன்னித்தான்.
5. அண்ணன் வாழைப்பழம் தின்றான்.

## 24. என் கதை

1. குழந்தைகளே! உங்களுக்குப் பிரியமான பொருள் எது? இனிப்புள்ள திண்பண்டங்கள் அல்லவா? உங்களுக்குக் காசு கிடைத்தால் மிட்டாய்க் கடையைத் தேடுகிறீர்கள். உங்கள் வீடுகளில் பண்டிகை நாளன்று பாயசம், லட்டு முதலியவற்றைச் செய்கிருர்கள். நீங்கள் அவற்றை ஆவலுடன் புசிக்கிறீர்க்ள். அவை யாவும் எதனுல் செய்யப்படுகின்றன? ஏன் சந்தேகம்? அவை யாவற்றிலும் நான்தான் இருக்கிறேன். என்னை சர்க்கரை என்பார்கள்.

2. கரும்பு தின்னக் கூலி வேண்டுமா? பொங்கல் பண்டிகையன்று கரும்பை வேண்டி நிற்கிறீர்கள்; அதைச் சுவைத்துச் சாப்பிடுகிறீர்கள். நான் பிறந்த இடம் அதுதான். என் தாயாரின் உடல் முழுதும் இனிப்பு. நான் ஏன் இனிப்பாக இருக்கமாட்டேன்? சற்று என் கதையைக் கேளுங்கள்.

3. கருப்பங்கழிகளைத் துண்டு துண்டாக முதலில் வெட்டவேண்டும்; ஒவ்வொரு துண்டிலும் கணு இருக்கவேண்டும். நன்ருக உழுத நிலத்தில் அத்துண்டுகளைச் சற்றுச் சாய்த்து நடவேண்டும். சில நாட்களில் கணுக்களில் முளைகள் தோன்றும். அவற்றிலிருந்து கரும்பு வளரும்.

4. கரும்புகள் முற்றிய பின்பு, அவற்றை வெட்டிக் கட்டுக்கட்டாகக் கட்டுவார்கள். அக் கட்டுகளைக் கரும்பு ஆலைகள் உள்ள இடங்களுக்குக் கொண்டு போவார்கள். அக்கருப்பங் கழிகளை ஆலைகளில் இட்டு ஆட்டுவார்கள். அப்பொழுது கரும்புச் சக்கை ஒரு புறத்திலும், கருப்பஞ்சாறு மற்ருெரு புறத்திலும் வெளி வரும். வெளிப்படும் சாற்றை மக்கள் பெரிய பாத்திரங்களில் பிடித்து வைத்துக் கொள் வார்கள். நீ கருப்பஞ்சாறு குடித்திருக்கிருயா?

5. பின்பு கருப்பஞ்சாற்றைக் கொப்பரை யில் இட்டுக் காய்ச்சுவார்கள். அப்பொழுது சாறு குழம்பாக மாறிப்போகும். அப்பொழுது அதில் சிறிது சுண்ணும்பு நீரைக் கலப்பார்கள். அதன் பயனுகச் சாற்றில் உள்ள அழுக்குகள் யாவும் நுரைத்துக் கொண்டு மேலே வரும்; அவற்றை அகற்றி விடவேண்டும்; மிகுந்திருக் கும் குழம்பை ஆழமில்லாத தொட்டியில் கொட்டி ஆற வைக்கவேண்டும்.

6. இதற்குப் பாகு என்பது பெயர். பாகு இறுகினவுடன், கட்டைகளைக் கொண்டு அதை உடைத்துத் தேய்ப்பார்கள். அப்பொழுது நான் தோன்றுவேன். என் பெயர்தான் சர்க்கரை. முதலில் நான் பழுப்பு நிறமாக இருப்பேன்.

7. என்னைத் தண்ணீரில் கரைத்து வடிகட்டுவார்கள்; சில மருந்துகளையும் சேர்ட்

பார்கள்; மீண்டும் காய்ச்சுவார்கள். அதன் பயனாக என் நிறம் வெண்மையாக மாறும். சர்க்கரையான பின்பே என்னை நீங்கள் ஆவலுடன் உட்கொள்ளுகிறீர்கள். குழந்தைகளைக் கண்டால் எனக்குப் பிரியம்; அவர்கள் கைகளில் நான் ஒட்டிக் கொள்வேன். எறும்பும் ஈயும் என் நண்பர்கள்.

8. நமது நாட்டில் கரும்பு அதிகமாகப் பயிர் செய்யப்படுகிறது. அதனால் நானும் அதிகமாக உற்பத்தி ஆகிறேன். நானில்லாமல் பண்டிகைகளும் திருவிழாக்களும் திருமணங்களும் ஏது? மனித வாழ்க்கைக்கு நான் இன்றியமையாதவன். என்னைக் கண்டால் அழும் குழந்தையும் வாய் மூடிக்கொள்ளும்.

| | | |
|---|---|---|
| பாயசம் | ஆலை | அகற்றி |
| புசிக்கிறீர்கள் | கரும்பு சக்கை | ஆறவைக்க |
| சுவைத்து | கருப்பஞ்சாறு | இறுகினவுடன் |
| இனிப்பு | கொப்பரை | நண்பர்கள் |
| கழி | சுண்ணாம்பு | உற்பத்தி |
| கணு | அழுக்கு | இன்றியமையாத |
| முனை | நுரைத்துக்கொண்டு | |

## பொருள் விளக்கம்

சுவைத்து - உருசி பார்த்து. கொப்பரை - வாயகன்ற பாத்திரம். அகற்றி - நீக்கி. இறுகினவுடன் - கெட்டியானவுடன். இன்றியமையாத - இல்லாமல் முடியாத.

## கேள்விகள்

1. கரும்பைப் பயிர் செய்வது எப்படி ?
2. கருப்பஞ்சாறு எப்படி செய்யப்படுகிறது ?
3. பாகு செய்வது எப்படி ?
4. பாகிலிருந்து சர்க்கரை எப்படித் தோன்றும் ?
5. சர்க்கரையின் நிறம் என்ன ?
6. சர்க்கரை எவ்வாறு வாழ்க்கைக்கு இன்றியமையாதது ?

## பயிற்சி

1. எதிர்ப் பதங்கள் கூறு :

இனிப்பு, சக்கை, அகற்றி, நண்பன், அதிகமாக.

2. இன்றியமையாத, உற்பத்தி, திருவிழா, சுவைத்து—இச்சொற்களைத் தனித்தனி வாக்கியங்களில் அமைத்து எழுது.

3. சர்க்கரையின் உபயோகத்தை ஐந்து வாக்கியங்களில் எழுது.

4. இருபகுதிகளையும் பொருத்தமாகச் சேர்த்து எழுது :

| | |
|---|---|
| பாகற்காய் | துவர்க்கும் |
| வெல்லம் | கசக்கும் |
| பாக்கு | காரம் |
| எலுமிச்சம் பழம் | கசக்கும் |
| மிளகாய் | உவர்க்கும் |
| கடல்நீர் | இனிக்கும் |

# 25. தேசிங்கு குதிரையை அடக்குதல்



குதிரையின் அருகே வந்து நின்றான்
குழந்தை தேசிங்கு
கொல்லும் வேங்கைபோல் சீறி நின்றது
குதிரையும் அப்போது
பார்த்தான் மன்னன் லகானைக் கையால்
பாங்குடனே பற்றிப்
பாய்ந்தே ஏறி முதுகில் அமர்ந்தான்
பாலன் தேசிங்கு ;
கலகல வென்றே சிரித்துப் பிடித்தான்
கையில் சாட்டைதனை ;

கனைத்த பரியைக் கழுத்தில் தட்டினான்
கண்மணி தேசிங்கு ;
தட்டின தட்டில் குதிரை கிளம்பித்
தரையில் நில்லாமல்
தாவியே வானில் சென்று பரய்ந்தது
தங்கமேனிக் குதிரை
மலையும் குன்றும் உடைந்து சிதறி
மண்ணில் விழுவதைப் பார் !
குன்று மலைகளைத் தாண்டிக் குதிரை
குதித்துப் பாயுது பார் !
அசுவம் போகும் வேகத்தாலே
அலையுது மேகமெலாம் ;
மேகம் இடித்து மின்னல் கக்கி
மழையைப் பொழியுது பார் !
புரவி போகும் வேகம் அறிந்தான்
புலிக்குட்டி தேசிங்கு ;
பொல்லாக் குதிரை தன்னைக் கொல்லப்
போகுதென் றறிந்தான் ;
லகானை இழுத்துக் கொடுத்தான்
சிமிட்டா ராஜா தேசிங்கு ;
சிமிட்டா கொடுத்த வேகத்தினாலே
திகைத்து நின்றது பார் !
நின்ற குதிரையை டில்லிக்குத் திருப்பி
நேரே ஓட்டி வந்தான் ;
நிமிஷந்தன்னில் கீழே குதித்து
நின்றான் தேசிங்கு !

| | | | |
|---|---|---|---|
| வேங்கை | குன்று | லகான் | கலகல |
| பாங்குடன் | அசுவம் | சிமிட்டா | கிளம்பி |
| பரி | மின்னல் | திகைத்து | பாய்ந்து |
| கண்மணி | புரவி | கக்கி | தாண்டி |

### பொருள் விளக்கம்

பரி, அசுவம், புரவி - குதிரை.

### கேள்விகள்

1. தேசிங்கு குதிரையை எவ்வாறு அடக்கினன்?
2. குதிரையின் வேகம் எப்படி இருந்தது?

### பயிற்சி

1. தெரிந்துகொள்: கலகல—இது ஒரு இரட்டைச் சொல்.

கோமளம் கலகல என்று சிரித்தாள்.
பொன் பளபள என்று மின்னும்.
தண்ணீர் தளதள என்று கொதிக்கும்.
தம்பி குடுகுடு என்று ஓடினன்;

இவைபோல் இன்னும் நான்கு இரட்டைச் சொற்களைக் கூறு.

2. கோடிட்ட இடங்களில் கீழுள்ளவற்றைத் தகுந்த படி அமைத்து எழுது.

செக்கச்செவேல், கடகட, திருதிரு, வெள்ளைவெளேர், படபட.

1. வண்டி ——— என்று ஓடிற்று.
2. கனகம் ——— என்று பேசினன்.
3. பால் ——— என்று இருக்கும்.
4. இரத்தம் ——— என்று இருக்கிறது.
5. திருடன் ——— என்று விழித்தான்.

# 26. செய்யுள் பாடம்

## 1. கொன்றைவேந்தன்

1. அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்
2. ஆலயம் தொழுவது சாலவும் நன்று.
3. ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர்.
4. எண்ணும் எழுத்தும் கண் எனத் தகும்.
5. தந்தை சொல் மிக்க மந்திரமில்லை.
6. தாய் சொல் துறந்தால் வாசகம் இல்லை.
7. தாயின் சிறந்தொரு கோயிலும் இல்லை.
8. நுண்ணிய கருமம் எண்ணித் துணி.
9. முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்.
10. மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம்.

—ஔவையார்

முன்அறி - முதலில் அறியும். சாலவும் - மிகவும் ஈயார் - (தருமம்) கொடுக்காதவர். தேட்டை - செல்வத்தை எண் - கணக்கு. மந்திரம் - நல்ல வார்த்தை. நுண்ணிய சிறிய. செய்யின் - (தீங்கு) செய்தால். மூத்தோர் பெரியோர்.

## 2. வெற்றிவேற்கை

1. எழுத்தறிவித்தவன் இறைவன் ஆகும்.
2. கல்விக்கழகு கசடற மொழிதல்.
3. செல்வர்க் கழகு செழுங்கிளை தாங்குதல்.
4. மன்னர்க் கழகு செங்கோன் முறைமை.
5. மந்திரிக் கழகு வரும்பொருள் உரைத்தல்.
6. தந்திரிக் கழகு தறுகண் ஆண்மை.
7. வணிகர்க் கழகு வளர்பொருள் ஈட்டல்.
8. உண்டிக் கழகு விருந்தோடு உண்ணல்.
9. அறிஞர்க் கழகு கற்றுணர்ந்து அடங்கல்.
10. வறிஞர்க் கழகு வறுமையில் செம்மை.

—அதிவீரராம பாண்டியர்

### பொருள் விளக்கம்

இறைவன் - கடவுள். அறிவித்தவன் - கற்றுக் கொடுத்தவன். கசடு அற - குற்றம் நீங்க. செழும் கிளை - நெருங்கிய சுற்றம். முறைமை - நீதிமுறை. வரும் பொருள் - பின்னால் நேரக்கூடியவைகளை. தந்திரி - சேனைத் தலைவன். தறுகண் - அஞ்சாமை. ஆண்மை - தைரியம். வணிகர் - வியாபாரிகள். வளர்பொருள் - மேன்மேலும் பெருகும் செல்வம். கற்று உணர்ந்து அடங்கல் - நூல்களைக் கற்றுப் பொருளைத் தெரிந்துகொண்டு அடங்கி இருந்தல். வறிஞர் - வறுமையுடையவர்.

## 8. ஆத்திச்சூடி

1. கண்டொன்று சொல்லேல்.
2. ஙப்போல் வளை.
3. சுணமது கைவிடேல்.
4. செய்வன திருந்தச் செய்.
5. தேசத்தோடு ஒத்து வாழ்.
6. ஓதுவது ஒழியேல்.
7. தந்தை தாய்ப் பேண்.
8. நன்றி மறவேல்.
9. கூடிப் பிரியேல்.
10. மேன்மக்கள் சொற்கேள்.

—ஔவையார்

### பொருள் விளக்கம்

கண்டு - ஒன்றைக்கண்டு. ஒன்று - வேறு ஒன்று. வளை - உன்னைச் சேர்ந்தோரைத் தழுவு. திருந்த - நன்றாக. ஓதுவது - கல்வி கற்பது. மேன்மக்கள் - பெரியோர்.

தமிழ்

# இன்ப வாசகம்

## நான்காம் புத்தகம்


பதிப்பாசிரியர் :

S. V. வரதராஜ ஐயங்கார், M.A., M.O.L.,

விவேகானந்தர் கல்லூரி, சென்னை.



இண்டர்நாஷனல் பப்ளிஷிங் கம்பெனி

நுங்கம்பாக்கம் சென்னை-6

[விலை அணா எட்டு]

திருத்திய பதிப்பு—நவம்பர் 1953

Kabeer Printing Works, Madras (2389)

# முகவுரை

தமிழ் இன்ப வாசகம் என்னும் வரிசையில் இது நான்காம் புத்தகம். மூன்றும் புத்தகத்தில் ஒரு பொருளைப் பற்றிய பல பத்திகள் கொண்ட பாடங்களை வாசித்துத் தேர்ந்த மாணவர்கள், நான் காம் புத்தகத்தில் பின்னும் பல பொருள்களைப்பற்றிய பாடங்களைப் படித்துத் தேர்ச்சிபெறும்படி மூன்றும் வகுப்பைக் காட்டிலும் சற்று உயர்ந்த நடையில் பாடங்கள் அமைக்கப்பெற்றுள்ளன.

கற்ற பாடங்களின் பொருள் மாணவர் உள் ளத்தில் பதிவதற்கு ஏற்றவாறு ஆங்காங்கே பயிற் சிகள் புதுமுறையில் சேர்க்கப் பெற்றிருக்கின்றன. பாடங்களுக்கு விளக்கமாக இன்றியமையாத படங்கள் ஆங்காங்கே சேர்க்கப் பெற்றுள்ளன. வகுப்பின் தரத்திற்கு ஏற்றபடி இடையிடையே பாட்டுக்களைச் சேர்த்துள்ளேன். இப்புத்தகம் நன்கு அமைவதற்கு இன்றியமையாதவை யாவும் இயன்ற வரை செய் துள்ளேன்.

தொடக்கப் பள்ளியிலுள்ள அனுபவம் நிறைந்த ஆசிரியர்கள், இப்புத்தகத்தில் செய்வதற்கு ஏற்ற திருத் தங்கள் உளவேல், அவற்றை எனக்குத் தெரிவிப்பின், மிகவும் நன்றி பாராட்டுவேன். தமிழ் அன்பர்கள் இப்புத்தகத்தை ஆதரித்து உதவுவார்கள் என்று நம்புகின்றேன்.

**பதிப்பாசிரியன்**

# பொருளடக்கம்


| பொருள் | | பக்கம் |
|---|---|---|
| 1. மகாத்துமா காந்தி | ... | 1 |
| 2. காந்தியடிகளின் பெருமை | ... | 6 |
| 3. தங்கத் தட்டு | ... | 9 |
| 4. ஏழையின் காணிக்கை | ... | 14 |
| 5. ஈசனை நம்பிய ஏழை | ... | 17 |
| 6. யாரே அழுகை நிறுத்துவார்! | ... | 21 |
| 7. தேசிங்கு மன்னன் | ... | 23 |
| 8. வேளாண்மை | ... | 28 |
| 9. நீதி வழங்கிய மகம்மது | ... | 32 |
| 10. பெண் உரிமை | ... | 36 |
| 11. பாரி மன்னன் | ... | 38 |
| 12. சிவாஜி | ... | 41 |
| 13. சுக வாழ்வு | ... | 45 |
| 14. இயற்கை விதிகள் | ... | 49 |
| 15. கடிதம் எழுதுதல் | ... | 51 |
| 16. கரிகாலன் தீர்ப்பு | ... | 55 |
| 17. ஆகாய விமானம் | ... | 58 |
| 18. பத்திரிகைச் செய்திகள் | ... | 63 |
| 19. இலங்கைத் தீவு | ... | 68 |
| 20. தேயிலை | ... | 73 |
| 21. செஞ்சிலுவைச் சங்கம் | ... | 77 |
| 22. 'தன் வினை தன்னைச் சுடும்' | ... | 80 |


## செய்யுட்பாடம்


| | | |
|---|---|---|
| I. கலைமகள் துதி | ... | 87 |
| II. வெற்றி வேற்கை | ... | 87 |
| III. மூதுரை | ... | 88 |
| IV. மழை | ... | 90 |
| V. நாட்டு வணக்கம் | ... | 91 |
| செய்யுட்பாடக் குறிப்புரை | ... | 92 |

# தமிழ் இன்ப வாசகம்

## நான்காம் புத்தகம்

### 1. மகாத்துமா காந்தி

1. நமது நாட்டில் அவதரித்த பல பெரியார்களுள் மகாத்துமா காந்தி தலை சிறந்தவர். அவருடைய முழுப்பெயர் **மோகனதாஸ் கரம்சந்திர காந்தி** என்பது.

2. காந்தி அடிகள், 1869-ஆம் ஆண்டு, அக்டோபர் மாதம், 2-ஆம் தேதி, போர் பந்தர் என்னும் இடத்தில் பிறந்தார். போர் பந்தர் ஒரு சிறிய சம்ஸ்தானம். காந்தியாரின் தகப்பனுர் அதில் திவானுய் இருந்தார். காந்தியாரின் தாயார் தெய்வ பக்தி மிகுந்தவர்.

3. அடிகள் இளமையில் தமது ஊரிலேயே கல்வி பயின்ருர் ; பின்பு இங்கிலாந்து சென்ருர். அங்கே படித்து, பாரிஸ்தர் என்னும் பட்டம் பெற்ருர் ; தாய்நாட்டிற்குத் திரும்பியதும் வக்கீல் தொழில் நடத்தி வந்தார். அப்பொழுது தென்னுப்பிரிக்காவிற்குச் செல்ல நேர்ந்தது. அங்கும் அவர் வக்கீல் தொழிலேயே நடத்திஞர்.

4. தென்னுப்பிரிக்காவில் இந்தியர் பலர் குடியேறி உள்ளனர். அவர்களை அந்த அரசாங்கத்தார் கொடுமைப்படுத்தி வந்தனர். அந்த அரசாங்கம் வெள்ளையரால் நடத்தப்படுகிறது. இந்தியர்களைக் கூலிகள் என்றும், கறுப்பர்கள் என்றும் சொல்லி அவர்கள் அவமதித்து வந்தார்கள். அடிகள் இந்தியர்-

களுடைய நிலைமையைக்கண்டு வருந்தினர்; அங்கேயே தங்கி, அவர்கள் நலனுக்காக உழைத்தார். அதனால், அடிகளுக்குப் பல இன்னல்கள் நேர்ந்தன.



அவற்றைப் பொருட்படுத்தாமல் அமைதியாகவே கிளர்ச்சி செய்து, அவர் வெற்றி அடைந்தார்.

5. பின்பு அடிகள் இந்தியாவுக்குத் திரும்பினர். இங்கும் இந்தியர் நிலை தாழ்ந்திருந்தது. ஆங்கிலேயருக்கு நாம் அடிமைகளாய் இருந்தோம். நமக்குச் செயலிலும் பேச்சிலும் உரிமை இல்லை. வறுமையால்

நாம் வாடி இருந்தோம். உண்ண உணவும் உடுக்க உடையுமின்றிப் பலர் தவித்தனர். அது கண்ட அடிகள், மிக வருந்தினர். தாமும் ஏழைகளைப்போலவே இடையில் ஒரு துண்டு தரித்தார்; மேலே ஒரு போர்வை அணிந்தார்; நாடு முழுதும் சுற்றுப் பிரயாணம் செய்தார்; அடிமை வாழ்வு நீங்கினல் அன்றி நாட்டுக்கு நலன் உண்டாகாது என்று மக்களுக்கு எடுத்துரைத்தார்.

6. ஆனல், அவர் விருப்பம் எளிதில் கைகூடவில்லை. அவர் சமாதானமாகவே அரசாங்கத்தாரை எதிர்த்தார். ஆங்கிலேயரை அவர் வெறுக்கவில்லை; அவர்கள் நமக்குச் செய்த கொடுமைகளையே வெறுத்தார். அவர்களுடன் ஆயுதப்போர் புரியவில்லை; அறப்போரே புரிந்தார். அஹிம்ஸையும் சத்தியமுமே அவருடைய ஆயுதங்கள். அதன் பயனுக அவர் பல முறை சிறை வாசம் செய்தார். அவருடன் பலர் சிறை சென்றனர்; தடியடிபட்டனர்; பலர் உயிர் இழந்தனர். ஆயினும், இறுதியில் காந்தியார் வெற்றி அடைந்தார். நாம் விடுதலை அடைந்தோம்; அடிமை வாழ்வை அகற்றினேம்.

7. காந்தியடிகள் கைத்தொழில் பெருக ஏற்பாடு செய்தார். கதிரிலும் இராட்டையிலும் நூல் நூற்று, கைத்தறியில் துணி நெய்யும் தொழிலுக்குப் புத்துயிர் அளித்தார்; 'தீண்டாமை' என்ற தீய வழக்கத்தைப் போக்கினர்; கட்குடியைக் குறைத்தார்; மக்களுக்குப் பல நற்போதனைகளைச் செய்தார்; பாரதநாட்டின் பெருமையை உலகத்தார் அறியச் செய்தார்; இந்துக்களும் முஸ்லிம்களும் ஒற்றுமையாக வாழ வேண்டும் என்று போதித்தார்.

8. காந்தியடிகள் நமது நாட்டின் தந்தையார்;

நமக்குப் புத்துயிர் அளித்த அண்ணல். 1948-ஆம் ஆண்டு, ஜனவரி மாதம், 30-ஆம் நாளில் ஒரு வெறியனால் அவர் சுட்டுக் கொல்லப்பட்டார்; 'ராம்! ராம்!' என்ற வண்ணமே அடிகள் உயிர் துறந்தார். உலகமே துயரத்தில் ஆழ்ந்தது. அவரது பூதவுடல் மறைந்தது; அவரது புகழ் மறையவில்லை. அது உலகத்தில் பல்லாண்டுகள் நிலைத்து நிற்கும். அவர் காட்டிய வழியில் நாம் சென்று பெருமை அடைவோமாக!

### சொற்கள் :

| | | |
|---|---|---|
| அவதரித்த | வெள்ளையர் | அடிமை |
| தலைசிறந்தவர் | அவமதித்து | அஹிம்சை |
| சம்ஸ்தானம் | நலன் | இறுதி |
| திவான் | இன்னல் | புத்துயிர் |
| பயின்றார் | அமைதி | பூதவுடல் |
| பாரிஸ்தர் | கிளர்ச்சி | பல்லாண்டு |
| குடியேறி | வெற்றி | தொண்டு |
| கொடுமை | பொருட்படுத்தாமல் | விடுதலை |

### பொருள் விளக்கம் :

தலைசிறந்தவர் - முதன்மையாகச் சிறந்தவர், வெள்ளையர் - வெள்ளை நிறத்தவர் (ஐரோப்பியர்), இன்னல் - துன்பம், பொருட்படுத்தாமல் - மதியாமல், இறுதி - கடைசி, பூதவுடல் - தேகம், தொண்டு - ஊழியம்.

### கேள்விகள் :

1. காந்தியடிகளின் முழுப்பெயர் என்ன?
2. அவர் இங்கிலாந்துக்கு எதற்காகச் சென்றார்?
3. தென்னாப்பிரிக்காவில் இந்தியருக்கு அவர் செய்த தொண்டு என்ன?

4. இந்தியர் விடுதலை அடைய வேண்டும் என்று ஏன் அவர் மக்களுக்கு எடுத்துரைத்தார்?

5. இந்தியா எவ்வாறு சுதந்திரம் பெற்றது?

6. காந்தியார் நம் நாட்டுக்குச் செய்த நன்மைகள் யாவை?

### பயிற்சி :

1. எதிர்ப்பதங்களை எழுது: அவமதிப்பு, அமைதி, வெற்றி, அடிமை, இறுதி.

2. அவதரித்த, கொடுமை, கிளர்ச்சி, பல்லாண்டு, விடுதலை—இச்சொற்களைச் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுது.

3. தெரிந்துகொள் : கள் + குடி—கட்குடி
நல் + போதனை—நற்போதனை
பல் + ஆண்டு—பல்லாண்டு

4. பிரித்து எழுது : புத்துயிர், பூதவுடல், பொருட்படுத்தாமல், சுற்றுப்பிரயாணம்.

### இலக்கணம் :

காந்தியார் போர் பந்தரில் பிறந்தார்.—இது ஒரு வாக்கியம். இதில் ஒரு கருத்து அமைந்திருக்கிறது; அது முற்றுப்பெற்ற கருத்து. இச்சொற்களின் வரிசையை மாற்றினால் கருத்து விளங்காது. பல சொற்கள் சேர்ந்து, பொருள் படும் வரிசையில் அமைந்து, ஒரு முற்றுப்பெற்ற கருத்தைத் தெரிவிப்பதே வாக்கியம் எனப்படும். ஒவ்வொரு வாக்கியத்தின் முடிவிலும் ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்.



## 2. காந்தியடிகளின் பெருமை

இந்திய நாடு சுதந்தர மெய்தநல்
தந்திரம் தந்ததுயார் ?—'சிறு
கந்தைபக் கீர்' என்று தந்தொரு வன்சொன்ன
காந்தியென் னும்பெரியார். 1

ஆயுதம் இன்றியும் யாரும் வணங்கிடும்
அன்பைப் பெருக்கினதார் ?—சற்றும்
சாயுதல் செய்திடாச் சத்திய மூர்த்திநம்
தவமுனி காந்தியவர். 2

தீண்டப் படாதென்று மனிதரைச் சொல்வது
தீமையில் தீமையென்றே—அதைப்
பூண்டொடும் போக்கநாம் விரதம் புனைந்தது
புண்ணியர் காந்தியினால். 3

'தன்னை வதைப்பவர் தங்களுக் கும்அன்பைத்
தாங்குவ தேதவமாம்'—என்று
முன்னைஇந் நாட்டினில் சொன்னவர் சொற்களை
முற்றுவித் தார்காந்தி. 4

—நாமக்கல் கவிஞர்

சொற்கள் :

| | | |
|---|---|---|
| சுதந்தரம் | பெருக்கினது | விரதம் |
| தந்திரம் | தவமுனி | புனைந்து |
| பக்கீர் | பூண்டொடும் | புண்ணியர் |

பொருள் விளக்கம் :

சுதந்தரம் - உரிமை, பக்கீர் - பக்கிரி (துறவி), பூண்டொடும் - சிறிய அடையாளத்தோடும், புனைந்து - அணிந்து.

கேள்விகள் :

1. இந்தியர் சுதந்தரம் பெற வழி காட்டியவர் யார்?
2. ஆயுதம் இல்லாமல் அன்பை நாட்டில் வளர்த்தவர் யார்?
3. காந்தியார் தீண்டாதாருக்குச் செய்த நன்மை என்ன?
4. காந்தியார் எந்தச் சொற்களை முற்றுவித்தார்?

பயிற்சி :

1. எதிர்ப்பதங்கள் எழுது :—
பெருக்கினது, புண்ணியம், அன்பு, தீமை.
2. விரதம், தந்திரம், தவமுனி, ஆயுதம்—இச்சொற்களைத் தனித்தனி வாக்கியங்களில் அமைத்து எழுது.
3. பின்வரும் சொற்றொடர்களை வாக்கியங்களாக அமைத்து எழுது :—
(1) அரும்பாடு காந்தியடிகள் தீண்டாமையை நீக்க பட்டார்

(2) இல்லாமல் அன்பினால் வென்றார் காந்தியார் ஆயுதம்
(3) வதைப்பவர்களுக்கும் காந்தியார் தன்னை அன்பு காட்ட வேண்டும் போதித்தார் என்று

## இலக்கணம் :


பெயரைக் குறிக்கும் சொல் பெயர்ச்சொல்.

(உ - ம்.) காந்தி, ஆயுதம்.

செயலைக் குறிக்கும் சொல் வினைச்சொல்.

(உ - ம்.) பட்டார், வென்றார்.

இப்பாடத்திலிருந்து ஐந்து பெயர்ச்சொற்களையும் ஐந்து வினைச்சொற்களையும் எடுத்து எழுது.



## 3. தங்கத் தட்டு

1. வட இந்தியாவில் கங்கை நதிக்கரையில் காசி என்றொரு புண்ணிய நகரம் உள்ளது. அங்கே பெருமை பெற்ற ஆலயம் ஒன்று இருக்கிறது. அதில் விசுவநாதர் கோயில் கொண்டுள்ளார்.

2. முன்னொரு காலத்தில், ஒரு நாள் அவ்வாலயத்தின் பிராகாரத்தில் வானத்தினின்று ஓர் அழகான பொன் தட்டு விழுந்தது. அதைக் கோயில் குருக்கள் எடுத்துப் பார்த்தார். அதில் 'கடவுளிடம் உண்மை அன்புள்ளவர்க்கு இது பரிசு ஆகும்,' என்பது தீட்டப்பட்டிருந்தது.

3. கோயில் குருக்கள் ஒரு விளம்பரம் செய்தார்: 'இந்தத் தட்டைப் பரிசாகப் பெற விரும்புபவர் கோயிலுக்கு வந்து கடவுள் சந்நிதியில் தாம் செய்துள்ள நற்செயல்களைத் தெரிவிக்க வேண்டும்,' என்பதே அந்த விளம்பரம்.

4. காட்டுத்தீப்போல அவ்விளம்பரம் நாடு முழுவதும் பரவியது. துறவிகளும், பண்டிதர்களும், தருமப்பிரபுக்களும் கோயிலுக்குச் சென்ருர்கள். தாமே அத்தங்கத் தட்டைப் பெறத்தகுந்தவர் என ஒவ்வொருவரும் நினைத்தனர். தாம் செய்த நல்லறங்களை ஒவ்வொருவரும் எடுத்துக் கூறினர். ஒரு பயனும் இல்லாது போயிற்று. இவ்வாறு ஓராண்டு சென்றது.

5. ஒரு நாள் அவ்வாலயத்திற்கு ஒரு பிரபு வந்தார். அவர் கேட்பவருக்கு வரையாது கொடுக்கும் வள்ளல்; ஏழைகளை ஆதரித்து வந்தவர். அவரே அத்தட்டைப் பெறத் தகுதி வாய்ந்தவர் என்று குருக்கள் கருதினர். ஆதலால், அத்தட்டை அக்கனவானிடம் குருக்கள் அளித்தார்.

6. என்ன ஆச்சரியம்! கனவானுடைய கை அத்தட்டின்மேல் பட்டதும் அது ஈயத்தட்டாக மாறிவிட்டது! அது கண்ட யாவரும் வியப்புற்றனர். கனவான் வருத்தமுற்று அதைத் தரைமீது வைத்தார். அது மீண்டும் தங்கத்தட்டாய் மாறியது! இது போலவே மேலும் பலர் வந்து ஏமாற்றம் அடைந்தனர்.

7. பின்னும் ஓராண்டு கழிந்தது. ஒரு நாள் ஓர் ஏழைக் குடியானவன் கோயிலுக்கு வந்தான். கோயிலுக்கு முன் பல பிச்சைக்காரர் இரந்து உண்டு வாழ்ந்து வந்தனர். குடியானவன் அவர்களிடம் இரக்கம் கொண்டான். அவர்களுள் சிலர் குருடர்; சிலர் முடவர்; சிலர் நோயாளர். அவர்களைப் பார்த்து, அவன், "கடவுள் அருளால் உங்களுடைய துயரம் நீங்கவேண்டும்!" என்று கூறி வணங்கினான்; பின்பு உள்ளே சென்று, கடவுளை வணங்கி வீடு செல்லத் திரும்பினான்.

8. கோயில் குருக்கள் உடனே அவனை அழைத்-தார்; அவன் கையில் அத்தட்டை அளித்தார். குடி-யானவனுடைய கரம் அத்தட்டின்மேல் பட்டதும், அது மேலும் ஒளி பெற்றுப் பிரகாசித்தது. குருக்கள்



அத்தட்டை அவனுக்கே பரிசாக அளித்தார். அவ்-வற்புதக் காட்சியைக் கண்ட அனைவரும் வியப்-படைந்தனர். குடியானவன் கடவுளை வணங்கித் தங்கத் தட்டுடன் வீடு திரும்பினான்.

9. குடியானவன் ஏழையானாலும், எல்லா உயிர்-களிடத்திலும் அன்பு பூண்டவன். ஆதலால், அவன் கடவுளுடைய அன்புக்கு உரியவன் ஆனான்.

## சொற்கள் :

| | | |
|---|---|---|
| புண்ணியம் | விளம்பரம் | மூடவர் |
| கோயில்கொண்டு | துறவி | கரம் |
| பிராகாரம் | வரையாது | பிரகாசித்தது |
| பரிசு | வள்ளல் | அற்புதக் காட்சி |
| தீட்டப்பட்டு | வியப்பு | துயரம் |
| சந்நிதி | அவமானம் | காட்சி |
| நற்செயல் | இரந்து | |

## பொருள் விளக்கம் :

கோயில் கொண்டு - தங்கி, பிராகாரம் - கோயிலில் சுற்றிவரும் இடம், துறவி - சந்நியாசி, வரையாது - அளவு செய்யாமல், வியப்பு - ஆச்சரியம், கரம் - கை, துயரம் - விசனம்.

## கேள்விகள் :

1. காசி எங்குள்ளது ?
2. கோயிலில் என்ன விழுந்தது ?
3. குருக்கள் என்ன விளம்பரம் செய்தார் ?
4. பிரபு தங்கத்தட்டை எடுத்ததும் அது என்னவாயிற்று ?
5. குடியானவன் பிச்சைக்காரர்களைக் கண்டு என்ன செய்தான் ?
6. பொன் தட்டைப் பெற்றவர் யார் ? ஏன் ?

## பயிற்சி :

1. எதிர்ச்சொற்களை எழுது :—

அவமானம், துயரம், ஏழை, பண்டிதர், நாடு.

2. விளம்பரம், பரிசு, வள்ளல், துயரம், அவமானம்— இச்சொற்களைத் தனித்தனி வாக்கியங்களில் அமைத்து எழுது.

## இலக்கணம் :

### நிறுத்தக் குறிகள் :

(,) இது காற்புள்ளி. இதனை 'காமா' என்றும் சொல்லுவர். காற்புள்ளி வைத்துள்ள இடத்தில் ஒரு மாத்திரை நேரம் நிறுத்த வேண்டும். கண்ணிமைப் பொழுது ஒரு மாத்திரை நேரமாகும்.

(?) இது கேள்விக் குறி. கேள்விப் பொருள் தரும் வாக்கியங்களின் இறுதியில் இக்குறி வைக்கவேண்டும்

(!) இது ஆச்சரியக் குறி. வியப்பு, துயரம், மகிழ்ச்சி முதலான உணர்ச்சிகளைக் குறிக்கும் போது இக்குறி இடுகிறோம்.

(" ") இவை மேற்கோள் குறிகள். பிறர் கூறியவற்றை அவர்கள் சொல்வது போன்றே எழுதும் பொழுது அவற்றின் தொடக்கத்திலும் முடிவிலும் இக்குறிகளை இட வேண்டும்.

கோடு இட்ட இடங்களில் தகுந்த நிறுத்தக் குறிகளை இடு :

தங்கத் தட்டு | ஆகாயத்திலிருந்து கோயில் பிராகாரத்தில் விழுந்தது | ஆகா | என்ன அற்புதம் | குருக்கள் அதனைக் கண்டெடுத்தார் | அதனை அவர் இறைவன் எதிரில் வைத்தார் | அதனைக் காணத் திரள்திரளாக மக்கள் வந்தார்கள் | குருக்கள் செய்தது என்ன | இத்தட்டினை நல்லறம் செய்தவர்களே எடுக்கலாம் | என விளம்பரம் செய்தார் |

## 4. ஏழையின் காணிக்கை

1. பாலஸ்தீனம் என்னும் நாட்டில் ஓர் ஆலயம் இருந்தது. பல திசைகளிலிருந்தும் மக்கள் அவ்வாலயத்திற்குத் திரள்திரளாக வருவார்கள்; காணிக்கை செலுத்துவார்கள். காணிக்கை செலுத்த ஓர் உண்டி உண்டு; அதில் ஒவ்வொருவரும் காணிக்கை போடுவது வழக்கம்.

2. இயேசு நாதர் ஒரு பெரிய மகான். தம் சீடர்களுடன் அவர் ஒரு நாள் அவ்வாலயத்திற்கு எழுந்தருளினார். அவர் காணிக்கை உண்டிக்கு எதிரில் நின்று, மக்கள் காணிக்கை செலுத்துவதைப் பார்த்துக்கொண்டிருந்தார்.

3. செல்வர் பலர், அவ்வுண்டியில் பொற்காசுகளைப் போட்டனர்; சிலர், வெள்ளி நாணயங்களைச் செலுத்தினர்; மற்றும் சிலர், வேறு நாணயங்களைப் போட்டனர்.

4. ஆனால், அவர்களுள் ஒருவராவது உள்ளன்புடன் காணிக்கை செலுத்தவில்லை; பிறர் மதிப்பைப் பெறவும், ஆடம்பரத்திற்காகவும் பொன்னையும் வெள்ளியையும் உண்டியில் குவித்தனர். அதனால், அவர்கள் வறுமை அடையவில்லை; அக்காசுகளை அவர்கள் ஒரு பொருளாக மதிக்கவும் இல்லை.

5. இறுதியில் ஓர் ஏழைப் பெண் அங்கு வந்தாள்; அவள் ஓர் அநாதை. அவள் ஒரு கந்தலான ஆடையை அணிந்திருந்தாள்; அதன் ஒரு மூலையில் இருந்த ஒரு சிறு முடிப்பை அவிழ்த்தாள். அதில் ஒரு செப்புக்காசு இருந்தது. அதைத் தன் கையில் எடுத்தாள்.

6. " ஆண்டவரே, நான் ஏழை! ஓர் அநாதை! என் சொத்தெல்லாம் இச்செப்புக்காசுதான்! என் சிறு காணிக்கையைக் கண்டு என்னை வெறுக்க வேண்டா! இதை ஏற்றுக்கொள்ளக் கோருகிறேன்!" என்று சொல்லிக்கொண்டே அவள் உண்டியில் காணிக்கையைச் சேர்த்தாள்; பின்பு கடவுளை வணங்கித் தன் வழியே சென்றாள்.

7. இயேசு நாதர் அக்காட்சியைக் கண்டார்? அவ்வநாதையின் உள்ளன்பைக் கண்டு மனம் உருகினார்; தம் சீடர்களை நோக்கி, "சீடர்களே, அப்பெண்ணின் பக்தியைப் பாருங்கள்! அவளே ஆண்டவனுக்குப் பிரியமானவள். தன்னிடம் இருந்த யாவற்றையும் அவள் தானம் செய்தாள். மற்றவர்கள் ஆடம்பரத்தில் பிரியம் உள்ளவர்கள்; பக்தி இல்லாத வர்கள். ஆதலால், உள்ளன்புடன் நாம் கடவுளை வணங்க வேண்டும்," என்று உபதேசித்தார்.

### சொற்கள் :

| | | | |
|---|---|---|---|
| திரள்திரளாக | எழுந்தருளினார் | வறுமை | பக்தி |
| காணிக்கை | உள்ளன்பு | அநாதை | தானம் |
| உண்டி | மதிப்பு | ஆண்டவன் | உபதேசம் |
| மகான் | ஆடம்பரம் | உருகினார் | காட்சி |

### பொருள் விளக்கம் :

*திரள்திரளாக* - கூட்டங்கூட்டமாக, காணிக்கை; கடவுளுக்கு அளிக்கும் பொருள், மகான் - பெரியார், ஆடம்பரம் - பகட்டு, அநாதை - ஆதரவு இல்லாதவள், உபதேசம் - நன்மொழி கூறுதல்.

### கேள்விகள்

1. பாலஸ்தீனத்திலுள்ள ஆலயத்திற்கு மக்கள் எதற்காக வருவார்கள்?

2. ஏசு நாதர் ஆலயத்தில் என்ன செய்தார் ?

3. செல்வர் பலர் எதற்காகக் காணிக்கை செலுத்தினர் ?

4. அநாதைப் பெண் செலுத்திய காணிக்கை என்ன ?

5. ஏசு நாதர் தம் சீடரிடம் யாது சொன்னார் ?

### பயிற்சி :

திரள்திரளாக, காணிக்கை, உபதேசம், உள்ளன்பு, மகான்—இவற்றைத் தனித்தனி வாக்கியங்களில் அமைத்து எழுது.

### இலக்கணம் :

பின் வருவனவற்றில் வாக்கியங்கள் எவை ?

1. இயேசு நாதர் வந்தார்
2. உள்ளன்புடன் கடவுளை
3. ஏழை காணிக்கை செலுத்தினாள்
4. ஏழைப் பெண் முடிப்பை
5. பிறர் மதிப்பைப் பெறவும்
6. மக்கள் அவ்வாலயத்திற்கு

# 5. ஈசனை நம்பிய ஏழை

1. நமது பாரத நாட்டின் வடமேற்குத் திசையில் ‘ பிரஷ்யா ’ என்னும் நாடொன்று உள்ளது. அனேக நூற்றுண்டுகளுக்கு முன் அந்நாட்டினை ஓர் அரசன் ஆண்டுவந்தான். அவன் நிரம்பிய கல்வி அறிவும், கடவுள் பற்றும் உள்ளவன்; குடிகளுக்கு ஆவன செய்து, நாட்டை நலமுற ஆண்டுவந்தான்.

2. அந்த அரசனை அவன் உடலைப் பற்றிய குறை ஒன்று வாட்டி வருத்தியது. பொறுக்க முடியாத வயிற்று நோயால் அவன் நெடுநாட்களாகத் துன்புற்றுன். அரச மருத்துவரும் பிறரும் அந்நோய் வருங்கால் அரசனது உடல் நிலையைச் சோதித்துத் தமக்குத் தெரிந்த அளவில் மருந்து கொடுத்துவந்தனர். எனினும், நோய் நீங்காமல் அரசனைப் பீடித்து வந்தது.

3. ஒரு நாள் அரசன் தன் நாட்டிலும் பிற நாடுகளிலும் உள்ள சிறந்த மருத்துவர் பலரையும் அங்கே வந்து கூடச் செய்தான். யாவரும் வேந்தனுடைய வயிறு, குடல் முதலான உறுப்புக்களின் நிலையை ஆராய்ந்து பார்த்த பின், தனித்துக் கூடி ஆலோசனை செய்து, ஒரு முடிவிற்கு வந்தனர்; அஃதாவது, “ ஒரு வகைச் சிறு குடல் உள்ள மனிதனைக் கண்டுபிடித்து, அவன் குடலை எடுத்து, அதனால் மருந்தொன்று செய்து, அரசனை அருந்தச் செய்தால், அப்பிணி முற்றும் நீங்கிவிடும்,” என்பதே.

4. நாடெங்கும் உள்ள மக்களின் சிறு குடலைச் சோதிக்கும்படி ஆங்காங்குள்ள மருத்துவருக்கு ஆணை பிறந்தது. அவ்வாறே ஒவ்வோர் ஊரிலுமுள்ள

மருத்துவரும் அந்தந்த ஊர் மாந்தரின் குடல்களை-யெல்லாம் சோதித்துவந்தனர். சில மாதங்கள் சென்ற பின் ஒரு சிற்றூரில் இருந்த ஓர் இடைச் சிறுவனுக்கு அத்தகைய சிறு குடல் இருந்ததை அவ்வூர் வைத்-தியர் கண்டறிந்து, வேந்தனுக்குச் செய்தி அறிவித்-தனர்.

5. தனது நோய் நீங்குவதற்கு ஏற்ற மருந்து கிடைத்ததுபற்றி அரசன் அகமகிழ்ந்தான்; அச்-சிறுவனின் பெற்றோரைக் கண்டு தனது நோய் நீங்கு-வதற்காக அவனை அழைத்துச் சென்று கொன்று அவன் குடலைக் கொள்ளவேண்டி இருப்பதாகத் தெரிவிக்கச் சொன்னான். புதல்வனைப் பறி கொடுப்-பதற்காக அவன் பெற்றோர்க்கு நிரம்பப் பொன் கொடுக்கப்பட்டது. பொன்னைக் கண்டு மயங்கிய பெற்றோர் தாம் பெற்ற புதல்வனையும் இழக்க இசைந்-தனர். சிறுவன் அரசவையில் கொண்டுபோய் நிறுத்-தப்பட்டான்.

6. அரசவையில் அரசனோடு நீதிபதிகளும் சிறந்த மருத்துவரும் அமைச்சர் முதலானவரும் அமர்ந்திருந்தனர். அரசன் நீதிபதிகளைப் பார்த்-தான். தலைமை நீதிபதி எழுந்து நின்று, "மன்னரின் உயிரைக் காப்பது கருதி, நம் நாட்டிலுள்ள ஒரு குடிமகன் உயிரைப் போக்குதல் நீதிக்கு விரோத-மாகாது," என்று தெரிவித்தார். அங்கிருந்த அமைச்-சர் முதலானோர், "ஆம்! ஆம்!" என்றனர். அச்-சிறுவனைக் கொல்ல முடிவு செய்யப்பட்டது.

7. அம்முடிவு தெரிந்ததும், அவையின் நடுவே நின்றுகொண்டிருந்த அந்த இடைச்சிறுவன், தன் கரங்களை விரித்து, மேல் நோக்கிச் சிரித்தான். அது கண்ட அரசன் வியப்புற்று, "சிறுவா, உன்னைக்

கொல்லப்போவதாகத் தெரிவித்ததைக் கேட்டும் நீ அழாமல், சிரிக்கக் காரணம் என்ன?'' என்று கேட்டான்.

8. சிறுவன், ''மன்னர் பிரானே, குடிமக்களைக் காக்கும் கடமையுள்ள அரசராகிய நீர் ஒரு குற்றமும் செய்யாத என்னைக் கொல்ல ஆணையிட்டீர்! என்னை ஈன்று வளர்த்தவர்களோ, பொன்னுக்கு ஆசைப்பட்டு என்னைக் கைவிட்டனர்! நீதிபதியோ, குற்றமற்ற என்னைக் கொல்வது நீதிதான் என்று முடிவு கட்டி-ஞர்! அவ்வப்பொழுது அரசருக்கு அறவழிகூறும் அமைச்சரும் அதனை ஆமோதித்துவிட்டனர்! இனி என்னைக் காத்தற்கு உரியவர் ஈசரேயன்றி வேறு யாருளர்? அதனாலேதான் நான் வானத்தை நோக்கி நகைத்தேன்,'' என்றான்.

9. சிறுவன் கூறிய சொற்கள் மன்னன் உள்-ளத்தில் தைத்தன. அவன் மனம் கலங்கிற்று. அச்-சிறுவனைக் கொல்வது அநீதிதான் என்பதை அவன் உணர்ந்தான்; உடனே அச்சிறுவனைக் கொல்லாமல், அவன் ஊருக்குத் திரும்பிச் செல்லும்படி சொல்லி, நிரம்பப் பொருள் கொடுத்து அனுப்பினான். ஈசனை நம்பிய ஏழையும் உய்ந்தான்.

சொற்கள் :

| | | | |
|---|---|---|---|
| பிரஷ்யா | வடமேற்கு | நலமுற | நெடுநாள் |
| மருத்துவர் | உறுப்பு | சிறு குடல் | பிணி |
| ஆராய்ந்து | முற்றும் | வயிறு | ஆணை |
| சிற்றூர் | கரங்கள் | விரித்து | அறவழி |

பொருள் விளக்கம் :

கடவுள் பற்று - தெய்வ பக்தி, பிடித்து - வருத்தி, ஆணை - கட்டளை, வியப்பு - ஆச்சரியம், ஈன்று - பெற்று, உய்ந்தான் - பிழைத்தான்.

### வினாக்கள் :

1. பிரஷ்யா நாடு எங்கே இருக்கிறது ?
2. அரசனுக்கு ஏற்பட்டிருந்த குறை யாது ?
3. அரசன் குறையைப் போக்க மருத்துவர் செய்த முடிவு என்ன ?
4. அந்த முடிவு எவ்வாறு நிறைவேற்றப்பட்டது ?
5. இடைச்சிறுவன் தான் சிரித்ததற்குக் கூறிய காரணம் என்ன ?
6. இக்கதையால் நீ அறியும் நீதி யாது ?

### பயிற்சி :

1. அரசன், நோய், மருத்துவர், புதல்வன், அமைச்சர்—இப்பொருள்களைக் குறிக்கும் வேறு சொற்கள் எழுது.

2. நீதி, சிறு குடல், பலர், பிறந்தது, சிற்றூர், மயங்கிய, அழாமல்—எதிர்ப்பதங்கள் எழுது.


3. நிரம்பிய, கடவுள் பற்று, நலமுற, ஆலோசனை, அரசவை, விரோதம், குற்றமற்ற, அமைச்சர்—உன் சொந்த வாக்கியத்தில் அமைத்து எழுது.

### இலக்கணம் :

1. ஒரே பொருளைப் பற்றிப் பல வாக்கியங்கள் தொடர்ச்சியாக எழுதலாம். அவ்வாறு எழுதப்படுவதற்குப் பாரா அல்லது பத்தி என்பது பெயர். ஒரே பத்தியில் பல பொருள்களைப் பற்றி எழுதக் கூடாது.

2. இப்பாடத்திலுள்ள பத்திகள் எத்தனை ? ஒவ்வொரு பத்திக்கும் ஒவ்வொரு தலைப்புக் கொடு.

3. மூன்றும் பாராவிலுள்ள ஒருமைச் சொற்களையும் பன்மைச் சொற்களையும் எடுத்து எழுது.



## 6. யாரே அழுகை நிறுத்துவார் !

‘ அழுத அழுகை போதுமடா,
அப்பா ! என்ன வேண்டும் ?’ என்றால்
‘ கழுதை வேண்டும் ; குதிரையுடன்
கட்டை வண்டி வேண்டும் ’என்பான் ;
அழுத அழுகை அடக்குவதற்
கனைத்தும் வாங்கித் தந்தாலும்,
முழுதும் காலால் உதைத்துவிட்டு,
‘ முயல்தான் வேண்டும்,’ என்கின்றான். 1

விரும்பிப் பொம்மை எவ்வளவோ
விலைக்கு வாங்கித் தந்திட்டேன் ;
‘ கரும்பு வேண்டும்,’ என்றான் ;ஓர்
கருப்பங் கழிவாங் கித்தந்தேன் ;
திரும்ப, ‘ அதனை நறுக்கித்தா,
தின்பேன்,’ என்றான் ; செய்துதந்தேன் ;
‘ கரும்பைப் பழைய படியாக்கிக்
கையில் தாநீ,’ என்கின்றான். 2

‘ யானை வேண்டும்,’ என்றழுதான் ;
யானைப் பாகன் றனைக்கெஞ்சி
‘ நீநில் ’ என்றே அதனருகில்
நிற்க வைத்தேன் ; ‘ குடமொன்று
தானிங் கேதா,’ என்றான் ; நான்
தந்தேன் ; ‘ இந்தக் குடத்துக்குள்
யானை இதனைப் புகுத் ’தென்றான்.
யாரே அழுகை நிறுத்துவார் ! 3

—ஜோதி

சொற்கள் :

அனைத்தும் யானைப்பாகன் புகுத்து
நறுக்கி கெஞ்சி பழையபடி

பொருள் விளக்கம் :

அனைத்தும் - முழுவதும், பழையபடி - முன்போல.

கேள்விகள் :

1. குழந்தை கேட்டதை அளித்தாலும் என்ன செய்யும் ?
2. கரும்பு கிடைத்ததும் குழந்தை என்ன செய்யும் ?
3. யானை வந்த பின் குழந்தை கேட்டது என்ன ?
4. குழந்தை அழுகையை நிறுத்த முடியுமா ?

பயிற்சி :

எதிர்ப்பதங்களை எழுது :
வேண்டும், போதும், அழுகை, அருகில்.

இலக்கணம் :

இப்பாடலில் காணப்படும் பெயர்ச்சொற்களையும் வினைச்சொற்களையும் எடுத்து எழுது.



## 7. தேசிங்கு மன்னன்

1. ஷா ஆலம் என்றொரு மொகலாயச் சக்கரவர்த்தியார் முன்னொரு காலத்தில் டில்லி நகரில் ஆட்சி புரிந்து வந்தார். அவருக்குச் சிற்றரசர்கள் பலர் கப்பம் கட்டி வந்தனர். அவர்களுள் ஆர்க்காட்டு நவாபுவும் ஒருவர். செஞ்சிக் கோட்டையின் மன்னரான தரணி சிங்கு என்பவர், ஆர்க்காட்டு நவாபுவுக்கு கப்பம் கட்டி வந்தார்.

2. ஷாஆலத்தினிடம் ஒரு சிறந்த குதிரை இருந்தது. அப்புரவியை அடக்கிச் சவாரி செய்ய ஒருவராலும் இயலவில்லை. அதனை அடக்கிச் சவாரி செய்பவருக்குப் பரிசு வழங்குவதாகவும், தோல்வியுற்றோர் சிறை புக நேரும் என்றும் சக்கரவர்த்தியார் விளம்பரம் செய்தார்.

3. பல சிற்றரசர் பரியை அடக்க முயன்று தோற்றனர். தரணி சிங்கும் தோல்வியுற்றதினால், சிறையில் அடைக்கப்பட்டார்.

4. தரணி சிங்குவின் மகன் தேசிங்கு. தன் தந்தையார் சிறை சென்றபோது, தேசிங்கு சிறு குழந்தை. அரசியே தன் மைந்தனை அருமையாக வளர்த்து வந்தாள். உரிய பருவத்தில் கல்வி கேள்விகளில் தேசிங்கு தேர்ச்சி அடைந்தான்; அரசர்க்குரிய படைக்கலப் பயிற்சியிலும் தேர்ச்சி பெற்றுச் சிறந்த போர் வீரனாய் விளங்கினான்.

5. தன் தந்தையார் டில்லியில் சிறைப்பட்டிருப்பதை அறிந்த தேசிங்கு, தன் நண்பனுடன் அந்நகரை அடைந்தான். அவன் நேராகச் சக்கரவர்த்தியாரின் சபைக்குச் சென்று, அப்பரியை அடக்க அனுமதி கோரினான். ஷா ஆலம் அளித்த ஆணையின்படி தேசிங்கு குதிரையின்மீது பாய்ந்து ஏறினான்; அதன் முரட்டுத்தனத்தை அடக்கி, நெடுநேரம் அதன்மீதிருந்து சவாரி செய்து வந்து சபையில் நின்றான். ஒருவருக்கும் அதுவரையில் அடங்காத அக்குதிரை, தேசிங்குவினிடம் அடங்கிவிட்டது. ஷா ஆலம் மகிழ்ச்சியுற்று, அக்குதிரையை அவனுக்கே பரிசாக அளித்தார்; தரணி சிங்குவைச் சிறையினின்றும் விடுதலை செய்தார்; 'இனிக் கப்பம் செலுத்த வேண்டா,' என்று ஆணையும் வழங்கினார்.

6. தந்தையாரும் மகனும் செஞ்சியை அடைந்தனர். தாய் பெரிதும் மகிழ்ந்தாள். சில நாட்களில் முதுமையால் தரணி சிங்கு இறந்தார். தேசிங்கு அரசுரிமை பெற்றான். அவனுக்கு ஆருயிர் நண்பனாகிய மகமதுகான் அவனுக்குப் படைத்தலைவன் ஆனான்.

7. வருடந்தோறும் ஆர்க்காட்டு நவாபுவுக்குச் செலுத்த வேண்டிய கப்பத்தை அது முதல் தேசிங்கு செலுத்தவில்லை. அதனால் நவாபு சினம் கொண்டார். கப்பத்தை வாங்கி வரும்படி நவாபு செஞ்சிக்குச் சில படைவீரரை அனுப்பினார். தேசிங்கு சக்கரவர்த்தியார் தனக்கு அளித்துள்ள உரிமையைக் கூறிக் கப்பம் கட்ட மறுத்துவிட்டான். நவாபு கோபம் கொண்டு, செஞ்சியின்மேல் படையெடுத்தார்.

8. நவாபுவின் சேனைகள் செஞ்சிக்கோட்டையை வளைத்துக் கொண்டன. தேசிங்கு தன் படைத்தலைவனை மகமதுகானுக்குச் செய்தி அனுப்பினான்; உடனே செஞ்சிக்கு வந்து படைகளைப் போர்க்களத்திற்கு அழைத்துச் செல்ல வேண்டும் என்பதே அச்செய்தி. அச்சமயம் மகமதுகானுக்குத் திருமணம் நடந்துகொண்டிருந்தது. ஆயினும், உடனே தன் திருமணத்தை மகமதுகான் மறந்தான்; தன் உயிர் நண்பனும் மன்னனுமான தேசிங்கு ஆணையைச் சிரமேற்கொண்டு செஞ்சியை அடைந்து, தன் படையைக் கோட்டைக்கு வெளியே நிறுத்திக் கடும்போர் புரிந்தான். நவாபுவின் படைகள் சின்னபின்னமாயின. மகமதுகான் வெற்றியுடன் மன்னனைக் காண விரைந்து சென்றான். வழியில் நவாபுவின் படைவீரன் ஒருவன் மறைந்திருந்து, மகமதுகானைச் சுட்டு வீழ்த்தினான்.

9. தன் ஆருயிர் நண்பன் வஞ்சனையால் மாண்ட செய்தியைக் கேட்ட தேசிங்கு, மிகவும் வருந்தினான்; பகைவரைக் கொன்று வஞ்சம் தீர்க்க உறுதி கொண்டான்; தன் குதிரைமீது ஏறிச் சென்று, வீராவேசத்துடன் போர் புரிந்து, நவாபுவின் சேனையைச் சிதற அடித்தான். நவாபுவின் படைகள் எதிர் நிற்க

முடியாமல் தோல்வியடைந்தன. ஆயினும், தன் நண்பன் மாண்ட துக்கத்தினால் தேசிங்கு உயிர் வாழ மனமின்றித் தன் வாளால் தன்னையே மாய்த்துக்கொண்டான். அவன் மனைவி தீக்குளித்து இறந்தாள். அந்தக் கற்பரசியின் பெயரால் ஏற்பட்ட ஊருக்கு இராணிப்பேட்டை என்பது பெயர்.

### சொற்கள் :

| | | |
|---|---|---|
| மொகலாயர் | மைந்தன் | அரசுரிமை |
| சக்கரவர்த்தியார் | உரிய பருவம் | சினம் |
| சிற்றரசர் | கல்வி கேள்வி | சிரமேல் |
| கப்பம் | படைக்கலம் | சின்னபின்னம் |
| புரவி | ஆணை | வஞ்சனை |
| பரி | முதுமை | வஞ்சம் |
| வீராவேசம் | மாய்த்து | |

### பொருள் விளக்கம் :

பரி, புரவி - குதிரை, மைந்தன் - புதல்வன், படைக்கலம் - போரில் பயன்படும் ஆயுதங்கள், ஆணை - கட்டளை, மாய்த்து - கொன்று, வஞ்சனை - சூது.

### பயிற்சி :

1. தரணி சிங்கு ஏன் சிறையில் அடைபட்டார் ?
2. தேசிங்கு எவ்வாறு தன் தந்தையை விடுவித்தான்?
3. தேசிங்கு சக்கரவர்த்தியாரிடமிருந்து பெற்ற பரிசும் ஆணையும் யாவை ?
4. நவாபு ஏன் செஞ்சியின்மேல் படையெடுத்தார் ?
5. மகமதுகானின் நட்பின் பெருமை எவ்வாறு விளங்குகிறது ?
6. தேசிங்கு எவ்வாறு இறந்தான் ?

### பயிற்சி :

1. எதிர்ப்பதங்கள் எழுது : சிற்றரசர், முதுமை, சினம், நண்பன், இறந்தான்.

2. கல்வி கேள்விகள், முதுமை, சின்னபின்னம், வஞ்சனை, வீராவேசம்—இவற்றைத் தனித்தனி வாக்கியங்களில் அமைத்து எழுது.

### இலக்கணம் :

#### எழுவாய் - பயனிலை - செயப்படுபொருள்


தேசிங்கு குதிரையை அடக்கினான்.—இது ஒரு வாக்கியம். இதில் 'அடக்கினான்' என்பது பயனிலை; இது இவ்வாக்கியத்தில் முடிந்த பொருளைக் கொடுக்க உதவும் சொல். 'அடக்கினான்' என்பதற்கு முன் எவன் என்பதைச் சேர்த்து, 'எவன் அடக்கினான்?' எனக் கேட்டால், 'தேசிங்கு' என்பது பதிலாக வரும்; அதுவே எழுவாய் எனப்படும். பின்பு, 'அடக்கினான்' என்பதுடன் 'எதை' என்பதைச் சேர்த்து 'எதை அடக்கினான்?' எனக் கேட்டால், 'குதிரையை அடக்கினான்,' என்பது பதிலாக வரும்; இதில் 'குதிரையை' என்பது செயப்படு பொருள்.

# 8. வேளாண்மை

" உழுதுண்டு வாழ்வதற்கு ஒப்பில்லை கண்டீர்
பழுதுண்டு வேறோர் பணிக்கு."

1. 'உலக மக்கள் பல தொழில்களைச் செய்து வருகிறார்கள் ; ஆனால், எல்லாத் தொழில்களிலும் சிறந்தது உழுது உண்டு வாழ்வதே ஆகும்' எனத் திருவள்ளுவர் கூறியுள்ளார். வேளாண்மை என்பது பயிர்த்தொழில். பயிர்த்தொழில் செய்பவர் வேளாளர் எனப்படுவர். உணவும் உடையும் மக்கள் வாழ்க்கைக்கு இன்றியமையாதவை; இவற்றைப் பயிர்த்தொழில் செய்துதான் பெறக்கூடும்.

2. வேளாண்மை செய்பவர்கள் உலகத்தார்க்குப் பேருபகாரிகள் ஆவார்கள். அவர்கள் விளைபொருள்-



களை உற்பத்தி செய்தாற்றான் மக்களுக்கு உணவுப் பொருள்கள் கிடைக்கும். நமது நாட்டில் பெரும்பாலார் வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். ஆயினும், உழைப்புக்குத் தகுந்த பலன் ஏற்படுவதில்லை. ஏனெனில், பண்டை முறையிலேயே இன்றும் இத்தொழில் நடைபெற்று வருகிறது. நிலத்தை ஆழமாக உழுதால், பலன் அதிகம் காணும். ஆனால் நம்

கலப்பைகள் நிலத்தைச் சற்றே கீறித்தான் விடுகின்றன. நூதன இயந்திர சாதனங்களாகிய இரும்புக் கலப்பைகளைக் கொண்டு நிலத்தை ஆழமாக உழவேண்டும். 'அகல உழுவதைவிட ஆழ உழுவதே மேல்,' என்னும் பழமொழி இவ்வுண்மையை வற்புறுத்துகின்றது.

3. மேலும், நிலங்களுக்குச் சிறந்த எருக்களைப் போடவேண்டும். சாம்பல், கால் நடைகளின் சாணம், குப்பைகள், பசுந்தழைகள் முதலியன சிறந்த எருக்கள் ஆகும். ஒவ்வொரு வீட்டிலும் எருக்குழிகளை அமைத்து, அவற்றில் எருவைக் கொட்டி வைக்க வேண்டும். இவற்றில் சேமிக்கப்படும் எருவை அவ்வக்காலங்களில் எடுத்து நிலங்களில் சேர்க்கவேண்டும். பயிர்கள் எருவின் சாரத்தைத் தம் வேர்களின் வாயிலாகக் கவர்ந்துகொள்ளும். செயற்கை எருக்களையும் உபயோகிக்கலாம். இவை இரசாயன முறையில் தயார் செய்யப்பட்டவை.

4. நிலத்தில் விதைக்கும் விதைகளும் சிறந்தவைகளாய் இருக்க வேண்டும். சிறந்த விதைகளைச் சேமித்து வைப்பதில் நாம் கவனம் செலுத்த வேண்டும். அறுவடைக் காலத்தில் நன்ருக முற்றின மணிகளைச் சேகரிக்க வேண்டும். விதைக்கும் காலத்தில் அவற்றை விதைக்கவேண்டும். சிறந்த எருக்களும் சிறந்த விதைகளும் நல்ல பலனை அளிக்கும்.



5. காலம் தவருமல் பயிர்களுக்குத் தண்ணீர் பாய்ச்சவேண்டும்; உரிய காலத்தில் களை பிடுங்க வேண்டும்; தரிசான நிலங்களை உழுது, உணவுப் பொருள்களை உற்பத்தி செய்யவேண்டும்; காய் கறிச் செடிகளையும் பழமரங்களையும் வளர்க்க வேண்டும்.



6. நமது நாட்டில் இப்பொழுது மக்களுக்குப் போதுமான உணவுப் பொருள்கள் உற்பத்தியாவதில்லை; வெளிநாடுகளிலிருந்து அதிக விலைக்குத் தானியங்களை வாங்குகிரேம். இதனுல், நமக்குச்



செலவு அதிகம். ஆதலால், ஒற்றுமையாக உழைத்துத் தேவைக்குத் தகுந்த விளைபொருள்களை உண்டாக்க வேண்டும். வேளாண்மைத் தொழில் முன்னேற்றம் அடைவதற்குத் தேவையான வழிகளை நாம் ஆராய்ச்சி செய்ய வேண்டும். வேளாண்மையைப் பெருக்கினுல், உணவு உற்பத்தி பெருகும்; நாடு செழிக்கும்; நாமும் நலம் பெறுவோம்.

### சொற்கள் :

| | | | |
|---|---|---|---|
| பழுது | பேருபகாரி | எப்பொருள்கள் | இயந்திர சாதனம் |
| பணி | செயற்கை | சேமிக்கப்படும் | பண்டை முறை |
| சாரம் | வேளாண்மை | முன்னேற்றம் | இரசாயனம் |
| தரிசு | வேளாளர் | கவர்ந்து | விளைபொருள் |

### பொருள் விளக்கம் :

பழுது - குற்றம், பணி - வேலை, பண்டை முறை - பழைய முறை, சேமித்தல் - சேர்த்து வைத்தல், தரிசு - பயிரிடப்படாத நிலம்.

### கேள்விகள் :

1. தொழில்களில் சிறந்தது எது? ஏன்?
2. 'அகல உழுவதைவிட ஆழ உழுவதே மேல்.' இதை விளக்கு.
3. எருக்களைச் சேமிப்பது எவ்வாறு?
4. விதைகள் எப்படி இருக்கவேண்டும்?
5. உணவு உற்பத்தி எப்பொழுது அதிகரிக்கும்?

### பயிற்சி :

1. எதிர்ச்சொற்கள் எழுது : பண்டை முறை, செயற்கை, முற்றின, ஒற்றுமை, இலாபம்.

2. இப்பாடத்தில் இரண்டாம் பத்தியில் உள்ள வாக்கியங்களுக்கு எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் எழுது.

### இலக்கணம் :

தோன்றா எழுவாய் : நில், தின், படி, போ— என்பவை ஒரே சொல்லில் கருத்தைத் தெரிவிக்கும் சொற்கள். இவற்றிற்கு எழுவாய், 'நீ' என்பது. இவை 'நீ நில்; நீ தின்; நீ படி; நீ போ' என்றிருக்க வேண்டும். 'நீ தின்' என்பதில் 'நீ' எழுவாய்; 'தின்' என்ற பயனிலை மட்டும் உள்ளது; 'நீ' என்ற எழுவாய் இல்லை. நீ என்பது தோன்றா எழுவாய்.

ஐந்தாம் பத்தியிலுள்ள தோன்றா எழுவாயை எடுத்து எழுது.

## 9. நீதி வழங்கிய மகம்மது

1. **ஆப்கானிஸ்தானம்** என்பது பாரத நாட்டிற்கு வடமேற்கே இருக்கிறது. முன்னொரு காலத்தில் அதனை **மகம்மது** என்ற மன்னர் ஆண்டு வந்தார். அவர் மிகுந்த தெய்வபக்தி உள்ளவர்; தம் உயிர்போல மன்னுயிரைக் காப்பாற்றி வந்தார். அவர் ஏழைகளிடம் இரக்கம் உள்ளவர்; நீதி தவறாமல் அரசாட்சி செய்து வந்தவர்.

2. நெடுநாள் அவருக்கு மக்கட்பேறு இல்லை. பின்பு இறைவன் அருளால் அவருக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அக்குழந்தையை அவர் அருமையாக வளர்த்துவந்தார். நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய் வளர்ந்துவந்த புதல்வன், வாலிபப் பருவத்தை அடைந்தான். ஆனால், அவன் தீயவர்களுடைய சேர்க்கையால், தான்தோன்றியாய்த் திரிந்து வரலானான். மன்னருடைய நல்லுரைகள் அரசகுமாரனுடைய செவியில் ஏறவில்லை.

3. ஒரு நாள் விடியற்காலையில் ஓர் ஏழைக் குடிமகன் மகம்மது மன்னரிடம் விரைந்துவந்தான். அவன் மன்னரைப் பணிந்து, "அரசர் பெருமானே, என்னையும் என் குடும்பத்தையும் நீங்களே காப்பாற்ற வேண்டும்! இரண்டு தினங்களாக இரவில் ஒரு தூர்த்தன் என் இல்லத்தில் நுழைந்து தொந்தரவு செய்து வருகிறான். அவனைத் தடுக்க என்னால் இயலவில்லை. நீங்களே எங்களை அவனிடமிருந்து காப்பாற்ற வேண்டும்!" என்று முறையிட்டான்.

4. மகம்மது அவனைத் தேற்றி, "அப்பா, உன் துன்பத்தை நான் விரைவில் அகற்றுகிறேன். இன்றிரவு ஊர் அடங்கிய பின் என்னிடம் வா," எனச்

சொல்லியனுப்பினார். அவ்வேழை, அரசன் சொற்படியே அன்றிரவு அரண்மனைக்கு வந்தான். அரசர் தம் மெய் காவலருடன் அக்குடிமகனுடைய வீட்டை நோக்கி விரைந்தார்.

5. வீட்டின் அருகில் வந்ததும், அரசர் வாயிலில் நின்றுகொண்டார் ; அவ்வேழையை உள்ளே அனுப்பி, விளக்குகளை அணைக்கும்படி கட்டளையிட்டார். பின்பு அதிகாரத்துடன் வீட்டிலிருந்த பெண்களை வெளியே வரும்படி உத்தரவு இட்டார். பெண்டிர் யாவரும் வெளியே வந்தனர். உள்ளே குடிவெறியினால் மயங்கி இருந்த தூர்த்தனும் தள்ளாடும் நடையுடன் வெளியே வந்தான். உடனே மகம்மது தமது வாளால் அவனை இரு துண்டாக வெட்டிவிட்டார்.

6. மன்னர் உடனே ஏழையை விளக்கேற்றிக்கொண்டு வரும்படி கூறினார். விளக்கைக்கொண்டு வெட்டுண்டு கிடந்த அத்தூர்த்தன் முகத்தைக் கவலையுடன் மன்னர் பார்த்தார் ; உடனே அவ்விடத்திலேயே முழந்தாளிட்டு இறைவனை வணங்கினார்.

7. மன்னரை அவ்வேழை வணங்கி, "பிரபுவே, எனது நன்றி உங்களுக்கு என்றும் உரியது ! ஆனால், உங்களுடைய செயலின் கருத்து எனக்கு விளங்கவில்லையே !" எனப் பணிவுடன் கேட்டான். மன்னர், "நண்பா, நீ காலையில் வந்து முறையிட்டாய். இந்த அக்கிரமத்தைச் செய்யக்கூடியவன் யாராய் இருக்கலாம் என்று யோசித்தேன் ; ஒருகால் என் குமாரனாகவே இருக்கலாம் என நினைத்தேன். நியாயம் வழங்கவேண்டுவது என் கடமை. ஆதலால், யாராய் இருப்பினும் அத்தூர்த்தனைக் கொல்ல உறுதிகொண்டேன். அவன் என் மகனாய் இருந்தால், தந்தையின் அன்பு அவனைக் கொல்லத் தூண்டுமா ? ஆதலால்,

விளக்கை அணைத்துவிட்டு, அவனைப் பாராமலே கொன்றேன். இறுதியில் விளக்கு ஒளியில் பார்த்ததில், அவன் என் மகன் அல்லன் என்பது தெரிந்தது. உடனே இறைவனை வணங்கினேன். நாள் முழுதும் பட்டினியுடன் அத்தூர்த்தன் என் புதல்வனாய் இருக்கக் கூடாதென இறைவனை வேண்டி நின்றேன்,'' எனக்·கூறி அரண்மனையை அடைந்தார்.

### சொற்கள் :

| | | | |
|---|---|---|---|
| வண்ணம் | மன்னுயிர் | இல்லம் | சொற்பம் |
| தான்தோன்றி | மக்கட்பேறு | குடி வெறி | நியாயம் |
| நாளொரு மேனி | தொந்தரவு | அக்கிரமம் | ஒளி |
| மெய் காவலர் | தூர்த்தன் | இறைவன் | பொழுது |

### பொருள் விளக்கம் :

மன்னுயிர் - உலகிலுள்ள உயிர் வகைகள், மக்கட் பேறு - குழந்தைச் செல்வம், இறைவன் - கடவுள், மேனி - உடல், வண்ணம் - நிறம், தான்தோன்றி - (பெரியார்க்கு அடங்காமல்) தனக்குத் தோன்றியபடி நடப்பவன், தூர்த் தன் - தீயவன், இல்லம் - வீடு, மெய் - உடல், ஒளி - பிரகாசம்.

### கேள்விகள் :

1. மன்னரிடம் ஏழை என்னவென்று முறையிட்டுக் கொண்டான்?

2. மகம்மது அவ்வேழைக்கு என்ன ஆறுதல் சொன்னார்?

3. மகம்மது ஏழையின் துன்பத்தை எவ்வாறு போக்கினார்?

4. மன்னர் தமது செயலை ஏழைக்கு எவ்வாறு விளக்கினார்?

5. மகம்மது எப்படிப்பட்ட குணங்கள் உடையவர்?

பயிற்சி :

1. எதிர்ச்சொற்களை எழுது : மன்னுயிர், சொற்பம், அக்கிரமம், நியாயம், ஒளி.

2. தான்தோன்றி, நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமும், மக்கட்பேறு, அக்கிரமம்—இத்தொடர்களைத் தனித்தனி வாக்கியங்களில் அமைத்து எழுது.

இலக்கணம் :

பெயர்ச்சொல் ஆறு வகைப்படும்.

1. பொருள்களின் பெயர்களைக் குறிக்கும் பெயர், பொருட்பெயர். (உ-ம்.) மனிதன், ஆடு, மாடு.

2. இடங்களை உணர்த்தும் பெயர், இடப்பெயர். (உ-ம்.) வீடு, மலை, நிலம், காடு.

3. காலத்தைக் குறிக்கும் பெயர், காலப்பெயர். (உ-ம்.) வருஷம், மாதம், நாள், ஆடி, ஆவணி.

4. உறுப்புக்களை உணர்த்தும் பெயர், சினைப்பெயர். (உ-ம்.) கை, கால், தலை.

5. குணங்களைக் குறிக்கும் பெயர், குணப்பெயர். (உ-ம்.) உண்மை, நன்றி, பசுமை.

6. தொழிலை உணர்த்தும் பெயர், தொழிற்பெயர். (உ-ம்.) போதல், நிற்றல், வருதல்.

# 10. பெண் உரிமை

விண்ணமு தம்பொழி வெள்ளி நிலாவில்,
    விடுதலைக் கும்மி யடித்திடுவோம் !
பெண்ணமு தங்களின் பிறப்பு ரிமையைப்
    பேசிக் கும்மி யடித்திடுவோம் ! 1

வீட்டிற் கரசியும் பெண்ணன்றோ ?—வீரர்
    விளைந்த கற்பகம் பெண்ணன்றோ ?
நாட்டிற் சமப்பங்கு பெண்ணன்றோ ?—பொது
    நலவ லக்கரம் பெண்ணன்றோ ? 2

ஆண்பிள்ளை என்றால் களிப்பதுவும்—பெண்ணை
    'ஐயோடீ !' என்று சலிப்பதுவும்
வீண்ம னப்பிழை என்று விளம்பிநாம்
    வீர சுதந்தரம் கூறிடுவோம் ! 3

செல்வம் இருவர்க்கும் பங்கென்போம்—குல
    க்ஷேமம் இருவர்க்கும் பங்கென்போம் ;
கல்வி இருவர்க்கும் கண்ணென்போம்—தூய
    கற்பும் இருவரின் காப்பென்போம் ! 4

அன்பும் அறிவும்போல், அர்த்தநா ரீசர்போல்,
    அல்லியும் நீரும்போல் வாழ்ந்திடுவோம் ;
இன்பச் சிகரத்தில் ஏறிடுவோம்—ஆண்பெண்
    இரண்டும் ஒன்றெனக் கூறிடுவோம் ! 5

—யோகி சுத்தானந்த பாரதியார்

**சொற்கள் :**

| | | |
|---|---|---|
| விண்ணமுதம் | சலிப்பது | கற்பு |
| பெண்ணமுதம் | மனப்பிழை | தூய்மை |
| கற்பகம் | விளம்பி | சிகரம் |

### பொருள் விளக்கம்:

விண்ணமுதம் - வானவர் அமுதம், பெண்ணமுதம் - அமுதம் போன்ற பெண், கற்பகம் - கேட்பதை அளிக்கும் தேவலோக மரம், சலிப்பது - மனம் கலங்குவது, விளம்பி - சொல்லி, தூய - சுத்தமான, சிகரம் - உச்சி.

### கேள்விகள்:

1. வீட்டிற்கரசி யார்?
2. 'வீண் மனப்பிழை' எது? ஏன்?
3. ஆண் பெண் இருவருக்கும் பொதுவானவை எவை?
4. ஆணும் பெண்ணும் எப்படி வாழ வேண்டும்?

### பயிற்சி:

1. அமுதம், பிழை, தூய்மை, சிகரம், பிறப்பு, களிப்பு—எதிர்ச்சொற்கள் யாவை?

2. கீழுள்ள பெயர்களை வகைப்படுத்தி எழுது:

பெண், ஆண், சிகரம், தூய்மை, அமுதம், வாழ்தல், அடித்தல், வலக்கரம், அல்லி, நீர்.

# 11. பாரி மன்னன்

1. பாரி என்பவன் பறம்பு நாட்டு மன்னன். அவன் வரையாது கொடுக்கும் வள்ளல். வள்ளல் என்பதற்குப் பெருங்கொடையாளி என்பது பொருள். பறம்பு மலையைச் சுற்றிலும் இருந்த முந்நூறு ஊர்களுக்கு அவன் தலைவன். அவனைக் காணச் சென்ற புலவர் வெறுங்கையுடன் திரும்பி வந்ததில்லை.

2. பரம்பு நாடு இயற்கை வளம் நிரம்பி இருந்தது. மலையைச் சார்ந்து காடுகள் இருந்தன. மலையருவிகளின் இன்னிசையும், பறவைகள் கீச்சிடும் சத்தமும், குயில்களின் கானமும், கிளிகளின் பேச்சும் கேட்பாரைப் பரவசப்படுத்தும். வானையளாவிய மரங்களும், பூத்துக் குலுங்கும் புஷ்பச் செடிகளும், தழுவி வளர்ந்துள்ள கொடி வகைகளும், தாவும் குரங்குகளும், தோகை விரித்து ஆடும் மயில்களும் காணக் கண்களுக்கு நல்விருந்து ஆகும். பாரி மன்னன் இயற்கையின் அழகைப் பருகும் இயல்பு உடையவன்; செடி கொடிகளிடத்தில் மிகுந்த பற்றுதல் உள்ளவன்; எல்லா உயிர் வகைகளிடத்திலும் இரக்கம் உடையவன்.

3. ஒரு நாள் பாரி தன் தேரின்மேல் அமர்ந்து ஒரு கானகத்தின் வழியே சென்றான். பாதையின் இரு புறங்களிலும் ஓங்கி வளர்ந்திருந்த மரங்களைக் கண்டான்; பல வகைக் கனிகளைப் பார்த்தான்; பல நிறப் பூக்களைக் கண்டான்; அவற்றின் நறுமணத்தை நுகர்ந்தான்; மரங்களின்மேல் தவழ்ந்து செல்லும் கொடிகளைக் கண்டான். அக்காட்சிகள் அவன் உள்ளத்தைக் கொள்ளை கொண்டன.

4. செல்லும் வழியில் மன்னன் ஒரு முல்லைக் கொடியைப் பார்த்தான்; கொடிகள் பற்றிக்கொண்டு படருவதற்கு ஒரு கொம்பு வேண்டுமல்லவா? ஆனால், அம்முல்லைக் கொடிக்குப் பற்றிப் படர ஒரு கொம்பும் இல்லை. அதை மன்னன் கண்டான்; அக்கொடியி-



னிடம் இரக்கம் கொண்டான். "வள்ளலே, என்னைப் பார். நீ வரையாமல் கொடுப்பவனன்றோ? என்னை ஆதரிக்க மாட்டாயா?" என்று அக்கொடி தன்னைக் கேட்பதுபோல மன்னனுக்குத் தோன்றியது.

5. மன்னன் உடனே தேரை விட்டு இறங்கினான்; சுற்றுமுற்றும் பார்த்தான். அருகில் கொம்பு ஒன்றும் இல்லை. ஆதலால், பாரி, தன் தேரையே அக்கொடியின் அருகில் நிறுத்தினான்; அக்கொடியை மெதுவாக எடுத்துத் தேரின் மேல் படர விட்டான்; குதிரையுடன் கால் நடையாகவே ஊருக்குத் திரும்பினான்.

6. பாரியின் கருணையை வியந்து மக்கள் அவனைப் போற்றினார்கள். 'முல்லைக்குத் தேர்

அளித்த மன்னன்,' என்று அவனைப் புலவர் புகழ்ந்தனர்.

### சொற்கள் :

| | | | |
|---|---|---|---|
| வளம் | கானகம் | ஆதரிக்க | படர |
| இன்னிசை | நறுமணம் | கால் நடை | இரக்கம் |
| கானம் | நுகர்ந்தான் | கருணை | வியந்து |
| பரவசம் | கொள்ளை | பட்டம் | புலவர் |

### பொருள் விளக்கம் :

வளம் - செழுமை, இன்னிசை (இனிமை + இசை) - இனிமையான பாட்டு, கானம் - பாட்டு, பரவசம் - களிப்பால் தன்னை மறந்திருத்தல், கானகம் - காடு, நுகர்ந்தான் - அனுபவித்தான்.

### கேள்விகள் :

1. பாரி எப்படிப்பட்ட குணமுடையவன் ?
2. பறம்பு நாட்டின் வளம் எப்படிப்பட்டது?
3. பாரி கானகத்தில் என்னென்ன காட்சிகளைக் கண்டான் ?
4. முல்லைக்கு மன்னன் செய்த உதவி யாது?

### பயிற்சி :

1. எதிர்ச்சொற்களை எழுது : இனிமை, கானகம், காணவில்லை, தாமதம், வள்ளல்.

2. இன்னிசை, பரவசம், நறுமணம், காலதாமதம், துவண்டு, கருணை—இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுது.

3. இரு பகுதிகளையும் பொருத்தமாக ஒன்று சேர் :

| | |
|---|---|
| நாட்டை ஆள்பவன் | ஆசிரியர். |
| தேரை ஓட்டுகிறவன் | பாகன். |
| பாடம் கற்பிப்பவர் | சாரதி. |
| யானையை நடத்துகிறவன் | மன்னன். |

### இலக்கணம் :

ஐந்தாம் பத்தியிலுள்ள வாக்கியங்களிலிருந்து எழுவாய், பயனிலை, செயப்படுபொருள்களை எடுத்து எழுது.



## 12. சிவாஜி

1. புண்ணிய பூமியாம் பாரத நாட்டில் வீரர் பலர் தோன்றிப் பேரும் புகழும் பெற்று விளங்கினர். அத்தகைய வீரருள் சிவாஜி என்பவர் ஒருவர். அவர் மறைந்தும் அவருடைய புகழ் இன்று வரை ஒளி வீசி வருகிறது.

2. ஷாஜி என்பவர் விஜயபுரி சம்ஸ்தானத்தில் ஓர் உயர்ந்த உத்தியோகம் வகித்திருந்தார். அவர் மனைவியின் பெயர் ஜீஜா பாய். அவ்விருவருக்கும், இன்றைக்குச் சுமார் முந்நூறு ஆண்டுகளுக்கு முன் சிவாஜி பிறந்தார். ஜீஜாபாய் தன் மைந்தரை அருமையாக வளர்த்தாள்; தாதாஜி என்ற பெரியாரைக்கொண்டு அவருக்குக் கல்வி புகட்டினுள். சிவாஜி மிகுந்த அறிஞரான தாதாஜியிடம் பல

கலைகளையும் பயின்றார். வில் வித்தை, வாட்போர், மல் யுத்தம், குதிரையேற்றம், நீதி பரிபாலனம் ஆகியவற்றைச் சிவாஜி நன்கு கற்றுத் தேறினார். அன்னை தன் மைந்தருக்கு நாள்தோறும் புராணங்களிலிருந்தும் இராமாயண பாரதங்களிலிருந்தும் பாரத நாட்டு வீரர்களின் வரலாறுகளைச் சொல்லி வந்தாள். அவ்வீரரைப் போலவே தாமும் ஒரு சுத்த வீரராய் விளங்க வேண்டும் என்று சிவாஜி விரும்பினார். நாளடைவில் சிவாஜி நாட்டுப் பற்றும் கடவுள் பக்தியும் உடையவராய் விளங்கினார்.

3. சிவாஜி மகாராஷ்டிர நாட்டைச் சேர்ந்தவர். அவருடைய வீரத்தையும் கம்பீரமான தோற்றத்தையும் கண்ட மகாராஷ்டிரருள் பலர் அவருடன் சேர்ந்துகொண்டனர். தம் தந்தையரைப்போல விஜயபுரிச் சுல்தானிடம் கை கட்டிச் சேவகம் செய்யச் சிவாஜி விரும்பவில்லை; சுதந்தரமான வாழ்க்கையையே விரும்பினார். மகாராஷ்டிர மக்கள் டில்லி, விஜயபுரிச் சுல்தான்களுக்கு அடிமைகளாய் இருந்ததை அவர் வெறுத்தார். தாமே ஓர் இராச்சியம் ஏற்படுத்த வேண்டும் என்று அவர் முடிவு செய்தார்.

4. சிவாஜி தம்மைச் சேர்ந்த இளைஞர்களை ஒன்றுகத் திரட்டினார்; விஜயபுரியிலிருந்த ஒரு கோட்டையைக் கைப்பற்றினார்; சில நாட்களில் பல கோட்டைகளைக் கைப்பற்றி, மகாராஷ்டிரர்களின் தலைவரானார். அவரை அடக்க வந்த விஜயபுரிச் சுல்தானுடைய படை இரு முறை பின் வாங்க நேரிட்டது. டில்லியில் மொகலாய சக்கரவர்த்தியாராய் இருந்த ஔரங்கசீபு என்பவர், சிவாஜியைச் சூழ்ச்சியால் பிடித்துச் சிறை செய்தார். சிவாஜி அச்சிறையினின்றும் தந்திரமாக வெளியேறித் துறவி

வேடம் பூண்டு தமது தலை நகரை அடைந்தார்; அங்கே மன்னராக முடி சூட்டிக்கொண்டார்.

5. சிவாஜி யுத்த வீரர் மட்டுமல்லர். அவர் நற்குணக் குன்று; இறைவனிடம் மாறாத பக்தி பூண்டவர். அவர் காலத்தில் இராமதாசர் என்ற மகான் ஒருவர் இருந்தார்; அவரிடம் சிவாஜிக்கு மிகுந்த பற்று இருந்தது. ஒரு சமயம் சிவாஜி அத்துறவியாரின் காலடியில் தமது சாம்ராச்சியத்தைக் காணிக்கையாக வைத்து, அதை ஏற்றுக்கொள்ளுமாறு வற்புறுத்தினார். இராமதாசர் அக்காணிக்கையைப் பெற்றுக்கொண்டு, "சிவாஜி, இவ்வுலக வாழ்வை நீ வெறுத்தல் தகாது. நீ எடுத்த காரியத்தை நிறைவேற்ற வேண்டும்; பின்பு துறவியாகலாம். என் பிரதிநிதியாயிருந்து நீ சாம்ராச்சியத்தை ஆண்டு வரக்கடவாய்!" என்று அருளினார். சிவாஜியும் அவ்வாறே, இராமதாசரைக் குருவாகக் கொண்டு பரிபாலனம் செய்து வந்தார்.

6. சிவாஜி பல போர்களைத் தலைமை வகித்து நடத்தினார். ஆயினும், தம் எதிரிகளின் பெண்டிரையும் மக்களையும் துன்புறுத்தவில்லை; தம் படை வீரருக்கும் அவ்வாறே கட்டளை இட்டார். சிவாஜி தமக்கென வாழவில்லை; பிறர்க்கெனவே வாழ்ந்தார். அவர் அண்டினோரை ஆதரித்த அண்ணல்; அன்னை சொல் கடவாத மைந்தர்; ஏழை எளியவரிடம் இரக்கம் பூண்டு ஒழுகியவர்; அன்னிய மாதரைத் தம் தாய்மார் என நினைத்தவர்; நாட்டுப் பற்று மிகுந்தவர்; அஞ்சா நெஞ்சம் படைத்தவர். இன்றும் மகாராஷ்டிர மக்களும் நாமும் அவருடைய பெருமையையும் புகழையும் கொண்டாடி வருகின்றோம்.

**சொற்கள் :**

| | | | |
|---|---|---|---|
| உத்தியோகம் | புரா்ணம் | நாட்டுப்பற்று | அஞ்சாநெஞ்சம் |
| புகட்டினுள் | கம்பீரம் | அண்டினோர் | பின்வாங்க |
| அறிஞர் | வரலாறு | அண்ணல் | சூழ்ச்சி |
| சாம்ராச்சியம் | பிரதிநிதி | இளைஞர் | பரிபாலனம் |

**பொருள் விளக்கம் :**

உத்தியோகம் - தொழில், இளைஞர் - சிறுவர், பரிபாலனம் - ஆட்சி, அண்டினோர் - தம்மைத் துணையாக அடைந்தவர், அஞ்சா நெஞ்சம் - தைரியம்.

**கேள்விகள் :**

1. ஜீஜாபாய் சிவாஜிக்கு என்னென்ன கற்பித்தாள் ?
2. சிவாஜி எத்தகைய வாழ்க்கையை வெறுத்தார் ?
3. சிவாஜி எப்பொழுது முடி சூட்டிக்கொண்டார் ?
4. சிவாஜியின் குண நலன்கள் யாவை ?

**பயிற்சி :**

1. எதிர்ச்சொற்களை எழுது:—அறிஞர், இளைஞன், பின்வாங்க, அஞ்சா நெஞ்சம், வெறுப்பு.

2. அஞ்சா நெஞ்சம், கம்பீரம், நாட்டுப்பற்று, பரிபாலனம், வரலாறு—இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுது.


**இலக்கணம் :**

'பால்' என்பது 'பிரிவு'. பால் ஐந்து வகைப்படும். அவை ஆண் பால், பெண் பால், பலர் பால், ஒன்றன் பால், பலவின் பால் என்பன.

| | | |
|---|---|---|
| சிவாஜி, இராமன் | —ஆண் பால் | உயர்திணை. |
| ஜீஜாபாய், சீதை | —பெண் பால் | |
| குடிகள் | —பலர் பால் | |
| குதிரை | —ஒன்றன் பால் | அஃறிணை. |
| குதிரைகள் | —பலவின் பால் | |

ஆண் பால், பெண் பால், பலர் பால் இம்மூன்றும் உயர்திணைக்கு உரியவை. பலர் பால் ஒருவருக்கு மேற்பட்டவரை குறிக்கும்.

ஒன்றன் பால், பலவின் பால் இவை இரண்டும் அஃறிணைக்கு உரியவை. பலவின் பால் ஒன்றுக்கு மேற்பட்ட அஃறிணைப் பொருள்களைக் குறிக்கும்.



## 13. சுக வாழ்வு

1. 'கூழானாலும் குளித்துக்குடி ; கந்தையானாலும் கசக்கிக் கட்டு,' என்பது நம்மிடையே வழங்கிவரும் ஒரு பழமொழி. நாம் ஒவ்வொருவரும் சுத்தமாய் இருக்க வேண்டும். நம் உடல், உடை, உணவு, இருப்பிடம் ஆகியவைகளை எப்பொழுதும் சுத்தமாக வைத்திருந்தால், நாம் சுகமாக வாழலாம்.


2. 'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்,' என்பதும் ஒரு பழமொழி. வாழ்க்கையில் சுகக் குறைவுக்கு நோய்தான் காரணம். நோய் இல்லாத வாழ்வே சுக வாழ்வு. சுக வாழ்வை நாம் எவ்வாறு பெற முடியும் ? நாம் சுத்தமான காற்றையே சுவாசிக்க வேண்டும். நம் வீடுகளில் தாராளமாகக் காற்று வீசுவதற்குத் தகுந்தவாறு சாளரங்கள் பெரியனவாய் இருக்கவேண்டும் ; அப்பொழுது வீட்டினுள்

வெளிச்சம் நன்ருக வரும். நல்ல காற்றும் சூரிய ஒளியும் நோய்களைப் போக்கக்கூடியவை. நமது தேகத்தின்மேல் சூரிய ஒளி விழ வேண்டும்.

3. நம் வீடுகள் மேடான நிலத்தில் கட்டப்பட வேண்டும். அப்பொழுதுதான் வீடுகளைச் சுற்றிலும் தண்ணீர் குழிகளில் தேங்காது. வீட்டிலும் வீட்டின் அருகிலும் குப்பை கூளங்கள் சேர விடக்கூடாது. சாக்கடைகளில் தண்ணீர் தேங்கி நிற்காமல் அவற்றைச் சுத்தமாக வைக்க வேண்டும். மூட்டைப்பூச்சி, கொசு, எலி முதலியவைகளை வீடுகளில் சேர விடக்கூடாது. ஆண்டிற்கு இரு முறை வீட்டிற்கு வெள்ளையடிக்க வேண்டும்.

4. நாம் பருகும் தண்ணீர் சுத்தமாய் இருக்க வேண்டும். தண்ணீரைக் காய வைத்து வடிகட்டிக் குடிப்பதே நல்லது. தினந்தோறும் சுத்தமான தண்ணீரில் நீராட வேண்டும்; துணிகளைத் தினமும் துவைத்துக் காய வைத்து உடுக்க வேண்டும்.

5. நாம் உண்ணும் உணவு நன்ருக வேகவைக்கப்பட வேண்டும். உணவுப் பொருள்களை எப்பொழுதும் மூடிவைக்க வேண்டும். நன்ருகப் பழுக்காத கனிகளையும், அழுகின கனிகளையும், ஊசின உணவுப் பொருள்களையும் உண்ணலாகாது. உணவு சற்றுச் சூடாக இருக்கும்பொழுதே அதை உட்கொள்ள வேண்டும்.



6. நாம் சுக வாழ்வு வாழ்வதற்குக் காற்றும் தண்ணீரும் உணவும் சுத்தமாக இருக்க வேண்டும்.

பல நோய்கள் காற்றின் மூலமாகவும், தண்ணீரின் மூலமாகவும், உட்கொள்ளும் உணவின் மூலமாகவும் பரவுகின்றன. அசுத்தமான நீரில் நம் கண்களுக்குப் புலனாகாத பல கிருமிகள் உள்ளன. அந்த நீரை அருந்தினால் பல நோய்கள் உண்டாகும்.

7. நாம் கண்ட இடங்களில் எச்சில் துப்பக்கூடாது. தெருக்களைச் சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும். குப்பை கூளங்களைக் குப்பைத் தொட்டிகளிலாவது குழிகளிலாவது கொட்டவேண்டும்.

8. நாம் தினந்தோறும் காலை மாலையில் தேகப்பயிற்சி செய்ய வேண்டும். மாலையில் சிறிது தூரம் உலவி வர வேண்டும். முகத்தை மூடிக்கொண்டு தூங்கக்கூடாது. இருளிலும் சாளரங்கள் இல்லாத அறையிலும் வசிக்கலாகாது. மங்கலான ஒளியில் படிக்கக்கூடாது. கண்கள் கூசும்படியான வெளிச்சத்திலும் படிக்கக்கூடாது.

9. மேலே கூறப்பட்ட சுகாதார விதிகளைக் கடைப்பிடித்து ஒழுகி வந்தால், நாம் சுகமாக வாழ முடியும் ; நோய்கள் நம்மை அணுகா; நல்ல ஆரோக்கியத்துடன் நாம் நீண்ட நாள் வாழலாம்.

## சொற்கள் :

| | | | |
|---|---|---|---|
| பழமொழி | தாராளமாக | நீராட | கிருமிகள் |
| செல்வம் | சாளரம் | கனி | மங்கலான |
| சுவாசிக்க | ஒளி | புலன் | கடைப்பிடித்து |

## பொருள் விளக்கம் :

தாராளமாக - தடையில்லாமல், சாளரம் - சன்னல், கிருமிகள் - புழுக்கள்.

### கேள்விகள் :

1. நாம் எவ்வெவற்றைச் சுத்தமாக வைத்திருக்க வேண்டும் ?

2. குறைவற்ற செல்வம் எது ?

3. சுக வாழ்வை நாம் எவ்வாறு பெறமுடியும் ?

4. நம் வீடுகளை எப்படி வைத்திருக்கவேண்டும் ?

5: நாம் எப்படிப்பட்ட உணவை உட்கொள்ள வேண்டும் ?

6. நோய்கள் எவ்வாறு உண்டாகின்றன ?

7. நோய் வாராமல் தடுக்க நாம் என்ன செய்ய வேண்டும் ?

### பயிற்சி :

1. வாழ்வு, சுகம், வேண்டும், அணுகாது, சுத்தம்—இவைகளுக்கு எதிர்ச்சொற்கள் யாவை ?

2. மங்கலான, கிருமிகள், கடைப்பிடித்து, தாராளமாக—இச்சொற்களை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுது.

### இலக்கணம் :

'திணை' என்பது 'குலம்'. அது இரு வகைப்படும். (1) உயர்திணை, (2) அஃறிணை. மனிதரையும் தேவர்களையும் குறிக்கும் சொற்கள் உயர்திணைச் சொற்கள் ; மற்றப் பொருள்களைக் குறிக்கும் சொற்கள் அஃறிணைச் சொற்களாகும்.

(உ - ம்.) கண்ணன், மன்னன், தின்றான்—உயர்திணை. மாடு, ஆடுகள், பறவை, தின்றது—அஃறிணை.

## 14. இயற்கை விதிகள்

ஈச னளித்த அறிவிருந் தும்நல்ல
இயற்கை விதிகளை விட்டுவிட்டு,
மோச மிகுந்த பகட்டுடை வாழ்க்கையில்
மோகம்வைத் தேஇந்த மோசமுற்றோம். 1

சுத்த உணவிலும் சுத்த உடையிலும்
சொன்ன விதிகளை விட்டுவிட்டோம்;
நித்தங் குளிப்பதும் பத்தியங் காப்பதும்
மெத்தக் குறைந்தன தேசத்திலே. 2

காலையி லெழுந்து நீரா டல்கொஞ்சம்
கர்த்தனை எண்ணித் துதிபாடல்,
மாலையி லோடி விளையா டல்இந்த
மார்க்கத்தை விட்டனர் மக்களெல்லாம். 3

அளவை யறிந்து புசிப்பதில்லை; தங்கள்
அளவை யளந்து வசிப்பதில்லை;
களவுக்குப் பின்னால் கதவை அடைப்பவர்
காரியம் போலடி கண்மணியே! 4

நல்ல வழக்கங்கள் உள்ளவர் தங்களை
நாடுமோ நோவுகள் எந்நாளும்?
நல்ல வழக்கங்கள் நாளும் வளர்ந்தினி
நாடு செழித்திட வேணுமடி. 5

—நாமக்கல் கவிஞர்

**சொற்கள் :**

| | | | |
|---|---|---|---|
| ஈசன் | பகட்டுடை | மேகம் | மோசம் |
| பத்தியம் | கர்த்தன் | மார்க்கம் | களவு |

**பொருள் விளக்கம் :**

**ஈசன்** - கடவுள், பகட்டு - ஆடம்பரம், **கர்த்தன்** - கடவுள், **மார்க்கம்** - வழி, **களவு** - திருட்டு.

கேள்விகள் :

1. எவ்வித வாழ்க்கையில் நாம் மோகம் வைத்துள்ளோம் ?

2. மக்கள் எந்த மார்க்கத்தைக் கைவிட்டார்கள் ?

3. எது 'களவுக்குப் பின்னால் கதவையடைப்பவர் காரியம் போல' என்று சொல்லப்படுகிறது ?

4: நோய்கள் எவரை அணுகா ?

பயிற்சி :

1. எதிர்ச் சொற்களை எழுது :—கொஞ்சம், இயற்கை, மோகம், நல்ல.

2. இயற்கை, பகட்டு, மோசம், பத்தியம், களவு— இச்சொற்களைத் தனித்தனி வாக்கியங்களில் அமைத்து எழுது.

# 15. கடிதம் எழுதுதல்

வெளியூர்களில் இருப்பவர்களுக்கு நாம் கடிதங்கள் மூலமாகச் செய்திகளை அனுப்புகிறோம். அவர்களும் நமக்குக் கடிதங்கள் எழுதி அனுப்புகிறார்கள். உள்ளூரிலுள்ளவர்களை நேரிலும் காணலாம்; கடிதம் எழுதியும் ஆள் மூலம் அவர்களுக்குக் கொடுத்து அனுப்பலாம். கடிதத்திலுள்ள செய்திகள் தெளிவாகவும் விவரமாகவும் இருக்க வேண்டும். கடிதத்தில் ஒழுங்கான அமைப்பும் நேர்த்தியான எழுத்துக்களும் காணப்பட வேண்டும். மணி என்பவன், தன் அண்ணனுக்கும், தன் வகுப்பு ஆசிரியருக்கும் எழுதிய கடிதங்களும், ஆசிரியரின் மறுமொழியும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

1

28, பெருமாள் கோயில் தெரு,
மதுரை, 3—9—53.

என் அன்பார்ந்த அண்ணா,

இங்கே நான் ஒழுங்காகப் படித்து வருகிறேன். சென்ற பரீட்சையில் தமிழிலும் கணக்கிலும் முதல் மார்க்குகள் வாங்கினேன். அடுத்த பரீட்சை டிசம்பர் மாதத்தில் வருகிறது. அதிலும் நான் முதலில் தேறுவேன் என நம்புகிறேன். என் ஆசிரியர் என்னிடம் மிகுந்த அன்பாய் இருக்கிறார்; நான் காயலாய் இருந்தபொழுது, என்னை வந்து பார்த்தார்.

படிப்பில் மட்டும் அல்லாமல் விளையாடுவதிலும் நான்தான் முதல்வன். தினமும் உடற்பயிற்சி செய்து தேகத்தை நல்ல நிலைமையில் வைத்துக்கொள்ள

வேண்டும் என்று என் ஆசிரியர் அடிக்கடி சொல்வார். தினந்தோறும் தகப்பனுர் என்னை உலாவ அழைத்துச் செல்வார்.

நம் தங்கை வசந்தை இப்பொழுது பள்ளிக்கூடம் போகிருள். குழந்தை லக்ஷ்மி தவழ்ந்து விளையாடுகிருள். பெற்ருேரும் சுகமே. மீனுட்சி அக்காள் சென்ற வாரம் இங்கு வந்து விட்டுப் போனுள்; எனக்கும் வசந்தைக்கும் லக்ஷ்மிக்கும் பொம்மைகள் கொடுத்தாள். எனக்குக் கொடுத்த ரயில் வண்டி, சாவி கொடுத்தால் சுற்றி சுற்றி ஓடுகிறது!

நீ எப்பொழுது வருகிருய்? உன் வரவை நாங்கள் ஆவலுடன் எதிர் பார்க்கிருேம்.

உன் அன்புள்ள,
க. மணி.

திரு. க. பாலகிருஷ்ணன்,
29, கிளைவ் மாணவரில்லம்,
திருச்சிராப்பள்ளி

2

28, பெருமாள் கோயில் தெரு
மதுரை, 12—9—1953.

அன்பார்ந்த ஐயா,

வணக்கம்! சென்ற வெள்ளிக்கிழமை நான் பாடசாலையிலிருந்து வீட்டுக்கு வரும் சமயம் பெருத்த மழை பெய்தது. அதனுல், என் சட்டைகள் நனைந்து விட்டன. வீடு சேர்ந்ததும் குளிர் காய்ச்சலுடன் படுத்துக் கொண்டேன். சென்ற இரண்டு நாட்களாகக் குணம் ஏற்பட்டு வருகிறது. ஆயினும்,

இன்னும் முற்றிலும் காய்ச்சல் நீங்கவில்லை. ஆதலால், எனக்குச் சில நாள் ஓய்வு அளிக்குமாறு பணிவுடன் வேண்டுகிறேன்.

உங்கள் கீழ்ப்படிதலுள்ள மாணவன்,
க. மணி.

மேல் விலாசம் :

திரு. செ. கண்ணப்பர் அவர்கள்,
நான்காம் வகுப்பு ஆசிரியர்,
பெருமாள் கோயில் ஆரம்பப் பாடசாலை,
மதுரை.

**8**

மதுரை,
12—9—53.

என் பிரியமுள்ள மணி,

உனக்குக் காய்ச்சல் என்பதை அறிய வருத்தமாய் இருக்கிறது! உன் உடம்பை நன்றாகக் கவனித்துக் கொள். உடம்பு சுகமாகும் வரையில் பாடசாலைக்கு வரவேண்டா. இன்று மாலை உன்னை வந்து பார்க்கிறேன்.

உன் அன்புள்ள,
செ. கண்ணப்பர்.

மேல் விலாசம் :

க. மணி.
28, பெருமாள் கோயில் தெரு,
மதுரை.

### சொற்கள் :

| | | | |
|---|---|---|---|
| செய்தி | அமைப்பு | குணம் | தவழ்ந்து |
| தெளிவு | நேர்த்தி | ஓய்வு | வரவு |
| விவரம் | மறு மொழி | காய்ச்சல் | ஆவல் |
| ஒழுங்கு | விலாசம் | வருத்தம் | எதிர்பார்க்கிறேன் |

### பொருள் விளக்கம் :

நேர்த்தி - அழகு, மறு மொழி - பதில்.

### கேள்விகள் :

1. கடிதம் எப்படி எழுதவேண்டும்?
2. விலாசம் எங்கே எழுத வேண்டும்?

### பயிற்சி :

1. நீ படிக்கும் பள்ளிக்கூடத்தைப் பற்றி உன் தாயாருக்கு ஒரு கடிதம் எழுது.

2. உன் பள்ளியில் ஆண்டுவிழா நடந்தது பற்றி உன் நண்பனுக்குக் கடிதம் எழுது.

3. நீ விளையாட்டுப் போட்டியில் வெற்றியடைந்தது குறித்து உன் தகப்பனாருக்குக் கடிதம் எழுது.

### இலக்கணம் :

#### எண் :

எண் என்பது எண்ணிக்கை.

எண் இரு வகைப்படும் : (1) ஒருமை (2) பன்மை. ஒரு பொருளைக் குறிப்பது ஒருமை எண். ஒன்றுக்கு மேற்பட்ட பொருள்களைக் குறிப்பது பன்மை எண்.

தெரு, கடிதம், எழுதினான், குணம், மாடு—ஒருமை எண்.

தெருக்கள், கடிதங்கள், எழுதினார்கள், குணங்கள், மாடுகள்—பன்மை எண்.

# 16. கரிகாலன் தீர்ப்பு

1. சோழ வேந்தர் உறையூரைத் தம் தலை-நகராகக் கொண்டு ஆட்சி புரிந்து வந்தனர். அர-சுரிமையைப் பெற வேண்டிய கரிகாலன் சிறுவனாய் இருந்தான். தாயத்தாருள் சிலர் அவனைக் கொன்று விட்டு அரசுரிமையைக் கைப்பற்றச் சூழ்ச்சி செய்-தனர். அது கண்ட நல்ல அமைச்சர்கள் கரிகாலனைக் கருவூரிலிருந்த அவன் மாமனிடம் இரகசியமாக அனுப்பி விட்டார்கள்.

2. கரிகாலன் கருவூரில் வளர்ந்து வருவது தாயத்தாருக்குத் தெரிந்தது. அவர்கள் அவனிருந்த வீட்டிற்கு இரவில் தீயிட்டு அவனைக் கொல்ல ஏற்பாடு செய்தார்கள். அப்படித் தீயிட்ட போது கரிகாலன் தூக்கத்திலிருந்து விழித்தெழுந்து வெளியேறு-வதற்குள், அவன் காலின் ஒரு சிறு பகுதி கரிந்து போயிற்று. இதனால், அவனுக்குக் கரிகாலன் என்று பெயர் வழங்கலாயிற்று என்பர்.

3. கரிகாலன் உயிர் பிழைத்து வளர்ந்து வந்-தான். தாயத்தாரின் ஆட்சியைக் குடிகளும் அமைச்-சரும் வெறுத்தார்கள் ; கருவூரில் வளரும் கரிகாலனை அழைத்து வந்து முடி சூட்டினார்கள். கரிகாலன் சிறுவனேயாயினும், நுண்ணறிவு உடையவன் ; விரைவில் அரசனுக்கு உரிய கலைகளில் தேர்ச்சி அடைந்தான் ; குடிகளின் நன்மையை நாடுவதில் நாட்டம் கொண்டான்.

4. ஒரு நாள் கரிகாலன் அரசவையில் வீற்றி-ருந்தான். அப்பொழுது முதியவர் இருவர் தம் வழக்கை விண்ணப்பம் செய்து நியாயம் பெற அவைக்கு வந்தனர். வந்தவர்கள், சிங்காதனத்தில்

ஒரு சிறுவன் அமர்ந்திருப்பதைக் கண்டார்கள். 'நமது சிக்கலான வழக்கை இச்சிறுவன் எப்படி விசாரித்து முடிவு கூறுவான்?' என்று அவர்கள் எண்ணித் தம் வழக்கைக் கூறத் தயங்கினர்கள். இதனைக் கரிகாலன் குறிப்பால் அறிந்தான்; "பெரியோர்களே, உங்கள் வழக்கை விசாரிக்க ஒரு முதியவரை அனுப்புகிறேன்," என்று கூறிவிட்டு, உள்ளே சென்றான்.

5. சிறிது நேரத்தில் சபையில் ஒரு பெரியவர் தோன்றினர். அவர் நரைத்த மீசையும் தாடியும் முடியும் உடையவராய் இருந்தார்; சிங்காதனத்தில் அமர்ந்து வழக்கை விசாரிக்கலானர். விசாரணை முடிந்ததும் இரு தரப்பாரும் மனம் உவந்து ஏற்றுக்கொள்ளும்படியான தீர்ப்புக் கூறினர். அவர்கள் நீதிபதியை வாழ்த்தினர்கள்.

6. சிங்காதனத்தில் இருந்த நீதிபதி, தம் நரைத்த மீசை தாடிகளை எடுத்துவிட்டு நின்றார். நின்றவர் யார், தெரியுமா? கரிகாலனே! அவையில் இருந்தவர் யாவரும் கரிகாலன் நுண்ணறிவை வியந்து அவனை வாழ்த்தினர்.

**சொற்கள் :**

| | | | |
|---|---|---|---|
| தாயத்தார் | கைப்பற்ற | கருவூர் | தரப்பார் |
| சூழ்ச்சி | அமைச்சர் | உறையூர் | உவந்து |
| நுண்ணறிவு | நாட்டம் | முதியவர் | தீர்ப்பு |
| குறிப்பு | சிக்கல் | நியாயம் | நீதிபதி |

**பொருள் விளக்கம் :**

அரசு உரிமை - ஆட்சிக்குச் சொந்தம், தாயத்தார் - பங்காளிகள், கலை - சாஸ்திரம், நாட்டம் - கவனம், தரப்பார் - கட்சியினர்.

### கேள்விகள் :

1. கரிகாலன் கருவூரில் வளரக் காரணம் என்ன ?
2. கரிகாலன் என்று பெயர் வழங்கக் காரணம் என்ன ?
3. கரிகாலன் எப்பொழுது அரசுரிமை பெற்றான் ?
4. முதியவருக்கு உண்டான ஐயம் யாது ?
5. கரிகாலன் எவ்வாறு அவ்வழக்கைத் தீர்த்தான் ?

### பயிற்சி :

1. குறிப்பு, நியாயம், முதியவர், உவந்து—எதிர்ப் பதம் கூறு.

2. 'விழித்து + எழுந்து' என்னும் இரு பதங்களையும் சேர்த்து 'விழித்தெழுந்து' என எழுதலாம். இதுபோல, பின்வரும் சொற்களைச் சேர்த்து எழுது :

தூக்கத்தில் + இருந்து, அமர்ந்து + இருப்பது, எழுந்து + இருந்து, பார்த்து + இருந்தான், படுத்து + இருந்தான்.

### இலக்கணம் :

## பெயரெச்சம்

வந்த யானை, சிறந்த மன்னன், சிக்கலான வழக்கு.

'வந்த யானை' என்பதில் 'வந்த' என்பது தொழில் முடிவு பெறாமல் நிற்கும் சொல். அது யானை 'என்னும்' பெயர்ச்சொல்லைக் கொண்டு முடிகிறது. ஆகையால், அது பெயரெச்சம் எனப்படும்.


இருந்த நீதிபதி, நரைத்த மீசை, ஓடின குதிரை, படித்த பையன்—இவற்றுள் பெயரெச்சங்களைக் குறிப்பிடு.

## 17. ஆகாய விமானம்

1. பண்டைக் காலத்தில் மக்கள் கால் நடையாகவே பிரயாணம் செய்து வந்தார்கள் ; நெடுந்தூரம் கடப்பதற்கு வண்டிகளை உபயோகித்தார்கள். ஆனால், கால் நடையும், வண்டிகளும் விரைவான சாதனங்கள் அல்ல ; ஆதலால், இருப்புப் பாதைகள் அமைக்கப்பட்டன ; அப்பாதைகளின் மேல் நீராவியின் சக்தியினால் இயந்திரங்கள் இயக்கப்பட்டு, புகை வண்டித் தொடர்கள் ஓடலாயின. கடிதப் போக்குவரவு தாமதமாகிறது என்று தந்தி மூலம் செய்திகள் அனுப்ப வழி கண்டார்கள். இப்பொழுது கம்பியில்லாத் தந்தி வாயிலாக நெடுந்தூரம் செய்திகள் விரைவில் செல்கின்றன.

2. புகை வண்டிகளில் மக்கள் விரைவாகப் பிரயாணம் செய்த போதிலும், அதற்கு மேலும் விரைவாகச் செல்லக்கூடிய வாகனங்களைச் செய்ய மக்கள் விரும்பினார்கள். நீரின்மீது ஓடங்களிலும் கப்பல்களிலும் செல்லுகிறோம் ; தரையின்மீது செல்லப் பலவகை வண்டிகள் உள்ளன ; ஆனால், ஆகாயத்தில் வான வெளியில் பறந்து செல்ல நெடுங்காலம் இயலவில்லை. குபேரன் வானத்தில் பறக்கும் **புட்பக விமானம்** வைத்திருந்தான் என்று கதையில் படித்திருக்கிறோம் ; ஆனால், கண்ணால் கண்டதில்லை. இப்பொழுது வானத்தில் செல்லும் விமானங்கள் பல உள்ளன. தினந்தோறும் அவற்றை நாம் காண்கிறோம்.

3. வானத்தில் செல்லும் விமானத்திற்கு **ஆகாய விமானம்** என்பது பெயர். அதை வான-



வூர்தி என்றும் சொல்லலாம். அது எவ்வாறு கண்டு பிடிக்கப்பட்டது? முதன்முதல் புகைக் கூண்டு கண்டு பிடிக்கப்பட்டது. அது தோலால் அல்லது துணியினுல் செய்யப்பட்ட உருண்டை வடிவமான ஒரு கூண்டு. அதில் சூடான காற்றைப் புகுத்தி அடக்கினுல், அக்கூண்டு மேலே பறக்கும். சூடான காற்று, சுற்றிலும் உள்ள காற்றைவிட இலேசானது. புகைக் கூண்டிற்குக் கீழே ஒருவன் வசதி செய்து-கொண்டு மேலே செல்லலாம். ஆனுல், அக்கூண்டு காற்றுச் செல்லும் திசையில் மட்டுந்தான் செல்லும்; அதை நிறுத்தவும் திருப்பவும் முடியாது.

4. ஆதலால், மனிதர்கள் ஏறிச் செல்லக்கூடிய ஆகாயக்கப்பல் அல்லது ஜெப்ளின் கண்டு பிடிக்கப்-பட்டது. அதில் பருந்துபோல நீண்ட ஒரு கூண்டும், இரண்டு பக்கங்களிலும் இரு தொட்டில்களும் இருக்-கும். கப்பலை ஓட்டுவதற்கு வேண்டிய இயந்திரங்கள் ஒரு தொட்டிலில் இருக்கும். மற்ருெரு தொட்டிலில் மக்கள் அமர்ந்திருப்பார்கள். இவ்வகைக் கப்பல் ஜெப்ளின் என்பவரால் ஜெர்மனி நாட்டில் செய்யப்-பட்டது.

5. இதன் பிறகு மற்ருெரு வகை விமானம் ஆங்கிலேயரால் கண்டு பிடிக்கப்பட்டது. இது இயந்-திரங்களால் இயங்குகிறது. இதற்கு இரு பெரிய சிறகுகள் உள்ளன. இதில் மக்கள் தங்க வசதி உண்டு. இதற்கு ஏரோபிளேன் என்பது பெயர். இதை எப்-பக்கமும் திருப்பலாம்; வேகமாகவும் மெதுவாகவும் செலுத்தலாம். இது பெட்ரோல் என்னும் தாது எண்ணெயின் சத்தியால் செல்லுகிறது. இதை மிக உயரத்தில் செலுத்தலாம். போர்க்காலத்தில் எதிரி-களின் இலக்குகளை அறிய இது பெரிதும் உதவு-

கின்றது. போரில்லாத காலத்தில் இதில் மக்கள் விரைவில் நெடுந்தூரம் பிரயாணம் செய்யலாம். தொலைவிலுள்ள இடங்களுக்கு இதன் மூலம் கடிதங்கள் அனுப்பலாம்.

### சொற்கள் :

| | | | |
|---|---|---|---|
| பிரயாணம் | தந்தி | அபகரித்து | இயங்குகிறது |
| சாதனம் | வாயிலாக | வானவூர்தி | இலக்கு |
| இருப்புப்பாதை | வாகனம் | படுத்து | வானவெளி |

### பொருள் விளக்கம் :

இயக்கப்பட்டு - செலுத்தப்பட்டு, வாயிலாக - மூலமாக, வானவெளி - ஆகாயமான இடம், அபகரித்து - வஞ்சகமாகக் கைப்பற்றி, இலக்கு - குறி.

### கேள்விகள் :

1. இக்காலத்தில் விரைவாகச் செல்லும் சாதனங்கள் யாவை?
2. 'புகைக் கூண்டு' என்பது என்ன?
3. 'ஜெப்ளின்' எப்படி அமைக்கப்பட்டது?
4. ஆகாய விமானத்தின் அமைப்பு என்ன?
5. ஆகாய விமானத்தின் உபயோகம் என்ன?

### பயிற்சி :

1. உயரம், பின்பு, விரைவாக, தொலைவு—எதிர்ச் சொற்களை எழுது.

2. வானவெளி, இயந்திரம், இலக்கு, அபகரித்து, வாகனம்—இச்சொற்களை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுது.

3. கீழ்க்காணும் வாக்கியங்களைப் பன்மை வாக்கியங்களாக மாற்று :

   1. விமானம் ஆகாயத்தில் பறக்கிறது.
   2. வானவெளியில் மேகம் சஞ்சரிக்கிறது.

3. கடலைக் கப்பலால் கடக்கலாம்.
4. ஆற்றில் ஓடத்தில் செல்லலாம்.
5. மோட்டார் வண்டி தரையில் ஓடும்.

## இலக்கணம் :

### இடம் :

நான், "கோபு, நீ இராகவன் விமானம் ஓட்டுவதில் பயிற்சி பெறுவதைப் பார்த்திருக்கிறாயா?" என்றேன்.— இதில் பேசினவன் நான் ; பேசியதைக் கேட்டவன் கோபு; பேசப்பட்டவன் இராகவன். இவ்வகை வாக்கியங்களில் (1) பேசுகிறவன் (2) பேச்சை முன் நின்று கேட்பவன், (3) பேசப்படுவன் என மூவர் குறிக்கப்படுகின்றனர். இம்மூவருடைய இடங்களும் முறையே (1) தன்மை, இடம், (2) முன்னிலை இடம், (3) படர்க்கை இடம் எனப்படும்.

ஒன்றைப்பற்றிப் பேசுபவன் இடம்—தன்மை இடம்.

அதனை முன் நின்று கேட்பவன் இடம்—முன்னிலை இடம்.

பேசப்படுபவன் அல்லது பேசப்படும் பொருள்கள் (எல்லாப் பெயர்ச்சொற்களும்) நிற்கும் இடம்—படர்க்கை இடம்.

தன்மை இடம்—நான், நாங்கள்.

முன்னிலை இடம்—நீ, நீர், நீங்கள்.

படர்க்கை இடம்—அவன், அவள், அவர், அது, அவை, மாடு, ஆடு, பறவை, மரம் முதலிய பெயர்கள்.




## 18. பத்திரிகைச் செய்திகள்

1. உலகத்தின் பல பாகங்களிலும் நடைபெறும் சம்பவங்களை நாம் சமாசாரப் பத்திரிகை வாயிலாக அறிகிறோம். சமாசாரப் பத்திரிகைகளைச் செய்தித் தாள்கள் என்று சொல்லுகிறோம். இக்காலத்தில் செய்தித்தாள்கள் இன்றியமையாதவை.

2. சில செய்தித்தாள்கள் தினந்தோறும் வெளி வருகின்றன. நமது நாட்டிலும் பிற நாடுகளிலும் நடைபெறும் நிகழ்ச்சிகளைத் தினந்தோறும் செய்தித் தாள்களின் மூலம் தெரிந்துகொள்ளலாம். சில செய்திகள் அரசியல் சம்பந்தமானவை; சில, சமூ-

கத்தைப்பற்றியவை. சில, வர்த்தகருக்குப் படன்படக் கூடியவை ; சில, நற்புத்தி புகட்டுபவை. ஆதலால், மக்கள் பலருக்கும் செய்தித்தாள்கள் பயன்படு-கின்றன.

3. மேல் நாடுகளில் மக்கள் காலையில் துயில் நீங்கி எழுந்ததும் பத்திரிகைகளைப் படிப்பார்கள். நமது நாட்டில் இந்தப் பழக்கம் குறைவாகவே உள்ளது ; ஏனெனில், நம்மில் எழுதப்படிக்கத் தெரிந்-தவர்கள் நூற்றுக்குப் பன்னிரண்டு பேர்களே. படித்-தவர்கூடப் பத்திரிகைகளை ஒழுங்காகப் படிப்பதில்லை. பத்திரிகைகளைப் படிப்பதால் அறிவு வளரும் ; உலக அனுபவம் அதிகரிக்கும்.

4. தனித்தனியாகப் பணம் கொடுத்துப் பத்திரி-கைகளை வாங்கப் பலருக்கு இயலாமல் இருக்கலாம். அவர்கள் ஒன்று சேர்ந்து கூட்டாக ஒரு பத்திரிகை வரவழைக்கலாம். பத்திரிகைகளில் சில, தினசரி வெளியிடப்படுகின்றன ; சில, வாரத்திற்கு ஒரு முறையும், சில, மாதத்திற்கு ஒரு முறையும் வெளி வருகின்றன. வார வெளியீடுகளிலும் மாத வெளி-யீடுகளிலும் கதைகளும் கட்டுரைகளும் காணப்படும். தினசரிகளில் பெரும்பாலும் செய்திகளே இருக்கும்.

5. 'ஆனந்த விகடன்', 'கல்கி' போன்றவை வார வெளியீடுகள் ; 'கலைமகள்', 'கண்ணன்' போன்றவை மாத வெளியீடுகள். 'இந்து' 'சுதேச-மித்திரன்', 'தினமணி' போன்றவை தினசரிகள். மாதிரியாகச் சில செய்திகள் அடுத்த பக்கங்களில் கொடுக்கப்பட்டுள்ளன.

ஜனுனுகூலன் : சென்னை, 9—11—50.

## தீபாவளித் திருநாள் கொண்டாட்டம்

இன்று தீபாவளித் திருநாள். இது இந்துக்கள் கொண்டாடும் சிறப்பான பண்டிகை. விடியற் காலையில் மக்கள் மங்கள நீராடி, புது ஆடைகள் அணிந்து, உற்றார் உறவினருடன் விருந்துண்டு உற-வாடினார்கள். சிறுவர் சிறுமியர் நேற்று முதல் பட்டாசுகள் வெடித்தும் வாணங்கள் விட்டும் களிப்-படைந்தனர். வீடுகளில் இலட்சுமி வழிபாடு நடை-பெற்றது. மாலையில் எங்கும் தீபாலங்காரங்கள் காணப்பட்டன. சென்னை நகரம் ஜோதி புரியாகக் காட்சியளித்தது.

தினச் செய்தி : சென்னை, 5—11—53.

## வானிலைச் செய்தி

மீனம்பாக்கத்திலுள்ள வானிலை ஆராய்ச்சி நிலை-யம் பின் வரும் பிரத்தியேக வானிலை அறிக்கையை வெளியிட்டுள்ளது.

தீபகற்ப இந்தியாவின் தென்பகுதியில், வடகிழக்-குப் பருவக்காற்று பெருவாரியாக மழையைத் தந்-துள்ளது. திருவனந்தபுரத்தில் 2 அங்குலமும் பாள-யங் கோட்டை, மதுரை, கோடைக்கானல், ஆகிய இடங்களில் ஒவ்வொரு அங்குலமும் மழை பெய்-துள்ளது. சென்னை நகரில் அரை அங்குல மழை பெய்தது. வானில் கருமேகங்களின் சஞ்சாரம் அதிகமாயுள்ளது.

இனிவரும் இருபத்துநான்கு மணி நேரத்திற்குள் தமிழ் நாட்டின் பல பகுதிகளில் இடி மின்னலுடன்

பலத்த மழை பெய்யும். திருவனந்தபுரம், மைசூர், ராயலசீமை முதலிய பிரதேசங்களில் ஆங்காங்கு சுமாரான மழை பெய்யும்.

### சொற்கள் :

| | | | |
|---|---|---|---|
| சம்பவம் | துயில் | ஊர்வலம் | ஆற்றினர் |
| செய்தி | அனுபவம் | பிரார்த்தனை | திருநாள் |
| நிகழ்ச்சி | தினசரி | தொண்டு | மங்களம் |
| அரசியல் | வெளியீடு | பெருமான் | வழிபாடு |
| சமூகம் | மௌனமாக | சொற்பொழிவு | தீபாலங்காரம் |

### பொருள் விளக்கம் :

சம்பவம் - நிகழ்ச்சி, துயில் - தூக்கம், பிரார்த்தனை - வேண்டுதல், வழிபாடு - வணக்கம்.

### கேள்விகள் :

1. செய்தித்தாள்கள் எவ்வாறு பயன்படுகின்றன?
2. பத்திரிகைகளில் பலவகைகள் யாவை?
3. உன் பள்ளியில் நடந்த காந்தியடிகள் மறைவு நாள் நிகழ்ச்சியைப் பத்திரிகையில் வெளிவரும் செய்தி போல எழுது.
4. நமது நாட்டில் ஏன் பத்திரிகை படிப்பவர் குறைவு?

### பயிற்சி :

1. மௌனம், துக்கம், திருநாள், பெரியோர், மறைவு, காலை, தனித்தனியாக—எதிர்ச் சொற்களை எழுது.
2. பிரித்து எழுது :—செய்தித்தாள், நற்புத்தி, தனித் தனியாக, நீராடி, விருந்துண்டு.
3. சேர்த்து எழுது :—பொது+கூட்டம், தீபாவளி+திருநாள், களிப்பு+அடைந்தனர், தீப+அலங்காரம், திரள்+திரள் +ஆக.

## இலக்கணம் :

### வினையெச்சம் :

1. இராமன் பார்த்து மகிழ்ந்தான்.
2. மக்கள் கண்டு களித்தனர்.

மேலே உள்ள வாக்கியங்களில் வினைச்சொற்கள் யாவை? 'பார்த்து, மகிழ்ந்தான், கண்டு, களித்தனர்' என்பவை. இவற்றில், மகிழ்ந்தான், களித்தனர் என்பன வினைமுற்றுக்கள். தொழில் முடிவு பெறாதது எச்சம். எனவே பார்த்து, கண்டு என்பன எச்சங்கள். இவை வினைச்சொற்களைக் கொண்டு முடிவதால், வினையெச்சம் எனப்படும்.

### பயிற்சி :

1. சங்கரன் தினந்தோறும் பத்திரிகை படிக்கிறான்.
2. கோபு பத்திரிகைக்குச் செய்தி அனுப்பினான்.
3. வேலன் வீட்டில் களவு போயிற்று.
4. சாரதியின் பெண் நன்றாகப் பாடுவாள்.

மேலேயுள்ள வாக்கியங்களிலிருந்து எழுவாய், பயனிலை, செயப்படுபொருள்களை எடுத்து எழுது.

அவற்றில் தடித்த எழுத்திலுள்ள வார்த்தைகளுக்குத் திணை, பால், எண், இடம் எழுது.

## 19. இலங்கைத் தீவு


1. இலங்கைத் தீவு இந்தியாவிற்குத் தெற்கே உள்ளது. இதன் நாற்புறங்களிலும் கடல் சூழ்ந்துள்ளது; இலங்கை நீர்வளமும் நிலவளமும் மிக்கது. இராவணன் சீதையைச் சிறைவைத்த இலங்கை இதுதான். இராமர் இராவணனை வென்ற பின்பு, இலங்கைக்கு விபீஷணனை அரசனாக்கினார் என்று இராமாயணம் கூறுகின்றது.

2. இலங்கையிலுள்ள மக்களில் பெரும்பாலார் புத்த மதத்தினர். தமிழரும் அங்கு உள்ளனர். பாண்டிய மன்னருள் சிலர் இலங்கையை வென்று, அதை ஆண்டிருக்கின்றனர். தென்னிந்தியாவிலிருந்து பலர் அங்கே சென்று குடியேறியுள்ளனர். இலங்கை மக்களுக்குச் சிங்களவர் என்பது பெயர்.

3. இலங்கையில் காடுகள் அதிகம். கடலோரத்தில் தென்னை மரங்கள் அதிகம். சமவெளி மிகவும் செழிப்பானது. மலைச் சாரல்களில் தேயிலை விசேஷமாகப் பயிரிடப்படுகிறது. இரப்பர்த் தோட்டங்களும் புகையிலைத் தோட்டங்களும் அங்கே மிகுதி. தேயிலைத் தோட்டங்களில் தமிழரும், சிங்களவரும் வேலை செய்கின்றனர்.

4. யாழ்ப்பாணம் என்னும் இடத்தில் தமிழர் அதிகமாய் வசிக்கின்றனர். அது இலங்கைக்கு வடக்கில் உள்ள ஒரு சிறிய தீவு. யாழ்ப்பாணத் தமிழர்களுக்குத் தமிழ் மொழியின்மேல் மிகுந்த பற்று உண்டு. அவர்கள் நல்ல உழைப்பாளிகள்; நுண்ணறிவு படைத்தவர்கள். ஆறுமுக நாவலர் என்ற சிறந்த தமிழ்ப் புலவர் இங்கே இருந்தார். அவர்

தமிழுக்கும் சைவமதத்திற்கும் பெருந்தொண்டு ஆற்றியுள்ளார். யாழ்ப்பாணத்திலுள்ள தமிழருள்




பலர் கிறிஸ்தவர்; ஆயினும், இந்துக்களும் கிறிஸ்தவர்களும் அங்கே வேறுபாடின்றி வாழ்கிருர்கள்.

5. இலங்கைத் தீவின் தலை நகரம் கொழும்பு; அது மேற்குக் கரையில் உள்ளது. அந்நகரில் ஒரு

சிறந்த துறைமுகம் இருக்கிறது; அத்துறைமுகத்தில் மேல்நாடுகளுக்கும், கீழ் நாடுகளுக்கும் செல்லும் கப்பல்கள் தங்கிச் செல்ல வசதி இருக்கிறது. இலங்கையில் விளையும் தேயிலை, இரப்பர் முதலான பொருள்கள் அத்துறைமுகத்தின் மூலமாக வெளி நாடுகளுக்கு அனுப்பப்படுகின்றன.

6. கதிர்காமம் என்ற இடத்தில் முருகன் ஆலயம் ஒன்று உண்டு. அங்கே ஆண்டுக்கு ஒரு முறை திருவிழா நடக்கும். கதிர்காமம் ஒரு காட்டின் நடுவே உள்ளது. ஏராளமான மக்கள் அக்கானகத்தின் வழியாகக் கால் நடையாகச் சென்று முருகனை வழிபடுவார்கள். கானகத்திலுள்ள கொடிய விலங்குகள் யாத்திரிகர்களைத் துன்புறுத்துவதில்லை.

7. கண்டி என்பது இலங்கையின் நடுவிலுள்ள ஒரு நகரம். முன்னாட்களில் அது இலங்கையின் தலை நகரமாய் இருந்தது. அந்நகரில் புத்தர் பிரானுடைய ஆலயம் ஒன்று உள்ளது. அவ்வாலயத்தில் புத்தரின் பல் அடக்கம் செய்யப்பட்டுள்ளது.

8. இலங்கைத் தீவின் கடற்கரையோரங்களில் முத்து எடுப்பவர்கள் பல விலையுயர்ந்த முத்துக்களைக் கண்டெடுப்பார்கள். இலங்கையில் நுவாரா எலியா என்னும் சிறந்த ஆரோக்கிய ஸ்தலம் உள்ளது.

9. இலங்கையும் இப்பொழுது சுதந்தரம் பெற்றுள்ளது. அந்நாட்டு மக்களின் அரசாங்கமே இப்பொழுது ஆட்சி புரிகின்றது. இலங்கை மக்கள் பேசும் மொழி சிங்களம். சிங்கள மக்கள் பல நிற ஆடைகள் அணிவதில் பிரியம் உள்ளவர்கள்.

### சொற்கள் :

| | | |
|---|---|---|
| பெரும்பாலார் | மலைச்சாரல் | தலைநகரம் |
| குடியேறி | ஏராளமாக | துறைமுகம் |
| சிங்களவர் | உழைப்பாளி | விலங்கு |
| சமவெளி | வேறுபாடு | திருவிழா |

### பொருள் விளக்கம் :

பெரும்பாலார் - அதிகமான மக்கள், வேறுபாடு - வித்தியாசம், துறைமுகம் - கப்பல் தங்கும் இடம், வசதி - சௌகரியம்.

### கேள்விகள் :

1. இலங்கை எங்கே உள்ளது ?
2. தமிழர்கள் இலங்கையில் எப்பொழுது குடியேறினார்கள் ?
3. இலங்கையின் விளைபொருள்கள் யாவை ?
4. யாழ்ப்பாணம் எங்குள்ளது ? அதில் வசிப்பவர் யாவர் ?
5. கொழும்பிலிருந்து வெளி நாடுகளுக்கு அனுப்பப்படும் பொருள்கள் யாவை ?
6. ‘ நுவாரா எலியா ’ என்பது என்ன ?
7. சரியா, பிழையா என்பதைச் சொல்லு :
   (1) யாழ்ப்பாணத்தில் சிங்களவர் அதிகம்.
   (2) இலங்கையில் நெல்லும் கரும்பும் விளைகின்றன.
   (3) கதிர்காமத்தில் முருகப் பெருமானுடைய ஆலயம் உள்ளது.
   (4) நுவாரா எலியா ஒரு சிறந்த துறைமுகம்.
   (5) சிங்களவர் பேசும் மொழி சிங்களம்.
   (6) இலங்கை ஒரு சுதந்தர நாடு.

### பயிற்சி :

1. வேறுபாடு, வசதி, உயர்ந்த, ஆரோக்கியம், துன்பம்—எதிர்ச்சொற்கள் யாவை ?

2. துறைமுகம், தலைநகரம், ஆரோக்கியம், உழைப்பாளி, பெரும்பாலார், வேறுபாடு—இச்சொற்களைச் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுது.

### இலக்கணம் :

### காலம் :

| (1) | (2) | (3) |
|---|---|---|
| நின்றான் | நிற்கிறான் | நிற்பான் |
| வந்தான் | வருகிறான் | வருவான் |
| பாடினான் | பாடுகிறான் | பாடுவான் |
| ஓடினான் | ஓடுகிறான் | ஓடுவான் |

முதல் வரிசையிலுள்ள சொற்கள், தொழில் நடந்து முடிந்துவிட்டதைக் குறிக்கின்றன. ஆதலால், அச்சொற்கள் இறந்த காலம் எனப்படும்.

இரண்டாவது வரிசையிலுள்ள சொற்கள், தொழில் நடந்துகொண்டிருக்கிறதைத் தெரிவிக்கின்றன. ஆதலால், அவை நிகழ்காலம் எனப்படும்.

மூன்றாவது வரிசையிலுள்ள சொற்கள், தொழில் இனி நடக்கப்போவதைக் குறிக்கின்றன. அவை எதிர் காலம் எனப்படும்.

எனவே, காலம் மூன்று வகைப்படும்.

வினைமுற்றுக்களுக்கும் பெயரெச்சங்களுக்கும், வினையெச்சங்களுக்கும் இந்த மூன்று காலங்களும் உண்டு.

பாடினான், படிக்கிறான், தூங்குவான், அடிக்கிறான், ஓடுகிறான்—இச் சொற்களின் காலம் என்ன ? இவற்றை மற்ற இரண்டு காலச் சொற்களாக மாற்றி எழுது.



# 20. தேயிலை

1. இக்காலத்தில் காப்பி, தேயிலை முதலிய பானங்களை எங்கும் காண்கிறோம். அவற்றை வீடுகளிலும் தயாரித்து அருந்துகிறோம்; சிற்றுண்டி விடுதிகளிலும் வாங்கிப் பருகுகிறோம். நகரங்களில் இப்பானங்களை அருந்தாதவர் இல்லை என்றே சொல்லலாம்; கிராமங்களிலும் இவை விரைவாகப் பரவி வருகின்றன.

2. காப்பியும் தேயிலைப் பானமும் உடலின் களைப்பை நீக்கிச் சுறுசுறுப்பை உண்டாக்குகின்றன; ஆதலால், மக்கள் அவற்றைப்பருகுகிறார்கள். ஆனால், அவற்றை மிதமாக உட்கொள்வது நலம்; ஏனெனில், அவற்றை அளவுக்கு மீறிப் பருகினால் தூக்கத்தைக் கெடுத்துச் சீரணத்தைக் குறைக்கும். மேலும், அவற்றில் ஒரு வகை நச்சுப் பொருள் கலந்துள்ளது; மிதமின்றிப் பருகினால், அந்த நச்சுப் பொருள் நமது உடலில் கலந்து சுகத்தைக் குறைக்கும்.

3. ஆதியில் தேயிலை சீனாவில் மட்டும் பயிராகி வந்தது. பின்பு அது பல நாடுகளில் பயிரிடப்பட்டது. மலைச்சாரல்களிலும் அவற்றை அடுத்த மேட்டுப் பாங்கான இடங்களிலும் தேயிலை நன்றாகப் பயிராகும். தேயிலைச் செடிக்கு அடியில் தண்ணீர் தேங்கி நிற்கக்கூடாது; மலைச் சரிவுகளிலும் மேட்டு நிலங்களிலும் தண்ணீர் தேங்கி நில்லாது; ஆதலால், அவ்விடங்களில் தேயிலை நன்கு வளரும்.

4. தேயிலை விதைகளை ஓரிடத்தில் விதைத்துத் தண்ணீர் விட்டு வரவேண்டும். அவை முளைத்துச் சிறு செடிகளாக ஓராண்டு ஆகும். பின்பு மூன்றடி தூரத்திற்கு ஒரு குழியாகப் பல குழிகளை நிலத்தில் தோண்ட வேண்டும்; அவ்வாறு தோண்டப்பட்ட குழிகளில் ஒவ்வொன்றிலும் மூன்று நான்கு செடிகளை நடலாம். மழை அதிகமாய் இருக்குமாதலால், மலைச்சாரல்களில் அவை நன்கு பயிராகும்.

5. தேயிலைச்செடி சுமார் பத்துப் பன்னிரண்டு அடி உயரம் வளரும்; ஆனால், அவ்வளவு உயரம் வளரவிடுவதில்லை; கத்தரித்து விடுவார்கள். ஏனெனில், அதிக உயரம் வளர்ந்தால், இலைகளைப் பறிக்க முடியாது; மேலும் செடி செழிப்பாக வளரும். செடிகளை நட்ட மூன்று ஆண்டுகளில் அவை பூக்கத் தொடங்கும். அப்பொழுது செடிகளில் இருக்கும் இளந்தளிர்களே தேயிலைப் பானத்திற்கு ஏற்றவை; அப்பொழுது அவற்றைப் பறித்துச் சேகரிப்பார்கள்; பின்பு பக்குவம் செய்வார்கள்; இவ்வாறு ஆண்டிற்கு மூன்று முறை தேயிலைத் தளிர்களைப் பறித்து பக்குவம் செய்வார்கள். அவற்றை உலர்த்துவார்கள்; உலர்ந்த பின் இரும்புச் சட்டிகளில் இட்டு அளவாகச் சுருளும்படி வறுத்து எடுப்பார்கள். அப்பொழுது

தளிர்கள் கருமை நிறத்தை அடையும். அவற்றைப் பெட்டிகளில் அடைத்து விற்பனை செய்வார்கள்.

6. நமது நாட்டில் அஸ்ஸாமிலும், நீலகிரியிலும், சேர்வராயன் மலையிலும், ஆனை மலைகளிலும் தேயிலை பயிராகிறது. சீனு, இலங்கை, ஜப்பான் முதலிய நாடுகளிலும் தேயிலை ஏராளமாகப் பயிரிடப்படுகிறது.

7. தேயிலைத் தூளை முதலில் ஒரு பாத்திரத்தில் இட்டு, அதன்மேல் கொதிக்கும் நீரைத் தேவையான அளவுக்கு விட்டு, மூன்று நிமிஷங்கள் மூடி வைக்க வேண்டும். பின்பு அக்கஷாயத்தை வடிகட்டிப் பாலும் சர்க்கரையும் கலந்து பருக வேண்டும்.

சொற்கள் :

| | | | |
|---|---|---|---|
| பானம் | மிதம் | ஏற்றவை | அனல் |
| விடுதி | நச்சுப் பொருள் | சேகரித்தல் | விற்பனை |
| களைப்பு | தளிர் | பக்குவம் | கஷாயம் |

பொருள் விளக்கம் :

விடுதி - தனி இடம், மிதம் - அளவு, நச்சுப் பொருள் - விஷப்பொருள் (நஞ்சு - விஷம்), ஏற்றவை - தகுந்தவை, அனல் - நெருப்புச் சுவாலை.

கேள்விகள் :

1. காப்பி, தேயிலைப் பானங்களின் தன்மை யாவை?
2. தேயிலை எப்படிப்பட்ட இடங்களில் பயிராகும்? ஏன்?
3. தேயிலையைப் பயிர் செய்யும் விதம் யாது?
4. தேயிலையைப் பக்குவம் செய்வது எப்படி?
5. தேயிலைப் பானம் தயாரிப்பது எப்படி?

பயிற்சி :

1. எதிர்ச் சொற்கள் யாவை?—இல்லை, கிராமம், களைப்பு, மிதம், நஞ்சு, சுகம், பின்பு, தூரம், விற்பனை.

2. கஷாயம், களைப்பு, அனல், பக்குவம், ஏற்றது, மலைச்சாரல்—இச்சொற்களை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுது.

3. (1) வள்ளி தேயிலை பறித்தாள்.
(2) கமலம் தேயிலைப்பானம் தயாரிப்பாள்.
(3) நான் தோட்டத்திற்குப் போகிறேன்.
(4) தேயிலையின் விலை அதிகமாய் இருக்கிறது.
(5) நான் நாளை தேநீர் அருந்துவேன்.

இவ்வாக்கியங்களிலுள்ள வினைமுற்றுக்களின் காலங்களை வகைப்படுத்தி எழுது.

# 21. செஞ்சிலுவைச் சங்கம்

1. உலகத்தில் பிறந்து வாழும் உயிர்களெல்லாம் இரண்டு வகையாக முயற்சிகள் செய்து வருகின்றன. ஒன்று, தாம் வாழப் பாடு படுவது; மற்றொன்று, பிறர் வாழப் பாடுபடுவது. இவற்றுள் பிறர் வாழப் பாடுபடுவதே சிறந்ததாகும். பறவைகளேயும் சிறு பிராணிகளேயும் பாருங்கள். ஒரு காக்கை தான் உண்ணும் போது தன் இனத்தையும் அழைத்தே உண்கிறது. பறவைகள் கூடுகட்டிக் குஞ்சுகளே வளர்ப்பதைக் கவனியுங்கள். எறும்புகள் ஒன்று கூடி வாழ்வது நமக்கு வியப்பைத் தர வில்லையா?

2. இதனால் நாம் அறிவது யாது? நமக்கும் ஒற்றுமை உணர்ச்சி வேண்டும். ஏழை எளியவரைக் கண்டால், நம் மனம் இரங்க வேண்டும். பிறர் துன்புறும் போது நாமும் அத்துன்பத்தில் பங்கு கொண்டு அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும். இங்ஙனம் அன்பும் அருளும் நிறையப் பெற்றவர்களே மேன்மக்கள்.

3. பொது மக்களின் தொண்டில் ஈடுபட்டு, மாந்தரின் நன்மைக்காகப் பாடுபடும் தனி மனிதரும் உளர்; இயக்கங்களும் பல உள்ளன. அத்தகைய இயக்கங்களில் செஞ்சிலுவைச் சங்கம் தலை சிறந்ததாகும். அதைச் சார்ந்த கிளேகள் உலகெங்கும் பரவியுள்ளன. அச்சங்கம் ஈடுபட்டு உழைக்கும் துறைகளும் பலவாகும்.

4. பத்தொன்பதாம் நூற்றுண்டின் இடையில் பிரான்ஸ், இத்தாலி என்னும் இரண்டு நாடுகளும்

சேர்ந்து ஆஸ்திரியாவை எதிர்த்துப் போர் செய்தன. அப்போது ஸ்விட்ஸர்லாந்து நாட்டைச் சேர்ந்த ஹென்றி டூனெண்டு என்பவர் அதன் கொடுமையைப் பார்க்க நேர்ந்தது. போரில் காயப்பட்ட வீரர்களுக்கு மருத்துவ உதவியளித்துக் காப்பாற்றுவதையே தம் குறிக்கோளாக அவர் கொண்டார். 1864-ஆம் ஆண்டில் எல்லா நாட்டுப் பிரதிநிதிகளையும் ஒன்று கூட்டினர். அச்சமயம் மனித சமூகத்தில் காயங்களாலும் நோய்களாலும் துன்பப்படுபவருக்கு உதவியளிக்கும் நோக்கத்தோடு ஒரு சங்கம் நிறுவப்பட்டது. இதுவே உலகம் போற்றும் **செஞ்சிலுவைச் சங்கம்** ஆகும்.

5. பஞ்சம், பெருவெள்ளம், பூகம்பம் முதலிய காரணங்களால் துன்பம் நேரிட்டால், அங்கு அச்சங்கத்தார் சென்று உதவுவர்; பெண்களுக்கு உதவி செய்யத் தாதிமார்களைப் பழக்குவர்; பள்ளிக்கூடங்களில் பிள்ளைகளுக்கு இச்சங்கக் காரியங்களில் பயிற்சி செய்விப்பதும் உண்டு.

6. இச்சங்கத்தின் நோக்கங்கள் மூன்று: முதலாவது, சுகாதாரத்தை முன்னேற்றுவது; இரண்டாவது, பிறருக்கு உழைப்பது; மூன்றுவது, உலகத்தில் யாவருடனும் நேசமாயிருப்பது.

7. சமீபத்தில் இளைஞர் செஞ்சிலுவைத்தொகுதி ஏற்படுத்தப்பட்டது. இத்தகைய தொகுதி பள்ளிகளிற் பயிலும் மாணவ மாணவிகளைக்கொண்டு அமைக்கப்படுகின்றது. உடல் நல அபிவிருத்தி, தன்னலமற்ற சேவை, உலக சகோதரத்துவம் ஆகியவற்றில் இளைஞர்களுக்குப் பயிற்சியளிப்பது இத்தொகுதியின் வேலை. இவ்வியக்கத்திற் சேர்ந்து மாணவர்களாகிய நீங்களும் பொது நலத் தொண்டு செய்யுங்கள்.

### சொற்கள் :

| | | | |
|---|---|---|---|
| மற்றொன்று | எறும்பு | வியப்பு | ஒற்றுமை |
| எளிமை | அன்பு | அருள் | உணர்ச்சி |
| நன்மை | இயக்கம் | கொடு | மாந்தர் |
| குறிக்கோள் | நோக்கம் | போற்றும் | பஞ்சம் |

### பொருள் விளக்கம் :

மாந்தர் - மக்கள், இயக்கம் - சங்கம், கிளைகள் - பிரிவுகள், குறிக்கோள் - கொள்கை, நிறுவப்பட்டது - ஏற்படுத்தப் பட்டது.

### வினாக்கள் :

1. பறவை முதலான உயிர்களிடமிருந்து நாம் தெரிந்துகொள்வது என்ன ?

2. செஞ்சிலுவைச் சங்கம் யாரால் எப்பொழுது ஏற்படுத்தப்பட்டது ?

3. அச்சங்கத்தின் பொது நோக்கங்கள் எவை ?

4. அச்சங்கத்தின் மூன்று நோக்கங்கள் எவை ?

5. இளைஞர் செஞ்சிலுவைத் தொகுதியைப்பற்றி உனக்கு என்ன தெரியும் ?

### பயிற்சி :

1. எதிர்ப்பதம் கூறு : ஒற்றுமை, துன்பம், நன்மை, தன்னலம், இளைஞர்.

2. மற்றொன்று, அன்பும் அருளும், இயக்கம், ஈடுபட்டு, குறிக்கோள், தொகுதி—சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுது.

3. கோடிட்ட இடங்களை நிரப்பு :

(1) —— —— நிறையப் பெற்றவர்களே மேன் மக்கள்.

(2) செஞ்சிலுவைச் சங்கத்தின் —— உலகெங்கும் ——.

(3) செஞ்சிலுவைச் சங்கம் ஏற்படுத்தியவர் —— —— என்பவர்.

(4) செஞ்சிலுவைச் சங்கத்தின் முதல் நோக்கம் —— ——.

# 22. 'தன் வினை தன்னைச் சுடும்'

[நாடகம்]

## காட்சி—1

**இடம் :** வக்கீல் சோமசுந்தரத்தின் வீடு.

**காலம் :** காலை.

**பாத்திரங்கள் :** வக்கீல்; கந்தன், பூவன்—இரு குடியானவர்.

[வக்கீல் தமது அறையில் இருக்கிறார். கந்தனும் பூவனும் அவரைக் காண வருகின்றனர்.]

**வக்கீல் :** என்னடா கந்தா, ஏன் வருந்துகிறாய் ?

**பூவன் :** என்ன ஐயா! உங்களுக்குத் தெரியாதா? கந்தனைப் பெரிய பண்ணையார் ஆட்கள் நன்றா-கக் கட்டி வைத்து அடித்துவிட்டார்கள்! கந்த-னுடைய மாடுகள் பண்ணையார் வீட்டுத் தோட்-டத்தில் மேய்ந்தன. பண்ணையார் கோபங்-கொண்டு, ஆட்களை ஏவிக் கந்தனைப் பிடித்துக் கட்டித் திட்டி, நன்றாக அடிக்கச் செய்தார்.

**வக்கீல் :** கந்தா, இது உண்மையா?

**கந்தன் :** ஆம் ஐயா! நான் என்ன செய்வேன்!

**வக்கீல் :** ஏன் சும்மா இருக்க வேண்டும்? நீதி ஸ்தலத்தில் வழக்குத் தொடுத்தால் பண்ணையார் வழிக்கு வருவார்.

**கந்தன் ,** உண்மைதான். ஆனால் வழக்குத் தொடுக்கப் பணம் வேண்டுமே!

**வக்கீல் :** அது பற்றி நீ கவலைப்படவேண்டா. நானே செலவுத் தொகையைப் போட்டு வழக்குத் தொடுக்கிறேன். பண்ணையாருக்கு அபராதம்

விதிப்பார்கள். அத்தொகையில் பாதி நீ எனக்குக் கொடுக்க வேண்டும்.

**கந்தன் :** ஆனால்......




**வக்கீல் :** என்னடா ஆனால்? மிகவும் கோழையாயிருக்கிறாயே!

**கந்தன் :** இல்லை. நீதி ஸ்தலத்தில் என்னை பண்ணையாரின் வக்கீல் கேள்விகள் கேட்பார். நான் மறுமொழி அளிக்க முடியாமல் விழிப்பேன்; அல்லது ஏதாவது உளறுவேன். எனக்குப் பயமாக இருக்கிறதே!

**வக்கீல் :** அப்படி ஒன்றும் நடவாது. நீ ஒன்றுமே பேச வேண்டா. ஒரே ஒரு வார்த்தை சொன்னால் போதும்.

**கந்தன் :** அது என்ன ஐயா!

**வக்கீல் :** யார் என்ன கேட்டாலும் 'பே-பே' என்று சொல்லு. நான் கேட்டாலும், பண்ணையாரின் வக்கீல் கேட்டாலும், நீதிபதி கேட்டாலும் அதையே சொல்லு.

**கந்தன் :** சரி ஐயா ! இது சுலபம். அவ்வாறே செய்கிறேன்.

(போகிறார்கள்)

## காட்சி—2

**இடம் :** நீதி ஸ்தலம்

**காலம் :** மாலை 2 மணி.

**பாத்திரங்கள் :** வக்கீல் சோமசுந்தரம், பண்ணையாரின் வக்கீல் நாராயணன், கந்தன், பூவன், நீதிபதி.


**நீதிபதி :** சோமசுந்தரம், உங்கள் வழக்கு என்ன ?

**சோமசுந்தரம் :** ஐயா, வாதி கந்தன். அவனைப் பிரதிவாதி பண்ணையாரின் ஆட்கள் மரத்தில் கட்டிப்போட்டு அடித்துவிட்டார்கள். அதனால், அவனுக்குப் பைத்தியம் பிடித்தது. அவனுக்குச் சுய நினைவு இல்லை. அவனுக்குச் சிகிச்சை செய்ய வேண்டும். பண்ணையாருக்கு அபராதம் விதித்து அத்தொகையைக் கந்தனுக்கு அளித்தால், அவன் சிகிச்சை பெற்று, முன்னிலையை அடைய முடியும்.

**நீதிபதி :** ஏன் கந்தனைப் பண்ணையாரின் ஆட்கள் அடித்தார்கள் ?

**சோமசுந்தரம் :** அவனுடைய மாடுகள் பண்ணையாரின் தோட்டத்தில் புகுந்தனவாம். அதற்கு இத்தனை அடிகள் !

நீதிபதி : (நாராயணனைப் பார்த்து) இதற்கு உமது சமாதானமென்ன ?



நாராயணன் : ஐயா, கந்தனை அடித்தது உண்மை. அவன் மாடுகள் பல முறை பண்ணையாரின் தோட்டத்தில் புகுந்து நாசம் விளைத்தன. பண்ணையாரின் எச்சரிக்கையைக் கந்தன் பொருட்படுத்தவில்லை. பண்ணையாரின் ஆட்கள் கோபங்கொண்டு கந்தனை அடித்துவிட்டார்கள். இச்செய்தி பண்ணையாருக்குத் தெரிந்ததும் அவர் தம் ஆட்களைக் கோபித்துக்கொண்டார்.

நீதிபதி : கந்தனைக் கூப்பிடுங்கள்.

(கந்தன் வருகிறான்)

சோமசுந்தரம் : (நீதிபதிக்குக் காயங்களினால் உண்டான தழும்புகளைக் காட்டி) கந்தா, என்ன நடந்தது ?

கந்தன் : பே ! பே !

நீதிபதி : என்ன நடந்தது ? சொல்.

கந்தன் : பே ! பே !

நீதிபதி : என்னடா இது ? உடனே பதில் சொல்.

**கந்தன் :** பே ! பே !

**சோமசுந்தரம் :** ஐயா, அடிபட்டதால் கந்தன் நினைவு தவறிவிட்டது. யார் எது கேட்டாலும் 'பே ! பே !' என்று சொல்கிறான்.

**நீதிபதி :** நாராயணரே, நீர் அவனைக் கேள்வி கேளும்.

**நாராயணன் :** கந்தா, என்ன நடந்தது ? சொல்லு.

**கந்தன் :** பே ! பே !

**நீதிபதி :** சரிதான். கந்தனுக்குப் பைத்தியந்தான். பண்ணையாரின் ஆட்கள் அடித்ததால் இவ்வாறு ஏற்பட்டது. பண்ணையாருக்கு அபராதம் ரூபாய் நூறு. அதைக் கந்தனுக்குக் கொடுக்கிறேன்.

(கந்தன் ரூபாயைப் பெறுகிறான். சபை கலைகிறது.)

## காட்சி—8

**இடம் :** சோமசுந்தரம் வீடு.

**காலம் :** இரவு.

**பாத்திரங்கள் :** சோமசுந்தரம், கந்தன், பூவன்.

**சோமசுந்தரம் :** கந்தா, நாம் வெற்றியடைந்தோம்! நீயும் ரூபாய் நூறு பெற்றாய். எங்கே என் பங்கு ரூ. 50 ? எடு.

**கந்தன் :** பே ! பே !

**சோமசுந்தரம் :** என்னடா இது ? இன்னும் 'பே ! பே !' எதற்கு ? வாயைத் திறந்து பேசு.

**கந்தன் :** பே ! பே !

**சோமசுந்தரம் :** (பூவனைப் பார்த்து) என்னப்பா இது ? என் ரூபாயைக் கொடுக்கச் சொல்லு.

**பூவன் :** கந்தா, வக்கீல் செய்த உதவிக்கு அவருக்கு ரூபாய் ஐம்பது கொடு.

**கந்தன்:** பே! பே!

**பூவன்:** கந்தா, இப்படிச் செய்யலாமா? உடனே கொடுத்துவிடு.

**சோமசுந்தரம்:** போடா திருட்டுப் பயலே! என் முன் நிற்காதே!

(உள்ளே போகிறார்)

[பூவனும் கந்தனும் வீடு சேர்கிறார்கள். கந்தன் சிரிக்கிறான்.]

**பூவன்:** ஏண்டா கந்தா, ஏன் சிரிக்கிறாய்? நம் வக்கீலை ஏமாற்றலாமா?

**கந்தன்:** அதனாலென்ன? வக்கீல்தானே 'பே! பே!' பாடத்தை எனக்குக் கற்பித்தார்? அவர்க்கே நான் பே! பே! சொல்லிவிட்டேன். தன் வினை தன்னைச் சுடும் அல்லவா?

(சிரிக்கிறார்கள்)

சொற்கள்:

| | | | |
|---|---|---|---|
| வக்கீல் | கோழை | வழக்கு | சிகிச்சை |
| தழும்பு | காயம் | உளறுவேன் | வாதி |
| அபராதம் | ஏமாற்றுதல் | பண்ணை | நீதிபதி |
| பிரதிவாதி | சமாதானம் | வினை | நீதிஸ்தலம் |
| சுலபம் | பைத்தியம் | எச்சரிக்கை | சுடும் |

பொருள் விளக்கம்:

பண்ணை - பயிர்த்தொழில், கோழை - தைரியமில்லாதவன், தழும்பு - புண்ணின் அடையாளம், வினை - செயல், சுடும் - எரிக்கும்.

**கேள்விகள் :**

1. வக்கீல் கந்தனிடம் என்ன சொன்னார் ?
2. கந்தனுக்கு என்ன நேர்ந்தது ?
3. நீதி ஸ்தலத்தில் கந்தன் சொன்னது என்ன ?
4. வக்கீல் சோமசுந்தரத்தைக் கந்தன் எவ்வாறு ஏமாற்றினான் ?

**பயிற்சி :**

1. எதிர்ச்சொற்களை எழுது : கோழை, சுலபம், வாதி, சமாதானம், சிரிப்பு, கொடு.

2. நீதிபதி, பிரதிவாதி, பைத்தியம், எச்சரிக்கை, சமாதானம், ஏமாற்றம்—இச்சொற்களை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுது.

3. இக்கதையைக் கந்தன் தன் மனைவியிடம் கூறுவது போல எழுது.

# செய்யுட்பாடம்

## I. கலைமகள் துதி

ஆய கலைகள் அறுபத்து நான்கினையும்
ஏய உணர்விக்கும் என்னம்மை—தூய
உருப்பளிங்கு போல்வாள்என் உள்ளத்தி னுள்ளே
இருப்பளிங்கு வாரா திடர்.

—ஔவையார்

## II. வெற்றி வேற்கை

வேதியர்க் கழகு வேதமும் ஒழுக்கமும்,
உழவர்க் கழகு உழுதூண் விரும்பல்.
அறிவோர்க் கழகு கற்றுணர்ந் தடங்கல்.
வறியோர்க் கழகு வறுமையிற் செம்மை. (1)

பெற்றோர் எல்லாம் பிள்ளைகள் அல்லர் ;
உற்றோர் எல்லாம் உறவினர் அல்லர் ;
கொண்டோர் எல்லாம் பெண்டிரும் அல்லர் ;
கற்றோர் எல்லாம் அறிவோர் அல்லர். (2)

அடினும் ஆவின்பால் தன்சுவை குன்றாது ;
சுடினும் செம்பொன் தன்னொளி கெடாது ;
அரைக்கினும் சந்தனம் தன்மணம் அறாது ;
புகைக்கினும் காரகில் பொல்லாங்கு கமழாது. (3)

ஒருநாள் பழகினும் பெரியோர் கேண்மை
இருநிலம் பிளக்க வேர்வீழ்க் கும்மே ;
நூறாண்டு பழகினும் மூர்க்கர் கேண்மை
நீர்க்குள் பாசிபோல் வேர்க்கொள் ளாதே. (4)

சிறியோர் செய்த சிறுபிழை எல்லாம்
பெரியோ ராயிற் பொறுப்பது கடனே ;
சிறியோர் பெரும்பிழை செய்தன ராயின்
பெரியோர் அப்பிழை பொறுத்தலும் அரிதே. (5)

—அதிவீரராம பாண்டியர்

## III. மூதுரை

நன்றி யொருவற்குச் செய்தக்கால் அந்நன்றி
என்று தருங்கொல் எனவேண்டா ;—நின்று
தளரா வளர்தெங்கு தாளுண்ட நீரைத்
தலையாலே தான்தருத லால். (1)

அட்டாலும் பால்சுவையிற் குன்று(து) ; அளவளாய்
நட்டாலும் நண்பல்லார் நண்பல்லர் ;
கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்க ளேசங்கு
சுட்டாலும் வெண்மை தரும். (2)

அடுத்து முயன்றாலும் ஆகுநா ளன்றி
எடுத்த கருமங்க ளாகா ;—தொடுத்த
உருவத்தால் நீண்ட உயர்மரங்க ளெல்லாம்
பருவத்தா லன்றிப் பழா. (3)

உற்ற இடத்தில் உயிர்வழங்குந் தன்மையோர்
பற்றலரைக் கண்டால் பணிவரோ ?—கற்றூண்
பிளந்திறுவ தல்லாற் பெரும்பாரந் தாங்கின்
தளர்ந்து வளையுமோ தான் ? (4)

நீரளவே யாகுமாம் நீராம்பல் ; தான்கற்ற
நூலளவே யாகுமாம் நுண்ணறிவு ;—மேலைத்
தவத்தளவே யாகுமாம் தான்பெற்ற செல்வம் ;
குலத்தளவே யாகும் குணம். (5)

பண்டு முளைப்ப தரிசியே யானாலும்.
விண்டுமி போனால் முளையாதாம் ;—கொண்டபேர்
ஆற்றல் உடையார்க்கும் ஆகா தளவின்றி
ஏற்ற கருமம் செயல். (6)

மடல்பெரிது தாழை ; மகிழினிது கந்தம் ;
உடல்சிறிய ரென்றிருக்க வேண்டா ;—கடல்பெரிது
மண்ணீரும் ஆகாது ; அதனருகே சிற்றூறல்
உண்ணீரும் ஆகி விடும். (7)

கலவையாகிக் கொம்பாகிக் காட்டகத்தே நிற்கும்
அவையல்ல நல்ல மரங்கள் ;—சவைநடுவே
நீட்டோலை வாசியா நின்றான் குறிப்பறிய
மாட்டா தவன்நன் மரம். (8)

கான மயிலாடக் கண்டிருந்த வான்கோழி
தானும் அதுவாகப் பாவித்துத்—தானுந்தன்
பொல்லாச் சிறகைவிரித் தாடினாற் போலுமே
கல்லாதான் கற்ற கவி. (9)

—ஔவையார்

## IV. மழை

திக்குக்க ளெட்டுஞ் சிதறித்—தக்க
 தீம்தரிகிட தீம்தரிகிட தீம்தரிகிட தீம்தரிகிட
பக்க மலைக ளுடைந்து—வெள்ளம்
 பாயுது பாயுது பாயுது—தாம்தரிகிட
தக்கத் ததிங்கிட தித்தோம்—அண்டம்
 சாயுது சாயுது சாயுது—பேய்கொண்டு
தக்கை யடிக்குது காற்று—தக்க
 தாம்தரிகிட தாம்தரிகிட தாம்தரிகிட தாம்தரிகிட,

வெட்டியடிக்குது மின்னல்—கடல்
 வீசத்தி ரைகொண்டு விண்ணை யிடிக்குது ;
கொட்டி யிடிக்குது மேகம் ;—கூ
 கூவென்று விண்ணைக் குடையுது காற்று ;
சட்டச்சட சட்டச்சட டட்டா—என்று
 தாளங்கள் கொட்டிக் களைக்குது வானம் ;
எட்டுத் திசையு மிடிய—மழை
 எங்ஙனம் வந்த தடாதம்பி வீரா ! 2

*அண்டங் குலுங்குது, தம்பி !—தலை
 ஆயிரந் தூக்கியச் சேடனும் பேய்போல்
மிண்டிக் குதித்திடு கின்றான் ;—திசை
 வெற்புக் குதிக்குது ; வானத்துத் தேவர்
செண்டு புடைத்திடு கின்றார் ;—என்ன
 தெய்விகக் காட்சியைக் கண்முன்பு கண்டோம் !
கண்டோம், கண்டோம், கண்டோம்—இந்தக்
 காலத்தின் கூத்தினைக் கண்முன்பு கண்டோம் ! 3

—பாரதியார்

## V. நாட்டு வணக்கம்

எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி
இருந்ததும் இந்நாடே—இவர்
முந்தையர் ஆயிர மாண்டுகள் வாழ்ந்து
முடிந்ததும் இந்நாடே—அவர்
சிந்தையில் ஆயிரம் எண்ணம் வளர்ந்து
சிறந்ததும் இந்நாடே—இதை
வந்தனை கூறி மனதி லிறுத்தியென்
வாயுற வாழ்த்தேனோ—இதை
வந்தே மாதரம் வந்தே மாதரம்
என்று வணங்கேனோ ?

—பாரதியார்

## செய்யுட்பாடக் குறிப்புரை :

I. கலைமகள் துதி: ஆய - ஆகிய, கலை - அறிவியல் நூல், ஏய - பொருந்த.

II. வெற்றி வேற்கை: வேதியர் - வேதம் ஓதும் அந்தணர், உழுதூண் - தாமே உழுது பயிர் செய்து அருந்தும் உணவு, கற்றுணர்ந் தடங்கல் - நன்றாகக் கற்றுத் தேர்ந்து அடங்கியிருத்தல், வறியோர் - தரித்திரர், வறுமை-தரித்திரம், செம்மை - நல்லொழுக்கம்.

2. உற்ருேர் - உறவினர், கொண்டோர் - மணம் செய்துகொண்டவர், கற்ருேர் - படித்தவர்.

3. அடினும் - நன்ருகக் காய்ச்சினுலும், ஆ - பசு, கார் அகில் - கரிய அகில் கட்டை, பொல்லாங்கு - தீ நாற்றம், கமழாது - வீசாது.

4. கேண்மை - சினேகம், இருநிலம் - பெரிய பூமி, வீழ்க்கும் - ஊன்றும்.

5. அரிது - இல்லை.

III. மூதுரை : 1. நன்றி - உபகாரம், ஒருவற்கு - ஒருவனுக்கு, தாள் - பாதம். 2. அட்டாலும் - காய்ச்சினுலும், நட்டாலும் - சினேகித்தாலும். 3. கருமம் - காரியம், பருவம் - தகுந்த காலம், பழா - பழுக்க மாட்டா. 4. உற்ற-துன்பம் நேரிட்ட, பற்றலர் - பகைவர். 5. நுண்ணறிவு - கூர்மையான புத்தி, குலம் - பிறந்த குலம். 6. பண்டு - முதலில், ஆற்றல் - வலிமை. 7. கந்தம் - மணம், மண்ணீர் - கழுவும் நீர். 8. கவை - கிளை, நீட்டு ஓலை - தன் கையில் நீட்டித் தரப்பட்ட ஓலை. 9. பொல்லா - அழகில்லாத.

IV. மழை: 'தீம்தரிகிட' முதலானவை மழை பெய்யும் ஒலியைக் குறிப்பவை, திரை - அலை, விண் - ஆகாயம், அண்டம் - உலகம், திசை வெற்பு - எட்டுத் திக்கிலும் உள்ள மலைகள் (அட்டகுல பருவதங்கள்), கூத்து - நடிப்பு.

V. நாட்டு வணக்கம்: எந்தை - எம் தந்தை, முந்தையர் - முன்ளுேர், சிந்தை - மனம், வந்தனை - வணக்கம், வாய் உற - வாயார, வந்தே மாதரம் - தாயை வணங்குகிறேன்.

தமிழ்

# இன்ப வாசகம்

## ஐந்தாம் புத்தகம்

பதிப்பாசிரியர் :
S. V. வரதராஜ ஐயங்கார், M.A., M.O.L.,
விவேகானந்தர் கல்லூரி, சென்னை.

இண்டர்நாஷனல் பப்ளிஷிங் கம்பெனி
நுங்கம்பாக்கம் சென்னை-6
[விலை அணா ஒன்பது]

திருத்திய பதிப்பு—நவம்பர், 1953

Kabeer Printing Works, Madras (2390)

# முகவுரை

தமிழ் இன்ப வாசகம் என்னும் வரிசையில் இது ஐந்தாம் புத்தகம். நான்காம் புத்தகத்தில் ஒரு பொருளைப் பற்றிய பல பத்திகள் கொண்ட பாடங்களை வாசித்துத் தேர்ந்த மாணவர்கள், ஐந்தாம் புத்தகத்தில் பின்னும் பல பொருள்களைப்பற்றிய பாடங்களைப் படித்துத் தேர்ச்சி பெறும்படி நான்காம் வகுப்பைக்காட்டிலும் சற்று உயர்ந்த நடையில் பாடங்கள் அமைக்கப்பெற்றுள்ளன.

கற்ற பாடங்களின் பொருள் மாணவர் உள்ளத்தில் பதிவதற்கு ஏற்றவாறு ஆங்காங்கே பயிற்சிகள் புது முறையில் சேர்க்கப்பெற்றிருக்கின்றன. பாடங்களுக்கு விளக்கமாக இன்றியமையாத படங்களும் ஆங்காங்கே சேர்க்கப்பெற்றுள்ளன. வகுப்பின் தரத்திற்கு ஏற்ப, இடையிடையே பாட்டுக்களைச் சேர்த்துள்ளேன். இப்புத்தகம் நன்கு அமைவதற்கு இன்றியமையாதவை யாவும் இயன்ற வரை செய்துள்ளேன்.

தொடக்கப் பள்ளியிலுள்ள அனுபவம் நிறைந்த ஆசிரியர்கள், இப்புத்தகத்தில் செய்வதற்கு ஏற்ற திருத்தங்கள் உளவேல், அவற்றை எனக்குத் தெரிவிப்பின், மிகவும் நன்றி பாராட்டுவேன். தமிழ் அன்பர்கள் இப்புத்தகத்தை ஆதரித்து உதவுவார்கள் என்று நம்புகிறேன்.

பதிப்பாசிரியன்

# பொருளடக்கம்


| எண் | பொருள் | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | நமது நாடு | ... | 1 |
| 2. | மனிதருள் மாணிக்கம் | ... | 5 |
| 3. | தேனீ | ... | 10 |
| 4. | சுற்றுப் பிரயாணம் | ... | 16 |
| 5. | வேடனும் புருக்களும் | ... | 20 |
| 6. | சரோஜினி தேவியார் | ... | 23 |
| 7. | கிராம வாழ்க்கை | ... | 27 |
| 8. | மின்சாரம் | ... | 32 |
| 9. | பஞ்சத்தின் கொடுமை | ... | 36 |
| 10. | பொற்கைப் பாண்டியன் | ... | 38 |
| 11. | தீக்குச்சி | ... | 43 |
| 12. | குருவும் சீடரும் ஆற்றைக் கடந்தது | ... | 47 |
| 13. | நமது உணவு | ... | 52 |
| 14. | புது உலகம் | ... | 57 |
| 15. | தமிழன் இதயம் | ... | 63 |
| 16. | திருவள்ளுவர் | ... | 66 |
| 17. | காப்பிச் செடி | ... | 70 |
| 18. | ஐக்கிய நாடுகளின் கழகம் | ... | 74 |
| 19. | ஒற்றுமை | ... | 79 |
| 20. | சிலம்புச் செல்வி | ... | 81 |

## செய்யுட்பாடம்

I. கடவுள் துதி ... 88
II. நீதிச் செய்யுள்
1. வாக்குண்டாம் ... 89
2. நல்வழி ... 90
3. நீதி வெண்பா ... 91
4. நன்னெறி ... 92
5. திருக்குறள் ... 93
III. தமிழ் ... 93
IV. நாட்டு வணக்கம் ... 94
செய்யுட்பாடக் குறிப்புரை ... 95

# தமிழ் இன்ப வாசகம்

## ஐந்தாம் புத்தகம்

## 1. நமது நாடு

1. இந்தியா நமது நாடு; இந்நாட்டில் நாம் பிறந்தோம்; இதில் நாம் வாழ்ந்து வருகிறோம். இந்நாட்டைப் பாரதநாடு என்றும் சொல்லுவார்கள். பல நூற்றாண்டுகட்கு முன் பரதன் என்ற சக்கரவர்த்தி இந்நாட்டை ஆண்டு வந்தமையால், இதற்கு இப்பெயர் வழங்குகிறது.

2. நமது நாடு மிகவும் பழமையானது; நீர் வளமும் நிலவளமும் மிகுந்துள்ளது; சரித்திரப் பெருமை வாய்ந்தது. இதில் சுமார் நாற்பது கோடி மக்கள் வசிக்கிறார்கள். இதில் வாழ்க்கைக்கு வேண்டிய வசதிகள் பல உள்ளன; இயற்கைச் செல்வம் மிகுந்துள்ளது; அதனால், அயலார் பலர் இந்நாட்டின் மேல் படையெடுத்து வந்தனர். அவர்களில் பலர் இதையே தமது தாய் நாடாகக் கொண்டு இங்கேயே நிலைத்துவிட்டனர்.

3. பாரத நாட்டிற்கு வடக்கு எல்லை இமயமலை; தெற்கெல்லை இந்து சமுத்திரம்; கிழக்கிலும் மேற்கிலும் முறையே வங்காள விரிகுடாவும் அரபிக்கடலும் எல்லைகளாகும். இவையாவும் இந்நாட்டிற்கு இயற்கையாய் அமைந்துள்ள அரண்களாம்.

4. இமயமலை மிகவும் உயரமானது. இதனைக் கடந்து ஒருவரும் நமது நாட்டிற்குள் வர முடியாது. இம்மலையின் மேலே எப்பொழுதும் உறைபனி இருக்கும். இதன் சிகரங்கள் வானையளாவியுள்ளன.

இதனை வெள்ளிமலை எனவும் சொல்லுவார்கள். பாரத நாட்டின் நடுவில் விந்தியமலை இருக்கிறது. விந்தியமலைக்கு வடக்கிலுள்ள நிலப்பகுதி, இந்துஸ்தானம்; தெற்கில் உள்ளது தக்காணம். தமிழகம் தக்காணத்தின் தென்பகுதியில் உள்ளது. தக்காணத்தில் கிழக்கிலும் மேற்கிலும் இரு மலைத் தொடர்கள் உள்ளன; அவை கிழக்குத் தொடர்ச்சி மலைகளும் மேற்குத் தொடர்ச்சி மலைகளும் ஆகும்.

5. இந்துஸ்தானத்தில் கங்கை, சிந்து, பிரமபுத்திரா என்னும் நதிகள் பாய்கின்றன. இவை இமயமலையில் உற்பத்தியாகின்றன. கிருஷ்ணா, கோதாவிரி, காவிரி முதலான பல ஆறுகள் தக்காணத்தை வளம் செய்கின்றன. இந்நதிகளைப் புண்ணிய நதிகள் என்று நம்மவர்கள் போற்றுகிறார்கள். இவற்றின் கரைகளில் பல நகரங்கள் அமைந்துள்ளன. அந்த நகரங்களில் பல பெரிய ஆலயங்கள் உள்ளன. காசி, ஸ்ரீரங்கம், மதுரை என்பவை நதிக்கரையிலுள்ள சில புண்ணிய ஸ்தலங்கள்.

6. இந்நாட்டிலுள்ள மலைகளும், காடுகளும், நதிகளும், சோலைகளும் நம் இயற்கைச் செல்வங்கள். காடுகளிலும் மலைகளிலும் பல விலங்குகளும் பறவைகளும் வாழ்கின்றன. நதிகள் பாயும் சமவெளிகளில் நெல், கோதுமை முதலான உணவுப் பொருள்கள் விளைவிக்கப்படுகின்றன. பொன்னும் மணியும் பல இடங்களில் கிடைக்கின்றன. நாம் பண்டை நாள் முதல் நாகரிகத்தில் மேம்பாடு அடைந்துள்ளோம். நம் முன்னோர் அறிவிலும் ஆண்மையிலும் கல்வியிலும் புகழ் பெற்று விளங்கினர். இன்றும் பல மேன்மக்கள் நமக்கும் பேரும் புகழும் அளித்து வருகின்றார்கள்.

7. இந்நாள் வரை நாம் அன்னியருக்கு அடிமைப்பட்டிருந்தோம். அடிமை வாழ்வில் நாம் அமைதியைக் காணவில்லை. தங்கச் சங்கிலியால் கைகளைப் பிணைத்தாலும், அதில் உரிமை ஏது? பல ஆண்டுகளாகச் 'சுதந்திரம் நமது பிறப்புரிமை' என முழக்கி வந்தோம்; ஆனால், பயன் ஏற்படவில்லை. அது கண்ட காந்தியடிகள், அறப்போர் தொடங்கினார்; ஆங்கில அரசியலை அமைதியான முறையில் எதிர்க்கத் திட்டம் வகுத்தார். நாட்டு மக்கள் அவருக்குப் பேராதரவு அளித்தார்கள். எதிர்ப்பை அடக்க அரசியலார் பலவகையில் முயன்றனர். அறப்போரில் பலர் உயிர் நீத்தனர்; பலர் படுகாயம் அடைந்தனர்; பலர் சிறை சென்றனர். இறுதியில் நாம் வெற்றி அடைந்தோம். 1947-ஆம் ஆண்டில் நமது நாடு சுதந்திரம் அடைந்தது. இன்று நாம் சுதந்திர இந்திய மக்கள்.

8. பெற்ற உரிமையை நாம் பொன் போலப் போற்றி வரவேண்டும். நாடு நலம் பெற நாம் ஒன்றுபட்டு உழைக்கவேண்டும்; ஜாதி மத வேற்றுமைகளை நாம் மறந்து, நாட்டுப்பணியில் இறங்கவேண்டும். நம்மிடையே வேற்றுமை தோன்றினால், நாம் பெற்ற உரிமையை மீண்டும் இழக்க நேரும்; அதைக் காப்பதே நமது கடமை; அக்கடமையினின்றும் நாம் என்றும் வழுவலாகாது.

சொற்கள் :

| | | | |
|---|---|---|---|
| பழமை | வளப்பம் | ஆலயம் | மேன்மக்கள் |
| நீர் வளம் | அயலார் | வேற்றுமை | அடிமை |
| நிலவளம் | அரண் | ஸ்தலம் | சுதந்திரம் |
| வசதி | ஒற்றுமை | விலங்கு | வழுவலாகாது |
| இறுதி | உறைபனி | சமவெளி | முழக்கி |
| இயற்கை | சிகரம் | ஆண்மை | பேராதரவு |

### அரும்பத விளக்கம் :

வசதி - சௌகரியம், இறுதி - கடைசி, வளப்பம் - செழுமை, அரண் - கோட்டை, சிகரம் - உச்சி, ஸ்தலம் - இடம், விலங்கு - மிருகம், பண்டை - பழைய, ஆண்மை - வீரம், வழுவலாகாது - தவறலாகாது.

### வினுக்கள் :

1. நமது நாட்டிற்குப் 'பாரத நாடு' என்று ஏன் பெயர் வந்தது?
2. நம் நாட்டின் அரண்கள் யாவை?
3. இமயமலே எவ்வாறு பெருமையுடையது?
4. இந்நாட்டிலுள்ள நதிகள் யாவை?
5. நமக்கு எவ்வாறு உரிமை கிடைத்தது?
6. நமது நாட்டுக்கு நாம் செய்யவேண்டிய கடமை என்ன?

### பயிற்சி :

1. எதிர்ச்சொற்கள் எழுது :—நாடு, பிறந்து, முன், பழமை, பெருமை, ஒற்றுமை, இயற்கை, செல்வம், உள்ளே, புண்ணியம், மேன்மக்கள்.

2. இறுதி, இயற்கை, உறைபனி, வேற்றுமை, ஆண்மை, அறப்போர்—இவைகளே உன் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுது.

3. 'இன்று நாம் சுதந்திர இந்திய மக்கள்'—எவ்வாறு?

### இலக்கணம் :

நாம் தமிழர். நாம் வாழ்ந்து வருவது தமிழ் நாடு. தமிழ் நமது தாய்மொழி. நாம் தாய் மொழியைப் பிழையின்றிப் பேசவும், எழுதவும் பழகிக்கொள்ளவேண்டும். ஒரு மொழியில் சிறந்த முறையிற் பயிற்சி பெற இலக்கணம் உதவுகின்றது. ஆதலால், தமிழ் இலக்கணத்தை நாம் நன்கு கற்கவேண்டும்.



## 2. மனிதருள் மாணிக்கம்

1. இந்தியா நாட்டின் மகுடம் போன்றது காஷ்மீரம். இயற்கையின் எழிலுக்கு அது இருப்பிடம். பனிக்கட்டிகளால் மூடப்பட்ட வானளாவிய மலைகளும், பசுஞ்சோலைகளும், அவற்றைத் தழுவி ஓடும் மேகக் கூட்டங்களும் காஷ்மீரத்திற்கு ஒரு தனிச் சிறப்பை அளிக்கின்றன.

2. இத்தகைய சிறப்புக்களைப் பெற்ற காஷ்மீரத்தில் வாழ்ந்து வந்த சில குடும்பத்தினர், சுமார் இருநூறு ஆண்டுகட்கு முன்னர் அந்நாட்டை விடுத்து டில்லி மாநகரம் அடைந்தனர். டில்லி மன்னர் அவர்களை ஆதரித்தனர். அவர்கள் பிற்காலத்தில் கங்கைக் கரையிலுள்ள அலகாபாது என்னும் நகரில்

குடியேறினர். பண்டித மோத்திலால் நேரு என்பவர், அலகாபாதில் வழக்கறிஞராய் வேலை பார்த்து வந்தார். அவருடைய மனைவியார் சொரூபராணி என்னும் அம்மையாராவார். மோத்திலால் நேரு தமது தொழிலில் பெரும்பொருள் ஈட்டினர்; மிக்க சிறப்புடன் அந்நகரில் தம் குடும்பத்தினருடன் வாழ்ந்து வந்தார்.

3. 1899-ஆம் ஆண்டு, நவம்பர்த் திங்கள், 14-ஆம் நாளில் மோத்திலால் நேருவுக்கும் சொரூபராணிக்கும் பிறந்த செல்வக் குழந்தையே ஜவாஹர்லால். அம்மைந்தரைப் பெற்றோர் நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்த்து வந்தனர்; ஆங்கிலத் தாதிமாரை வேலைக்கு அமர்த்தித் தம் குழந்தையை நன்கு பேணி வந்தனர். ஜவாஹரின் பெரிய தாயாராகிய பீபி அம்மாள், அவருக்கு நமது புராண இதிகாசக் கதைகளைச் சொல்லி வந்தார். அவற்றைக் கேட்ட ஜவாஹர், தாமும் அக்கதைகளில் வந்துள்ள பெரியார்களைப் போல ஆக வேண்டும் என உறுதி கொண்டார்.

4. உரிய பருவத்தில் ஜவாஹர் கல்வி பயிலத் தொடங்கினர். அவருடைய ஆசிரியர் ஒரு வெள்ளையர். ஜவாஹர் ஆங்கில மொழியில் வல்லவராய் விளங்கினர். விஞ்ஞானக் கலையில் ஜவாஹருக்கு மிகுந்த விருப்பமுண்டு. விஞ்ஞான ஆராய்ச்சிக் கூடம் ஒன்று அமைத்து, அதில் அவர் பயிற்சிகள் செய்து வரலானர். பல பெரியாரின் சொற்பொழிவுகளைக் கேட்டும், நல்ல நூல்களைப் படித்தும் ஜவாஹர் பரந்த அறிவுடையவரானர். நாட்டுப் பற்று அவர் உள்ளத்தில் வேரூன்றி வரலாயிற்று. இந்நிலையில் அவர் இங்கிலாந்து சென்று, கல்லூரியில்

சேர்ந்து படித்துப் பட்டம் பெற்ருர். , தமது இருபத்து மூன்ருவது வயதில் 'பாரிஸ்தர்' என்ற பட்டம் பெற்ருர் ; பின்பு ஐரோப்பா எங்கும் சுற்றுப் பிரயாணம் செய்துவிட்டுத் தாய் நாடு திரும்பினுர்.

5. அடிமை வாழ்வு அகல வேண்டும் என்ற எண்ணத்துடன் ஜவாஹர் காங்கிரஸ் மகா சபையில் சேர்ந்து தொண்டாற்றி வரலானுர் ; அப்பொழுது உலகம் போற்றும் உத்தமராகிய காந்தியடிகளைச் சந்தித்தார். அது முதல் அவ்விருவருக்கும் நட்பு ஓங்கி வளர்ந்தது. 1916-ஆம் ஆண்டில் ஜவாஹர் கமலா என்ற பெண்மணியை மணம் செய்துகொண்டார். கமலாவும் கல்வி கேள்விகளில் சிறந்தவர் ; அஞ்சா நெஞ்சம் படைத்தவர். அவ்விருவர் விவாகத்தை மோத்திலால் நேரு மிக்க சிறப்புடன் டில்லியில் நடத்தி வைத்தார். ஜவாஹரும் கமலாவும் கருத்தொருமித்து இல் வாழ்க்கை நடத்தி வந்தனர்.

6. காந்தியடிகள் தோற்றுவித்த விடுதலைப் போரில் நேரு குடும்பத்தினர் பெரும்பணி ஆற்றினர் ; மோத்திலால் பன்முறை சிறை சென்ருர் ; ஜவாஹர்லால் சிறையிலேயே பல ஆண்டுகள் கழித்தார் ; கமலாவும் சிறைப்பட்டார். 1931-ஆம் ஆண்டு ஜனவரித் திங்களில் மோத்திலால் இம்மண்ணுலகை விட்டு மறைந்தார். 1936-ஆம் ஆண்டில் கமலா தீராப் பிணியால் உயிர் நீத்தார். இரு முறை ஜவாஹர் காங்கிரஸ் மகா சபையின் தலைவராய்த் தொண்டாற்றினுர். 1938ல் சொரூபராணியார் இறந்தார். இவற்ருல் ஜவாஹரின் மனவுறுதி தளரவில்லை. நாட்டுப் பணியில் அவர் தீவிரமாய் இறங்கினுர் ; காந்தியடிகளின் தலைமையில் உரிமைப் போரில் வெற்றியடைந்தார்.

7. 1947–ஆம் ஆண்டு, ஆகஸ்டு திங்கள், 14–ஆம் தேதி, நள்ளிரவில் இந்தியா சுதந்தர நாடாயிற்று. ஜவாஹர்லால் நேரு சுதந்தர இந்தியாவின் முதல் அமைச்சராய் அவ்வேலையில் பதவி ஏற்ருர். அந்நாள் முதல் அவர் சலியாத உழைப்பிஞல் இந்நாட்டை நிருவகித்துவருகிருர்.

8. ஜவாஹர் தூய்மையான உள்ளம் படைத்தவர் ; சாதி சமய வேற்றுமைகளை நீக்கியவர்; காந்தியடிகளின் உண்மையான சீடர் ; நாட்டுப் பணியில் நிகரில்லாதவர் ; குழந்தைகளிடம் பற்று மிகுந்தவர் ; பல கலைகளைக் கற்றுணர்ந்தவர் ; ஆங்கிலத்தில் பல நூல்களை எழுதியுள்ளவர் ; தமது வரலாற்றைத் தாமே எழுதியுள்ளார் ; தமது செல்வப் புதல்வியாராகிய இந்திராவுக்கு அவர் எழுதிய கடிதங்கள் உலகச் சிறுவர் சிறுமியர் அனைவரும் படித்துப் பயன்பெறத் தக்கவை. அவர் நீடூழி வாழ்ந்து நமது நாட்டுக்கு நல்வழி காட்டுமாறு திருவருள் புரிய இறைவனை நாம் வேண்டுவோமாக !

மனிதருள் மாணிக்கம் போன்ற ஜவாஹர் நீடூழி வாழ்க !

சொற்கள் :

| | | |
|---|---|---|
| மகுடம் | இறைவன் | கல்லூரி |
| எழில் | மைந்தர் | தொண்டாற்றி |
| வானளாவிய | மேனி | நட்பு |
| ஆதரித்தனர் | பேணி | சமயம் |
| மனவுறுதி | நற்பண்பு | அஞ்சா நெஞ்சம் |
| சமயம் | அமைச்சர் | இல் வாழ்க்கை |
| குடியேறினர் | விஞ்ஞானம் | பன்முறை |
| மரபில் | ஆராய்ச்சிக்கூடம் | தீராப்பிணி |
| வழக்கறிஞர் | சொற்பொழிவு | நீடூழி |
| ஈட்டிஞர் | சலியாத | வேரூன்றி |

### அரும்பத விளக்கம்;

மகுடம் - கிரீடம், எழில் - அழகு, வானளாவிய - வானத்தை எட்டுகின்ற, சமயம் - மதம், மரபு - பரம்பரை (குலம்), வழக்கறிஞர் - வக்கீல், இறைவன் - எங்கும் நிறைந்த கடவுள், மேனி - உடல், அமைச்சர் - மந்திரியார், சலியாத - வெறுப்படையாத (தளராத), தொண்டாற்றி - வேலை செய்து, தீராப்பிணி - தீராத நோய், தூய்மை - சுத்தம்.

### வினாக்கள் :

1. ஜவாஹருடைய பெற்றோர் யாவர்?
2. ஜவாஹர் இளமையில் என்ன செய்ய உறுதி பூண்டார்?
3. ஜவாஹர் எங்கெங்கே கல்வி பயின்றார்?
4. ஜவாஹர் யாரை, எப்பொழுது மணந்தார்?
5. ஜவாஹருக்கு நேரிட்ட துன்பங்கள் யாவை?
6. ஜவாஹருடைய குணநலன்கள் யாவை?

### பயிற்சி :

1. கோடிட்ட இடங்களில் தகுந்த சொற்களை அமை:-


(1) காஷ்மீர் —— இருப்பிடம்.
(2) மோத்திலால் நேரு —— தொழில் புரிந்து வந்தார்.
(3) ஜவாஹர் இங்கிலாந்தில் —— பட்டம் பெற்றார்.
(4) கமலா —— படைத்தவர்.
(5) ஜவாஹர் சுதந்தர இந்தியாவின் முதல் ——.

2. எதிர்ச்சொற்கள் எழுது :—நட்பு, அடிமை, போற்றுதல், மண்ணுலகம், தலைவர்.

3. வானளாவிய, மனவுறுதி, ஆராய்ச்சிக்கூடம், தூய்மை, பன்முறை—இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுது.

### இலக்கணம் :

பல வாக்கியங்கள் கொண்டது ஒரு பாரா அல்லது பத்தியாகும். ஒவ்வொரு பத்தியும் குறிப்பிட்ட ஒவ்வொரு கருத்தை விவரிக்கும். இப்பாடத்திலுள்ள பத்திகளுள் ஒவ்வொன்றுக்கும் பொருத்தமான தலைப்புக் கொடு.



# 3. தேனீ

1. இனிப்பான தின்பண்டங்களையே மனிதர் பெரிதும் விரும்புகின்றனர். தேன் ஓர் இனிப்பான பொருள். அது பூக்களிலிருந்து கிடைக்கிறது என்பது வியற்பிற்குரியது அல்லவா ? ஆயினும், இது உண்மையே. பூக்களினின்றும் தேன் எவ்வாறு கிடைக்கிறது என்பதை இப்பொழுது தெரிந்து கொள்ளலாம்.

2. மரங்களிலும் செடிகளிலும் காணப்படும் பூக்களைச் சுற்றித் தேனீக்கள் பறந்துகொண்டிருப்பதை நீங்கள் பார்த்திருப்பீர்கள். தேனீக்கள் ஒரு வகை ஈக்கள். பூக்களின் உள்ளே இனிப்பான ஒரு வகை இரசம் நிறைந்துள்ளது. பூக்களின் அழகிய நிறங்களையும் நறுமணத்தையும் கண்டு தேனீக்கள் அவற்றை நாடிச் செல்கின்றன. தேனீக்களின் வாயில் நீண்ட குழல் போன்ற ஒரு நாக்கு உள்ளது ; பூக்களினுள்ளே தேனீக்கள் அந்நாக்கினைச் செலுத்தி, அந்த இரசத்தைச் சேகரிக்கின்றன. தேனீக்கள் தம் கூடுகளுக்குச் செல்வதற்குள் அந்த இரசம் தேனாய் மாறுகிறது. தேனீக்கள் கூட்டை அடைந்ததும், தேனடையில் உள்ள அறைகளில் அத்தேனை நிரப்புகின்றன. இதுவே நமக்குப் பயன்படும் தேன் ஆகும்.

3. சில தேனீக்கள் காடுகளில் உயரமான மரக் கிளைகளில் கூடு கட்டும். அக்கூடு பெரிதாய் இருக்கும். அதற்குத் தேனடை என்பது பெயர். மக்கள் தீப்பந்தங்களைக்கொண்டு தேனீக்களை விரட்டிவிட்டு, அடையை எடுத்துப் பிழிந்து, தேன் எடுத்து, அதனைப் பயன்படுத்துவார்கள். மரக்கிளைகளிலும், மரப் பொந்துகளிலும், வீட்டுக் கூரைகளிலும் தேனீக்கள் கூடு கட்டும்.

4. ஒவ்வொரு தேன் கூண்டிலும் மூன்றுவகைத் தேனீக்கள் உண்டு. அவை இராணி ஈ, ஆண் ஈ,



வேலைக்கார ஈ என்பன. ஒரு கூட்டில் ஒரே இராணி ஈ மட்டுந்தான் இருக்கும். அதுவே தாய்த் தேனீ. அக்கூட்டிலுள்ள எல்லா ஈக்களுக்கும் தாய்த் தேனீ தலைமை வகிக்கும். ஒவ்வொரு கூட்டிலும் பல்லாயிரக் கணக்கான வேலைக்கார ஈக்கள் இருக்கும். அவை கன்னியீக்கள். அவை முட்டையிடுவதில்லை. அவற்றினிடையே சில ஆண் ஈக்களும் இருக்கும். ஆண் ஈக்களுக்குக் கொடுக்கும் இல்லை; நஞ்சும்

இல்லை. அவை சண்டை செய்ய மாட்டா. அவை சோம்பேறி ஈக்கள். அவை ஒரு வேலையும் செய்ய-மாட்டா. அவை கூட்டிலுள்ள தேனைக் குடித்துக்-கொண்டு, மாலையில் சற்று வெளியே சென்று, யாதொரு பொறுப்பும் இன்றிக் காலம் கழித்துவரும்.

5. ஓர் இராணி ஈ நூற்றுக்கணக்கான முட்டை-கள் இடும். கன்னி ஈக்கள் வளரும் வரை இராணி ஈ கூட்டில் அடைபட்டிருக்கும். அவை வெளி வந்ததும், அவற்றுள் ஒன்றுக்குக் குலத்தின் பொறுப்பை அளித்துவிட்டு, இராணி ஈ சில தேனீக்களுடன் கூட்டை விட்டு வெளியேறிவிடும்; பின்பு மற்றோ-ரிடத்தில் புதிய கூடு கட்டிக்கொள்ளும்.

6. முட்டைகளிலிருந்து முதலில் புழுக்கள் வெளிப்படும். அப்புழுக்களை வேலைக்கார ஈக்கள் கவனமாக வளர்க்கும். சில நாட்களில் அவை-களுக்குச் சிறகுகள் முளைக்கும். பின்பு அவை அறையை விட்டு வெளிவரும். வேலைக்கார ஈக்கள் நெடுந்தூரம் வெளியில் பறந்து சென்று, பூக்களி-லிருந்து தேனைக் கொண்டு வந்து கூட்டிலுள்ள சிற்றறைகளில் சேர்க்கும்.

7. தேன் கூடு மெழுகினால் ஆனது. மெழுகு தேனீக்களின் உடலிலிருந்தே உண்டாகிறது. தேன் கூட்டில் பல சிறு அறைகள் இருக்கும். கூட்டின் அடிப்புறத்திலுள்ள பெரிய அறையில் இராணி ஈ வசிக்கும்.

8. செயற்கை முறையிலும் தேன் சேகரிப்ப-துண்டு. தேனீக்கள் இயற்கையாகக் கட்டிய மெழுகு அடைகளைச் சேதம் செய்யாமல் எடுத்து, ஒரு பெட்-டியில் வைத்தால், தேனீக்கள் அந்த மணத்தினால் தூண்டப்பட்டு, அப்பெட்டியினுள்ளே குடி கொள்-

ளும். அப்பெட்டி இரண்டு அடுக்குகளாய் இருக்க வேண்டும். மேலடுக்கிலுள்ள அடைகளில் தேன் சேகரிக்கப்படும்; கீழ்ப்பகுதியில் முட்டைகளும் குஞ்சுகளும் இருக்கும். ஈக்கள் உள்ளே செல்லவும் வெளியே வரவும் அப்பெட்டியில் பல வட்டமான துவாரங்கள் இருக்கும். மேல் அடுக்கைத் தனியாக எடுத்து, அதிலுள்ள தேனை மட்டும் சேகரிக்கலாம். ஈக்களாவது முட்டைகளாவது சேதம் ஆகாமல், தேன் அடைகளைச் சுழலும் இயந்திரத்தில் வைத்துச் சுழற்றினால் தேன் வெளி வரும்.

9. தேன் உணவாகவும் மருந்தாகவும் பயன்படுகிறது. தேன் பல மருந்துகளுக்கு இன்றியமையாத சேர்க்கைப் பொருளாகும். அது உடம்புக்கு மிகுந்த ஆரோக்கியத்தைக் கொடுக்க வல்லது. தேனும் தினை மாவும் பண்டைத் தமிழ் நாட்டு வேடுவர்களின் உணவாகும். மரச்சாமான்களுக்கு மெருகிடத் தேன் மெழுகு பயன்படுகிறது.

10. தேனீ வளர்த்தல் இலாபகரமான தொழிலாகும். காடும் மலையும் சூழ்ந்துள்ள இடங்களில் உள்ளவர்கள், இத்தொழிலின் வாயிலாக வருவாய் பெறலாம். பண்ணைகளில் இதை ஓர் உதவித் தொழிலாக மேற்கொள்ளலாம். இத்தொழிலை மிகக் குறைந்த செலவில் செய்யலாம்.

சொற்கள் :

| | | | |
|---|---|---|---|
| வியப்பு | கன்னி | மெழுகு | துவாரம் |
| நறுமணம் | நஞ்சு | சேகரித்த | இயந்திரம் |
| தேனடை | சோம்பேறி | மெருகு | ஆரோக்கியம் |
| தலைமை | பொறுப்பு | செயற்கை | இலாபகரமான |
| பல்லாயிரம் | சேதம் | வருவாய் | பண்ணை |

### அரும்பத விளக்கம் :

வியப்பு - ஆச்சரியம், நறுமணம் - நல்ல வாசனை, நஞ்சு - விஷம், ஔஷதம் - மருந்து, வருவாய் - வருமானம், பண்ணை - பயிர்த்தொழில் செய்யும் இடம்.

### வினாக்கள் :

1. இயற்கையில் தேன் எவ்வாறு உண்டாகின்றது ?
2. தேன் கூடுகளை எங்கெங்கே காணலாம் ?
3. இராணி ஈயின் வேலை என்ன ?
4. தேன் சேர்க்கும் ஈக்கள் எவை ?
5. ஆண் ஈக்களின் வேலை யாது ?
6. தேன் எவ்வாறு சேகரிக்கப்படுகிறது ?
7. செயற்கை முறையில் தேன் எவ்வாறு சேகரிக்கப்படுகிறது ?
8. தேன் எவ்வாறு பயன்படுகிறது ?

### பயிற்சி :

1. நஞ்சு, சோம்பேறி, செயற்கை, ஆரோக்கியம், இலாபம், வருமானம்—இச்சொற்களுக்கு எதிர்ச்சொற்கள் எழுது.

2. ஒரு தேனீ, தன் கதையைத் தானே சொல்வது போலப் பத்து வரிகளில் எழுது.

3. ஆரோக்கியம், வருவாய், பண்ணை, பொறுப்பு, ஔஷதம், நறுமணம்—இச்சொற்களை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுது.

### இலக்கணம் :

‘ தேனீ தேனைச் சேகரிக்கிறது.’

இந்த வாக்கியத்தில் தேனீ—எழுவாய்; சேகரிக்கிறது—பயனிலை ; தேன்—செயப்படுபொருள்.

பயனிலைக்கு முன் யாரை அல்லது எதை என்னும் சொல்லைச் சேர்த்துக் கேட்கப்படும் கேள்விக்கு வரும் விடையே செயப்படுபொருள் ஆகும்.

பின்வரும் வாக்கியங்களிலிருந்து எழுவாய், பயனிலை, செயப்படுபொருள்களை எடுத்துக் கீழுள்ள அட்டவணையில் எழுது :

1. தேனீக்கள் மலர்களை விரும்பும்.
2. இராணி ஈ முட்டைகளை இடும்.
3. ஆண் ஈக்கள் தேனைச் சேகரம் செய்வதில்லை.
4. வேலைக்கார ஈக்களே தேனைச் சேகரிக்கின்றன.

| எண் | எழுவாய் | பயனிலை | செயப்படுபொருள் |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |
| 4. | | | |

# 4. சுற்றுப் பிரயாணம்

1. 'கிணற்றுத் தவளைக்கு நாட்டு வளப்பம் தெரியுமா ?' என்னும் பழமொழியை நீங்கள் கேட்டிருப்பீர்கள். கிணற்றில் வாழும் தவளைக்கு வேறு புகலிடம் ஏது ? அத்தவளை பல இடங்களைப் பார்க்கக்கூடுமா ? ஆனது பற்றியே, அதற்கு நாட்டின் வளப்பம் தெரியாது என்பது கருத்து. அது போலவே, நாமும் ஒரே இடத்தில் வாழ்ந்து வந்தால், வேறு பல இடங்களின் வரலாறுகளை அறிய முடியாது. பரந்த அறிவும் அனுபவமும் நமக்கு வேண்டும். நூல்களைப் படிப்பதால் மட்டும் நமது அறிவு வளராது. பல நாடுகளைச் சுற்றிப்பார்த்து, அங்கங்கே வாழும் மக்களின் நடையுடை பாவனைகளை அறிந்துகொண்டால்தான் நமது அறிவு வளரும். அதற்குச் சுற்றுப் பிரயாணமே சாலச் சிறந்தது.

2. மேனாட்டாரிடையே சுற்றுப் பிரயாணம் செய்வது ஒரு சிறந்த பழக்கமாய் இருந்து வருகிறது. மேனாட்டு மாணவர், தமது நாட்டில் கல்விப்பயிற்சி முடிந்தவுடன், வேறு நாடுகளில் சுற்றுப் பிரயாணம் செய்து, தமது அறிவை வளர்த்துக்கொள்கின்றனர் ; சுற்றுப் பிரயாணம் செய்யாவிடில், கல்விப் பயிற்சி முற்றுப் பெறுவதில்லை எனக் கருதுகின்றனர். பலர் ஒன்று கூடி, கப்பல்களிலும், வானவூர்திகளிலும், இரயில்களிலும், சைக்கிள்களிலும் சென்று, உலகிலுள்ள பல நாடுகளைச் சுற்றிப் பார்க்கின்றனர்.

3. பண்டை நாட்களிலும் பல அறிஞர் உலகிலுள்ள பல நாடுகளில் பிரயாணம் செய்துள்ளனர். கிரேக்க அறிஞர்களாகிய தாலமியும் மார்க்கோபோலோவும் உலகினைச் சுற்றி வந்துள்ளனர். சீன

அறிஞர்களான யுவான் சுவாங், பாஹியான் என்பவர்கள், பல நாடுகளைச் சுற்றி வந்துள்ளனர். புத்தமதத்தையும் கிறிஸ்தவமதத்தையும் பரப்புவதற்குப் பல அறிஞர் வேறு நாடுகளில் பிரயாணம் செய்துள்ளனர். பண்டைத் தமிழர் சிங்களத்திலும் கிழக்கிந்தியத் தீவுகளிலும் குடியேறியது சுற்றுப்பிரயாணத்தின் பயனே அல்லவா? புது உலகமாகிய அமெரிக்காவைக் கொலம்பஸ் கண்டதும் சுற்றுப் பிரயாணத்தினுல் அல்லவா? இவ்வாறு பண்டைக்காலத்தில் சுற்றுப் பிரயாணம் செய்தவர் பலர் சிறந்த குறிப்புக்களை எழுதி வைத்துள்ளனர். அவை சரித்திர உண்மைகளை அறியப் பேருதவியாய் உள்ளன.

4. நமது நாட்டிலும் பலர் உலகெங்கும் பிரயாணம் செய்கின்றனர். மாணவருள் பலர் மேனுடுகளுக்குச் சென்று கல்வி பயில்கின்றனர். அரசியல் வேலையாகச் சிலர் வேறு நாடுகளில் சுற்றுப் பிரயாணம் செய்கின்றனர். வாணிபத்திற்காகப் பல நாடுகளைச் சுற்றி வருபவர் சிலர்.

5. இங்ஙனம் பண்டைக் காலத்திலும் இந்நாளிலும் சுற்றுப் பிரயாணம் செய்ததனுல் பலர் தமது அறிவைப் பெருக்கிக் கொண்டனர். இந்த நோக்கத்துடன் இன்றும் பலர் சுற்றுப் பிரயாணம் செய்து வருகின்றனர்.

6. அறிவுப் பெருக்கம் உண்டாவது மட்டும் சுற்றுப் பிரயாணத்தின் பயன் அன்று. சுற்றுப் பிரயாணம் செய்வதால் பல வகையான இயற்கைக் காட்சிகளைக் காணலாம்; பல நாட்டு அறிஞர்களைச் சந்திக்கலாம்; பல நாட்டவருடைய நாகரிகத்தை உணரலாம்; அவர்கள் வாழும் வகையை அறியலாம்;

அந்நாட்டவரின் மேன்மையான பண்புகளை நமது நாட்டவரிடையே புகுத்தலாம்.

### சொற்கள் :

| | | | |
|---|---|---|---|
| பழமொழி | அனுபவம் | அறிஞர் | நாகரிகம் |
| புகலிடம் | சாலச்சிறந்தது | பேருதவி | பண்புகள் |
| வரலாறு | வானவூர்தி | வாணிபம் | பிரயாணம் |

### அருஞ்பத விளக்கம் :

புகலிடம் - அடைக்கலமாக அடையும் இடம், சால - மிகவும், அறிஞர் - கல்விமான்கள், வாணிபம் - வியாபாரம்.

### வினாக்கள் :

1. உலக முழுவதும் எவ்வெவ்வழிகளில் பிரயாணம் செய்யலாம்?

2. பண்டை நாளில் சுற்றுப் பிரயாணம் செய்தவர் யாவர்?

3. சரித்திர உண்மைகளை அறியப் பேருதவியாய் உள்ளவை எவை?

4. நம் நாட்டினர் எந்த நோக்கங்களுடன் சுற்றுப் பிரயாணம் செய்கின்றனர்?

5. சுற்றுப் பிரயாணம் செய்வதால் உண்டாகும் பயன்கள் யாவை?

### பயிற்சி :

1. எதிர்ச்சொற்கள் எழுது :

பழமொழி, அறிஞன், பெருக்கம், உண்மை, மேல்நாடு.

2. நடையுடை பாவனை, நாகரிகம், அறிஞர், புகலிடம், வரலாறு—இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுது.

3. நீ செய்துள்ள ஒரு பிரயாணத்தைப்பற்றி உன் நண்பனுக்கு ஒரு கடிதம் எழுது.

## இலக்கணம் :

'மேல் நாட்டு மாணவர் சுற்றுப் பிரயாணத்தின் மூலம் தமது அறிவைப் பெருக்கிக் கொள்கின்றனர்.'

இவ்வாக்கியத்தில் 'பெருக்கிக் கொள்கின்றனர்' என்பது ஒரு தொழிலைக் குறிக்கும் சொல்லாதலால், அது வினைச்சொல். அதுமட்டுமன்றி, அது அந்த வாக்கியத்தின் கருத்தை முற்றுபெறச் செய்கின்றது. அந்த வார்த்தையை நீக்கிவிட்டு வாக்கியத்தைப் படித்துப்பார். அப்போது கருத்து முற்றுப் பெறுமல் நிற்கின்றது. ஆதலின், 'பெருக்கிக் கொள்கின்றனர்' என்பது வினைமுற்று.

கீழ்க்காணும் வாக்கியங்களிலுள்ள வினைமுற்றுக்களை எடுத்தெழுது :

1. நம் நாட்டிலும் பலர் உலகெங்கும் பிரயாணம் செய்கின்றனர்.

2. மாணவர் பலர் மேனுடுகளுக்குச் சென்று கல்வி பயில்கின்றனர்.

3. சுற்றுப் பிரயாணத்தினுல் பல நன்மைகள் உண்டாகின்றன.

4. சுற்றுப் பிரயாணத்தில் பல இயற்கைக் காட்சிகளைக் காணலாம்.

5. சுற்றுப் பிரயாணம் செய்தால், பிற நாட்டவரின் நாகரிகத்தை உணரலாம்.



## 5. வேடனும் புறாக்களும்

வனமொன்றில் ஒருவேடன்
வளர்குருவிக் கூட்டினொடும்
இனமொன்று வேட்டைக்கரு
விகளுமெடுத் தேதிரியக்
கனமிருண்டு மழைபெய்யக்
காற்றெழும்ப அவன்நடுங்கி,
மனமருண்டோர் மரத்தின்கீழ்
வந்திருந்தான்; அப்போது 1

தங்குமதன் மேலிருந்த
புறாவொன்று, தன்பேடு
'எங்ககன்ற தோ! வனத்தில்
யாரேனும் பிடித்தாரோ!

மங்கியதோ!' எனப்புகல,
அது கேட்டு வனசரன் தன்
அங்கையுறு கூட்டிலுள்ள
பெண்புரு அமுதுசொலும்: 2

'முன்வினையால் இதுபெற்றேன்!
ஆயினுநின் முனம்அடைந்த
இன்னவனுக்கு உபசாரம்
புரி,' எனலும், எரிகொளுவி,
அன்னவனை அழைத்துடலின்,
குளிர்போக்கி, 'ஆகாரம்
என்னைநீ அருந்து,' என்று
வீழ்ந்திறக்க, இவன் நோக்கி 3

'அன்பினுல் நம்பொருட்டு
வீழ்ந்தஇதை அருந்திவிடில்
துன்பம்வரும்,' எனப்பேட்டை
விடுத்திடலும், சூழ்ந்ததுவும்
தன்புருடன் பிரிவதனுல்
வீழ்ந்திறக்க, தகுமிரண்டும்
இன்பமுறு தெய்வஉரு
எய்திவான் உலகடைந்த. 4

—பஞ்சதந்திரப் பாடல்

சொற்கள்:

| | | |
|---|---|---|
| இனம் | பேடு | கொளுவி |
| கனம் | மங்கியதோ | எரி |
| மருண்டு | அங்கை | வான் உலகு |

அரும்பத விளக்கம்:

இனம் ஒன்று - இனமாகப் பொருந்தும், கனம் - மேகம், மனம் மருண்டு - உள்ளம் மயங்கி, பேடு - பெண்

பறவை, மங்கியதோ - இறந்ததோ, வனசரன் - காட்டில் திரியும் வேடன், அங்கை, - உள்ளங்கை, கொளுவி - மூட்டி, எரி - நெருப்பு, சூழ்ந்து - நெருங்கி, வான் உலகு - சுவர்க்கம்.

### வினாக்கள் :

1. ஆண் புறா என்ன சொல்லியது?
2. பெண் புறா யாது சொல்லிற்று?
3. ஆண் புறா எவ்வாறு இறந்தது?
4. பெண் புறா ஏன் இறந்தது?
5. வேடுவன் முடிவு என்னவாயிற்று?

### பயிற்சி :

1. எரி, எறி; பரி, பறி; ஏரி, ஏறி; வலை, வளை; காளை, காலை—இச்சொற்களின் பொருளை எழுது.

2. மருண்டு, அங்கை, முன் வினை, உபகாரம்—இச்சொற்களை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுது.

3. உபகாரம், முன் வினை, துன்பம், பிரிவு, கீழ்—எதிர்ச்சொற்களை எழுது.



## 6. சரோஜினி தேவியார்

1. பண்டை நாள் முதல் இன்றளவும் இந்தியா-விற்குப் பேரும் புகழும் அளித்துள்ள பெரியார் பலர். அவர்களில் பெண்பாலாரும் உண்டு. படித்த பெண்டி-ருள் ஔவையார் முதன்மையானவர். ஆண்டவ-னிடம் பக்தி பூண்டு, என்றும் அவன் திருவடிகளை மறவாது, தம் பாக்களால் பெருமைப்படுத்திய ஆண்-டாள் என்ற சூடிக்கொடுத்த நாச்சியார் பெண்-பாலாரே. சுதந்தர வேட்கை மிகுந்து, போர்க்கோலம் பூண்டு, ஆங்கிலேயரை ஆண்மையுடன் எதிர்த்த ஜான்ஸி இராணி இலட்சுமிபாய் ஒரு பெண்பால் அல்லவா? கற்புக்கரசியான கண்ணகியைப் போற்றா தார் யாவர்? இவர்களைப் போலவே, இந்நாளில் நமது நாட்டிற்குப் புகழ் தேடியவருள், சரோஜினி தேவி-யாரும் ஒருவர்.

2. ஹைதராபாது என்னும் நகரில் அகோரநாத சட்டோபாத்தியாயர் என்ற பெரியார் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவர் மனைவியாரின் பெயர் வரத சுந்தரி தேவியார். அவ்விருவரும் வங்க நாட்டைச் சேர்ந்தவர். சரோஜினி தேவியார் அத்தம்பதிகளின் அருந்தவப் புதல்வியார். அவர் 1879-ஆம் ஆண்டில் பிறந்தார். இளமையிலேயே கல்வி பயிலத் தொடங்கிய தேவியார், தமது பன்னிரண்டாவது வயதில் 'மெற்றிக்குலேஷன்' பரீட்சையில் முதல்வராய்த் தேறினார். அக்காலத்திலேயே அவர் சில கவிதைகளையும் ஒரு நாடகத்தையும் இயற்றினார். பின்பு அவர் இங்கிலாந்து சென்று, மூன்றாண்டுகள் அங்கே தங்கி, ஆங்கில மொழியில் புலமை பெற்றார். ஆங்கில அறிஞர் பலர் அவர் புலமையைப் புகழ்ந்து பாராட்டினர்.

3. தேவியார் இங்கிலாந்திலேயே தம் கதைகளைத் தொகுத்து ஒரு நூலாக்கி வெளியிட்டார்; பின்பு ஐரோப்பாவில் சுற்றுப் பிரயாணம் செய்து விட்டுத் தமது தாய் நாடு திரும்பினார்; இங்குப் பெண்களின் நிலையைக் கண்டு மனம் பொறாமல், அவர்களுக்குத் தொண்டு செய்ய விரும்பினார். பல கூட்டங்களில் அவர் சொற்பொழிவுகள் ஆற்றினார்; பல கட்டுரைகள் எழுதினார். விரைவில் அவர் அரசியல் துறையில் நாட்டம் கொண்டார்; காந்தியடிகளின் உற்ற துணைவியராய் நின்று, விடுதலை இயக்கத்தில் சேர்ந்து, பல முறை சிறை புகுந்தார். காந்தியடிகளின் அன்பும் நட்பும் அவருக்குக் கிடைத்தன.

4. இங்கிலாந்திலிருந்து திரும்பியதும், தேவியார் ஹைதராபாதிலேயே மருத்துவத் தொழிலாற்றி வந்த டாக்டர் நாயுடு என்ற ஒருவரை மணம் புரிந்துகொண்டார். சரோஜினி தேவியார் அந்தணர்

குலத்தவராயினும், நாயுடுவகுப்பைச்சேர்ந்த ஒருவரை மணந்தது, அவரது சீர்திருத்த மனப்பான்மையைத் தெரிவிக்கிறது. இத்திருமணத்தின் பயனாக அம்மையாருக்கு இரு பெண்களும் இரு பிள்ளைகளும் தோன்றினார்கள்.

5. அம்மையார் 1924-ஆம் ஆண்டில் அகில இந்திய காங்கிரசுக்குத் தலைமை தாங்கினார். 1947-ஆம் ஆண்டில் இந்தியா விடுதலை பெற்றதும், சரோஜினி தேவியார் உத்தரப் பிரதேசத்தின் கவர்னராக நியமிக்கப்பட்டார். இந்திய அரசியலில் கவர்னராகத் தொண்டாற்றிய முதல் இந்தியப் பெண்மணி தேவியாரேயாவார்; கவர்னர் பதவி வகித்த சில நாட்களில் உத்தரப் பிரதேச மக்களின் அன்பைப் பெற்றார். 1948-ஆம் ஆண்டில் தேவியார் இறைவனடி சேர்ந்தார்.

சொற்கள் :

| | | | |
|---|---|---|---|
| ஆண்டவன் | தம்பதிகள் | தொண்டு | மருத்துவம் |
| திருவடி | கவிதை | ஆற்றினார் | மனப்பான்மை |
| பாக்கள் | இயற்றினார் | கட்டுரை | சீர்திருத்தம் |
| வேட்கை | புலமை | துறை | திருமணம் |
| கற்புக்கரசி | பொறாமல் | நாட்டம் | கவர்னர் |

அரும்பத விளக்கம்:

பெண்டிர் - பெண் மக்கள், திருவடி - அழகிய பாதம், பாக்கள் - பாடல்கள், வேட்கை - விருப்பம், தம்பதிகள் - கணவனும் மனைவியும், கவிதை - பாடல், துறை - வழி, நாட்டம் - விருப்பம், உற்ற - பொருந்திய.

வினாக்கள் :

1. பாரத நாட்டிற்குப் பேரும் புகழும் அளித்த பெண் பாலார் யாவர்?

2. சரோஜினி தேவியாரின் பெற்றோர் யாவர்?

3. சரோஜினி தேவியார் இளமையில் தம் திறமையை எவ்வாறு காண்பித்தார்?

4. காந்தி அடிகளின் அன்பு சரோஜினி தேவியார்க்கு எவ்வாறு கிடைத்தது?

5. சரோஜினி தேவியார் எவரை மணம் புரிந்தார்?

6. சரோஜினி தேவியார் உரிமை பெற்ற இந்தியாவில் வகித்த பதவி யாது?

7. சரோஜினி தேவியாரின் குண விசேடங்கள் யாவை?

### பயிற்சி :

1. எதிர்ச் சொற்கள் எழுது:—பெண்டிர், கவிதை, நட்பு, மறைந்த, வாழ்வு, படித்த, புகழ், இளமை.

2. வேட்கை, கவிதை, துறை, சீர்திருத்தம்—இச்சொற்களை உன் சொந்த வாக்கியங்களில் வைத்து எழுது.

### இலக்கணம் :

கீழ்வருவனவற்றைப் படி :

சரோஜினி தேவியார் இளமையிலேயே கல்வி பயிலத் தொடங்கினர்.


சரோஜினி தேவியார் இளமையிலேயே கல்வி பயிலத் தொடங்கவில்லை.

இவற்றுள் முதலில் காணப்படும் வாக்கியத்திலுள்ள வினைமுற்று, தொழில் நிகழ்ச்சியைக் குறிக்கின்றது. இரண்டாம் வாக்கியத்திலுள்ள வினைமுற்று, தொழில் நிகழாமையைக் காட்டுகின்றது. முதலில் உள்ளது உடன்பாடு என்றும், அடுத்த வாக்கியத்திலுள்ளது எதிர்மறை என்றும் சொல்லப்படும்.

கீழ்க்காணும் வாக்கியங்களை எதிர்மறை வாக்கியங்களாக மாற்றி எழுது :

1. சரோஜினி தேவியார் தமது பன்னிரண்டாவது வயதில் 'மெற்றிக்குலேஷன்' பரீட்சையில் தேறினர்.

2. சரோஜினி தேவியார் சுற்றுப் பிரயாணம் செய்து முடித்தபின் சமூகத் தொண்டு செய்ய விரும்பினர்.



## 7. கிராம வாழ்க்கை

1. நமது பெருமை பெற்ற பாரத நாட்டில் கிராமங்களே அதிகம். நவீன நாகரிகத்தின் பயனாகப் பல நகரங்கள் தோன்றியுள்ள போதிலும், பெரும்பான்மையான மக்கள் இன்னும் கிராமங்களிலேயே வாழ்ந்து வருகின்றார்கள். நகரங்களில் ஓய்வில்லாமல் தொழில் செய்யும் மக்களுக்குக் கிராம வாழ்க்கை அமைதியை அளிக்கும். கிராமத்திலுள்ள இயற்கைக் காட்சிகள் மனத்திற்கு இன்பம் தரும். சோலைகளும், நீர் நிலைகளும், பசும்புல் தரைகளும் மாசு மறுவில்லாத மனம் படைத்த மக்களின் நிலையும் காண்பவர் மனத்தைக் கவரும் தன்மை வாய்ந்தவை. இத்தகைய கிராம வாழ்க்கையைப்பற்றி நாம் அறிந்துகொள்ள வேண்டும்.

2. கிராமங்களில் வசிப்பவர்களில் பெரும்பாலாலோர் வேளாண்மைத் தொழில் செய்கின்றனர். உல-

கின்கண் மக்கள் உயிர் வாழ்வதற்கு உணவே இன்றியமையாதது. உணவுப் பொருளைக் கிராம வாசிகளே விளைவித்து வருகிறார்கள். நிலத்தை உழுது, பண் படுத்தி, விதைத்து, நாற்று நட்டு, நீர் பாய்ச்சி, களை பிடுங்கி, அறுவடை செய்து, பல விதமான தானியங்களை அவர்கள் உற்பத்தி செய்கிறார்கள். ஆகையால் திருவள்ளுவர், ‘ உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்,’ என்று கூறியுள்ளார்.

3. கிராம மக்களின் வாழ்க்கை சோம்பேறி வாழ்க்கையன்று. காலையில் கோழி கூவுமுன் அவர்கள் தோளின்மேல் கலப்பையைத் தாங்கி, மாடுகளை ஓட்டிக்கொண்டு நிலங்களுக்குச் செல்வார்கள் ; நடுப் பகல் வரை வயல்களில் வேலை செய்வார்கள். நடுப் பகலில் அவர்களுடைய மனைவி மக்கள் கொண்டு வரும் உணவை உண்டு, பின்னும் மாலை வரை வயல் வேலைகளைச் செய்வார்கள் ; கதிரவன் மாலையில் மறைந்ததும், தத்தம் வீடுகளுக்குத் திரும்புவார்கள்.

4. கிராமங்களிலுள்ள வீடுகள் பெரும்பாலும் மண்ணாலாகிய சிறு குடிசைகளே. அவை தென்னங் கீற்றுக்களாலும், வைக்கோலாலும் வேயப்பட்ட கூரைகளையுடையவை. பெண்கள் தினந்தோறும் தங்கள் வீடுகளைப் பெருக்கி மெழுகுவார்கள் ; பண்டிகை நாட்களிலும் திருவிழாக் காலங்களிலும் வீடுகளுக்குச் செம்மண் இட்டு, அழகு செய்வார்கள். தனவந்தர், ஓட்டு வீடுகளிலும் மாடி வீடுகளிலும் வசிப்பர்.

5. கிராம மக்கள் எளிய வாழ்க்கையை மேற் கொண்டவர்கள். அவர்களுடைய உடையும் உணவும் எளியவை. அவர்கள் நல்ல தேகக்கட்டு படைத்தவர்கள் ; நேர்மையான குணம் உடையவர்கள் ; தைரிய

மும் சுறுசுறுப்பும் வலிமையும் பொருந்தியவர்கள்; நாகரிக வாழ்க்கையின் ஆடம்பரங்களை விரும்பாதவர்கள்.

6. ஆனால், இப்பொழுது கிராமங்கள் சீரழிந்து விட்டன. பிழைப்பின் பொருட்டுப் பலர் நகரங்களை நாடுகின்றனர். கிராமமக்களில் பெரும்பாலார் கல்வியறிவு இல்லாதவர். நோயும் ஏழ்மையும் அவர்களை வருத்துகின்றன. கிராமமெங்கும் அசுத்தம் குடிகொண்டுள்ளது. நீர் நிலைகள் வற்றி நீர் வசதியின்றி உள்ளன.

7. இந்நிலைமை சீரடைய வேண்டும். கிராமம் நேர்த்தியாகவும் தூய்மையாகவும் இருத்தல்வேண்டும். வீடுகள் காற்றும் வெளிச்சமும் உள்ளவைகளாகக் கட்டப்பட வேண்டும். நீர் நிலைகள் சுத்தமாக வைக்கப்பட வேண்டும். ஒவ்வொரு கிராமத்திலும் ஒவ்வொரு பாடசாலை வேண்டும்; ஒரு வாசகசாலை, ஒரு கூட்டுறவுச் சங்கம், விளையாட்டு இடம் ஆகிய யாவும் இருக்க வேண்டும். அப்பொழுது கிராம வாழ்க்கை மகிழ்ச்சி பொருந்தியதாய் இருக்கும்.

8. இவ்வாறு கிராமங்கள் சீர்திருந்தினால், படித்தவர்களும் அங்கு வசிப்பார்கள்; கிராமத்தைச் சீர்திருத்தத் தங்களாலான உதவியைச் செய்வார்கள். கிராம மக்கள் ஓய்வு நேரங்களை வீணாக்காமல், ஏதேனும் ஒரு குடிசைத் தொழிலை மேற்கொள்ள வேண்டும்; கிராமத்தைச் சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும்; ஒற்றுமையாக வாழ வேண்டும். பொறாமையும் பிணக்கும் வறுமையும் கிராமங்களினின்று நீங்க வேண்டும். மனித சமூகத்தில் அன்பும் அமைதியும் நிலவ வேண்டுமாயின், கிராமங்கள் செழிக்க வேண்டும்.

## சொற்கள் :

| | | |
|---|---|---|
| நவீனம் | வேயப்பட்ட | ஆடம்பரம் |
| அமைதி | தூய்மை | சீரழிந்து |
| மாசு மறு | சமூகம் | பாசனவசதி |
| வேளாண்மை | செழிக்க | மேற்கொள்ள |
| கதிரவன் | தேகக்கட்டு | பிணக்கு |

## அருஞ்பத விளக்கம் :

நவீனம் - புதுமை, பெரும்பான்மை - அதிகம், மாசு மறு - குற்றங்குறை, இன்றியமையாதவை - இல்லாமல் முடியாதவை, கதிரவன் - சூரியன், ஆடம்பரம் - பகட்டு.

## வினாக்கள் :

1. கிராம வாழ்க்கையில் காண்பவர் மனத்தைக் கவரும் தன்மை வாய்ந்தவை யாவை?
2. புகழுக்குரியவர் யார்? எவ்வாறு?
3. கிராம மக்களின் வாழ்க்கை எப்படிப்பட்டது?
4. கிராமத்தில் வீடுகள் எப்படி இருக்கும்?
5. இப்பொழுது கிராமங்களின் நிலைமை என்ன?
6. எப்பொழுது கிராம வாழ்க்கை மகிழ்ச்சி தரும்?
7. கிராமங்கள் செழிக்க என்ன செய்ய வேண்டும்?

## பயிற்சி :

1. வறுமை, அமைதி, தனவந்தர், சுத்தம், சுறுசுறுப்பு, பெருமை, அதிகம்—எதிர்ச்சொற்களை எழுது.

2. இன்றியமையாதது, மாசுமறுவில்லாத, வேளாண்மை, ஆடம்பரம், திருவிழா—இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுது.

3. நீ ஒரு கிராமத்திற்குச் சென்று சுற்றிப் பார்த்த விவரத்தைப் பற்றி ஒரு கட்டுரை எழுது.

4. சேர்த்து எழுது :—குடிசை+தொழில், நீர்+நிலை, ஒரு+ஒரு, தேகம்+கட்டு.

5. சரியா, தவறு என்பதை எழுது: சரியானால், வாக்கியத்திற்கு நேராக இக்குறி (✓) இடு; தவறானால், இக்குறி (×) இடு.

(1) கிராமங்கள் இந்தியாவில் மிகவும் குறைவு.

(2) கிராம மக்கள் ஆடம்பர வாழ்க்கையில் பிரியம் உள்ளவர்கள்.

(3) தனவந்தர் மாடி வீடுகளில் வசிப்பர்.

(4) கிராமங்களில் நீர் நிலைகள் சுத்தமாய் இருப்பதில்லை.

(5) 'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்.'

இலக்கணம் :

கீழ்க்காணும் வாக்கியங்களில், உடன்பாட்டு வாக்கியங்களை எதிர்மறை வாக்கியங்களாகவும், எதிர்மறை வாக்கியங்களை உடன்பாட்டு வாக்கியங்களாகவும் மாற்றி எழுது :

1. நகரங்களில் ஓய்வில்லாமல் தொழில் செய்பவருக்குக் கிராமவாழ்க்கை அமைதியை அளிக்கும்.

2. கிராம மக்களின் வாழ்க்கை சோம்பேறி வாழ்க்கை அன்று.

3. கிராம வாசிகள் நடுப்பகல் வரை வயல்களில் வேலை செய்வார்கள்.

4. கிராம மக்கள் தைரியமும், சுறுசுறுப்பும், வலிமையும் உடையவர்கள்.

5. கிராம வாசிகள் ஆடம்பர வாழ்க்கையை விரும்பாதவர்கள்.

## 8. மின்சாரம்

1. இன்று உலகில் நாம் பல அற்புதங்களைக் காண்கிறோம். பேசும் படங்களையும், எண்ணெயும் திரியும் இல்லாத விளக்குகளையும், தொலைவில் நிகழும் நிகழ்ச்சிகளைக் கேட்பதற்குப் பயன்படும் 'ரேடியோ'வையும், வானத்தில் பறக்கும் விமானங்களையும், நாம் கண்டும் கேட்டும் மகிழ்கிறோம். இத்தனை வேலைகளையும் செய்வது மின்சாரம் என்னும் ஒரு வகைச் சத்தியேயாகும். மின்சாரத்தின் உதவியால் நாம் பெற்றுள்ள சாதனங்கள் பல.

2. வானத்தில் மேகங்களில் மின்னல் உண்டாவது மின்சார சத்தியினலேதான். இவ்வுண்மையை, பெஞ்சமின் பிராங்கிளின் என்ற அமெரிக்கர் முதன்முதல் கண்டு பிடித்தார். மின்சாரம் மிக எளிதில் உலோகங்களின் வழியே பாயும். ஆதலால், கட்டடங்களின் உச்சியில் இடி தாங்கிகள் நிறுத்தப் படுகின்றன. இடி தாங்கிகள் உலோகத்தினலானவை. கட்டடங்களின்மேல் பாயும் மின்சாரசத்தி, இடி தாங்கிகள் வழியாகப் பூமிக்குட்செல்லும்; கட்டடங்கள் சேதமடைய மாட்டா.


3. மின்சார சத்தியை ஒளியாகவும் வெப்பமாகவும் மாற்றலாம். நீர் வீழ்ச்சிகளின் சத்தியைப் பெரிய இயந்திரங்கள் மின்சார சத்தியாக மாற்றுகின்றன. இச்சத்தி தாமிரக் கம்பிகளின் மூலமாகப் பாய்ச்சப்படுகிறது. இது ஆங்காங்கே தேவைக்குத் தகுந்தபடி ஒளியாகவும் வெப்பமாகவும் தகுந்த கருவிகளைக் கொண்டு மாற்றப்படுகிறது.

4. இச்சத்தி பல அற்புதங்களைச் செய்கிறது. இதனுல், இரயில் வண்டிகள் இயங்குகின்றன; இயந்-

திரங்கள் இயக்கப்படுகின்றன ; காற்றேட்டத்திற்காக விசிறிகள் சுழல்கின்றன ; விளக்குகள் பிரகாசிக்கின்றன ; சமையலும் செய்யப்படுகிறது.




டெலிபோன்



ரேடியோ

தந்தி வாயிலாகச் செய்திகளை அனுப்புவதும், தொலைவிலுள்ளவர்களோடு ' டெலிபோன் ' என்னும் கருவியால் பேசுவதும், கம்பியில்லாத் தந்தி மூலம் செய்திகளை அனுப்புவதும், சிகிச்சை செய்ய உதவும் ' எக்ஸ்-ரே ' என்ற கருவியும், ரேடியோவைப் பயன்படுத்துவதும் மின்சார சக்தியாலேதான் நடைபெறுகின்றன.



எக்ஸ்-ரே

5. ' வயர்லெஸ் ' என்ற கம்பியில்லாத் தந்தியின் உதவியினால் வானவூர்தியில் செல்கிறவர்களோடும், கப்பலில் பிரயாணம் செய்பவர்களோடும் பேசக்கூடும். நமது உடலினுள்ளே இருக்கும் உறுப்புக்களின் அமைப்பை அறிந்து தகுந்த சிகிச்சை அளிக்க எக்ஸ்-ரே என்னும் கிரணம் பயன்படுகிறது. இவை-

களேயன்றி, மின்சார மணிகள், மாடிகளில் ஏறி இறங்க மின்சாரத் தொட்டில்கள், மின்சார அடுப்புக்கள், மின்சாரக் கடிகாரங்கள், மின்சாரத் தையல் இயந்திரங்கள் போன்ற பல சாதனங்கள் உள்ளன.

6. தென்னிந்தியாவில் மேட்டூர், பைக்காரா, சிவசமுத்திரம் முதலான இடங்களில் மின்சார சக்தி உற்பத்திசெய்யப்படுகிறது. இவை அரசியலார் நிருவாகத்திலுள்ளன. சில இடங்களில் வேறு வழிகளிலும் இச்சக்தி உற்பத்தி செய்யப்படுகிறது.

7. மேல் நாடுகளில் கிராமங்களிலும் மின்சாரத்தின் உதவியால் கைத்தொழில்கள் பல நடைபெறுகின்றன. பயிர்த்தொழிலுக்கும் மின்சாரம் பலவகையில் பயன்படுகிறது. ஆனால், இச்சக்தியைக் கையாளுவதில், மிகவும் கவனத்துடன் இருக்கவேண்டும். இல்லாவிட்டால், உயிருக்கு அபாயம் உண்டாகும்.

சொற்கள் :

| | | |
|---|---|---|
| அற்புதம் | இடி தாங்கி | நிருவாகம் |
| நிகழ்ச்சி | நீர் வீழ்ச்சி | வாயிலாக |
| ரேடியோ | இயங்குகின்றன | பயன்படுகிறது |
| மின்சாரம் | பிரகாசிக்கின்றன | கையாளுதல் |
| சாதனம் | சிகிச்சை | அபாயம் |

அரும்பத விளக்கம் :

அற்புதம் - அதிசயம், நிகழ்ச்சி - நடைமுறை, சாதனம் - கருவி, கையாளுதல் - பயன்படுத்துதல்.

வினாக்கள் :

1. உலகில் நாம் இன்று காணும் அற்புதங்கள் யாவை ?

2. 'இடி தாங்கி' என்பது என்ன ? அதனால் ஏற்படும் நன்மை என்ன ?

3. மின்சாரத்தினுல் உண்டாகும் அற்புதங்கள் எவை ?

4. சென்னை மாகாணத்தில் மின்சாரம் எங்கெங்கே உற்பத்தியாகிறது ?

5. மின்சாரத்தை நாம் எவ்வாறு கையாள வேண்டும் ?

## பயிற்சி :

1. நிருவாகம், சிகிச்சை, நிகழ்ச்சி, கைத்தொழில், அபாயம்—இச்சொற்களை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுது.

2. சரியாகப் பொருத்தி எழுது :

| | |
|---|---|
| ரேடியோவில் | சிகிச்சை செய்யலாம். |
| டெலிபோனில் | நிகழ்ச்சிகளைக் கேட்கலாம். |
| கம்பியில்லாத் தந்தியில் | மாடி ஏறி இறங்கலாம். |
| எக்ஸ்-ரேயால் | பேசலாம். |
| மின்சாரத் தொட்டிலில் | செய்தி அனுப்பலாம். |

## இலக்கணம் :

இப்பாடத்தில் வந்துள்ள பத்துப் பெயர்ச் சொற்களுக்குத் திணை, பால், எண் எழுது.

## 9. பஞ்சத்தின் கொடுமை

பாண்டிநல் நாட்டார்கள் பரதேசம் போனார்கள் ;
மழைதான் கிடையாது மதுரைநகர்ச் சீமையிலே ;
காய்ந்துலர்ந்து போயினவே கனமதுரைப் பட்டணத்
எரிந்து புகைந்ததே ஈரங் கிடையாமல் ; [தில் ;
குடிக்கநீர் கிட்டாது குளங்கள் மடுக்களெல்லாம்,
காகம் குடிப்பதற்கும் கரண்டிஜலம் கிட்டாது ;
ஆறு குளங்களெல்லாம் அறவே வறண்டனவே ;
ஏரி வறண்டனவே ஏற்றக்கோல் ஆழமட்டும் ;
பூமிக்குள் சூடெழும்பிப் பொங்கிற்றே செந்தழலாய்.
விளைவு கிடையாது வேந்தன் மதுரையிலே ;
களைவு கிடையாது கனமதுரைப் பூமியிலே ;
சருகா யுலர்ந்தனவே தழைத்த மரங்களெல்லாம் ;
பூமி யுலர்ந்தது பூண்டும் கிடையாமல் ;
பறவை கிடையாது பாண்டியன் தேசத்திலே ;
குடிவலசை வாங்கினார்கள் கொடிமதுரை யுள்ளவர்
பஞ்சை பனாதிகளாய்ப் பரதேசம் போனார்கள் ; [கள் ;
அன்னம் கிடையாதே அழகுள்ள மதுரையிலே ;
தங்க நிழலில்லை தனிமதுரைப் பூமியிலே ;
ஊரி லிருந்தவர்கள் உறக்கமிகக் கொண்டார்கள் ;
அன்ன விசாரம் அதுவே பெரிதாச்சு ;
பன்னிரண்டு வருடம் பாரக் கருப்பாச்சு ;
சரீரம் வெளுத்தார்கள் ; சல்லடைக்கண் ஆனார்கள் ;
பெண்டுடனே பிள்ளை புருஷர் பரதேசம்
திக்குகள் கெட்டுத் திசைமாறிப் போனார்கள் ;
அவ்வா றலைந்ததே அணிமதுரைப் பூமியெல்லாம்.

—அல்லி அரசாணி மாலை

சொற்கள் :

| | | | |
|---|---|---|---|
| பரதேசம் | அறவே | செந்தழல் | பஞ்சம் |
| உறக்கம் | கருப்பு | அணி | குடிவலசை |

அரும்பத விளக்கம் :

அறவே - முற்றிலும், தழல் - நெருப்பு, கருப்பு - பஞ்சம், வலசை - வேற்று நாட்டிற்கு ஓடுதல்.

வினாக்கள் :

1. பாண்டி நாட்டு மக்கள் ஏன் பரதேசம் போனார்கள்?

2. பாண்டி நாட்டில் எத்தகைய பஞ்சம் தோன்றியது?

3. பஞ்சம் எத்தனை ஆண்டுகள் இருந்தது?

பயிற்சி :

1. பஞ்சம் உண்டாவதற்கு அறிகுறிகள் என்ன?

2. பரதேசம், மழை, உறக்கம், கருப்பு—எதிர்ச் சொற்கள் எழுது.

3. சூடெழும்பி, செந்தழல், காய்ந்துலர்ந்து, ஏற்றக் கோல், நிழலில்லை—பிரித்து எழுது.



## 10. பொற்கைப் பாண்டியன்

1. மதுரைமா நகரம் தமிழகத்தின் திலகம் போன்றது. அதனை முன்னாளில் பாண்டிய மன்னர் ஆட்சி புரிந்து வந்தனர். அந்நகரில், அந்தணர் வீதியில், கீரந்தை என்ற மறையவன், ஒரு நாள் நள்ளிரவில் தன் மனைவியுடன் உரையாடிக்கொண்டிருந்தான். கீரந்தை காசிமா நகரத்திற்கு யாத்திரை செல்ல விரும்பினான். அந்நாளில் பல யாத்திரிகர் ஒன்று கூடிக் கால் நடையாகவே வழியெங்குமுள்ள புண்ணிய ஸ்தலங்களைத் தரிசித்துக்கொண்டு, காசிக்குப் போய்த் திரும்பி வருவது வழக்கம். அவ்வாறே கீரந்தையும் காசிமா நகரம் சென்று மீள எண்ணித் தன் விருப்பத்தை மனைவியிடம் தெரிவித்தான். அது கேட்ட அவன் மனைவி, தானும் உடன் வருவதாகக் கூறினாள். அந்தணன் தன் மனைவிக்கு

ஆறுதல் மொழிகளைக் கூறலானான்: "நீ பெண். உன்ருல் நெடுந்தூரம் நடக்க இயலாது. வழியில் பல இடையூறுகள் உண்டு. ஆதலால், இங்கேயே இரு," என்று அந்தணன் புகன்றான். ஆனால், மனைவி மன்றாடி வேண்டினாள்.

2. அவ்வேளையில் பாண்டிய மன்னன், மாறு வேடம் பூண்டு, நகர சோதனையாக அவ்வீதி வழியே வந்தான். காலமோ, நள்ளிரவு; கீரந்தையின் வீட்டில் மட்டும் பேசும் அரவம் கேட்க, மன்னன் கதவருகில் நின்று, அதை உற்றுக் கேட்கலானான். அந்தணன் தன் மனைவியை நோக்கி, "நீ தனித்திருப்பதற்கு அஞ்சவேண்டா. நம் பாண்டிய மன்னரது அரசில் துன்பம் ஏது? உன்னை நம் அரசர் காப்பாற்றுவார். விடியற்காலையிலேயே நான் புறப்படுகின்றேன். எனக்கு விடை கொடு," என்று சொல்லி அவளை அமைதியுறச் செய்தான். விடியற்காலையில் அந்தணன் புறப்பட்டுச் சென்றான்.

3. கீரந்தை கூறிய வார்த்தையைக் கேட்ட மன்னன் வியப்புற்றான்; 'இவ்வந்தணன் என்னை நம்பித் தன் மனைவியைத் தனியே விடுத்து யாத்திரை செல்கிறான். ஆதலால், இவன் வரும்வரையில் நான் அவளை எவ்விதக் குறையுமின்றிக் காப்பாற்ற வேண்டும்,' என முடிவு செய்தான். அடுத்த நாள் முதல் அத்தெருவிலுள்ள யாவருக்கும் அரசனாணையால் உணவுப் பண்டங்கள் குறைவின்றி அளித்து வரப்பட்டன; அந்தணன் மனைவியும் அதனைப் பெற்று வாழ்ந்து வந்தாள். தினந்தோறும் அரசன் அத்தெருவின் வழியே சென்று, அவ்வீட்டைக் காவல் காத்து வந்தான்.

4. ஆறு மாதங்கள் கடந்தன. ஒரு நாள் வழக்

கம்போல் பாண்டியன் அத்தெருவழியே சென்றான்; கீரந்தையின் வீட்டினுள் விளக்கு எரிவதையும் பேச்சுக் குரல் கேட்பதையும் அறிந்தான். அவனுக்கு ஐயம் தோன்றிற்று. மன்னன் ஆலோசிக்காமல் தெருக் கதவைத் தட்டினான். உள்ளிருந்து கீரந்தையின் குரல், 'யாரது?' என வினவிற்று. மன்னன் மருண்டான். 'ஐயோ! இது கீரந்தையின் குரல் அல்லவா! நான் கதவைத் தட்டியதைக் கேட்டு அந்தணன் யாது நினைப்பானோ!' என அரசன் நினைத்து, அத்தெருவிலுள்ள எல்லா வீட்டுக் கதவுகளையும் தட்டிய வண்ணம் அரண்மனை சேர்ந்தான்.

5. 'கதவை நள்ளிரவில் தட்டிய கயவன் யார்?' என அந்தணர் யாவரும் கவலை கொண்டனர். காலையில் யாவரும் அரசவையடைந்து, மன்னனைப் பணிந்து, நடந்ததை நவின்றனர்: 'மன்னரே, உமது ஆட்சியில் நாங்கள் யாதொரு குறையும் இன்றி வாழ்ந்து வந்தோம். ஆனால், நேற்றிரவு எங்கள் தெருவில் ஒரு கயவன் தெருக் கதவுகளைத் தட்டிவிட்டு மறைந்தான். அவன் ஒரு கள்வனாகவே இருத்தல் வேண்டும். அவனைப் பிடித்துத் தண்டிக்கவேண்டும்,' என்று அந்தணர் யாவரும் முறையிட்டனர்.

6. 'பிழை புரிந்த கள்வனுக்கு விதிக்கவேண்டும் தண்டனை யாது?' என வேந்தன் அவர்களை வினவினான். 'இக்குற்றம் புரிந்த கள்வனது வலக்கையைத் துணிப்பதே நேர்மை,' என்றனர் அந்தணர். உடனே மன்னன் தனது உடை வாளை உருவித் தனது வலக் கரத்தைத் துணித்துக் கொண்டான்!

7. அந்தணரும் சபையிலிருந்தவர்களும் வியப்பும் துயரமும் அடைந்தனர். மன்னன் நடந்ததை நவின்றான். அரச நீதியைக் கண்டு மக்கள் அவனைப்

போற்றினுர்கள். கடவுளருளால், வெட்டுண்ட கை பொற்கையாய் வளர்ந்தது. அதனுல், அம்மன்னன் பொற்கைப் பாண்டியன் என்ற சிறப்புப் பெயர் பெற்ருன்.

சொற்கள் :

| | | | |
|---|---|---|---|
| திலகம் | இடையூறு | நள்ளிரவு | மருண்டான் |
| முன்னுள் | புகன்ருன் | அரவம் | கயவன் |
| மறையவன் | பிடிவாதம் | வற்புறுத்தல் | அரசவை |
| யாத்திரை | நகரசோதனை | வெளியேறினுன் | நவின்றனர் |
| யாத்திரிகர் | வியப்பு | நிமித்தம் | வேந்தன் |

அரும்பத விளக்கம் :

துணிப்பது - துண்டிப்பது, இடையூறு - துன்பம், நிமித்தம் - காரணம், அரவம் - சத்தம், கயவன் - கீழ் மகன்.

விஞக்கள் :

1. அந்தணன் தன் மனைவிக்கு எவ்வாறு ஆறுதல் கூறினுன் ?

2. கீரந்தையின் மனைவியை அரசன் எவ்வாறு பாதுகாத்து வந்தான் ?

3. அரசன் ஏன் எல்லாக் கதவுகளையும் தட்டிக் கொண்டே சென்ருன் ?

4. அந்தணர் மன்னனிடம் என்ன முறையிட்டனர் ?

5. மன்னன் தனது கரத்தைத் துணித்துக் கொண்டது ஏன் ?

6. மன்னனுக்கு ஏன் 'பொற்கைப்பாண்டியன்' எனப் பெயர் வந்தது ?

## பயிற்சி :

1. இச்சொற்களுக்கு நேரான பொருளைக்கொண்ட வேறு சொற்களை எழுது :

வேந்தன், கதிரவன், அந்தணன், அரவம், இடையூறு, கள்வன், நவின்றான்.

2. நள்ளிரவு, முன்னாள், அரவம், நீதி, நெடுந்தூரம் —எதிர்ச்சொற்களை எழுது.

## இலக்கணம் :

சொற்கள் தன்மை, முன்னிலை, படர்க்கை என்ற மூன்று இடங்களில் வழங்கப் பெறும்.

தன்னைக் குறிப்பது தன்மை.

யான், நான்—இவை தன்மையில் ஒருமை.

யாம், நாம், யாங்கள், நாங்கள்—இவை தன்மையில் பன்மை.

முன்னால் உள்ளவரைக் குறிப்பது முன்னிலை.

நீ—முன்னிலையில் ஒருமை.

நீர், நீங்கள்—முன்னிலையில் பன்மை.

தன்மை, முன்னிலை அல்லாத மற்றவை படர்க்கை.

அவன், இவன், அவள், இவள், அது, இது, இராமன், புத்தகம், அரிசி—படர்க்கையில் ஒருமை.

அவர், இவர், அவை, இவை, அரசர்கள், புத்தகங்கள், மரங்கள்—படர்க்கையில் பன்மை.

# 11. தீக்குச்சி

1. இக்காலத்தில் தீப்பெட்டி எங்கும் விற்கப்படுகின்றது. தீப்பெட்டியைத் திறந்து தீக்குச்சியை வெளியே எடுத்து, அப்பெட்டியின்மேல் ஒரு புறத்திலுள்ள பகுதியில் அக்குச்சியைக் கிழித்தால், உடனே குச்சியில் தீப்பிடித்துக் கொள்ளும். தீக்குச்சியின் உதவியால் நாம் எளிதில் விளக்கை ஏற்றுகிறோம்; நெருப்பை உண்டாக்குகிறோம்.




2. பண்டைக் காலத்தில் நெருப்பு இவ்வளவு எளிதில் கிடைக்கவில்லை. நெருப்பு உண்டாக்குவதற்கு மக்கள் சிக்கிமுக்கிக் கற்களை உபயோகித்து வந்தார்கள். ஒவ்வோர் ஊரிலும் நெருப்பு ஒரு பொது இடத்தில் வைக்கப்பட்டிருக்கும்; அது அணையாதபடி சிலர் பார்த்துக் கொண்டிருப்பர். ஊரார் தேவையான பொழுது அதிலிருந்து நெருப்பு எடுத்துச் செல்வர். இரண்டு மரத்துண்டுகளைத் தேய்த்து நெருப்பு உண்டாக்கிக் கொள்வதும் உண்டு. ஓர் இரும்புத் துண்டின் மீது மற்றொரு துண்டை ஓங்கி அடித்தும் தீப்பொறிகளை உண்டாக்கி வந்தனர்.

3. 1805-ஆம் ஆண்டில் பாரிஸ் நகரில் ஒருவர் தீக்குச்சி செய்யத் தொடங்கினார். அவர் உபயோகித்த முறை அபாயகரமாய் இருந்தது. அதன் பின்பு பலர் அபாயமில்லாத முறையில் தீக்குச்சி செய்ய முயன்றனர். இறுதியில் 1852-ஆம் ஆண்டில் ஓர் ஆங்கிலேயர் அவ்வகைத் தீக்குச்சிகளைச் செய்து முடித்தார். முதலில் செய்யப்பட்ட தீக்குச்சிகளில் தலைப்பில் ஒருவகைச் செந்நிறமான மருந்து இருந்-

தது. நெருப்புப் பெட்டியில் இருந்த மருந்து சுர சுரப்பாய் இருந்தது. அக்குச்சிகளைத் தரையில் கிழித்தாலும் பற்றிக்கொள்ளும். அது அபாயம் எனக் கருதி, இப்பொழுது கறுப்பு மருந்தினால் குச்சி-களைச் செய்கின்றனர். இவற்றைத் தீப்பெட்டியில் உள்ள மருந்து பூசியுள்ள பாகத்தில் கிழித்தால், நெருப்பு உண்டாகும்; தரையில் கிழித்தால் நெருப்பு உண்டாகாது.

4. 'பாஸ்பரஸ்' என்னும் ஒரு பொருள் இருக்கிறது. அதை வெளியே எடுத்து வைத்தால் புகைந்து தீப்பிடித்துக்கொள்ளும்; ஆதலால், அதை எப்பொழுதும் நீரினுள்ளே இட்டு வைப்பார்கள். எரியக்கூடிய சில பொருள்கள் கலந்த ஒரு மருந்து தீக்குச்சியின் நுனியில் இருக்கிறது. பெட்டியின் மேற்புறத்தில் பாஸ்பரஸ் குழம்பு பூசப்பட்டிருக்கிறது.

5. தீக்குச்சி செய்ய ஒருவகை உலர்ந்த இலே-சான மரங்களை இயந்திரத்தின் மூலமாகப் பலகை-களாக அறுப்பார்கள். அப்பலகைகளை வேறோர் இயந்திரம் சிறு சிறு குச்சிகளாக நறுக்கிவிடும். இப்படி நறுக்கப்பட்ட குச்சிகளை வேலையாட்கள் இயந்திரத்தின் உதவியால் அடுக்குவார்கள். காகிதம் போன்ற மரப்பகுதிகள் இயந்திரத்தின் உதவியால் பெட்டிகளாகச் செய்யப்படும். பின்பு குச்சிகளை மருந்தில் தோய்த்து உலர வைப்பார்கள். உலர்ந்த குச்சிகளைப் பெட்டிகளில் அடுக்குவார்கள். இப்-பெட்டிகள் பெரிய பெட்டிகளில் அடுக்கப்பட்டு விற்பனைக்கு அனுப்பப்படும்.

6. நெருப்புப் பெட்டித் தொழிற்சாலைகள் எல்லா நாடுகளிலும் உள்ளன. நமது நாட்டிலும் பல இடங்களில் உள்ளன; தீப்பெட்டிகளின்மேல் பல

வகையான படங்கள் ஒட்டப்பட்டிருக்கும். அவற்றில் அத்தீப்பெட்டி செய்யப்பட்ட இடம் குறிக்கப்பட்டிருக்கும்.

7. மத்தாப்புக் குச்சிகளும் தீக்குச்சிகளைப் போலவே செய்யப்படுகின்றன. மத்தாப்புக் குச்சியின் நுனியில் தீக்குச்சி மருந்து தடவப்பட்டுள்ளது; அதன் கீழே மத்தாப்பு மருந்து தடவப்பட்டுள்ளது. மருந்துக்குத் தகுந்தவாறு ஒளியின் நிறமும் பொறிகளும் உண்டாகின்றன.

8. தீக்குச்சி செய்வது உலகில் கண்ட அற்புதங்களில் ஒன்று. இவ்வெளிய சாதனத்தின் உதவியினால், நாம் பல நன்மைகளைப் பெறுகிறோம்.

### சொற்கள் :

| | | | |
|---|---|---|---|
| சிக்கிமுக்கிக்கல் | கந்தகம் | மத்தாப்பு | தலைப்பு |
| தேய்த்து | இயந்திரம் | ஒளி | அற்புதம் |
| தீப்பொறி | அபாயகரம் | விற்பனை | எளிய |

### அரும்பத விளக்கம் :

தீப்பொறி - நெருப்புப் பொறி, தொழிற்சாலை - தொழில் செய்யும் இடம், ஒளி - வெளிச்சம், அபாயகரம் - ஆபத்தை விளைவிக்கக் கூடியது.

### வினாக்கள் :

1. ஆதி காலத்தில் நெருப்பு எப்படி உண்டாக்கப்பட்டது?

2. முதலில் தீக்குச்சி எங்கே செய்யப்பட்டது?

3. 'பாஸ்பரஸ்' என்பதன் குணம் என்ன?

4. இப்பொழுது தீக்குச்சி எப்படிச் செய்யப்படுகிறது?

5. மத்தாப்பு எவ்வாறு செய்யப்படுகின்றது?

## பயிற்சி :

1. ஒரு தீக்குச்சி தன் கதையைத் தானே சொல்வது போல எழுது.

2. விற்பனை, ஒளி, எளிய, உலர்ந்த, நன்மை, திறந்து, நெருப்பு, இறுதி, சுரசுரப்பாக, நுனி—எதிர்ச் சொற்களை எழுது.

## இலக்கணம் :

ஒரு தொழில் நடைபெறும் நேரத்திற்குக் காலம் என்பது பெயர். வந்தான், வருகிறான், வருவான் என்ற வினைச்சொற்கள், வருதலாகிய தொழிலைக் குறிக்கின்றன. 'வந்தான்' என்பதில் உள்ள 'வருதல்' என்ற தொழில் முன்பே நடைபெற்று முடிந்தது. 'வருகிறான்' என்பதில் தொழில் இப்போது நடைபெறுகிறது. 'வருவான்' என்பதில் தொழில் இனி நடக்கப் போவது. தொழில் நடந்த காலத்தை இறந்த காலம் என்றும், நடைபெறுகின்ற காலத்தை நிகழ்காலம் என்றும், நடக்கப்போகும் காலத்தை எதிர்காலம் என்றும் சொல்லுவர்.

பின்வரும் வாக்கியங்களிலுள்ள வினைச்சொற்களின் காலத்தை எழுது :

1. இக்காலத்தில் தீப்பெட்டி எங்கும் விற்கப்படுகின்றது.

2. பண்டைக் காலத்தில் நெருப்பு உண்டாக்க மக்கள் சிக்கிமுக்கிக் கற்களை உபயோகித்து வந்தார்கள்.

3. முதன்முதல் பாரிஸ் நகரத்தில் ஒருவர் தீக்குச்சி செய்யத் தொடங்கினார்.

4. முதலில் செய்யப்பட்ட தீக்குச்சிகளின் தலைப்பில் ஒருவகைச் சிவப்பான மருந்து இருந்தது.

5. குப்பன் தீக்குச்சியைக் கிழித்து நெருப்பு உண்டாக்குகிறான்.

6. நமது நாட்டில் தீக்குச்சிகள் இனி ஏராளமாகச் செய்யப்படும்.



## 12. குருவும் சீடரும் ஆற்றைக் கடந்தது

1. ஒரூரில் பரமார்த்த குரு என்பவர் இருந்தார். அவரிடம் மட்டி, மடயன், பேதை, மிலேச்சன், மூடன் என ஐவர் சீடராய் இருந்தனர். அவ்வறுவரும் ஊரூராகச் சென்று, சீடர்களைக் கண்டு, தமது கிராமத்திற்குத் திரும்புவது வழக்கம். கிராமத்தில் அவர்களுக்கு ஒரு மடம் இருந்தது.

2. ஒரு நாள் இரவு மூன்றும் சாமநேரத்தில் அவர்கள் மடத்திற்குத் திரும்பி வரும் வழியில் ஓர் ஆற்றங்கரையை அடைந்தனர். "இந்த ஆறு கொடியது! இது விழித்திருக்கும் வேளையில் நாம் இதைக் கடந்து செல்லக்கூடாது!'' என்று குரு தம் சீடர்களிடம் சொன்னார். பின்பு மிலேச்சனை ஆற்றின் நிலைமையைச் சோதிக்க ஏவினார். அப்பொழுது மிலேச்சன் புகையிலைச் சுருட்டில் தீப்பற்றவைக்கக் கொள்ளிக் கட்டையைக் கையிலேந்திக்கொண்டிருந்-

தான்; அதனை அவன் கொண்டுபோய் அவ்வாற்றங் கரையில் எட்டி நின்று தண்ணீரில் தோய்த்தான். தோய்த்தவுடன் தண்ணீர் 'சுர்' என்று புகைந்தது கண்டு மிலேச்சன் பதறித் தவறி விழுந்தோடி, "நதியைக் கடக்க இப்போது தறுவாயன்று! அது விழித்திருக்கிறது! நான் தொட்டவுடனே நச்சு நாகம். போலச் சீறிக் கோபத் தீயைப் புகைத்தது! நான் உயிர் பிழைத்துத் தப்பியது அதிசயந்தான்!" என்றான்.

3. குரு, "தேவ திருவுள்ளத்திற்கு நாம் என்ன செய்வோம்! சற்று நேரம் காத்திருப்போம்," என்றார். அண்டையில் இருண்ட நிழலைச் செய்து படர்ந்திருந்த பூஞ்சோலையில் எல்லாரும் காத்திருந்தனர். அங்கே யாவரும் அவ்வாற்றின் பல விசேடங்களைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தனர்; அப்பொழுது அக்கரையிலிருந்து ஒரு குதிரைக்காரன் வருவதைக் கண்டனர். ஆற்றில் முழந்தாள் அளவு தண்ணீர் ஓடியதனால், அவன் சற்றும் கூசாமல் சலசலவென்று கடுகி வந்தான். அப்பொழுது பொழுதுசாய்ந்த நேரம். 'குருவுக்கும் குதிரையிருந்தால் பயமில்லாமல் ஆற்றில் இறங்கலாமே!" என அவர்கள் எண்ணினார்கள். குரு மீண்டும் ஆற்று நித்திரையைச் சோதிக்க ஒருவனை அனுப்பினார்.

4. முன்னே சோதித்த அந்தக் கொள்ளிக் கட்டையையே மடயன் கொண்டுபோய் அச்சத்துடன் தூர நின்று நீரில் தோய்த்துச் சோதித்தான். கொள்ளிக்கட்டைத் தீ முன்பே அவிந்ததனால், சற்றும் புகை கிளம்பவில்லை. அதைக் கண்டு களிகூர்ந்து, ஓடி, "சமயம் வாய்த்துவிட்டது! சந்தடியின்றி விரைவில் வாருங்கள்! ஆறு உறங்குகிறது! இப்பொழுது

அஞ்சவேண்டா!'' என்று மடயன் சொன்னான். அதுகேட்ட அனைவரும் திடீரென்று ஆற்றில் இறங்கினார்கள்.

5. கரை சென்று ஏறினவுடனே மகிழ்ந்து, பிந்தி நின்ற மூடன், தன்னை எண்ணாமல், மற்றவர்களை மட்டும் எண்ணினான். எண்ணினவிடத்தில் ஐவரே காணப்பட்டதால், "ஐயோ! ஒருவன் ஆற்றோடே போனானே! இதோ ஐந்து பேர்தானே நிற்கின்றோம்!'' என்று கூறினான். எல்லாரையும் வரிசையாக நிறுத்தி இரு முறை மும்முறை குரு கணக்குப் பார்க்க, ஒவ்வொரு முறையும் தம்மை நீக்கிக் கணக்கெண்ணியபடியால், "ஐவரே இருக்கிறோம்!'' என்றார். அப்படியே ஒவ்வொருவனும் தன்னை விட்டு ஒழிந்தவர்களை மாத்திரம் கூட்டி, ஒருவனை ஆறு விழுங்கிவிட்டது என்றே முடிவு கட்டினான். பின்பு அவர்கள், ஒருவரை ஒருவர் கட்டிக்கொண்டு கோவென்று அழுதார்கள். ஆயினும், மடத்தனத்தினால் அந்நேரம் வரை தங்களுக்குள் ஆற்றோடே போனவன் இன்னானென்று ஒருவனும் அறியவுமில்லை; அவனெவனென்பதை விசாரிக்கவும் இல்லை.

6. அத்தறுவாயில் ஒரு வழிப்போக்கன் அவ்வழியே வந்தான். அவன் புத்திமான். அவனிடம் அவர்கள் நடந்ததைச் சொன்னார்கள். அவன் அவர்கள் மடத்தனத்தை நன்றாய் அறிந்துகொண்டு, "முன் ஆனதெல்லாம் ஆயிற்று. நீங்கள் எனக்குத் தக்க வெகுமானம் தருவீர்களானால், ஆற்றோடு போனவனை இங்கே வரவழைக்க எனக்கு வல்லமை உண்டு,'' என்றான். இதற்குக் குரு மகிழ்ந்து, "நீ இப்படிச் செய்தால், வழிச்செலவுக்கு வைத்திருக்கும் நாற்-

பத்தைந்து பணத்தையும் உனக்குத் தருவோம்,'' என்றார்.

7. அவன் தன் கையிலேந்தின தடியை ஓங்கி, '' இத்தடியிலே இருக்கிறது அந்த வல்லமை. நீங்கள் வரிசையாய் இருந்து, ஒவ்வொருவரும் முதுகில் ஓரடி வாங்கிக்கொண்டு, தத்தம் பெயரைச் சொல்லி எண்ணிக்கொண்டு வந்தால், அறுவரும் இங்கே வந்திருக்கச் செய்வேன்,'' என்றான். குருவும் சம்மதித்தார். வழிப்போக்கன் குருவையும் சீடர்களையும் வரிசையாக நிறுத்தி, முதலில் குருவின் முதுகின் மேல் பலமாக ஓரடி அடிக்க, அவரும், '' நான்தான் குரு; ஒன்று,'' என்றார். இவ்வாறு அவன் எல்லாரையும் ஒவ்வோர் அடி அடிக்கவே, அவர்களும் தங்கள் பெயர்களை வேறு வேறாக உச்சரித்துக் கணக்கெண்ணி, ஆறு பெயரில் ஒருவரும் குறையாமல் நிற்கக்கண்டார்கள். அவர்கள் அதிசயித்து, அவனை மிகவும் துதித்து, வாக்களித்த பணத்தைக் கொடுத்துவிட்டுப் போனார்கள்.

### சொற்கள் :

| | | | |
|---|---|---|---|
| பேதை | மடத்தனம் | தறுவாய் | நித்திரை |
| மிலேச்சன் | சாமம் | நச்சு நாகம் | அச்சம் |
| சீடர் | ஏவினார் | திருவுள்ளம் | களிகூர்ந்து |
| மடம் | சோதிக்க | அண்டையில் | திடீரென்று |
| வாக்களித்த | புத்திமான் | உச்சரிக்க | வல்லமை |

### அரும்பத விளக்கம் :

ஏவினார் - கட்டளையிட்டார், தறுவாய் - சமயம், அச்சம் – பயம், களிகூர்ந்து - சந்தோஷமிருந்து, வெகுமானம்– பரிசு.

**வினாக்கள் :**

1. பரமார்த்த குருவுக்குச் சீடர் எத்தனை பேர்? அவர்கள் பெயர் என்ன?
2. மிலேச்சன் எப்படி ஆற்றின் நிலைமையைச் சோதித்தான்?
3. மடையன் ஆற்றைச் சோதித்து என்ன முடிவுக்கு வந்தான்?
4. வழிப்போக்கன் அவர்கள் குறையை எப்படித் தீர்த்தான்?

**பயிற்சி :**

1. எதிர்ப்பதம் கூறு : நித்திரை, அச்சம், புத்திமான், மடத்தனம்.

**இலக்கணம் :**

## வேற்றுமை :

குரு வந்தார் ; குருவைப் பார்த்தேன் ; குருவால் நேர்ந்தது.—இவ்வாக்கியங்களில் 'குரு' என்ற பெயர்ச்சொல் பொருள் வேறுபட்டு வருகிறது. 'குரு' என்ற பெயர்ச்சொல்லின் பொருளை ஐ, ஆல் என்பவை வேறுபடுத்துகின்றன. இவைகளுக்கு வேற்றுமை உருபுகள் என்பது பெயர். வேற்றுமை எட்டு வகைப்படும்.

1. குரு வந்தார்—முதல் வேற்றுமை.
2. குருவைக் கண்டேன்—இரண்டாம் வேற்றுமை.
3. குருவால் நேர்ந்தது ; குருவோடு மூடன் வந்தான் ; குருவுடன் சீடர்கள் பேசினார்கள்—இவற்றிலுள்ள ஆல், ஓடு, உடன் என்பவை மூன்றும் வேற்றுமை உருபுகள்.

இப்பாடத்தில் 4-ஆம் பத்தியில் உள்ள முதல் மூன்று வேற்றுமை உருபுகளையுடைய சொற்களை எடுத்து எழுது.

## 13. நமது உணவு

1. உணவு உடல் வளர்ச்சிக்கு இன்றியமையாதது; உடலுக்கு வலிமையும் வனப்பும் அளிப்பதும் உணவே ஆகும்.

2. நமது உடல் வியப்பிற்குரிய ஓர் இயந்திரம். அந்த இயந்திரத்தின் உறுப்புக்களுள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு தொழிலைச் செய்கிறது. சிறந்த உணவை உட்கொண்டால், உறுப்புக்கள் சரிவர வேலை செய்யும். சிறந்த உணவு என்பது சத்துள்ள உணவாகும்.

3. பழங்கள், கீரை வகைகள், காய்கறிகள், பால், மோர் முதலியவை உடலுக்கு வலிமை அளிக்கவல்லவை. நாம் உட்கொள்ளும் உணவு இரத்தமாக மாறி உடலினுள் பரவி, நமக்கு வலிமையை அளிக்கின்றது. ஆனால், நாம் உண்ணும் உணவு நன்கு ஜீரணமாக வேண்டும். அப்பொழுதுதான் நம் உறுப்புக்கள் வலிமை பெறும்; இரத்த ஓட்டமும் ஏற்படும்.

4. நாம் உட்கொள்ளும் உணவு எவ்வாறு ஜீரணிக்கப்படுகிறது? முதன்முதல் நமது வாயிலுள்ள உமிழ் நீருடன் உணவுப் பொருள்கள் கலக்கின்றன. உணவைப் பற்களால் நன்றாக மென்று தின்ன வேண்டும்; அப்பொழுது உணவிலுள்ள ஒரு சத்து, உமிழ் நீருடன் கலந்து கரைகிறது. ஆகையால் உணவை வாயில் போட்டவுடன் விழுங்கிவிடுவது பெருந் தவறு. பிறகு உணவிலுள்ள பொருள்கள் வயிற்றிலுள்ள இரைப் பைக்குச் செல்கின்றன. இரைப்பையில் சுரக்கும் ஒரு வகைத் திரவம் உணவை ஜீரணம் செய்கிறது. இரைப்பைக்கு அரு-

கில் சிறுகுடல் ஆரம்பமாகிறது; இது ஒரு நீண்ட குழாய். இரைப்பையிலிருந்து சிறுகுடல் வழியாக உணவு செல்லும்பொழுது, பித்தநீரும், வேறு சில நீர்களும் உணவை நன்ருகக் கரைக்கின்றன. கரைந்த உணவுச் சத்துக்கள் சிறுகுடலில் உள்ள மெல்லிய இரத்தக் குழாய்களில் உறிஞ்சப்படுகின்றன. கரையாது மிகுந்த உணவுப் பொருள் கழிவுப் பொருளாய் வெளிவருகிறது. அது சத்து நீங்கிய பொருள் ஆகும். ஆதலால், நாம் உட்கொள்ளும் உணவுப் பொருள்கள் வெவ்வேறு விதங்களில் இரத்தமாய் மாறி, நமக்கு வலிமையை அளிக்கின்றன.

5. நாள்தோறும் நாம் பல தொழில்களைச் செய்து வருகிருேம்; அதனுல், நமக்கு உடற்சோர்வு ஏற்படுகிறது. இச்சோர்வைப் போக்கவும், தேய்வுபெறும் உறுப்புகளுக்குப் புது இரத்தம் பாயவும் நாம் குறித்த காலங்களில் உணவை உட்கொள்கிருேம். ஆனுல், உண்ணும் உணவு சுத்தமாகவும் சத்துள்ளதாகவும் இருக்கவேண்டும். மிதமாக உண்பதும் அவசியமே. அளவுக்கு மிஞ்சினுல், அமுதமும் நஞ்சு ஆகும்.

6. தமிழகத்திலுள்ள நமக்கு அரிசியே முக்கிய உணவாகும். இது நமது உடல் வளர்ச்சிக்குப் போதாது. ஆதலால், நாம் பருப்பு வகைகளையும் உணவுடன் சேர்த்துக்கொள்கிருேம். நெய் கொழுப்புச் சத்தைத் தருகிறது. காய்கறிகள் உடலின் ஆரோக்கியத்துக்கு அவசியமானவை. உணவை ஜீரணிக்க மோர் உதவுகிறது; அது எலும்பு, பல் முதலிய உறுப்புக்களையும் வளர்க்கிறது.

7. அரிசியைக் காட்டிலும் கோதுமை உடலுக்கு வலிமையைக் கொடுக்கும். பால், உடல் வளர்ச்சிக்கு இன்றியமையாதது. இக்காலத்தில் நாம் உண்ணும்

உணவு வகைகள் யாவும் பரிசோதிக்கப்பட்டு அவற்றிலுள்ள சத்துக்களைப் பற்றிய ஆராய்ச்சிகள் வெளியிடப்படுகின்றன. கைக்குற்றல் அரிசியே சத்துள்ளதென்பது ஆராய்ச்சியின் வாயிலாகத் தெரிகிறது. கீரை வகைகள் மலக்குடலைச் சுத்தம் செய்கின்றன. மலக்குடல் சுத்தமாய் இருந்தால், நோய்கள் நம்மை அணுகா.

8. நாம் உணவைச் சமைத்து உண்கிறோம். சமைப்பதால் உணவு பக்குவப்படுத்தப்படுகிறது; உணவுப் பொருள் மென்மை அடைந்து ஜீரணிக்கத் தகுந்ததாகின்றது. சமைப்பதால் உணவுப் பொருள்களில் இருக்கும் பல கிருமிகள் நாசமடைகின்றன. நாட்பட்ட உணவை உட்கொள்ளுதல் ஆகாது. உண்ணும்போது இடையில் நீர் அருந்தக் கூடாது. ஈ மொய்க்கும் பண்டங்களைத் தின்னக்கூடாது. குறித்த காலங்களில் மட்டும் உண்ண வேண்டும். இவ்வாறு கவனத்துடன் இருந்தால், நாம் நோய்வாய்ப்படமாட்டோம். "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்"

சொற்கள் :

| | | | |
|---|---|---|---|
| வலிமை | இரைப்பை | மிதமாக | பக்குவம் |
| வனப்பு | திரவம் | அமுதம் | மென்மை |
| கொழுப்பு | சிறு குடல் | மலக்குடல் | கிருமி |
| ஜீரணம் | சுரக்கும் | அணுகா | நாசம் |
| உமிழ் நீர் | உடற்சோர்வு | பரிசோதிக்க | |

அரும்பத விளக்கம் :

வலிமை - பலம், வனப்பு - அழகு, சுரக்கும் - ஊறும், சோர்வு - களைப்பு, மிதமாக அளவாக, அமுதம் - அமிர்தம், அணுகா - நெருங்கா.

விஞக்கள் :

1. நம் உடல் வளர்ச்சிக்கு இன்றியமையாதது எது?

2. நமது உடல் எந்தெந்தப் பொருள்களால் ஆனது?

3. நமது உணவு எவ்வாறு ஜீரணமாகிறது?

4. நாம் ஏன் குறித்த காலங்களில் உணவு உட்கொள்ள வேண்டும்?

5. தென்னிந்தியரின் முக்கியமான உணவு எது?

6. உணவைச் சமைப்பதால் ஏற்படும் பயன்கள் யாவை?

பயிற்சி :

1. எதிர்ப்பதம் கூறு :—வலிமை, சுத்தம், சத்துள்ள, ஜீரணம், அதிகரிக்கும், சோர்வு, மிதம்.

2. கோடிட்ட இடங்களைப் பூர்த்தி செய் :—

(1) உணவு உடலுக்கு——ம்——ம் அளிக்கிறது.

(2) நெய்யும் வெண்ணெயும்——ச் சத்தைத் தருகின்றன.

(3) வாய், இரைப்பை, இவற்றில் கரைக்கப்படாத உணவுப் பொருள்கள் —— கரைக்கப்படுகின்றன.

(4) அளவுக்கு மிஞ்சினல்——நஞ்சு ஆகும்.

3. நீ தினந்தோறும் உட்கொள்ளும் உணவு என்ன? அதைச் சத்துள்ள உணவாக்க எவ்வெவற்றைச் சேர்க்க வேண்டும்?

**இலக்கணம் :**

## வேற்றுமை (தொடர்ச்சி)

பாப்பாவுக்குப் புத்தகம் கொடுத்தேன்.—கு நான்காம் வேற்றுமை உருபு.

| | |
|---|---|
| கல்வியில் சிறந்தவர் கம்பர். கரும்பிலிருந்து சாறு கிடைக்கிறது. | இல், இருந்து—ஐந்தாம் வேற்றுமை உறுபுகள். |

இராமனது கை வீங்கியுள்ளது, இராமனுடைய சேனைகள் வென்றன.—அது, உடைய ஆறும் வேற்றுமை உருபுகள்.

| | |
|---|---|
| வீட்டில் பலர் இருக்கின்றனர். என்னிடம் பணம் இருக்கிறது. பானையின்கண் துவாரம் உள்ளது. | இல், இடம், கண்—ஏழாம் வேற்றுமை உருபுகள். |

எட்டாம் வேற்றுமைக்குத் தனி உருபு இல்லை. படர்க்கைப் பெயரை முன்னிலையாக்கி அழைப்பதே எட்டாம் வேற்றுமை. அதனை விளி வேற்றுமை என்றும் கூறுவர்.

தம்பீ, வா.
குழந்தாய், விளையாடு.
பெண்ணே, கோலம் போடு.

இப்பாடத்தில் காணப்படும் வேற்றுமைப் பெயர்களை வகைப்படுத்தி எழுது.



# 14. புது உலகம்

1. ‘முயற்சி திருவினையாக்கும்’ என்பது வள்ளுவர் வாக்கு. உலகில் பல பெரியார்கள் ஒரு செயலில் வெற்றி காணுமல், பன்முறை முயன்று, இறுதியில் வெற்றியடைகின்றனர். பகீரதன் பல்லாண்டுகள் சிவபெருமானைக் குறித்துக் கடுந்தவம் புரிந்து, கங்கையைப் பூமிக்குக் கொண்டு வந்தான். அது போலவே கொலம்பஸ் என்பவர், தமது விடாமுயற்சியின் பயனாகப் புது உலகம் ஒன்றைக் கண்டு பிடித்தார்.

2. இத்தாலி நாட்டில் ஜினேவா என்பது ஒரு துறைமுகப்பட்டினம். அதில் சற்றேறக்குறைய ஐந்நூறு ஆண்டுகட்கு முன், ஓர் எளிய குடும்பத்தில் கொலம்பஸ் பிறந்தார். பெற்றோர் தம் மைந்தருக்கு

ஓரளவு கல்வி கற்பித்தனர். அக்காலத்தில் தரை நூலில் கொலம்பஸ் நாட்டம் கொண்டார்; பூகோளத்தில் சொல்லப்பட்ட பல நாடுகளைக் காண அவாக் கொண்டார்; அதன் பயனாக, இளமையிலேயே ஒரு கப்பலில் வேலைக்கு அமர்ந்தார். அவ்வேலை மிகக் கடினமாய் இருந்தது. ஆயினும், அவர் தளராத உறுதியுடன் வேலையில் ஊக்கம் செலுத்தினார்; தகுந்த பருவத்தில் ஒரு கப்பல் தலைவன் மகளை மணம் செய்துகொண்டார்; ஒரு மகனுக்குத் தந்தையாரானார்.

3. கொலம்பஸ் கப்பல் பிரயாணம் செய்த காலத்தில் மேற்றிசையிலிருந்து கடலில் புதுமையான பல பொருள்கள் மிதந்து வந்ததைக் கண்டார்; அதனால், மேற்றிசையில் நெடுந்தூரத்தில் உள்ள ஒரு நிலப் பகுதியிலிருந்து அவை வந்திருக்க வேண்டும் என்று ஊகித்தார்; அந்நிலப்பகுதியைக் காணவேண்டும் என்று உறுதி பூண்டார்; அதன் விளைவாகப் போர்ச்சுகல் நாட்டு அரசரைத் தமக்கு அந் நிலப்பகுதியைத் தேடும் முயற்சிக்கு வேண்டிய பொருள் உதவுமாறு வேண்டினார். அம்மன்னர் அவரை நம்பாமையால், யாதோர் உதவியும் செய்ய மறுத்துவிட்டார்.

4. கொலம்பஸ் சோர்வடையாமல், தமக்கு உதவும்படி பல சிற்றரசரை வேண்டினார். அவர்கள் அவர் ஒரு பைத்தியக்காரர் எனத் தீர்மானித்து, உதவி செய்ய மறுத்தார்கள். இறுதியில் கொலம்பஸ் ஒரு மடாதிபதியின் உதவியால், ஸ்பெயின் தேசத்து அரசியாரை அணுகினார். இஸபெல்லா என்ற அவ்வரசியார் தம் நகைகளை விற்றுக் கொலம்பஸுக்குப் பொருளுதவி செய்தார்.

5. கொலம்பஸ், தமது பிரயாணத்திற்கு மூன்று கப்பல்களைத் தயாரித்தார்; 1492-ஆம் ஆண்டு, ஆகஸ்டு மாதம், மூன்றாம் தேதி தமது பிரயாணத்தைத் தொடங்கினார். கப்பல் மாலுமிகள் மீண்டும் உயிருடன் திரும்ப முடியாதென்று நினைத்தார்கள். பொது மக்களும் 'அவர்களை நாம் மீண்டும் காண முடியாது!' என்று எண்ணினார்கள்.

6. கடலைக் கடந்து செல்லும் வழியில் கொலம்பஸ் பல இடையூறுகளுக்கு உள்ளானார்; அவற்றைத் தமது திறமையினால் வென்று, விடா-முயற்சியுடன் பிரயாணம் செய்து, இறுதியில் ஒரு நிலப் பகுதியை அடைந்தார். தரையைக் கண்ட மாலுமிகள் ஆனந்தக் கூத்தாடினார்கள். கொலம்பஸ் கப்பலை விட்டுக் கரையில் இறங்கி, அந்நிலத்தைக் குனிந்து முத்தமிட்டுக் கடவுளைத் துதித்து வணங்கினார்.

7. தாம் கண்ட தீவு இந்தியாவாய் இருக்க வேண்டும் என்று கொலம்பஸ் நினைத்து, அதற்கு இந்தியா என்றும், அந்நாட்டு மக்களுக்கு இந்தியர் என்றும் பெயர் வழங்கினார். ஆனால் அது இந்தியா-வன்று. அது மேற்கு இந்தியத்தீவுகளில் ஒன்று. தமது முயற்சியில் வெற்றி கண்ட கொலம்பஸ், ஸ்பெயின் தேசத்திற்குத் திரும்பினார். மன்னரும் இராணியாரும் அவரை உபசரித்து வரவேற்றனர். கொலம்பஸ் புதிய கண்டத்தில் தமக்குக் கிடைத்த பொன்னையும் மணிகளையும் அவர்களுக்கு அளித்-தார்.

8. மறு முறையும் கொலம்பஸ் அத்தீவிற்குச் சென்றார்; அங்கு இஸபெல்லா என்னும் ஒரு நகரை நிறுவினார்; அதற்கு அருகில் இன்னும் பல தீவுகளை-

யும் கண்டுபிடித்தார்; பல விலையுயர்ந்த பொருள்களுடன் மீண்டும் ஸ்பெயினை அடைந்தார்.

9. கொலம்பஸ் மூன்றும் முறையாக 1498-ஆம் ஆண்டில் பிரயாணம் செய்து, கொலம்பியா என்ற நிலப் பகுதியைக் கண்டார். அக்கண்டத்திற்கு அமெரிக்கா என்னும் பெயர் வழங்கலாயிற்று. கொல்ம்பஸ் நான்காவது முறையாக 1501-ஆம் ஆண்டில் மீண்டும் அமெரிக்கா சென்றார். அங்கே பல நகரங்களை ஏற்படுத்தி, ஸ்பெயின் மக்கள் அங்கு வசிக்க ஏற்பாடு செய்தார். மீண்டும் ஸ்பெயினை அடைந்த கொலம்பஸ், சில ஆண்டுகள் கழித்து உயிர் துறந்தார். கொலம்பஸ் கண்டுபிடித்த அமெரிக்காவே புது உலகம் எனப்படுவது.

### சொற்கள் :

| | | | |
|---|---|---|---|
| திரு | தளராவுறுதி | மாலுமிகள் | நிறுவினர் |
| கடுந்தவம் | மிதந்து | மீண்டும் | தரை நூல் |
| விடாமுயற்சி | ஊகித்தார் | உபசரித்து | உயிர் துறந்தார் |
| துறைமுகம் | மடாதிபதி | வரவேற்றனர் | திறமை |

### அருஞ்பத விளக்கம் :

திரு - செல்வம், தொடங்கினர் - ஆரம்பித்தார், நிறுவினர் - ஸ்தாபித்தார், உயிர் துறந்தார் - இறந்தார், மடாதிபதி - மடத்தின் தலைவர்.

### வினாக்கள் :

1. புது உலகத்தைக் கண்டுபிடித்தவர் யார்?
2. கொலம்பஸுக்கு உதவி செய்த பெருமாட்டி யார்?
3. கொலம்பஸ் தாம் கண்டுபிடித்த நாட்டு மக்களுக்கு ஏன் 'இந்தியர்' என்று பெயரிட்டார்?

4. கொலம்பஸ் இரண்டாம் முறை தாம் கண்ட தீவிற்குச் சென்று என்ன செய்தார்?

5. 'அமெரிக்கா' என்பது எதற்குப் பெயர்?

**பயிற்சி :**

1. எதிர்ப்பதம் கூறு: முயற்சி, உறுதி, மிதந்து, நிலப்பகுதி.

2. கொலம்பஸ் புது உலகத்தைக் கண்டுபிடித்த வரலாற்றை உன் சொந்த வாக்கியங்களில் எழுது.

3. கோடிட்ட இடங்களைப் பூர்த்தி செய் :—

(1) கொலம்பஸின்———பயனாகப் புது உலகம் கண்டு பிடிக்கப்பட்டது.

(2) —— நாட்டில் —— நகரத்தில் கொலம்பஸ் பிறந்தார்.

(3) —— என்ற அரசியார் கொலம்பஸுக்குப் பொருளுதவி செய்தார்.

(4) தாம் கண்ட தீவு —— என்று நினைத்து, அந்த மக்களுக்கு —— எனப் பெயரிட்டார்.

(5) 1498-ஆம் ஆண்டில்——என்ற நிலப்பகுதியைக் கண்டார்.

4. தளரா உறுதியுடன், இடையூறுகளுக்குள்ளாதல், உபசரித்து வரவேற்றல் —— இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் பொருத்தி எழுது.

**இலக்கணம் :**

கீழ்க் காணும் வாக்கியங்களில் உள்ள செயப்படு பொருளை எழுவாயாக அமைத்து, வாக்கியங்களை மாற்றி எழுது :

(1) கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டுபிடித்தார்.

(2) கொலம்பஸ் ஒரு கப்பல் தலைவன் மகளை மணம் செய்துகொண்டார்.

(3) கொலம்பஸ் தமக்கு உதவி புரியுமாறு பல சிற்றரசர்களை வேண்டினர்.

(4) சிற்றரசர்கள் கொலம்பஸை ஒரு பைத்தியக்காரனென்று கருதினர்கள்.

(5) கொலம்பஸ் தமது பிரயாணத்திற்கு மூன்று கப்பல்களைத் தயாரித்தார்.

(6) கொலம்பஸ் தாம் கண்ட தீவிலுள்ள மனிதர்களை 'இந்தியர்' என்று வழங்கினர்.

# 15. தமிழன் இதயம்

தமிழன் என்றொரு இனமுண்டு ;
தனியே அவற்கொரு குணமுண்டு;
அமிழ்தம் அவனுடை மொழியாகும் ;
அன்பே அவனுடை வழியாகும். 1

அறிவின் கடலைக் கடைந்தவனும் ;
அமிர்தத் திருக்குறள் அடைந்தவனும் ;
பொறியின் ஆசையைக் குறைத்திடவே
பொருந்திய நூல்கள் உரைத்திடுவான். 2

உழவும் தொழிலும் இசை பாடும் ;
உண்மைச் சரித்திரம் அசைபோடும்;
இழவில் அழுதிடும் பெண்கூட
இசையோ டழுவது கண்கூடு. 3

கொல்லா விரதம் பொய்யாமை
கூடிய அறமே மெய்யாகும்;
எல்லாப் புகழும் இவை நல்கும்
என்றே தமிழன் புவிசொல்லும். 4

உத்தமன் காந்தியின் அருமைகளை
உணர்ந்தவன் தமிழன்; பெருமையுடன்
சத்தியப் போரில் கடனறிந்தான்
சாந்தம் தவறு துடனிருந்தான்.

—நாமக்கல் கவிஞர்

சொற்கள் :

| | | |
|---|---|---|
| இனம் | கண்கூடு | பொய்யாமை |
| பொறி | விரதம் | சாந்தம் |
| அசை | புவி | சரித்திரம் |

அருஞ்பத விளக்கம் :

இனம் - கூட்டம், பொறி - இயந்திரம், கண்கூடு - நேராகக் காணுதல், புவி - உலகம், நல்கும் - கொடுக்கும்.

வினுக்கள் :

1. தமிழனுடைய சிறப்புக்கள் யாவை?
2. தமிழ் மொழி எத்தன்மையது?
3. தமிழ் நூல்களின் பெருமைகள் யாவை?
4. தமிழன் காந்தியின் அருமைகளை உணர்ந்தவன் என்று எதனால் சொல்லலாம்?

பயிற்சி :

1. அன்பு, இசை, கடல், உண்மை, புவி—இச்சொற்களைக் குறிக்கும் வேறு சொற்கள் சிலவற்றை எழுது.

2. கோடிட்ட இடங்களைப் பூர்த்தி செய் :

(1) —— தமிழனது மொழியாகும்.
(2) —— அவனது வழியாகும்.
(3) —— அருமைகளை அறிந்தவன் தமிழன்.
(4) —— தைக் கடைப் பிடித்து ——ப் போரில் வென்றார் காந்திஜி.

3. திருக்குறள், கடனறிந்தான், உடனிருந்தான்—இவற்றைப் பிரித்து எழுது.

இலக்கணம் :

## சொல் இலக்கணம் :

கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டுபிடித்தார்.

கொலம்பஸ்—பெயர்ச்சொல், உயர்திணை, ஆண்பால், ஒருமை எண், படர்க்கை இடம், முதல் வேற்றுமை, 'கண்டு பிடித்தார்' என்னும் பயனிலைக்கு எழுவாய்.

அமெரிக்காவை—பெயர்ச்சொல் (இடப்பெயர்), அஃ-றிணை, ஒன்றன் பால், ஒருமை எண், படர்க்கை இடம், இரண்டாம் வேற்றுமை. 'கண்டுபிடித்தார்' என்னும் பயனிலைக்குச் செயப்படு பொருள்.

கண்டுபிடித்தார்—வினைச்சொல், வினைமுற்று, உயர் திணை, ஆண்பால், ஒருமை எண், படர்க்கை இடம், இறந்த காலம், 'கொலம்பஸ்' என்ற எழுவாய்க்குப் பயனிலை.

பெயர்ச் சொற்களுக்குத் திணை, பால், எண், இடம், வேற்றுமை ஆகிய ஐந்தும் உண்டு.

வினைச்சொற்களுக்குத் திணை, பால், எண், இடம், காலம் என்ற ஐந்தும் உண்டு.

பெயர்ச்சொல்லுக்குக் காலம் இல்லை. வினைச்சொல் லுக்கு வேற்றுமை உருபு இல்லை.



# 16. திருவள்ளுவர்

1. தமிழ் இலக்கியமான பண்டை நூல்களில் மிகவும் சிறந்தது திருக்குறள் ஆகும். இந்நூல் உலகிலுள்ள பல மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. இது ஒரு சிறந்த நீதி நூல். இதனைத் தமிழ் மறை என்று பாராட்டுகிறார்கள். இந்நூலை இயற்றியவர் திருவள்ளுவர் என்ற பெரியார்.

2. சற்றேறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன் சென்னையை அடுத்த திருமயிலையில் திருவள்ளுவர் வாழ்ந்து வந்தார். அவர் நெசவுத் தொழில் செய்து வந்தார்; அத்தொழிலில் கிடைக்கும் ஊதியத்தைக்கொண்டு வாழ்க்கை நடத்தி வந்தார்.

வாசுகி அம்மையார் திருவள்ளுவர் மனைவியார். அவ்வம்மையார் கற்பரசியார்; கணவர் மனம் கோணாமல் நடந்து வந்தவர்.

3. திருவள்ளுவர் சிறந்த தமிழ்ப் புலவர். அவரைக் காணச் சீமான்களும் மன்னர்களும் வருவதுண்டு. அவர்களில் கப்பல் வாணிபம் செய்துவந்த ஏலேல சிங்கர் என்பவர் வள்ளுவரிடம் கல்வி பயின்றார்; வள்ளுவருடைய உபதேசங்களின் பயனாகப் பல தருமங்களைச் செய்தார். மக்களுக்கு நீதி நெறிகளைப் புகட்டும் நோக்கத்துடன் வள்ளுவர் திருக்குறள் என்னும் நூலை இயற்றினார். அந்நூல் குறள் என்ற ஒரு வகைச் செய்யுளால் ஆனது.

4. திருக்குறள் மூன்று பெரும்பிரிவுகளை உடையது. அதில் மக்கள் கடைப்பிடிக்கவேண்டிய நற்பண்புகளும், விலக்க வேண்டிய தீய குணங்களும், மன்னர், அமைச்சர், தூதுவர், நண்பர் முதலியவருடைய ஒழுக்க நெறிகளும் விளக்கப்பட்டுள்ளன. திருக்குறளிலிருந்து சில செய்யுட்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :

" கற்க கசடறக் கற்பவை ; கற்றபின்
நிற்க அதற்குத் தக."

" எண்ணென்ப ; ஏனை எழுத்தென்ப ; இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு."

" முயற்சி திருவினை ஆக்கும் ; முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்."

" உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு."

5. வாசுகி அம்மையாரது கற்பின் பெருமையைப்பற்றி ஒரு வரலாறு உள்ளது: ஒரு நாள்

திருவள்ளுவர் காலையில் பழையது சாப்பிட உட்கார்ந்தார். அப்பொழுது அவர் தம் மனைவியாரை அழைத்து, "அமுது சுடுகிறது; விசிறி கொண்டு வந்து வீசு," என்று சொன்னார். அம்மையார் எதிர் பேசவில்லை; "பழையது சுடுமா?" என்று கேட்கவுமில்லை. உடனே விசிறி கொண்டு வீசினார்.

6. திருவள்ளுவர் பாண்டிய மன்னனுடைய அமைச்சராகச் சில காலம் மதுரையில் வாழ்ந்து வந்தார் என்பது தெரிகிறது. திருக்குறள் அழியாப் புகழ் படைத்த நூல். அதன் மூலமாக வள்ளுவர் நம்மிடையே இன்னும் பல்லாண்டுகள் புகழுடம்புடன் வாழ்வார் என்பதில் ஐயமில்லை.

சொற்கள் :

| | | | |
|---|---|---|---|
| இலக்கியம் | சீமான் | உடுக்கை | கற்பரசியார் |
| மறை | வாணிபம் | இடுக்கண் | இன்மை |
| ஊதியம் | கசடற | பிரிவாற்றாமை | பல்லாண்டு |

அரும்பத விளக்கம் :

மறை - வேதம், ஊதியம் - வருமானம், வாணிபம் - வியாபாரம், கசடற - குற்றம் நீங்க, தவறில்லாமல், இன்மை - வறுமை, உடுக்கை - ஆடை, இடுக்கண் - துன்பம், பல்லாண்டு - பல வருடங்கள்.

வினாக்கள் :

1. திருக்குறள் யாரால் இயற்றப்பட்டது?
2. அதற்கு வேறு பெயர் என்ன?
3. வாசுகியாரின் நற்பண்புகள் யாவை?
4. வாசுகி அம்மையாரின் கற்பின் பெருமை எதனால் விளங்குகிறது?

பயிற்சி :

1. கற்பிற் சிறந்த பெண்ணரசிகளுள் சிலரைக் கூறு.
2. உனக்குத் தெரிந்த திருக்குறள் சிலவற்றைக்கூறு.

3. நட்பு, இடுக்கண், வாணிபம், தருமம், குணம்—இச்சொற்களைக் குறிக்கும் வேறு சொற்கள் சில எழுது.

4. கோடிட்ட இடங்களை நிரப்பு :—

(1) திருக்குறள் —— இயற்றப்பட்டது.

(2) —— திருவள்ளுவரின் மனைவியாராவார்.

(3) இவர் —— சிறந்த பெண்ணரசியார்.

5. பிரிவு + ஆற்றுமை ; அழியா + புகழ் ; பல் + ஆண்டு ; நூல் + இயற்றினர் ; மனம் + கோணுமல்—இச்சொற்களைச் சேர்த்து எழுது.

6. தினந்தோறும் காலையில் எழுந்தவுடன் ஐந்து குறட்பாக்களை மனப்பாடம் செய்.

## இலக்கணம் :

## செய்வினை—செயப்பாட்டுவினை

நான் காகிதத்தை மடித்தேன்.—இதில் 'மடித்தேன்' என்ற வினை அல்லது தொழில் நான் செய்த வினை. ஆதலால், 'மடித்தேன்' என்பது செய்வினை. 'காகிதம் என்னுல் மடிக்கப்பட்டது' என்பது என்னுல் செய்யப்பட்ட தொழில் ஆதலின், 'மடிக்கப்பட்டது' என்பது செயப்பாட்டு வினை.

கீழ்வரும் செய்வினைகளைச் செயப்பாட்டு வினைகளாக மாற்று :

1. சுந்தரி புத்தகத்தை மூடினுள்.
2. திருவள்ளுவர் திருக்குறளை இயற்றினுர்.
3. திருவள்ளுவருக்கு வாசுகி அம்மையார் விசிறி கொண்டு வீசினுர்.
4. பழைய சாதத்தை வாசுகி அம்மையார் வீசினுர்.
5. மாதவி பெட்டியை உடைத்தாள்.
6. இலட்சுமி கணக்குச் செய்தாள்.

# 17. காப்பிச் செடி

1. தினந்தோறும் பலர் காப்பிப்பானம் பருகுகின்றனர் அல்லவா? காப்பிக்கொட்டையைப் பக்குவமாக வறுத்துப் பொடி செய்து, கொதிக்கும் நீரில் அப்பொடியைத் தகுந்த அளவு சேர்த்து, வடிகட்டி, பாலும் சர்க்கரையும் கலந்து குடிக்கின்றனர். காப்பிப்பானம் சுறுசுறுப்பை அளிக்கும். ஆயினும், அதை மிதமாகவே பருக வேண்டும். அளவு மீறினல் அமுதமும் நஞ்சாகும் அன்றோ?



2. காப்பிக்கொட்டை காப்பிச் செடியில் உண்டாகிறது. காப்பிச் செடி ஆப்பிரிக்காவில் இயற்கையாகவே வளர்ந்தது. பின்னர் அது அரேபியாவில் பயிர் செய்யப்பட்டது. அரேபியர் அதை மற்ற நாடுகளில் பரப்பினர்கள். நமது நாட்டில் அச்செடி முதன்முதல் மைசூரில் பயிர் செய்யப்பட்டது. அச் செடி நன்கு பயிராவதற்கு வெயிலும் மழையும் மிதமாய் இருக்க வேண்டும். வேரில் மழை நீர் தங்காத மலைச் சரிவுகளில் அச்செடி செழிப்பாக வளரும்.

3. சென்னை மாகாணத்தில் நீலகிரி, சேர்வராயன், பழனி ஆகிய மலைப்பகுதிகளிலும், மைசூரின் சில பாகங்களிலும் காப்பிச் செடி பயிராக்கப்படுகிறது. காப்பிச் செடி சுமார் பதினெட்டு அடி உயரம் வளரும். ஆனல், அதை ஐந்தாறு அடி-

களுக்கு மேல் வளர விடுவதில்லை. ஏனெனில், அதிக உயரம் வளர்ந்தால், அதிலிருந்து பழங்களைப் பறிப்பது கடினம்; குட்டையாக வெட்டிவிட்டால், செடி தரையில் படரும்; அப்பொழுது பழங்களைப் பறிப்பது எளிது.

4. முதலில் காப்பி விதைகளை இரண்டு அங்குல ஆழமுள்ள குழிகளில் நாற்றங்காலில் விதைக்க வேண்டும்; செடிகள் முளைத்த பின்பு அவைகளை எடுத்து ஓரடி ஆழமுள்ள குழிகளில் நடவேண்டும். காப்பிச் செடியில் முதலில் வெண்மையான மலர்கள் தோன்றும்; அம்மலர்கள் நல்ல மணம் உள்ளவை.. ஒவ்வொரு பூவிலிருந்தும் ஒவ்வொரு பழம் தோன்றும். பழம் சிவப்பு நிறமாய் இருக்கும். பழங்களின் உள்ளே சதைப்பற்று இருக்கும்; சதைக்குள்ளே இரண்டு கொட்டைகள் காணப்படும். அவற்றில் சில உருண்டையாயும் சில தட்டையாயும் இருக்கும். அவற்றின் நடுவில் ஒரு பிளவு காணப்படும்.

5. நட்ட இரண்டாண்டுகளில் காப்பிச்செடி பலன் அளிக்கும். சித்திரை, வைகாசி மாதங்களில் பழங்கள் முற்றும். அப்பொழுது அவற்றைப் பறித்துச் சேகரிப்பார்கள். பழத்தின் மேலுள்ள தோலை நீக்கிக் கொட்டைகளை வெயிலில் உலர்த்துவார்கள். பின்பு அவற்றைச் சுத்தம் செய்வார்கள். கொட்டைகளை விற்றுப் பொருள் ஈட்டுவார்கள்.

6. தென்னமெரிக்காவில் பிரேஸில் என்னும் நாட்டில் காப்பிக்கொட்டை ஏராளமாகப் பயிர் செய்யப்படுகிறது. இலங்கையில் பலவிடங்களிலும் அது பயிராகிறது. காப்பியை மிதமின்றிப் பருகினால் பசி ஏற்படாது; செரிக்கும் சத்தியும் குறையும்; பிற்காலத்தில் நீரிழிவு போன்ற நோய்களும் உண்-

டாகும். மிதமாகப் பருகினால் செரிக்கும் சக்தியும் சுறுசுறுப்பும் உண்டாகும்.

### சொற்கள் :

| | | | |
|---|---|---|---|
| வறுத்து | நாற்றங்கால் | மந்தப்படும் | பினவு |
| அமுதம் | நீரிழிவு | ஈட்டுதல் | பிரேஸில் |
| மலைச்சரிவு | உற்சாகம் | சதைப்பற்று | ஏராளமாக |

### அரும்பத விளக்கம் :

நாற்றங்கால் - நாற்று முளைக்கவிடும் இடம், ஈட்டுதல் - சேகரித்தல், மந்தப்படும் - குறையும்.

### வினாக்கள் :

1. காப்பிச்செடி இயற்கையாய் எங்கு விளைகிறது?
2. அது முதன் முதல் எங்கே பயிர் செய்யப்பட்டது?
3. காப்பிச் செடியை ஏன் அதிகமாக வளர விடுவதில்லை?
4. காப்பிச் செடியைப் பயிரிடுவது எப்படி?
5. பழத்திலிருந்து கொட்டை எவ்வாறு கிடைக்கிறது?
6. காப்பியால் உண்டாகும் பயன் என்ன?
7. காப்பியை அதிகமாகக் குடித்தால் என்ன நேரிடும்?

### பயிற்சி :

1. கோடிட்டுள்ள இடங்களைப் பூர்த்தி செய் :
   (1) காப்பிச்செடி —— நன்றாகப் பயிராகும்.
   (2) காப்பிப் பூக்களின் நிறம் ——.
   (3) காப்பிக்கொட்டையை விற்றுப் பொருள் ——.
   (4) காப்பிப் பழத்தின் உள்ளே —— இருக்கும்.
   (5) காப்பிக்கொட்டை —— நாட்டில் ஏராளமாய் உற்பத்தியாகிறது.

1. உனக்குத் தெரிந்த பானங்கள் சிலவற்றைக் கூறு.

2. உற்சாகம், ஏராளமாக, ஈட்டுதல், பருகவேண்டும், விதமாக—இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுது.

இலக்கணம் :

1. காப்பி ஒரு சிறந்த பானம்.

2. நேற்று வாங்கிய காப்பிக்கொட்டை நன்றாய் இருந்தது.

3. காப்பிப்பூ நல்ல மணம் உடையது.

4. சரிவான மலைச்சாரல்களில் காப்பிச் செடி செழிப்பாய் வளரும்.

5. உருண்டையான காப்பிக்கொட்டை மிகக் குறைவாகக் கிடைக்கிறது.

மேலேயுள்ள வாக்கியங்களில் உள்ள பெயரெச்சம், வினையெச்சம், வினைமுற்று இவைகளை எடுத்து எழுது.

## 18. ஐக்கிய நாடுகளின் கழகம்

1. முதல் உலகப் பெரும்போர் 1914-ஆம் ஆண்டில் தொடங்கியது. அப்போரில் சிற்சில நாடுகள் தவிர, எல்லா நாடுகளும் ஈடுபட்டன. அப்போர் 1919-ஆம் ஆண்டில் முடிவடைந்தது.

2. போர் தொடங்குவதற்குக் காரணம், நாடுகளுக்கிடையே தோன்றும் பகைமை எண்ணமே ஆகும். வேற்றுமைகளைக் களையப் பல நாட்டினரும் ஒன்று சேர்ந்து மனம் விட்டுப் பேசி, தம் சச்சரவுகளை அமைதியான முறையில் தீர்த்துக்கொள்ள வேண்டும். இக்கொள்கைகளைத் தழுவி முதல் உலகப் போரின் இறுதியில் ஒரு ஸ்தாபனம் அமைக்கப்பட்டது. அதில் உலக நாடுகள் யாவும் அங்கம் வகித்தன. ஆனால், அது ஒழுங்காக வேலை செய்யவில்லை. சில நாடுகள் கருத்து வேற்றுமையாலும் நாடு பிடிக்கும் பேராசையாலும் அக்கழகத்தை விட்டு வெளியேறின. அதனால், தன் முடிவுகளை நிறைவேற்றிச் சமாதானத்தை நிலைநாட்ட அக்கழகத்திற்குப் போதிய ஆற்றல் இல்லை.

3. இரண்டாம் உலகப் போர் 1938-ஆம் ஆண்டில் மூண்டது. எண்ணற்ற மக்கள் அப்போரில் மாய்ந்தார்கள். மனித சமூகத்தை நாசம் செய்யும் இயந்திர சாதனங்கள் பல கண்டுபிடிக்கப்பட்டன. இறுதியில் 1945-ஆம் ஆண்டில் அப்போர் முடிவடைந்தது.

4. பகைமை மானிட சமூகத்தையே நாசம் செய்யக்கூடிய தன்மை உள்ளது. போரின் பயங்கரத்தினால் பலர் உயிரிழப்பர்; பலர் அங்கவீனர் ஆவர். அமைதியாக வாழ்க்கை நடத்தும் மக்களையும்

போர் பாதிக்கிறது. இக்காலப் போரில் போர் புரியும் வீரர் மட்டும் உயிரிழப்பதில்லை. துப்பாக்கிகளும் பீரங்கிகளும் ஆகாய விமானங்களிலிருந்து சுடப்படுகின்றன. அணுக்குண்டுகளை விமானங்களிலிருந்து வீசி எறிந்து பல சதுர மைல் பரப்புள்ள நிலப் பகுதியை நாசம் செய்யக்கூடும். சென்ற யுத்தத்தின் போது அணுக்குண்டைப் பயன்படுத்தி ஜப்பான் நாட்டில் சில நகரங்கள் நாசமாக்கப்பட்டன.

5. போரின் பயங்கர உருவைக் கண்ட பல வல்லரசுகள் ஒன்றுகூடி, 1945-ஆம் ஆண்டு, ஜூன் மாதம், 26-ஆம் தேதியன்று ஓர் உலக ஸ்தாபனத்தை உண்டாக்கின. அதற்கு ஐக்கியநாடுகளின் கழகம் என்பது பெயர். அமெரிக்காவிலுள்ள சான்பிரான்ஸிஸ்கோ என்ற நகரத்தில் அந்தக்கழகம் தொடங்கப்பட்டது. அதற்கெனத் தயாரித்த சாசனத்தில் பல நாடுகளின் பிரதிநிதிகளும் கையெழுத்திட்டார்கள். அந்தச் சாசனத்தில் காணப்படும் உறுதி மொழி பின் வருவது: " இருபதாவது நூற்றாண்டின் முற்பகுதியில் மட்டும் மானிட சமூகத்திற்குப் பெருந்துன்பம் விளைவித்த இரு யுத்தங்களை நாம் கண்டோம். போரின் கொடுமையினின்றும் நம் சந்ததிகளைக் காப்பாற்ற வேண்டும். மனித சுபாவத்திற்கும், பிறப்புரிமைக்கும் நாம் மதிப்பு அளிக்க வேண்டும். ஆண்களுக்கும் பெண்களுக்கும் சம உரிமை வழங்க வேண்டும். உடன்படிக்கைகள் வாயிலாகவும், சட்டத்தின் மூலமாகவும் தேசங்களிடையே அமைதி காண வேலை செய்ய வேண்டும். மனித சமூக வளர்ச்சிக்கும் மனிதனுடைய பிறப்புரிமைகளுக்கும் கேடு நேராமல் பாதுகாக்க வேண்டும். ஒவ்வொரு நாடும் மற்ற நாடு-

களுடன் சாமானத்துடன் வாழ வேண்டும். நாட்டு விவகாரங்களில் பொறுமையைக் கடைப்பிடிக்கவேண்டும். இவ்வாறு சமாதானத்தையும் பாதுகாப்பையும் நிலைநிறுத்த நமது வன்மையை ஒன்றுகத் திரட்டி, போர்க்கருவிகளை உபயோகிக்காமல், அமைதியான வழிகளைத் தேட வேண்டும். மானிட சமூகத்தின் பொளாதார, சமூக முன்னேற்றத்திற்காகச் சர்வதேசக் கழகங்களைப் பயன்படுத்த வேண்டும். எங்களுடைய முயற்சிகளைத் திரட்டி, இந்த நோக்கங்களை முற்றுவிக்கத் தீர்மானித்திருக்கிறேம்.''

6. அந்தக் கழகம் ஆறு தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டு வேலை செய்து வருகிறது. பொதுச் சபை என்பது அவற்றில் முக்கியமானது. இது ஆண்டுக்கு ஒரு முறை கூடும். கழகத்தின் நோக்கத்திற்கு இணங்க இது வேலை செய்யும். கழகத்தில் கையெழுத்திட்ட எல்லா நாடுகளின் பிரதிநிதிகளும் இதில் அங்கம் வகிப்பார்கள். இது, விஷயங்களைச் சீர்தூக்கி விவாதித்து, முடிவுகள் செய்ய உரிமை உடையது. சச்சரவுகள் நேரும் சமயங்களில் பாதுகாப்புச் சபை வேலை செய்யும். சமூக பொருளாதார ஆலோசனைச் சபை, உலக நாடுகளில் சீரும் செல்வமும் நீதி முறையும் செழிப்புற்று ஓங்க முயலும். உரிமை பெருத நாடுகளுக்கு உரிமைகளை வழங்கும் வேலையை ஒரு பிரிவு மேற்கொண்டுள்ளது. அவைகளேயன்றி, ஒரு சர்வதேச நீதி மன்றமும், தலைமைக் காரியாலயமும் உள்ளன. அவையாவும் ஒன்றுபட்டு, உலகில் அமைதியையும் நீதியையும் நிலை நாட்டத் தொழில்புரிகின்றன.

7. அக்கழகத்தில் 60 நாடுகள் இப்பொழுது அங்கம் வகிக்கின்றன. அமெரிக்காவிலுள்ள லேக்-

ஸக்ஸஸ் என்ற இடத்தில் அது கூடுகின்றது. நியூ-யார்க்கு என்ற நகரில் அதன் தலைமைக் காரியாலயம் உள்ளது. அங்கம் வகிக்கும் நாடுகள் அந்தக் கழகத்-திற்கான செலவுகளை ஏற்றுக் கொள்கின்றன. உலகில் அன்பும் அமைதியும் நிலை நாட்டுவதே பாரத நாட்டின் நோக்கம். ஆகையால், அதற்கு உழைக்கும் இந்தக் கழகத்திற்கு நாம் எல்லா வகைகளிலும் உதவி செய்ய வேண்டும்.

**சொற்கள் :**

| | | | |
|---|---|---|---|
| கழகம் | ஆலோசனை | நூற்றுண்டு | நிலைநாட்ட |
| பகைமை | அங்கவீனம் | சந்ததி | பொருளாதாரம் |
| சச்சரவு | அணுக்குண்டு | பிறப்புரிமை | தொகுதி |
| விவாதித்து | வல்லரசு | காரியாலயம் | சாதனம் |
| கொள்கை | பிரதிநிதி | உடன்படிக்கை | சீர்தூக்கி |
| அங்கம் | நீதி மன்றம் | விவகாரம் | பாதுகாப்பு |

**அரும்பத விளக்கம் :**

விவாதித்து - தர்க்கம் செய்து, அங்கம் - உறுப்பு, சந்ததி - மரபு, நிலைநாட்ட - ஸ்தாபிக்க.

**வினுக்கள் :**

1. ஐக்கிய நாடுகளின் கழகம் யாரால், எப்போது, எங்கே நிறுவப்பட்டது?

2. சாசனத்தில் காணும் உறுதிமொழிகள் யாவை?

3. அந்தக் கழகத்தின் பிரிவுகள் யாவை? ஒவ்வொரு பிரிவிற்கும் ஏற்பட்ட தொழில் யாது?

4. கழகத்தில் எத்தனை நாடுகள் அங்கம் வகிக்-கின்றன? அதன் தலைமைக் காரியாலயம் எங்கே உள்ளது?

**பயிற்சி :**

1. சச்சரவு, வல்லரசு, நாகரிகம், இறுதி—இச்சொற்-களுக்கு எதிர்ப்பதங்கள் கூறு.

2. சச்சரவு, சந்ததி, தொகுதி—இச்சொற்களைக் குறிக்கும் வேறு சொற்களை எழுது.

3. கோடிட்ட இடங்களைப் பூர்த்தி செய் :

(1) முதல் பெரும் போர் —— ஆம் ஆண்டில் முடிவடைந்தது.

(2) பகைமை மானிட சமூகத்தையே —— செய்யும் தன்மை உடையது.

(3) ஐக்கிய நாடுகளின் ஸ்தாபனம் —— நகரில் தொடங்கப்பட்டது.

(4) இந்த ஸ்தாபனம் —— வில் கூடுகிறது.

(5) —— நகரில் தலைமைக் காரியாலயம் உள்ளது.

4. கீழே காணும் வாக்கியங்களைச் சரியான முறையில் அமைத்து எழுது :—

(1) மூண்டது உலகப்போர் இரண்டாம் 1938-ஆம் ஆண்டில்.

(2) நாசமாக்கப்பட்டன நகரங்கள் பல நாட்டில் அணுக்குண்டைப் பயன்படுத்தி ஜப்பான்

(3) கழகம் ஸான் பிரான்ஸிக்கோ இந்த தொடங்கப்பட்டது நகரத்தில் என்ற

(4) நாடுகள் வகிக்கின்றன அறுபது கழகத்தில் இந்த அங்கம்

(5) உள்ளது தலைமைக் காரியாலயம் இதன் நகரில் நியூயார்க்கு

5. முற்காலத்துப் போர் முறைக்கும் இக்காலத்துப் போர் முறைக்குமுள்ள ஒற்றுமை வேற்றுமைகளை எழுது.

6. அணுக்குண்டு, நீதிமன்றம், உடன்படிக்கை—இவைகளைப்பற்றிச் சிறு குறிப்பு எழுது.

# 19. ஒற்றுமை

ஒற்றுமை யாக உழைத்திடுவோம்—நாட்டில்
உற்ற துணைவராய் வாழ்ந்திடுவோம்;
வெற்றுரை பேசித் திரியவேண்டா—இன்னும்
வீணுய்ப் புராணம் விரிக்கவேண்டா. 1

கீரியும் பாம்புமாய்ச் சண்டையிட்டுச்—சாதி
கீழென்றும் மேலென்றும் நாட்டிவிட்டுப்
பாரதத் தாய்பெற்ற மக்களென்று—நிதம்
பல்லவி பாடிப் பயனெதுவோ? 2

சாதி யிரண்டலால் வேறுளதோ?—ஔவைத்
தாயின் உரையும் மறந்தீரோ?
ஆதி யிறைவன் வகுத்ததுவோ?—மக்கள்
ஆக்கிய கற்பனை தானிதுவோ? 3

வீட்டுக்குள் சண்டைகள் போடுவதேன்?—கூரை
வெந்து விழுவதும் கண்டிலீரோ?
நாட்டுக்கு நன்மையை நாடுபவர்—இந்த
நாடகம் ஆடல் நகைப்பலவோ? 4

—கவிமணி

சொற்கள் :

| | | | |
|---|---|---|---|
| உற்ற | பல்லவி | ஆதி | கற்பனை |
| வெற்றுரை | உரை | இறைவன் | நாடகம் |

அரும்பத விளக்கம் :

உற்ற - பொருந்திய, வெற்றுரை - பயனற்ற பேச்சு, உரை - சொல், ஆதி - முதல், இறைவன் - கடவுள்.

வினுக்கள் :

1. நாட்டில் நாம் எப்படி வாழ வேண்டும்?
2. நாம் ஒற்றுமையாக வாழ்வது எவ்வாறு அவசியம்?

பயிற்சி :

1. ஒற்றுமையின் அவசியத்தையும் நன்மையையும் விளக்குகின்ற கதை ஒன்றைச் சுருக்கமாக எழுது.

2. ஒற்றுமை, துணைவர், சண்டை, மேல், ஆதி, நன்மை—இச்சொற்களுக்கு எதிர்ப்பதங்கள் கூறு.

3. கீரியும் பாம்பும், பூனையும் எலியும்—இவற்றைப் போன்ற தொடர்களை எழுது.

இலக்கணம் :

1. ஒற்றுமை பலம் தரும்.

2. நாம் உலகில் ஒற்றுமையுடன் வாழ வேண்டும்.

3. நாம் நாட்டுக்கு நன்மையைத் தேடவேண்டும்.

தடித்த எழுத்திலுள்ள சொற்களுக்குச் சொல் இலக்கணம் எழுது.

# 20. சிலம்புச் செல்வி

## காட்சி—1

[அடைப்பைக்காரன் வேடத்தில் கம்பர், சேரமன்னன், அரண்மனை நாவிதன்.]

[சேரனிடத்தில் அடைப்பைக்காரனும் வேலை செய்யும் கம்பர் மன்னனைக் காண வருகிறார்.]

**கம்பர் :** மன்னரே; வணக்கம்! உங்களைச் காண விரும்பி வந்துள்ளேன்.

**சேரன் :** அப்பா, உனது கம்ப ராமாயணப் பிரசங்கத்தை அன்று நான் கேட்டு உளம் மகிழ்ந்தேன்!

**கம்பர் :** அரசர் பெருமானே, தமிழில் எனக்குச் சிறிதே வல்லமை உண்டு. அதைக் குறித்து என்னைப் புகழ்தல் தகாது. நீங்கள் என்பால் கொண்டுள்ள அன்பும் கருணையும் சொல்லுக்கு அடங்கா.

(அமர்கிறார்)

**சேரன் :** அப்பா, நீ என்னைக் காண இங்கு வந்தது எதன்பொருட்டு?

**கம்பர் :** (ஒரு சிலம்பைக் கையில் எடுத்து) மன்னரே, இது ஒரு சிறந்த சிலம்பு. இதனை அரசியாருக்கு அளித்துப் போக வந்தேன்.

**சேரன் :** (சிலம்பை எடுத்துக் கவனித்து) ஆகா! இது ஓர் அற்புதச் சிலம்புதான்! ஐயமில்லை! இது போல நான் இது வரை கண்டதேயில்லை! இது உன்னிடம் எவ்வாறு வந்தது?

**கம்பர் :** சேரர் பெருமானே, இது எங்கள் பரம்பரைச் செல்வம். என் தந்தையாரிடமிருந்து இதனை நான் பெற்றேன்.

**சேரன் :** சிலம்புகள் இரண்டாகவல்லவா இருக்க வேண்டும்! மற்ரென்று எங்கே?

**கம்பர் :** மன்னரே, மற்ரென்று அரண்மனை நாவிதனிடம் உள்ளது.

**சேரன் :** அப்படியா! அன்று உன்னைத் தன் சகோதரன் என அனைவர் முன்பும் கட்டியணைத்தானே, அவனிடமா இருக்கிறது?

**கம்பர் :** ஆம் அரசரே, அவன் என் சகோதரனுதலால், அவன் என் தந்தையாரிடமிருந்து மற்ரெரு சிலம்பைப் பெற்றிருக்க வேண்டும் அன்ரே?

**சேரன் :** ஆம், ஆம்! நாவிதனை விசாரிப்போம்.

## காட்சி—2

(நாவிதன் சபைக்கு வருகிறுன்)

**சேரன் :** இவரை உன் தம்பி என்று அன்று யாவர் முன்னலையிலும் கூறினுயல்லவா? அது உண்மை தானே?

**நாவிதன் :** மன்னர் பெருமானே, அதற்கென்ன சந்தேகம்? இவர் என் தம்பிதான்!

**சேரன் :** இதோ இச்சிலம்பைப் பார்! இதுபோல் ஒன்று உன்னிடம் இருக்க வேண்டுமே! அது எங்கே?

**நாவிதன் :** பெருமானே, சிலம்பா? இது போன்றதா? என்னிடமா இருக்க வேண்டும்? நான்

முழுதும் உழைத்துப் பிழைக்கும் நாவிதனிடம் இது போன்ற சிலம்பு இருக்குமா !

சேரன் : (கோபத்துடன்) நாவிதா, உண்மையைச் சொல் ! பொய் பேசினால் உன் தலையைத் துணிப்பேன் !



நாவிதன் : ஐயோ ! நான் என்ன செய்வேன் ! நானோ, ஏழை ! என்னிடம் பெருமதிப்புள்ள இது போன்ற சிலம்பு ஏது ?

சேரன் : இவரை நீ உன் தம்பி என்று சொன்னாயல்லவா ? அது உண்மையானால், இவர் கூறுகிறபடி மற்றொரு சிலம்பு உன்னிடம் இருக்க வேண்டுமே !

நாவிதன் : இது சுத்தப் பொய் ! என்மீது இவர் பழி சுமத்துகிறார்.

சேரன் : அடே, உன்னிடம் சிலம்பு இல்லாவிடில் நீ இவருக்குச் சகோதரனாய் இருக்க முடியுமா ? இவரை உன் தம்பி என ஏன் சொன்னாய் ? உண்மையைச் சொல்.

**நாவிதன் :** அரசரே, என்னை மன்னிக்க வேண்டு-கிறேன்! இவர் என் தம்பி என்பது பொய். இவர் யாரென்பதை நான் அறியேன். அன்று இவருடைய கவித்திறனை நீங்கள் போற்றினீர்கள். அது கண்ட சில புலவர் பொறாமை கொண்டனர். அவர்கள் எனக்குப் பெரும் பொருள் கொடுத்து இவர் என் தம்பி என்று கூறத் தூண்டினார்கள்.

**சேரன் :** அப்படியா! இது புலவரின் சூழ்ச்சியா! சரி. நீ என் கண்முன் நில்லாதே. இவ்விடத்தை விட்டுச் செல்.

(நாவிதன் விரைந்தோடுகிறான்)

## காட்சி—8

**சேரன் :** (அடைப்பக்காரனாகிய கம்பரைப் பார்த்து) ஐயா, நீர் யார்? இச்சிலம்பு உமக்கு எவ்வாறு கிடைத்தது? தமிழில் நீர் பெரும்புலவர். நீர் அடைப்பைக்காரனல்லீர். ஒரு வேளை நீர் கலைவாணியின் அருள் பெற்ற கம்பரேதானோ?

**கம்பர் :** சேரர் பெருமானே, ஆம். நான் கம்பனே.

**சேரன் :** ஆகா! நீர் கம்பரா! உங்களை அடைப்-பைக்காரனாக மதித்தேனே! நான் செய்தது பெரும்பிழையன்றோ? நீங்கள் என்னை மன்-னிக்குமாறு வேண்டிக்கொள்கிறேன்!

**கம்பர் :** மன்னரே, இதுகாறும் என்னை ஆதரித்த உங்களுக்கு நான் நன்றி செலுத்த வேண்டு-மல்லவா? நீங்கள் வருந்த வேண்டா. வாணி-யைத் துதித்து மற்றொரு சிலம்பையும் வாங்கி

என் அன்பின் காணிக்கையாக உங்களுக்கு அளிக்கிறேன்.

[கம்பர் கலைவாணியைத் துதிக்கிறார். சிலம்புச் செல்வி யாகிய கலைவாணி மற்றொரு சிலம்பைக் கம்பர் கைகளில் வைக்கிறாள். அதனை அரசன் பெறுகிறான்.]

**சேரன் :** ஆகா, நான் செய்த பாக்கியமே பாக்கியம்! வாணியின் அருள் பெற்ற கம்பரால் இவ்வரிய காட்சியைக் கண்டேன்! கம்பரே, உங்களுக்கு என்றென்றும் நான் கடமைப்பட்டுள்ளேன்! நீங்கள் கோரும் எவ்வுதவியையும் நான் என்றும் செய்வேன். வணக்கம்.

(சபை கலைகிறது.)

சொற்கள் :

| | | |
|---|---|---|
| அடைப்பைக்காரன் | காணிக்கை | கவித்திறன் |
| அரண்மனை | பரம்பரை | பொறுமை |
| பிரசங்கம் | நாவிதன் | தூண்டினார்கள் |
| சிலம்பு | பெருமதிப்பு | அரியகாட்சி |
| நல்வரவு | பாக்கியம் | சூழ்ச்சி |
| பெருமான் | மன்னிக்க | கலைவாணி |
| கருணை | ஆதரித்த | அருள் |

அரும்பத விளக்கம் :

அடைப்பைக்காரன் - வெற்றிலை மடித்துக் கொடுப்பவன், பெருமான் - அரசன், கருணை - அருள், கலைவாணி - சரஸ்வதி.

வினாக்கள் :

1. கம்பர் எவ்வேடத்தில் சேரனிடம் இருந்துவந்தார்?

2. கம்பருக்கும் நாவிதனுக்கும் இடையே எழுந்த பிணக்கு என்ன?

3. சிலம்புச் செல்வி யார்?

4. கம்பருக்கும் நாவிதனுக்கும் இடையே எழுந்த பிணக்கில் யாருக்கு எப்படி வெற்றி கிடைத்தது?

## பயிற்சி :

1. கம்பரைப் பற்றி உனக்குத் தெரிந்தவற்றைப் பத்து வரிகளில் எழுது.

2. பிரசங்கம், அடைப்பைக்காரன், கலைவாணி, பாக்கியம், அரசன்—இவற்றைக் குறிக்கும் வேறு சொற்களைக் கூறு.

3. தூண்டினார்கள், ஆதரித்தல், காணிக்கை, பிரசங்கம்—இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்தெழுது.

## இலக்கணம் :

முற்றுப்புள்ளி, ஆச்சரியக் குறி, கால்புள்ளி அல்லது காமா, கேள்விக்குறி என்ற குறிகளைப் பற்றி உங்களுக்குத் தெரியும். இவை தவிர, இன்னும் சில குறிகளும் உண்டு. இவை அரைப்புள்ளி (;), முக்காற்புள்ளி (:), மேற்கோள் குறிகள் ("......") என்பனவாம்.

இப்பாடத்தில் அரைப் புள்ளியும் முக்காற் புள்ளியும் இடப்பட்டுள்ள இடங்களைக் கவனி.

ஒருவர் பேசும் சொற்களைப் பேசுகிறவரே சொல்வது போல எழுதும்போது, மேற்கோள் குறிகளை உபயோகிக்கிறோம்.

(உ - ம்.) கம்பர் அரசனைப் பார்த்து, " நான் விடை பெற்றுக்கொள்கிறேன்," என்று கூறினார்.

இக்குறிகளை நீக்கியும் எழுதலாம்.

(உ - ம்.) கம்பர் அரசனைப் பார்த்துத் தாம் விடை பெற்றுக்கொள்வதாகக் கூறினார்.

பின் வருவனவற்றை மேற்கோள் குறிகளை நீக்கி எழுது :

1. நாவிதன் அரசனிடம் கம்பரைக் காட்டி, "என் தம்பிதான்," என்று கூறினான்.

2. அரசன் நாவிதனிடம், "உண்மையைச் சொல். பொய் பேசினால் உன் தலையைத் துண்டிப்பேன்" என்று கோபமாய்க் கூறினான்.

3. கம்பர் சேரனை நோக்கி, "நான் கம்பனே," என்று கூறினார்.

# செய்யுட்பாடம்

## I. கடவுள் துதி

### திருமால் துதி

உலகம் யாவையும் தாமுள ஆக்கலும்,
நிலைபெ றுத்தலும், நீக்கலும், நீங்கலா
அலகி லாவிளை யாட்டுடை யாரவர்
தலைவர் ; அன்னவர்க் கேசர ணாங்களே. (1)

### சிவபிரான் துதி

உலகெ லாம்உணர்ந்(து) ஓதற் கரியவன்,
நிலவு லாவிய நீர்மலி வேணியன்,
அலகில் சோதியன், அம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணாங்குவாம் ! (2)

### கலைமகள் துதி

பாட்டும் பொருளும் பொருளால்
பொருந்தும் பயனும்என்பால்
கூட்டும் படிநின் கடைக்கண்நல்
காய்;உளம் கொண்டுதொண்டர்
தீட்டும் கலைத்தமிழ்த் தீம்பால்
அமுதம் தெளிக்கும்வண்ணம்
காட்டும்வெள் ளோதிமப் பேடே !
சகல கலாவல்லியே ! (3)

# II. நீதிச் செய்யுள்

## I. வாக்குண்டாம்

அடுத்து முயன்றாலும் ஆகுநாள் அன்றி
எடுத்த கருமங்கள் ஆகா !—தொடுத்த
உருவத்தால் நீண்ட உயர்மரங்கள் எல்லாம்
பருவத்தால் அன்றிப் பழா. (1)

நெல்லுக் கிறைத்தநீர் வாய்க்கால் வழியோடிப்
புல்லுக்கு மாங்கே பொசியுமாம்;—தொல்லுலகில்
நல்லா ரொருவர் உளரேல், அவர்பொருட்(டு)
எல்லார்க்கும் பெய்யு மழை. (2)

அடக்க முடையார் அறிவிலரென் றெண்ணிக்
கடக்கக் கருதவும் வேண்டா ;—மடைத்தலையில்
ஓடு மீன் ஓட, உறுமீன் வருமளவும்
வாடி யிருக்குமாம் கொக்கு. (3)

அற்ற குளத்தின் அறுநீர்ப் பறவைபோல்
உற்றுழித் தீர்வார் உறவல்லர் ;—அக்குளத்தில்
கொட்டியும் ஆம்பலும் நெய்தலும் போலவே
ஒட்டி உறுவார் உறவு. (4)

நஞ்சுடைமை தானறிந்து நாகம் கரந்துறையும் ;
அஞ்சாப் புறங்கிடக்கும் நீர்ப்பாம்பு ;—நெஞ்சில்
கரவுடையார் தம்மைக் கரப்பர் ; கரவார்
கரவிலா நெஞ்சத் தவர். (5)

—ஔவையார்

## 2. நல்வழி

ஆற்றங் கரையின் மரமும் அரசறிய
வீற்றிருந்த வாழ்வும் விழும்அன்றே ? ஏற்றம்
உழுதுண்டு வாழ்வதற் கொப்பில்லை—கண்டீர்
பழுதுண்டு வேறோர் பணிக்கு. (1)

ஆன் முதலில் அதிகம் செலவானால்
மானம் அழிந்து மதிகெட்டுப்—போனதிசை
எல்லார்க்கும் கள்ளனாய் ஏழ்பிறப்பும் தீயனாய்
நல்லார்க்கும் பொல்லனாம் நாடு (2)

கல்லானே ஆனாலும் கைப்பொருள்ஒன் றுண்டாயின்
எல்லாரும் சென்றங் கெதிர்கொள்வர் ;—இல்லானை
இல்லாளும் வேண்டாள்;மற்(று) ஈன்றெடுத்த தாய்
செல்லா தவன்வாயிற் சொல். [வேண்டாள் ;
(3)

பிச்சைக்கு மூத்த குடிவாழ்க்கை பேசுங்கால்
இச்சைபல சொல்லி இடித்துண்கை;—சிச்சீ !
வயிறு வளர்க்கைக்கு மான மழியா(து)
உயிர்விடுகை சால வுறும். (4)

வேதாளஞ் சேருமே, வெள்ளெருக்குப் பூக்குமே,
பாதாள மூலி படருமே,—மூதேவி
சென்றிருந்து வாழ்வாளே, சேடன் குடிபுகுமே,
மன்றோரஞ் சொன்னார் மனை. (5)

—ஔவையார்

## 3. நீதி வெண்பா

பொன்னும் கரும்பும் புகழ்பாலும் சந்தனமும்
சின்னம் படவருத்தம் செய்தாலும்—முன்னிருந்த
நற்குணமே தோன்றும் ; நலிந்தாலும் உத்தமர்பால்
நற்குணமே தோன்றும் நயந்து. (1)

கொம்புளதற் கைந்து, குதிரைக்குப் பத்துமுழம்,
வெம்புகரிக் காயிரந்தான் வேண்டுமே;—வம்புசெறி
தீங்கினர்தங் கண்ணில் தெரியாத தூரத்து
நீங்குவதே நல்ல நெறி. (2).

கற்பூரம் போலக் கடலுப் பிருந்தாலும்
கற்பூர மாமோ கடலுப்பு ?—பொற்பூரும்
புண்ணியரைப் போல விருந்தாலும் புல்லியர்தாம்
புண்ணியரா வாரோ ? புகல். (3)

சிற்றுணர்வோர் என்றும் சிலுசிலுப்பார் ; ஆன்ற [மைந்த
முற்றுணர்வோர் ஒன்றும் மொழியாரே ;—வெற்றி [பெறும்
வெண்கலத்தின் ஓசை மிகுமே ; விரிபசும்பொன்
ஒண்கலத்தில் உண்டோ ஒலி ? (4)

வெய்யோன் கிரண மிகச்சுடுமே ; வெய்யவனிற்
செய்யோன் கிரணமிகத் தீதாமே ;—வெய்யகதிர்
எல்லோன் கிரணத் தெரியினிலும் எண்ணமில்லார்
சொல்லே மிகவுஞ் சுடும். (5)

## 4. நன்னெறி

உள்ளம் கவர்ந்தெழுந் தோங்கு சினம்காத்துக்
கொள்ளும் குணமே குணமென்க ;—வெள்ளம்
தடுத்தல் அரிதோ, தடங்கரைதான் பேர்த்து
விடுத்தல் அரிதோ ? விளம்பு. (1)

இன்சொலால் அன்றி இருநீர் வியனுலகம்
வன்சொலால் என்றும் மகிழாதே ;—பொன்செய்(து)
அதிர்வளையாய் ! பொங்கா தழற்கதிரால், தண்ணென்
கதிர்வரவால் பொங்கும் கடல். (2)

உண்டு குணமிங் கொருவர்க் கெனினும்கீழ்
கொண்டு புகல்வது குற்றமே ;—வண்டுமலர்ச்
சேக்கை விரும்பும் செழும்பொழில்வாய் வேம்பன்றோ
காக்கை விரும்பும் கனி ? (3)

பெரியவர் தம் நோய்போல் பிறர்நோய்கண் டுள்ளம்
எரியின் இழுதாவ ரென்க;—தெரியிழாய் !
மண்டு பிணியால் வருந்தும் பிறவுறுப்பைக்
கண்டு கலுழுமே கண். (4)

நல்லோர் வரவால் நகைமுகங்கொண் டின்புறீஇ
அல்லோர் வரவா லழுங்குவார்—வல்லோர் ;
திருந்துந் தளிர்காட்டித் தென்றல்வரத் தேமா
வருந்துஞ் சுழல்கால் வர. (5)

—சிவப்பிரகாசர்

## 5. திருக்குறள்

ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய். (1)

நன்றி மறப்பது நன்றன்று ; நன்றல்ல(து)
அன்றே மறப்பது நன்று. (2)

அடக்கம் அமரருள் உய்க்கும் ; அடங்காமை
ஆரிருள் உய்த்து விடும். (3)

ஒழுக்கம் விழுப்பம் தரலான், ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும். (4)

கற்க கசடறக் கற்பவை ; கற்றபின்
நிற்க அதற்குத் தக. (5)

—திருவள்ளுவர்

# III. தமிழ்

யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்
இனிதாவ தெங்கும் காணோம் !
பாமரராய், விலங்குகளாய், உலகனைத்தும்
இகழ்ச்சிசொலப் பான்மை கெட்டு
நாமமது தமிழரெனக் கொண்டிங்கு
வாழ்ந்திடுதல் நன்றோ ? சொல்லீர் !
தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும்வகை செய்தல் வேண்டும்.

—பாரதியார்

## IV. நாட்டு வணக்கம்

வாழிய செந்தமிழ்! வாழ்கநற் றமிழர்!
வாழிய பாரத மணித்திரு நாடு!
இன்றெமை வருத்தும் இன்னல்கள் மாய்க!
நன்மைவந் தெய்துக! தீதெல்லாம் நலிக!
அறம்வளர்ந் திடுக! மறம்மடி வுறுக!
ஆரிய நாட்டினர் ஆண்மையோ டியற்றும்
சீரிய முயற்சிகள் சிறந்துமிக் கோங்குக!
நந்தே யத்தினர் நாடொறும் உயர்க!
வந்தே மாதரம்! வந்தே மாதரம்!

—பாரதியார்

# செய்யுட்பாடக் குறிப்புரை

## I. கடவுள் துதி

1. உளஆக்கல் - உண்டாக்குதல், அலகு இலா - அள வில்லாத, அன்னவர்க்கு - அவருக்கு, சரண் - அடைக்கலம்.

2. நிலவு - சந்திரன், உலாவிய - தவழ்கின்ற, நீர் மலி - கங்கை நிறைந்த, அம்பலத்து - சபையில், ஆடுவான் - ஆடுகின்ற நடராசன்.

3. என்பால் - என்னிடம், கடைக்கண் - கிருபை, நல்காய் - தருவாய், தொண்டர் - அடியவர், ஓதிமம் - அன்னம், பேடு - பெட்டை.

## II. நீதிச் செய்யுள்

### 1. வாக்குண்டாம்

1. அடுத்து - மேன்மேலும், தொடுத்த - கிளைத்த.

2. பொசியும் - கசியும், தொல் பழமையான.

3. கடக்க - வெற்றி கொள்ள, உறுமீன் - (தனக்கு இரையாகத் தகுந்த) பெரியமீன், வாடி சோர்ந்து.

4. அற்ற - நீர்வற்றிப் போன, அறு - நீங்குகின்ற, உற்றுழி - துன்பம் வந்த காலத்து, உறுவார் - பொருந்தி இருப்பவர்.

5. கரந்து உறையும் - ஒளிந்து வசிக்கும், கரவு - வஞ்சனை.

## 2. நல்வழி

1. வீற்றிருந்த - சிறக்கத் தங்கியிருந்த, ஏற்றம் - உயர்வு, ஒப்பு - சமானம், பழுது - குற்றம்.

2. மதி - அறிவு, பொல்லனும் - பொல்லாதவனுகி விடுவான்.

3. இல்லாளை - (பொருள்) இல்லாதவனை, இல்லாள் மனைவி, ஈன்றெடுத்த - பெற்று வளர்த்த.

4. மூத்த - பெரிய, சால உறும் - பெரிதும் பொருந்தும்.

5. வேதாளம் - பேய், சேடன் - பாம்பு, மன்றம் - நீதி ஸ்தலம், ஓரம் - பட்சபாதமான வார்த்தை.

## 3. நீதிவெண்பா

1. சின்னம்பட - அழிவு உண்டாகும்படி, நலிந்தாலும்- வருந்தினாலும், நயந்து - விரும்பி.

2. கொம்புளது - கொம்புள்ள மாடு, வெம்புகரி - கோபிக்கும் யானை, வம்பு - வீண் வழக்கு.

3. புல்லியர் - தீவினை செய்பவர், பொற்பு ஊரும் - அழகு அதிகரிக்கின்ற, புகல் - சொல்.

4. சிற்றுணர்வோர் - அற்ப அறிவுடையவர், சிலு சிலுப்பர் - இரைச்சல் இடுவார், ஒண்கலம் - பிரகாசம் பொருந்திய பாத்திரம்.

5. வெய்யோன் - சூரியன், செய்யோன் நெருப்பு, எண்ணம் இல்லார் - நல்ல எண்ணம் இல்லாத தீயவர்.

## 4. நன்னெறி

1. கவர்ந்து - வசப்படுத்தி, தடம் - பெரிய.

2. இருநீர் - பெரிய கடல், வியன் - பரந்த, அதிர் - ஒலிக்கின்ற, அழல் - சுடுகின்ற, தண் - குளிர்ச்சி பொருந்திய, கதிர் - (கிரணங்களுடைய) சூரியன்.

3. புகல்வது - சொல்வது, சேக்கை - படுக்கை, பொழில்வாய் - சோலையில்.

4. உள்ளம் - மனம், எரி - நெருப்பு, இழுது - நெய், மண்டு - மிகுந்த, பிணி - நோய், கலுழும் - அழும்.

5. இன்புறீஇ - இன்புற்று, அல்லோர் - கீழ் மக்கள்; அழுங்குவார் - வருந்துவார், தென்றல் - தெற்கிலிருந்து வீசும் காற்று, தேமா - இனிப்பான கனி தரும் மாமரம், கால் - காற்று.

## 5. திருக்குறள்

1. ஈன்ற பொழுதின் - பெற்ற காலத்தைவிட, உவக்கும் மகிழ்ச்சியடைவாள், சான்றோன் - கல்வி அறிவால் சிறந்தவன்.

2. நன்றி - (பிறர் செய்த) நன்றியை, நன்றல்லது - (செய்த) தீமையை.

3. அடக்கம் - அடங்கியிருத்தல், அமரருள் - தேவருள், உய்க்கும் - சேர்க்கும், ஆரிருள் - பாவமாகிய இருள் நிறைந்த நரகம்.

4. ஒழுக்கம் - நன்னடக்கை, விழுப்பம் - சிறப்பு, ஓம்பப்படும் - மேன்மையாகப் பாதுகாக்கப்படும்.

5. கசடற - குற்றம் நீங்க, கற்பவை - (ஒருவன்) கற்க வேண்டிய நூல்களை, கற்க - கற்பானாக, தக - தகுந்தாற்போல.

## III. தமிழ்

பாமரர் - கல்லாதவர், தேமதுரம் - தேன் போன்ற இனிமையுள்ள.

## IV. நாட்டு வணக்கம்

இன்னல் - துன்பம், நலிக - மடியட்டும், அறம் - தருமம், மறம் - பாவம், சீரிய - சிறந்த.